DRAFT

DRAFT

# வினாவிடைத் தொகுப்பு
# தமிழ்
# தரம் 12 - 13

(உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பயன்தரக்கூடிய வினாக்களையும் விடைக் குறிப்புகளையும் உள்ளடக்கியது.)

தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : **www.nie.lk**
2015.

# வினாவிடைத் தொகுப்பு
# தமிழ்
# தரம் 12 - 13

**(க.பொ.த. (உயர்தர) ப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பயன்தரக்கூடிய வினாக்களையும் விடைக் குறிப்புகளையும் உள்ளடக்கியது.)**

தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் **: www.nie.lk**

முதலாம் மொழி - தமிழ்
வினாவிடைத் தொகுப்பு
தரம் - 12, 13

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN

முதலாம் பதிப்பு : 2015
தேசிய கல்வி நிறுவகம்

தமிழ்மொழித் துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.

இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

# கற்றலும் கற்பித்தலும்

ஆசிரியர்கள் தத்தமது பாடசாலைகளில் பாடத்திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான அடிப்படைகளை இக்கையேடு வழங்குகிறது. இப்பாடத்திட்டத்தை அமுல்படுத்துகையில் ஆசிரியர்கள் மனதிலிருத்த வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் தமது பங்களிப்பானது மாணவர்களின் அறிகைசார் அடைவு மற்றும் நடத்தைசார் அபிவிருத்தி என்பவற்றில் பாரதூரமானதும் தொலை நோக்கானதுமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதாகும்.

அறிகைசார் அடைவு என்னும் பரிமாணத்தைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் ஏனையவற்றுக்கு (மற்றைய பயன்பாடுகளுக்கு) மத்தியில் கற்றல் தரம் உயர்வாக இருக்கக்கூடிய பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்த வேண்டும்.

- கற்பவர் தனது கல்விச் செயற்பாடுகள் தத்தமது வாழ்க்கைக் குறிக்கோள்கள் மற்றும் பிணியினை அகிய இரண்டும் இலக்கை அடைந்து கொள்ளுதல் மற்றும் ஆற்றல்களுக்குப் பொருந்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது என்பதைப் புரிந்திருத்தல் வேண்டும்.
- கற்றல் / கற்பித்தல் செயன்முறையில் கற்பவர் தன்னைச்செயலூக்கத்துடன் ஈடுபடுத்திக் கொள்ளும் போது (மாணவர் செயன்முறை) கன்பூசியஸ் (Confusius) என்னும் அறிஞரது கருத்து இங்கு நினைவிற்கொள்ளத்தக்கது.

    அவர்கள் கேட்பவற்றை மறந்து விடுகின்றனர்.

    பார்ப்பவற்றை நினைவிற் கொள்கின்றனர் ஆனால்

    செயல் ரீதியாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் போது, கற்றுக்கொள்கின்றனர்.

- வளம் நிறைந்ததும் சவால்மிக்கதுமான சாதகமான கற்றல் சூழமைவு இருக்கும் போது கற்றல் ஆவணங்கள், உபகரணங்கள், ஆய்வுகூடங்கள், விடயங்கள் மற்றும் அனுபவங்களை பல்வேறு மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்த வேண்டும்;
- கற்பவருக்கு ஆக்கபூர்வமானதும், அனுகூலமானதுமான உடனடிப் பின்னூட்டல் வழங்கப்படும் போது இவ்வாறு செய்வதன் மூலம் கற்பவர் தமக்கு ஏற்கெனவே இருக்கக்கூடிய அறிவு, திறன்கள் மற்றும் இலக்குகள் என்பவற்றை ஒருங்கிணைப்பதுடன் உயர்மட்ட கிரகித்தலுடன் உள்ளீர்த்தலுடன் கூடிய கற்றலைப் படிப்படியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

கல்வியைப் பொறுத்தவரை, பாடசாலைகளில் கல்வி பயிலும் சகல மாணவர்களும் தமது பாடஞ் சார்ந்த அடிப்படைகளில் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை அடையக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதும் அதன் மூலம் பரீட்சைகளை எதிர்கொண்டதன் பின்னர் தாம் குறித்த அடைவைப் பெற்றுக்கொண்டோம் என்ற மகிழ்வை அனுபவிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதுமே அரசாங்கத்தின் எதிர்பார்பாகும்.

மாணவரின் நடத்தைசார் அபிவிருத்தி எனும் பரிமாணத்தை எடுத்துக்கொள்வோமாயின் கல்வியின் இலக்கானது அறிகைசார் அடைவினை தொழில்சார் உலகுடன் தொடர்புபடுத்துதலாகும். எனவே, ஆசிரியர்களது கரங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள இப்பாடத்திட்டமானது, பாடசாலைக்கு வெளியேயான உலகுடன் கற்பவர் தொடர்பு கொள்வதற்குத் தேவையான தேர்ச்சிகள் /தகுதிப்பாடு களை மேம்படுத்த வேண்டும். பின்வரும் பரப்புக்களில் சில முக்கியமானதும் பொதுவானதுமான தேர்ச்சிகள் /தகுதிப்பாடுகள் காணப்படுகின்றன.

- ஆற்றல் மிகு (சுறுசுறுப்பாக) தொழில் தர்மம்; நேர்கணிய உளப்பாங்கு புதிது புனைதலுக்கான விருப்பு மற்றும் விடாமுயற்சி;
- நபர்களுக்கிடையிலான உறவுகள்; குழுச் செயற்பாடு ஒழுக்கம் மற்றும் வினைத்திறனான தொடர்பாடல்;
- தார்மீக விழுமியங்கள்; பன்முகத் தன்மையை மதித்தல் போன்ற குடியியல் விழுமியங் களை உருவாக்கிக் கொண்ட நபர்.

முடிவுரையாக பாடசாலைகளிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர அலுவலகர்கள் அனைவரும் முகாமைத்துவத்திலுள்ள4A க்களில் (உளப்பாங்கு (Attitute), பகுப்பாய்வு (Analysis), செயல் செயற்பாடு (Action), மற்றும் பொறுப்புக் கூறல் (Accountability), கவனஞ் செலுத்துகின்ற வகையில் கற்றல், கற்பித்தல் செயன்முறையைப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். தாங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது பற்றிய முடிவுகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான nghUj j khd J k ; r hj f khd J khd **உளப்பாங்குகளுடன்** ஆரம்பியுங்கள். (தங்களது பாடங்கள் முதலியன); ஒழுங்கமைப்பதற்கேற்ற வகையில், தகவல்களைத் தேடிப்பெற்று **பகுப்பாய்வு** செய்க. (பாடத்திட்டங்கள் முதலியன); தெரிவுகளைக் கவனத்திற் கொண்டு, வினைத்திறனான உடனடிச் செயலை மேற்கொள்க (வழங்குதல்); **பொறுப்புக் கூறலை** (உரிமைத்துவம்) எடுத்துக் கொள்வதற் கேற்ற வகையில், மேற்பார்வை செய்தல், மதிப்பிடுதல் மற்றும் பெறு பேறுகளை அளவிடுதலை மேற்கொள்க.

கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாட்டில் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ள சகல ஆசிரியர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக்கையேடு பற்றிய உங்களது அனுபவங்களையும் அவதானிப்புக்களையும் தேசிய கல்வி நிறுவகத்தின் (N.I.E) துணைத் தலைவருக்கு விருப்பமாயின் எனக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்

பேராசிரியர் குணபால நாணயக்கார

பணிப்பாளர் நாயகம்

தேசிய கல்வி நிறுவகம்.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியாயமற்றவற்றைக் களைவதற்கும், நல்லவற்றைப் பயன்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாக அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதி மிக்கவை எவையோ அவையும் கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். இவ்வகையில், கலைத்திட்டத்தில் அடங்குகின்ற பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டிகள், வசதி செய்து கொடுப்போர்(Facilitator) போன்றவையெல்லாம் கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை நவீன செல்நெறிகளையும், பண்டைய அருஞ் செல்வங்களையும் கலக்கச் செய்து, தனது கல்விக் கோலத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கு அமைய, எட்டாண்டுகளுக்கு ஒரு தடவை கல்வி மறுசீரமைப்புகளினூடாக இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மை பேணப்படுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சற்றேனும் மாறுபடாது, அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்கு உரியவை அல்ல. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காக பாட விடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆக்கபூர்வமானதாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாணவரது அடைவு மட்டத்தை உயர் சதவீதத்துக்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதல் அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி, மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்த முடியும். குறித்த பாடத்தின் பாட நூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இந்த ஆசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அல்ல என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை மாணவர்கள் அண்மிக்கச் செய்தல் வேண்டும். அவ்வகையில் பாடத்தைக் கற்பிப்பதற்கு வழிகாட்டி, வசதிசெய்து கொடுப்பவர்களால் வகுப்பறையில் குறிப்பிட்ட பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் இறுதியில் மதிப்பீடு நடத்தப்பட வேண்டும். அவ்வாறான களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இந்த ஆசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# முகவுரை

ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கான இந்த வினாக்கொத்து மாணவர்கள் விடையளிக்க இடர்ப்படும், குறைந்த புள்ளிகளைப் பெறும் பகுதிகளைத் தெரிந்தெடுத்து அவற்றுக்குப் போதிய விளக்கம் அளிப்பதாக உள்ளது. கடந்த காலங்களில் தமிழ்ப் பாடத்தில் மாணவர்களின் சித்திவீதம் குறைவாக இருந்தமைக்குப் பின்வருவன காரணங்களாக இருந்தன.

1. பகுதி I இற்கு விதந்துரைக்கப்பட்ட நூல்களிலிருந்து வினாக்கள் வினாவப்படும். பல்வேறு தரப்பினரும் பகுதி I இற்குரிய பாடப்பகுதிகளையும் அவற்றிற்குரிய வினாக்களையும் உள்ளடக்கிய பாடநூல்களை வெளியிட்டிருந்தனர். எனினும் இவற்றைக் கொள்வனவு செய்யப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடவேண்டிய நிலையில் ஒவ்வொரு வகுப்பிலும் குறித்த சில மாணவர்களே இந்நூல்களைத் தம்வசம் வைத்திருந்தனர்.

   இக்குறைபாட்டை நீக்க இவ்வினாக்கொத்து மாணவருக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது. பகுதி I இற்குரிய தயார்ப்படுத்தலை மாணவர்கள் இக்கைந்நூலை வைத்துக்கொண்டே சுயமாகக் கற்றலை மேற்கொள்ள முடியும்.

2. மாணவர்கள் தமிழ்ப் பாடத்தில் புள்ளிகளைக் குறைவாகப் பெற இன்னொரு காரணம் அவர்கள் இலக்கியப்பகுதிகளில் துல்லியமான விடைகளை எழுதாமையாகும். அதற்குப் பதிலாகப் பாடப்பகுதிகளைக் குறிப்பாகக் கதைகளை மீள ஒப்புவிப்பதும் தேவையற்ற விடயங்களை விரிவாக எழுதுவதும் ஆகும். இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் இங்கு வினாக்களுக்கான மாதிரி விடைக் குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை விளங்கிக் கற்றுக்கொள்வதன் மூலமும் பயிற்சி செய்வதன் மூலமும் மாணவர்கள் தெளிவான விடையளிக்கும் முறையை அறிந்துகொள்ளவும் பயிற்சி பெறவும் முடியும்.

3. தற்போதைய பாடத்திட்டத்தில் இலக்கணப் பகுதி மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், அதிக புள்ளிகளைப் பெற்றுத் தருவதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் இலக்கணப் பகுதிக்குரிய பல்தேர்வு வினாக்களும், குறுகிய வினாக்களும் அதிகளவில் தெரிவுசெய்யப்பட்டு அவற்றுக்கான விடைகளும் இவ்வினாக்கொத்தில் வழங்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் மாணவர்கள் இலக்கணப் பகுதியில் தெளிவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

4. மாணவர்கள் குறைந்த புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் இன்னொரு பகுதி கட்டுரைப் பகுதியாகும். கட்டுரைகள், அமைப்பு, விடயப்பரப்பு, மொழிநடை, அளவு என்ற பகுதிகளைக் கொண்டு அமைய வேண்டும். எனவே இது தொடர்பான பூரண அறிவின்மை,

   சட்டகம் தயாரிக்காமை, தலைப்பை உரிய வகையில் விளங்கிக்கொள்ளாமை என்பவை புள்ளிகளைக் குறைவாகப் பெறக் காரணமாகின்றன. இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டுப் பல்வேறு வகையான கட்டுரைகளுக்குரிய சட்டகங்கள் இவ்வினாக்கொத்தில் தரப்பட்டுள்ளன.

5. இலக்கிய வரலாற்றுப் பகுதியைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு இலக்கிய வரலாற்றுக் காலப்பகுதிக்குமுரிய இலக்கியங்களின் பெயர்களையும் பண்புகளையும் மாத்திரமே மாணவர்கள் அறிந்திருக்கின்றனர். ஆனால், அண்மைக் காலத் தமிழ்ப்பாட வினாத்தாள்களை நோக்கும் போது இத்தகைய குறுகிய அறிவு மட்டும் விடையளிக்கப் போதுமானதன்று என்பது புலனாகின்றது. குறித்தவொரு புலவரது பெயர்ச்சுட்டியும், குறித்தவொரு இலக்கிய வகையினை மையப்படுத்தியும் குறித்த காலத்து இலக்கியப் போக்குகள் பற்றியும் வினாக்கள் வினாவப்பட்டுள்ளன. எனவே இத்தேவையை நிறைவுசெய்யும் வகையில் வழமையான இலக்கிய

வரலாற்றுப் பாடப்பரப்புக்கு மேலாகப் பல்வேறு நூல்கள் பற்றியும் புலவர்கள் பற்றியும் மேலதிகத் தகவல்கள் இவ்வினாத் தொகுப்பிற் சேர்க்கப்பட்டுள்ளன.

6. தமிழ்ப்பாட வினாத்தாளின் இரு பகுதிகளிலும் கிரகித்தற் பகுதிகள் இடம்பெறுகின்றன. பாடநூலில் உள்ள கவிதை, கட்டுரை, புனைகதை ஆகியவற்றில் சில பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு கிரகித்தலுக்காக வழங்கப்படுகின்றன. தரப்படும் வினாக்களுக்கான விடைகள் கிரகித்தலுக்கென வழங்கப்பட்ட குறுகிய பகுதிகளுக்குள்ளேயே இருந்தபோதிலும் மாணவர்கள் விடையளிக்கும் முறையில் ஏற்படும் தவறுகள் காரணமாகப் பெறுகின்ற புள்ளிகள் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளன. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் கவிதை, கட்டுரை, சிறுகதைப் பகுதிகளிலிருந்து கிரகித்தல் பயிற்சிகளுக்கான வினாக்களும் அவற்றுக்கான விடைகளும் தரப்பட்டுள்ளன. இவற்றைக் கருத்தூன்றிக் கற்பதன் மூலம் மாணவர்கள் தமது அடைவுமட்டத்தை அதிகரித்துக்கொள்ள முடியும்.

கிரகித்தலின் இன்னொரு பகுதி சுருக்கம் எழுதுதல் ஆகும். சுருக்கம் எழுதும்போது கவனிக்க வேண்டிய விதிமுறைகளும் உதாரணங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. அத்துடன் மிக எளிமையான சுருக்கப் பயிற்சிகளில் குறித்த மாணவருக்குரிய வினாவாக அமையக்கூடிய சுருக்கப் பயிற்சிகள் வரை படிப்படியான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

திருமதி.நா.சீதரன் சிரேஷ்ட விரிவுரையாளர்.
தமிழ் மொழித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**ஆலோசனையும் அனுமதியும்:**

கல்விசார் அலுவல்கள் சபை
தேசியகல்வி நிறுவகம்.

**பாட விடய ஆலோசனை**

பேராசிரியர். எஸ். தில்லைநாதன்
தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்.
பேராசிரியர் எம்.ஏ. நு்.மான்
ஓய்வுநிலைப் பேராசிரியர்.
பேராசிரியர். எஸ். சிவலிங்கராசா,
ஓய்வுநிலைப் பேராசிரியர்.
பேராசிரியர். கி.விசாகரூபன்,
தலைவர் தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
பேராசிரியர். எஸ். யோகராசா,
மொழித்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்.
பேராசிரியர். வ. மகேஸ்வரன்,
தலைவர் தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

**பாடநிபுணத்துவக் குழு:**

கலாநிதி. றமீஸ் அப்துல்லா,
தலைவர் மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
திரு.க. இரகுபரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
திரு.மதி ரூபி வலன்ரினா,
தலைவர் மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.
திரு. ஈ. குமரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.
கலாநிதி. ஸ்ரீபிரசாந்தன்,
சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.
திரு. மா. ரூபவதனன்,
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை,
ஊவாவெல்லஸ்ஸ, பல்கலைக்கழகம்.
திரு. எஸ். சுதர்சன்,
விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

**மேற்பார்வை:** செல்வி.வ.விஜயலெட்சுமி, பணிப்பாளர்
தமிழ்மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**இணைப்பாக்கம்:**

திருமதி.நா.சீதரன் சிரேஷ்ட விரிவுரையாளர்.
தமிழ்மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம்.
திரு.மு.தயாநிதி சிரேஷ்ட விரிவுரையாளர்.
தமிழ் மொழித்துறை,தேசிய கல்வி நிறுவகம்.

**எழுத்தாளர் குழு :**

திரு.பா.மகாலிங்கசிவம், விரிவுரையாளர்,
ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.

திருமதி.நா.சீதரன் சிரேஸ்ட விரிவுரையாளர்.
தமிழ் மொழித்துறைதேசிய கல்வி நிறுவகம்.

திரு.எஸ்.ரமேஸ்
ஆசிரியர், யா/மகாஜனாக் கல்லூரி.

திரு.ந.குகபரன்
ஆசிரியர், கிளி/மத்திய மகாவித்தியாலயம்

திரு.எஸ்.கேசவன்
ஆசிரியர், கொ/இரத்மலானை இந்துக்கல்லூரி.

திரு.எஸ்.மதனமோகனராஸ்
ஆசிரியர்,யா/மல்லாகம் தமிழ் வித்தியாலயம்.

செல்வி.க.சந்திரகுமாரி
ஆசிரியர் கொ/விவேகானந்தா கல்லூரி கொழும்பு

திரு.கே.வரதராஜன்
உதவிக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிமனை, கல்முனை.

**மொழிச்செவ்விதாக்கம் :**

திருமதி. நா. சீதரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித் துறை.

**கணினி வரைகலை**

செல்வி. நாகேந்தினிஆறுமுகம்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii |
| 02 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iv |
| 03 | முகவுரை | v |
| 04 | வளப்பங்களிப்பு | vi - vii |
| 05 | பொருளடக்கம் | viii |
| | 1.0. செய்யுள் பகுதி | 01 - 41 |
| | 2.0. சிறுகதை | 42 - 54 |
| | 3.0. நாவல் | 55 - 57 |
| | 4.0. கட்டுரைகள் | 58 - 60 |
| | 5.0. இலக்கணம் | 61 - 81 |
| | 6.0. கட்டுரை ஆக்கம் | 82 - 88 |
| | 7.0. கிரகித்தல் | 89 - 91 |
| | 8.0. சுருக்கம் எழுதுதல் | 92 - 94 |
| | 9.0. இலக்கிய வரலாறு | 95 - 112 |
| | 10.0 இருபதாம் நூற்றாண்டு | |
| | சிறுகதை, கவிதை, நாவல். | 113 - 122 |
| | 11.0. ஈழத்து இலக்கிய வரலாறு | 123 - 150 |

# பகுதி - I

# செய்யுட் பகுதிகள்

**அடையப்பட வேண்டிய தேர்ச்சிகளும் தேர்ச்சி மட்டங்களும்.**

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 1.0 | : | தொடர்பாடல் திறனை விருத்தி செய்யும் வகையில் கட்டுருவாக்கத் திறன் உள்ளவராகச் செயற்படுவார். |
| தேர்ச்சி | 2.0 | : | செய்யுள் இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன்வைப்பார். |
| தேர்ச்சி மட்டம் | 1.1 | : | செய் திறனும் வினைத்திறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார். |
| | 1.2 | : | சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவகையில் பண்போடு உரையாடுவர். |
| | 1.3 | : | எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் புலப்படுத்திப் பண்போடு பேசுவார். |
| | 1.4 | : | குறித்த விடயம் தொடர்பாக வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் நிகழ்ச்சிகளிலும் தமது கருத்துக்களை ஆற்றலுடன் முன்வைப்பார். |
| | 2.1 | : | உயிர்த் துடிப்புள்ள கட்டுருவாக்கச் செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவார். |
| | 2.2 | : | குறித்த இலக்கியங்கள் தோன்றிய பின்னணியை அறிந்து கூறுவார். |
| | 2.3 | : | பாடத்தை அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்துக் கருத்துக்களை முன்வைப்பார். |
| | 4.1 | : | பல்வேறு ஆக்கங்களை வாசித்துக் கிரகித்து, அவற்றில் இடம்பெறும் மொழிக் கூறுகளைப் பகுத்துக் கருத்துக்களை முன்வைப்பார். |
| | 5.2 | : | புலவர்கள், படைப்பாளிகளினது படைப்பாற்றல் திறன்களையும் படைப்புக்கள் பற்றியும் எடுத்துக் கூறுவார். |
| | 7.3 | : | சொற்களைப் பொருளறிந்து சேர்த்தும் பிரித்தும் எழுதுவார். |

# பாடலும் பொருளும் (கட்டமைப்பு வினாக்கள்)

## சங்கப்பாடல்கள்.

1. "கருங்கால் வேம்பின்......" எனும் பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

**அ.** அணிச்சிறப்பை விளக்குக.

- ''ஆற்றய லெழுந்த வெண்கோட்டதவத் தெழுகளிறு மிதித்த வொரு பழம் போல'' என்ற அடிகளில் உவமையணி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அயலவர்களின் அலர் தூற்றலால் தலைவியின் உள்ளம் அடைந்த வேதனையை வெளிப்படுத்த இவ்வுவமை கையாளப்பட்டுள்ளது.

- அத்திப்பழம் மென்மையானது. நண்டுகளின் கால்களோ வன்மையானவை. இத்தகைய பல நண்டுகளின் கால்களினால் சிதைக்கப்பட்ட அத்திப்பழம் போல தலைவியின் உள்ளமும் வேதனையடைகின்றது.

**ஆ.** இப்பாடலின் ஊடாக வெளிப்படுத்தப்படும் தலைவியின் மனநிலை.

வேப்பமரம் பூக்கத்தொடங்குகின்ற இனிய இளவேனிற்காலம் தலைவனின்றிக் கழியப்போகிறதே என்ற தலைவியின் அங்கலாய்ப்பின் மூலம் அவளது பிரிவுத்துன்பம் உணர்த்தப்படுகிறது. மேலும் அயலவரின் பழிதூற்றலால் மென்மையான இதயம் கொண்ட தலைவியடைந்த துயரம் வெளிப்படுத்தப்படுகின்றது.

**இ.** சங்ககால அகத்திணைப் பண்பு.

- முல்லை நில இருத்தல் ஒழுக்கம் கூறப்படுகின்றது.
- முதல், கரு, உரிப் பொருள் இடம்பெறுதல்.
- பாத்திரக் கூற்று.
- ஒரு பாடலில் ஒரு செய்திமட்டுமே கூறப்படுதல்.

2. "நல்லுரை யிகந்து......" எனும் பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

**அ.** பாடலின் பொருளை எழுதுக.

மனமே நல்ல சொற்களாகிய புகழுரைகளை நீக்கி, பயனற்ற பழிச் சொற்கள் பரவி மழை பெய்யும் பொழுது, அந்நீரினால் நிறைந்த சுடப்படாத பச்சை மண்ணாலான மட்பாண்டம் போல, உள்ளத்தினால் தாங்க முடியாத ஆசை வெள்ளத்தில் நீந்தியதாய், பெறுவதற்கரியதானதை பெற ஆசைகொண்டாய். உயர்ந்த மரக்கிளையில் உள்ள குட்டியையுடைய பெண்குரங்கு தன்குட்டியால் தழுவப்பெற்று அமைவது போல, மனம் பொருந்த உன் நினைவைத் தழுவிக்கொண்டு உனது குறையைக் கேட்டு அருளும், தலைவியைப் பெறுவாயாயின், உனது போராட்டம் மிகவும் பெருமைபெறும்.

**ஆ.** இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமை ஒன்றை எடுத்துக்காட்டி அதன் சிறப்பை விளக்குக.

- "பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல"
  ஆசை வெள்ளத்தைத் தாங்கமாட்டாமல் உள்ளம் உடைகின்ற தலைவனது நிலையை வெளிப்படுத்த, நீரைத் தாங்காது அழிகின்ற பசுமட்கலத்தை உவமை காட்டியது சிறப்பானது.

- “மகவுடை மந்தி போல”
  தன் குறைகளைக் கேட்டுத் தனக்கு அனுசரணையாக இருப்பவர்களைத் தலைவனது உள்ளம் அவாவி நிற்கின்றது. இதனை விளக்க மரக்கிளைகளில் தாவுகின்ற போது தன் குட்டியை விடாது அணைத்துக் கொள்ளும் மந்தியை உவமை காட்டியது பொருத்தமானது.

**இ.** இப்பாடலினூடாக வெளிப்படுத்தப்படும் தலைவனின் மனநிலையை விளக்குக.

உள்ளம் வருந்திய நிலையில் உள்ள தலைவன் தனக்கு ஆதரவளிக்கக்கூடிய ஒரு துணையை எதிர்பார்க்கிறான். தலைவியினுடனான இரவுக்குறியைத் தலைவனது மனம் அவாவி நிற்கின்றது. இதற்கு ஒருவர் உதவ வேண்டும் என்ற எதிர்பார்ப்புணர்வே தலைவனது மனநிலையாக இப்பாடலில் வெளிப்படுகிறது.

**ஈ.** இப்பாடலின் ஊடாக வெளிப்படுத்தப்படும் சங்ககால அகத்திணைப் பண்புகளை எடுத்துக்காட்டுக.

- அகப்பண்புகளாக இரவுக்குறி, வரைவு கடாவுதல் என்ற செய்திகள் கூறப்படுகின்றன.
- பெயர் சுட்டாது கூறுதல்.
- தலைவன் கூற்றாக இடம்பெறுதல்.
- முதல், கரு, உரிப் பொருள்கள் இடம்பெறுதல்.

**3.** “ நினையாய் வாழி தோழி! நனைகவுள்
அண்ணல் யானை அணிமுகம் பாய்ந்தென
மிகுவலி இரும்புலிப் பகுவாய் ஏற்றை
வெண்கோடு செம்மறுக் கொளீஇய, விடர்முகைக்
கோடை எற்றிய கருங்கால் வேங்கை
வாடு பூஞ்சினையிற் கிடக்கும்
உயர்வரை நாடனொடு பெயருமாறே ”

**அ.** இப்பாடலின் பொருளை உமது நடையில் எழுதுக.

தோழியே, நீ வாழ்க. மிக்க வலிமையுடைய பெரிய பிளந்த வாயையுடைய ஆண் புலியானது மதத்தால் நனைந்த கன்னங்களை உடையதும், தலைமையுடையதுமான யானையினது அழகிய முகத்தின்மீது பாய்ந்தது. அதனால் அந்த யானையின் வெண்மையான கொம்பைத் (தந்தம்) தனது இரத்தத்தால் சிவந்து கறைகொள்ளச் செய்தபுலியானது, பிளவையுடைய கற்குகையிலுள்ள மேலைக்காற்று வீழ்த்திய கரிய அடியையுடைய வேங்கை மரத்தினது வாடிய பூவை உடைய கிளையைப் போல புண்பட்டு இறந்து கிடந்தது. இத்தகைய உயர்ந்த மலையை உடைய நாட்டுக்குச் சொந்தமான தலைவனுடன் உடன்போகும் திறத்தை எண்ணுவாயாக.

**ஆ.** தோழி கூற்றான இப்பாடலில் வெளிப்படும் தோழியின் உள்ளக்கிடக்கை யாது?

தலைவனோடு உடன்போக்கிலே செல்வதற்கு விரும்பும் தலைவியை உடன்படுத்தும் தோழியின் விருபபம்.

**இ.** தோழி தனது கருத்துக்குத் தலைவியை உடன்படச் செய்வதற்குத் கையாண்ட உத்தி யாது?

- தலைவனுடைய வலிமையை எடுத்துக்காட்டி உடன்போக்கில் துன்பங்கள் ஏற்பட்டால் அதனை எதிர்கொள்ளும் ஆற்றல் தலைவனுக்கு உண்டு என்பதை உள்ளுறை உவமையாகக் கூறித் தலைவிக்குத் துணிவை ஏற்படுத்துகின்றாள்.

- தலைவனது காட்டுயானை புலியை எதிர்க்காமலே தனது கொம்பினாலே விழச்செய்தது எனக் கூறுவதன்மூலம் தலைவனது பெருவலியைப் புலப்படுத்துகின்றார்.

- தலைவியின் உள்ளத்தை அறிந்து உரையாடி, வாழ்த்திய பின் தோழி எடுத்துரைத்தல்.

**ஈ.** பாடலில் வந்துள்ள அணிகளை எடுத்துக்காட்டி விளக்குக.

**உவமையணி**
வேங்கை மரத்தின் வாடிய பூவையுடைய கிளையைப் போலப் புலி இறந்து கிடந்தமை உவமையணியாகும்.

**உள்ளுறை உவமை**
"நனைகவுள் அண்ணல் யானை அணிமுகம் பாய்ந்தென..." என்பதில், அண்ணல் யானை என்பது தலைவனையும், இரும்புலி பகுவாய் ஏறு என்பது உடன்போக்கில் ஏற்படும் ஆபத்தையும் குறிப்பால் உணர்த்துகின்றன.

யானையானது மிகுந்த வலிமையுடைய புலியை எதிர்க்காமலே தன் கொம்பினால் விழச்செய்தது என்பதன் மூலம் தலைவனது பெருவலிமை வெளிப்படுத்தப்படுகின்றது.புலியின் இரத்தத்தால ் தந்தம் இரத்தமானதேயன்றி யானைக்கு ஊறு ஒன்றும் நேரவில்லை என்றார்.

**உ.** இப்பாடலில் தோழி என்ற பாத்திரம் பெறும் முக்கியத்துவம் யாது?

- தோழி தலைவியின் உணர்வுகளையும் செயற்பாடுகளையும் நன்கு புரிந்துகொண்டவள்.
- குறிப்பறிந்து செயற்படும் ஆற்றல் உடையவள்.
- தலைவன், தலைவி ஆகிய இருவரதும் நலன்களைக் காத்து அவர்களுக்கு ஆலோசனை கூறுவதில் வல்லமை உடையவள்.
- களவு நிலையைக் கற்பு நிலையாக்கி இல்லறத்தில் இருவரையும் இணைத்து வைக்க விரும்புபவள்.

**4.** 'பொங்கு திரை பொருத வார்மண லடைகரை
..................................................................
காமங் கொல் இவள் கண்பசந் ததுவே'' (நற்றிணை)

**அ.** இப் பாடலின் பொருளைத் தற்கால உரைநடையில் எழுதுக.

பொங்கி எழும் அலைகள் மோதுகின்ற நீண்ட மணற்பரப்பினையுடைய கடற்கரையிலே உதிர்ந்து கிடந்த மெல்லிய காம்பையுடைய களிபொருந்திய புறப்பகுதியைக் கொண்ட நாவற்பழத்தினைத் தங்கள் இனமெனக் கருதி வண்டுகள் மொய்த்தன. அதனைப் பழமெனவே நினைத்துப் பல கால்களையுடைய நண்டு கைப்பற்றிய காரணத்தால் வண்டுகள் அந்நண்டை விலக்கிப் பழத்தை பெற்றுக்கொள்ளும் முயற்சியில் பேரொலி எழுப்பின. அப்பொழுது உணவு தேடி அங்கு வந்த நாரையைக் கண்ட நண்டு பழத்தை விட்டு அகன்றது. அத்தகைய கடற்றுறையான மாந்தை போன்ற இவளது நலமானது, முன்பும் இவ்வாறே இருந்தது என்பதை நீ காண்பாயாக. நீ அருகிருந்து களவுக்காலத்தில் விலகாது இன்பம் கொடுத்தாலும், இவள் பசலை நோயுற்றதன் காரணம் சிறிதளவு நெருக்கம் குறைந்தமையால் கெட்ட அழகின் மிகுதியோ? கள்ளுண்டார்க்குக் கள்ளில்லாமல் போகுங் காலத்தில் ஏற்படும் வேறுபாடு போன்ற காம மயக்க வேறுபாடோ? அவ்விரண்டும் அல்லவே.

**ஆ.** இப்பாடலில் பயின்றுள்ள உள்ளுறை உவமத்தை விளக்குக.
நாவற்பழம் தலைவியாகவும், வண்டு தோழியாகவும், நண்டு தமராகவும், நாரை தலைவனாகவும் உள்ளுறுத்தப்பட்டுள்ளன.
நாவற்பழத்தை வண்டு மொய்த்தாற் போல் தலைவியைத் தோழி சார்ந்திருந்தாள். நண்டைப் போல தமர் இற்செறிப்பு (வீட்டை விட்டு வெளியேறாது செய்தல்) ஆகிய துன்பத்தை

உண்டாக்கினர். நாரையைப் போல தலைவன் வர யாவரும் விலகித் தலைவனுக்குத் தலைவியைத் திருமணம் செய்து கொடுத்தனர்.

**இ.** ''இவள்கண் பசந்ததுவே'' எனும் தொடர் மூலம் உணர்த்தப்படுவது யாது?

தலைவியிடத்தில் பசலை நோய் ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. இங்கு தலைவி அடைந்த உளத்துயரால் ஏற்பட்ட உடல் சார்ந்த வெளிப்பாட்டின் மூலம் தலைவியானவள் தலைவனது சிறிய பிரிவையேனும் தாங்க முடியாதவள் என உணர்த்தப்படுகின்றது.

**ஈ.** இப்பாடல் யார் கூற்றாக அமைந்துள்ளது?

இப்பாடல் தோழி கூற்றாக அமைந்துள்ளது.

**உ.** இப்பாடலினூடாகப் புலப்படும் சங்ககால அகத்திணைப் பண்புகள் யாவை?

01) காதல் ஒழுக்கம் இடம்பெற்றிருத்தல்.
02) பெயர் சுட்டாது கூறுதல்.
03) தோழி கூற்றாய் அமைந்திருத்தல்.
04) முதல், கரு, உரிப்பொருள்கள் இடம் பெறல்.
05) உள்ளுறை உவமம் கையாளப்படடிருத்தல்.

**5.** ''பாணன் சூடிய பசும்பொன்தாமரை'' என்னும் பாடலில்,

**அ.** பேகனின் கொடைச்சிறப்பு வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக.

- பேகனிடம் பொருள் பெற்று வந்த பாணனின் செல்வ நிலையைச் சித்திரிப்பதன் மூலம் பாணர் பொன் தாமரைப் பூவும், விறலியர் பொன் ஆபரணங்களும் சூடியிருப்பதைக் குறிப்பிடல்.

- குதிரை பூட்டிய நெடுந் தேர்களை வைத்திருத்தல். ஊரில் இருப்பது போல காட்டின் நடுவிலும் வசதியாக இருத்தல்.

- மயிலுக்குப் போர்வை கொடுத்த சம்பவத்தை நினைவூட்டுவதன் மூலம் பேகனின் கொடைச் சிறப்புப் புகழப்படல்.

- பயன் கருதாத கொடை என்பதை வலியுறுத்த,

  ''எத்துணை ஆயினும் ஈதல் நன்றென
  மறுமை நோக்கின்று அன்றே''
  எனப் பிறர் வறுமை எய்தி வருந்தும் துன்பத்தைப் போக்குவதையே நோக்கமாகக் கொணடது பேகனது கொடை அமைகிறது எனப்படல்.

**ஆ.** ஆற்றுப்படை என்ற துறை இப்பாடலிற் பயன்படுத்தப்பட்டிருக்குமாற்றினைத் தெளிவுபடுத்துக.

பொருள் பெற்றுவரும் இரவலன் ஒருவன் பொருள் பெறாத இரவலன் ஒருவனைத் தான் பொருள் பெற்ற வள்ளலிடம் சென்று, அவனும் பொருள் பெற வழிப்படுத்தும் வகையிற் பாடப்படுவதே ஆற்றுப்படை ஆகும்.

பேகனிடம் பொருள் பெற்ற பாணன் பொருள் பெறாத பாணனை ஆற்றுப்படுத்தும் வகையில் இப்பாடல் அமைந்துள்ளது.

6. ''அளிதோ தானே பாரியது பறம்பே''
என்னும் புறநானூற்றுப் பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

**அ.** பாரியின் நாட்டுவளம் புலப்படுத்தப்படுமாற்றினைத் தெளிவுபடுத்துக.

உழவர் உழாமலே நன்கு பயன்களைத் தருவனவான
மூங்கில் நெல் விளைவது.
பலாப்பழம் பழுத்து மணம் வீசுவது.
வள்ளிக் கொடிகளின் கீழ் கிழங்குகள் விளைவது.
உயரமான மலைகளிலிருந்து தேன் சொரிவது.
மலையில் எண்ணற்ற சுனைகள் காணப்படுவது.

**ஆ.** பாரியின் கொடைச்சிறப்பு, வீரம் என்பன எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.?

கொடைச்சிறப்பு :
விறலியர் பின்னே வர, பாணர்கள் அவனைப் புகழ்ந்து பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் சென்றால் நாட்டையும் மலையையும் ஒன்றாகவே கொடுத்துவிடுவான் எனபது நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே.....என்பதால் கூறப்படுகிறது.

வீரம் :
மரங்களில் எல்லாம் கட்டுமளவிற்கு யானைப்படை இருந்தாலும், இடமெல்லாம் நிறைந்திருக்கும். தேர்ப்படை இருந்தாலும் போர் முயற்சிகளால் அவனை வெல்ல முடியாது. வாட்படை கண்டு அஞ்சுபவனும் அல்லன் என அவன் வீரம் கூறப்படல். மூவேந்தரும் ஒன்றாகச் சேர்ந்து சென்றாலும் வெல்ல முடியாது எனல்.

**இ.** இப்பாடலினூடாக வெளிப்படும் புறத்திணை இலக்கியப் பண்புகள் எவை?

1. மன்னனின் வீரம், கொடைச்சிறப்பு கூறப்படல்.
2. பெயர் சுட்டிக் கூறப்படல்.
3. புலவர் கூற்றாக அமைதல்.
4. வெளிப்படையாகப் புகழ்ந்து கூறுதல்.

7. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற புறநானூற்றுப் பாடலில்,

**அ.** அறக்கருத்துக்கள் புலப்படுத்தப்படுமாற்றினைத் தெளிவுபடுத்துக.

எல்லாம் எமது ஊர்தான். அனைவரும் எமது உறவினரே.
தீமை, நன்மை என்பவை பிறர்தந்து வருவதில்லை.
இறப்பு புதுமையானது அன்று.
வாழ்தலை இனிமையானதென்றோ, வெறுப்பு வந்தபோது இனிமையற்றதென்றோ கருதுவதில்லை.
ஆர்உயிர் விதிவழியிலேயே செல்லும்.
பெரியோரை வியப்பதும் இல்லை,சிறியோரை இகழ்வதும் இல்லை.

**ஆ.** கையாளப்பட்ட அணியை விளக்குக.

உவமையணி :
விதிவழிச் செல்லும் உயிருக்கு, பேரியாற்று நீரின் வழியே இழுத்துச் செல்லப்படும் தெப்பம் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

# திருக்குறள்.

1. **அமைச்சு** என்ற அதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு,

அ. அமைச்சு என்பதன் பொருள்.

அரசனுக்கு அண்மையில் இருந்து அரசன் ஆணைகளை நிறைவேற்றவும், அரசனுக்கு ஆலோசனை கூறவும் அமைந்த அறிவுடைச் செயலாளரே அமைச்சர் என்பதன் பொருளாகும்

ஆ. அமைச்சரது குணவியல்புகள்.

- கருவியும் காலமும் அறிந்து உரிய கருவி, உற்ற காலம், செயலாற்றும் வகை, ஆற்றிடும் பணி ஆகியவற்றை ஆய்ந்தறிந்து செயற்படுபவனே சிறந்த அமைச்சன்.
- பயமின்மை, நற்குடிப்பிறப்பு, குடிமக்களைப்பாதுகாத்தல், நீதிநூல்களைக்கற்று செய்வன, தவிர்ப்பன அறிதல், முயற்சி ஆகியவற்றை திருத்தமாக உடையவன்.
- பகைவற்குத் துணையாய் இருப்பவரைப் பிரித்தல், தம்பக்கம் சேர்த்துக்கொள்ளுதல் ஆகியவற்றில் வல்லவனாக இருத்தல்.
- செய்யவேண்டிய செயல்கள் எவையெனவும்,அவற்றை நிறைவேற்றும் முறையினையும் ஆராய்ந்து அறிவதோடு தான் தெளிவாக அறிந்தவற்றை எடுத்துக்கூறுவதிலும் வல்லவனாக இருத்தல்.
- அரசனால் செய்யப்படும் அறங்களை அறிவதோடு, அறிவுடைய சொல்லை உடையவனாகவும், எக்காலத்திலும் செயலாற்றும் திறன்களை அறிந்தவனாகவும், ஆராய்ந்து கூறுபவனாகவும் இருத்தல்.

இ. அமைச்சனது செயல்கள்.

- உலக இயற்கையை அறிந்து செயலாற்றும் திறனுடையவனாக இருத்தல்.
- அரசனுக்கு நன்மையை அளிக்கும் உறுதிப் பொருளைக் கூறுபவனாக இருத்தல்.

ஈ. அமைச்சர் தம்கடமைகளைச் செய்யாவிட்டால் ஏற்படும் இழிவு.

- அரசன் அருகிருந்து அவனுக்குத் தவறான வழியில் அறிவுரை கூறுபவன் மிகவும் ஆபத்தானவன்.
- செயல் செய்யும் திறமையில்லாதவன் அச்செயலை முடிவற்றதாகவே செய்வான்.

2. **சொல்வன்மை** என்ற அதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ. சொல்லினது இலக்கணம்.

- கேட்பாரைப் பிணிக்கத்தக்கதாகவும், கேளாதவரும் விரும்பும் தன்மையுடையதாகவும் கூறப்படுதல்.

ஆ. அதனைச் சொல்லுமாறு,

- சொல்லின் திறமறிந்து சொல்லைக் கையாளுதல் வேண்டும்.
- வெல்லத்தக்க வேறோர் சொல்லில்லை என்பதை அறிந்து சொல்லக்கருதிய சொல்லைச் சொல்லுதல் வேண்டும்.
- பிறர் விரும்பத்தக்க சொல்லைச் சொல்வது.

இ. சொல்லுதல் வல்லாரது சிறப்பு

- திறம்படச் சொல்லக்கூடியவன், சொல்வதில் சோர்வுபடாதவன, அவைக்கு அஞ்சாதவன், பகைமையினால் யாரும் இவனை வெல்லமுடியாது.

- தொகுத்து, ஒழுங்காக, இனிதாகக் கூறுபவன் -- இவனது கருத்தை உலகம் விரைவாக ஏற்றுக்கொள்ளும்.

ஈ. அது மாட்டாரது இழிவு

- குற்றமற்ற சொற்களைப் பயன்படுத்துவதை அறியாதவன்-- பலசொற்களைச் சொல்வதற்கு ஆசைப்படுவான் -- பயனற்ற சொற்களைப் பேசுபவன்.

- பிறர் விளங்குமாறு விரித்துரைக்க முடியாதவன் -- பயனற்றவன்.

3. வினைத்தூய்மை என்ற அதிகாரத்தில்

அ. வினைத்தூய்மையின் சிறப்பு.

- வினையது நன்மை அவன் வேண்டியன யாவற்றையும் கொடுக்கும்.

ஆ. பாவமும் பழியும் பயக்கும் வினைசெய்யற்க என்பது,

- தம் அரசனுக்கு இம்மைக்கண் புகழும் மறுமைக்கண் அறமும் பயவாத வினைகளை அமைச்சன் எக்காலத்திலும் செய்யாமை.

- தம் புகழ் கெடுவதற்குக் காரணமாகிய செயல்களைச் செய்வதைத் தவிர்த்தல்.

- எவ்வாறான துன்பம் வந்தபோதும் பிறருக்குத் தீங்குபயக்கும் செயல்களைச் செய்யாமை.

- யான் எத்தன்மையான செயல்களைச் செய்தேன் என்று பின்னர் வருந்தத்தக்க செயல்களை ஒருபோதும் செய்யாதிருத்தல். தவறிச் செய்தால் மீண்டும் செய்யாதிருத்தல்.

- தன்னைப் பெற்றெடுத்த தாயின் பசியைக் கண்டு துன்பப்படும் நிலை வந்தாலும் அறிவுடையார் பழிக்கும் செயல்களைச் செய்யாதிருத்தல்.

இ. அதற்குக் காரணம்,

- பிழையான செயல்களைச் செய்து செல்வத்தைச் சேர்ப்பதைக் காட்டிலும் அவ்வாறு செய்யாத சான்றோர் அனுபவிக்கும் மிகுந்த வறுமையே உயர்ந்தது.

- சான்றோர் விலக்கிய செயல்களைத் தாமும் விலக்காது செய்தால் அது சரியாக நிறைவு பெறாது. நிறைவு பெற்றாலும் பின் பெரும் துன்பத்தையே தரும்.

- பிறர் அழுமாறு தீய செயல்களால் பெற்றுக்கொண்ட பொருட்கள் யாவும் அதனைப் பெற்றவன் அழுமாறு நீங்கிப்போகும்.

ஈ. வினைத்தூய்மை என்ற அதிகாரத்தில் காணப்படும் உவமையில் நீர் காணும் சிறப்பினை விளக்குக.

**“ சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்**

**கலத்துள்நீர் பெய்தீரீஇ யற்று "**
என்னும் குறளில் உவமையணி இடம்பெற்றுள்ளது.

அமைச்சன் தீயவழியில் பொருள்சேர்த்து அரசனுக்கு நன்மை செய்வதற்குமுற்படுவதற்குப் பசுமையானமட்கலத்துள் நீரை ஊற்றுவது உவமையாகக் கூறப்பட்டுள்ளது. பசுமட்கலத்துள் நீரைவிடும்போது அது முதலில் நன்மை தருவது போலத் தெரிந்தாலும் இறுதியில் பாத்திரத்தையே அழித்துவிடும். அதுபோல இச்செல்வமும் இறுதியில் மன்னனுக்கு அழிவையே தரும் என்பது உவமை மூலம் விளக்கப்பட்டுள்ளது.

4. **வினைத்திட்பம்** என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு,

அ. வினைத்திட்பம் என்றால் என்ன?

செயல் செய்வதற்குரிய மனவலிமை வினைத்திட்பமாகும்.

" **வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப**
**மற்றைய வெல்லாம் பிற** "

ஆ. வினைத்திட்பத்தினது பகுதி, அதன் அருமை, சிறப்பு.

பகுதி :
- நிறைவேறாது தடைப்படும் செயல்களைச் செய்யாமையும் செய்யும் வினை தெய்வத்தால் தடைப்படும்போது அதற்குத் தளராமையும்.
- செய்யப்படும் செயல் உரியபடி முடிவுபெற வேண்டும். முடிவு இடையிலே வெளிப்படுமாயின் அது பல துன்பங்களைத் தரும்.

அதன் அருமை : இந்தச் செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் எனச் சொல்வது எல்லோருக்கும் எளிது, சொல்லியபடி செய்தல் யாவருக்கும் அரிது.

சிறப்பு : எண்ணத்தால் சிறந்து ஆற்றலால் பெருமை பெற்ற அமைச்சரின் வினைத்திட்பம் வேந்தனால் அறியப்பட்டு உலகத்தாரால் மதிக்கப்படும்.

இ. அஃதுடையார் எய்தும் பயன், அவரை அறியுமாறு

- பயன் : தாம் எண்ணியதைச் செயலாக்கும் மனவுறுதி உடையவராயின் அவர்கள் தாம் அடைய எண்ணிய பொருள்கள் யாவற்றையும் தாம் எண்ணியவாறு அடைவர்.
- அவரை அறியுமாறு : செயலில் மனவுறுதி உடையவர்கள் உருவத்தில் சிறியவர்களாயினும் அவர்களை இகழக்கூடாது.

ஈ. வினை செய்யுமாறு

- செய்யத் துணிந்த செயலை மனந் தளராமலும் காலந் தாழ்த்தாமலும் செய்து முடித்தல்.

- செயலைச் செய்யும்போது தமக்குத் துன்பமே வருவதாக இருந்தாலும் தளராது துணிவோடு செய்து முடிக்கின்றமை.

உ. வினைத்திட்பமில்லாரது இழிவு
- செய்யும் தொழிலிலே மனவுறுதியுடன் செயற்படாத அமைச்சரை உலகில் அறிவினால் உயர்ந்தவர்கள் மதிக்க மாட்டார்கள்.

5. **வினைசெயல்** வகை என்ற அதிகாரத்தில்,

அ. பொதுவகையால் வினை செய்யும் திறம்

- செயலைச் செய்வதற்குத் துணிவு பெற்றபின் செய்யாது காலந் தாழ்த்துவது குற்றமாகும்
- காலத்தைத் தாழ்த்திச் செய்யும் தொழில்களைக் காலம் தாழ்த்தியும், காலம் தாழ்த்தாது செய்யவேண்டிய செயல்களைக் காலம் தாழ்த்தாமலும் செய்யவேண்டும்.

ஆ. வலியான் செய்யும் திறம்

- வலியானது சிறப்பு : செய்யவேண்டிய செயலை இயலக்கூடிய வரை செய்துமுடிப்பது நல்லது. அது இயலாதவிடத்து சாம, பேத, தான, தண்டம் என்பவற்றுள் ஒன்றினால் செய்து முடித்தல் வேண்டும்.
- வலியான் செய்யும் திறம் : குறையுள்ள செயலும், அடக்கப்படாத பகையும் வளர்ந்து அழிக்கும் தன்மையுடையன.

**இ.** ஒப்பான் செய்யும் திறம்

- செயலைச் செய்யுமிடத்து பொருள், கருவி, காலம், செயல், இடம் ஆகிய ஐந்தினையும் மயக்கமின்றி முழுமையாக எண்ணிச் செய்ய வேண்டும்.
- செயல் செய்யும் போது அதனை முடிக்கும் முறையையும் அதற்கு ஏற்படக்கூடிய தடையையும் அச்செயல் நிறைவேறிய பின் கிடைக்கக்கூடிய பெரும் பயனையும் சீர்தூக்கிப் பார்த்துச் செய்ய வேண்டும்.
- செய்யப்படும் செயலைத் தொடங்கிய பின் செய்யும் முறையானது அச்செயலின் உண்மை இயல்பினை அறிந்தவனின் கருத்தினை அறிந்து செய்ய வேண்டும்.

**ஈ.** மெலியான் செய்யும் திறம்

- ஒரு செயலைக்கொண்டு மற்றொரு செயலை முடித்துக் கொள்ள வேண்டும்.
- செயலில் ஈடுபடும் தமது நண்பருக்கு இனியவற்றைச் செய்வதிலும் பார்க்க விரைவாகத் தன் பகைவரைத் தமக்கு நட்பாக்கிக் கொள்ள வேண்டும்.
- ஆளும் இடம் சிறியரான அமைச்சர் தம்மிலும் பார்க்க வலிமை உடையவர்கள் எதிர்க்கும் போது தம்மைச் சார்ந்தவர்கள் நடுங்குதல் கண்டு அஞ்சி, பின்பு தமக்கு வேண்டியதைப் பெறுவதற்குத் தம்மிலும் வலிமையுடையோரைப் பணிந்து பெற்றுக்கொள்வர்.

6. **தூது** என்ற அதிகாரத்தில்,

**அ.தூதுவரின்** பொது இலக்கணம்

- சுற்றத்தாரிடம் அன்புடையவனாதலும், உயர்குடிப் பிறத்தலும், வேந்தர் விரும்பும் பண்புடையராதலும் தூதுவனின் இலக்கணமாகும்.
- அன்புடைமை, அறிவுடைமை, ஆராய்ந்த சொல்வன்மை ஆகிய மூன்றும் தூதுவர்க்கு இன்றியமையாதன.

**ஆ.** வகுத்துக் கூறுவானது இலக்கணம்,

- வேற்றரசரிடம் சென்று தன் அரசனுக்கு வெற்றிதரும் செயல் பற்றித் தூது சொல்பவனுக்கு இலக்கணம், நீதிநூலை அறிந்தவருள்ளும் அந்நூல் வல்லவனாகுதல் ஆகும்.
- இயற்கை அறிவு, அழகிய தோற்றம், ஆராய்ந்துணரும் கல்வி ஆகிய மூன்றும் பொருந்த உடையவன் தூதுரைக்கும் தொழிலை மேற்கொள்ளலாம்.
- தொகுத்துச் சொல்லியும், பயனற்ற சொற்களை நீக்கி மனம் மகிழச் சொல்லியும் தன் அரசனுக்கு நன்மை செய்பவனே தூதுவன் ஆவான்.
- நீதிநூல்களைக் கற்று, கருதிப் பகைவேந்தர் மனங்கொளச் சொல்லிப் பகைவரின் கொடும் பார்வைக்கு அஞ்சாது காலத்தோடு பொருந்தியதாகச் செய்து முடிக்கும் உபாயம் அறிந்து கூறுபவனே தூதுவனாவான்.
- தான் செய்ய வேண்டிய கடமையை அறிந்து, அதனை நிறைவேற்றும் பொருத்தமான காலமறிந்து, அதனைச் சொல்லுவதற்குரிய இடமறிந்து, முன்கூட்டிச் சிந்தித்துச் சொல்பவரே தூதுவருள் சிறந்தவர்.

**இ.** கூறியது கூறுவானது இலக்கணம் வெளிப்படுத்தப்படுமாற்றை விளக்குக.

- தன்னரசன் சொல்லியவற்றை அவன் சொல்லியவாறே மாற்றரசனிடம் சொல்லுபவனின் இலக்கணமாவது தூய்மை, துணையுடைமை, துணிவுடைமை ஆகிய மூன்று பண்பு களையும் கொண்டிருத்தல் ஆகும்.
- தனக்கு ஏற்படும் துன்பங்களுக்கு அஞ்சித் தனதரசனுக்குத் தாழ்வுதரும் சொற்களை வாய் தவறியும் சொல்லாத மன உறுதியுடையவர் தூது செல்வதற்கு உரியவராவார்.
- தன்னுயிர்க்கு முடிவு வருவதாயிருப்பினும் அஞ்சாது தன் அரசனின் நன்மைக்காக அரசன் சொல்லியவாறு வேற்றரசனிடம் சென்று சொல்பவனே தூதுவனாவான்.

**7. மன்னரைச் சேர்ந்தொழுகல்** என்ற அதிகாரத்தில்,

**அ.** பொதுவகையால் மன்னரைச் சேர்ந்தொழுகல்

- மாறுபடுதல் உடைய அரசரைச் சேர்ந்து வாழும் அமைச்சர் அவரை மிக நீங்காதும் மிக நெருங்காதும் பழகுதல் வேண்டும்.
- தாம் சேர்ந்தொழுகும் மன்னன் விரும்புவனவற்றைத் தாம் விரும்பாது விடுவது. அமைச்சருக்கு நிலைபெற்ற செல்வத்தைக் கொடுக்கும்.
- அமைச்சர் பெரிய தவறுகள் தம்மிடத்தில் உண்டாகாதவாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அவை ஏற்பட்ட பின் அரசர் சந்தேகப்பட்டால் அவரைத் தெளிவித்தல் எவராலும் முடியாது.

**ஆ.** சிறப்பு வகையால் மன்னரைச் சேர்ந்தொழுகல்

- அரசர் அருகில் இருக்கையில், அவர் காண ஒருவன் காதில் சொல்வதையும், ஒருவன் முகம் நோக்கிச் சிரிப்பதையும் தவிர்க்க வேண்டும்.

- அரசன் பிறரோடு இரகசியம் பேசுகையில், செவிகொடுத்துக் கேளாது, அவை பற்றி வினாவாது அவ்விரகசியப் பொருளை அரசன் சொன்னால் மட்டுமே கேட்டல் வேண்டும்.

- அரசனது குறிப்பினை அறிந்து, காலத்தை நோக்கி, வெறுக்காதனவும் விரும்புவனவாகியவற்றை விரும்பத்தக்கவாறு சொல்லுதல் வேண்டும்.

- அரசன் விரும்புகின்ற செயல்களை அவன் கேட்காவிட்டாலும் சொல்லி, பயனற்ற சொற்களை அவன் கேட்பினும் சொல்லாது விடல் வேண்டும்.

**இ.** அரசர் வெறுப்பன செய்யற்க,

- எம்மிலும் இளையவர் என்றும் எமக்கு இன்ன முறையினர் என்றும் அரசரை அவமதியாது அவரின் தகுதிக்கேற்ற புகழுடன் பொருந்திப் பழகுதல் வேண்டும்.

- நிலைபெற்ற அறிவுடையவர்கள் யாம் அரசனுக்கு வேண்டியவர்கள் எனக் கருதி அரசன் விரும்பாதவற்றைச் செய்யமாட்டார்கள்.

- அரசனுக்கு யாம் பழமையாக உறவுடையோம் எனக் கருதிப் பண்பில்லாதனவற்றைச் செய்யும் உரிமை அமைச்சருக்குக் கேட்டினைத் தரும்.

8. **குறிப்பு அறிதல்** என்ற அதிகாரத்தில்,

**அ.** குறிப்பு அறிவாரது சிறப்பு

- அரசனால் குறித்த கருமம் பற்றி அவன் கூறாவிட்டாலும் அதை அவன் முகத்தாலும் கண்ணாலும் நோக்கி அறியும் அமைச்சன், எப்பொழுதும் வற்றாத கடலால் சூழப்பட்ட உலகில் உள்ளார்க்கு ஓர் ஆபரணம் ஆவான்.

- ஒருவனது மனத்தின்கண் நிகழ்வதனை ஐயப்படாது ஒருதலையாக உணரவல்லவனை, அவன் மனிதனேயாயினும் தெய்வத்தோடு ஒப்ப மதிக்க வேண்டும்.

- தம் குறிப்பையும் அதனால் பிறர் குறிப்பையும் அறியும் இயல்புடையவரை, அரசர் தம் உறுப்புகளுள் எவற்றைக் கொடுத்தாவது தமக்கு துணையாய்க் கொள்ள வேண்டும்.

**ஆ.** குறிப்பு அறியாரது சிறப்பு

- ஒருவன் மனத்தில் கருதியதை, அவன் கூறாமலே அறிந்துகொள்ளக் கூடியவரும், அவ்வாறு அறியமாட்டாதவர்களும் உறுப்பால் ஒரே இயல்புடையவரானாலும் அறிவால் வேறுபட்டவர்கள்.

- குறித்ததைக் காணவல்ல தங்காட்சியால் பிறர் குறிப்பினை உணர முடியாவிட்டால் ஒருவனது உறுப்புகளுள் சிறந்தவனாகிய கண்கள் வேறென்ன பயனைச் செய்வன? (ஒன்றுமில்லை)

**இ.** குறிப்பு அறிதல் கருவி முகம்

- ஒருவனது உள்ளத்தில் உள்ளதை அவன் முகமே வெளிப்படுத்திக் காட்டும்.

- ஒருவனது விருப்பத்தையோ வெறுப்பையோ அவனது முகமே முற்பட்டுத் தெரிவிக்கும்.

- தனது மனத்தைக் குறிப்பால் அறிந்து குறையினைத் தீர்ப்பாரைப் பெறின், அவர் தன் முகத்தைப் பார்க்கும்படி தான் அவருடைய முகத்தை நோக்கி நின்றாலே போதும்.

ஈ. நுண்கருவி நோக்கு.

- கண்பார்வையினுடைய வேறுபாட்டை அறியவல்ல அமைச்சரைப் பெற்றால், மாற்று வேந்தர் மனத்தில் உள்ள பகைமையையும் நட்பையும் அவர்கள் சொல்லாவிடினும் அவர்கள் கண்களே சொல்வதை அறிந்து கொள்வர்.

- யாம் நுண்ணறிவு உடையோம் என்றிருக்கும் அமைச்சர் அரசர் கருத்தினை அளக்கும் கோலாவது, ஆராயுமிடத்து அவர் கண்களைத் தவிர பிற எதுவும் இல்லை.

9. **அவை அறிதல்** என்ற அதிகாரத்தில்

**அ.** சொல்லுபவர்கள் அவை அறிந்தே சொல்ல வேண்டும்.

- சொலின் தொகுதியறிந்து தூய்மையுடையோர் தாம் பேசும் அவையினை அறிந்து, ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

- சொற்களின் நடையினை ஆராய்ந்து அறிந்த நன்மையுடையவர்கள் அவையிடத்து ஒன்றைச் சொல்லும் பொழுது, அதன் செவ்வியை ஆராய்ந்து அறிந்து வழுப்படாமல் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

**ஆ.** அவையறியாக்கால் வரும் குற்றம்

- அவையின் அளவையறியாது ஒன்றைச் சொல்ல முயல்பவர்கள், அச் சொல்லுதலின் கூறுபாடுகளையும் அறியார். கற்றுவல்ல கலையும் அவர்க்கில்லை.

**இ.** அவையளவு அறிந்தார் திறமும் மிக்கார் அவைக்கண் செய்யும் திறமும்

- அறிஞர் அவையில் தாமும் அறிஞர் போலவும், அறிவுஇல்லாதவர் அவையிலதாமும் அறிவு இல்லாதவர் போலவும் பேசுதல் வேண்டும்.

- ஒருவர்க்கு நன்றென்று சிறப்பித்துக் கூறப்படும் குணங்கள் யாவினிலும் நன்றாக விளங்குவது தம்மிலும் மேலான அறிஞரின் அவையிலே முற்பட்டு ஒன்றினைச் சொல்லாத அடக்கமாகும்.

ஈ. அவையில் இழுக்கியவழி ஏற்படும் குற்றம்.

- விரிவான பல நூல்களைக் கற்றுணர்ந்த அறிஞர்அவையிலேஒருவன்சொற் குற்றப்படுதல் நன்னெறியிலே நின்ற ஒருவன்,அந்நெறியினின்றும் நிலை தளர்ந்துகெட்டதைப் போலாகும்.

உ. ஒத்தார் அவையில் சொல்லும் திறம்.

- குற்றமில்லாத சொற்களை ஆராய்ந்து அறியவல்ல சபையிலே கற்றறிந்தவர்களின் பெருமையை எல்லோரும் அறிவர்.

- பிறர் உணர்த்தலன்றிச் சொல்லும் பொருளைத் தாமே உணரவல்ல அறிவை உடையோர் அவையிலே ஒன்றினைச் சொல்லுதல், வளர்கின்ற பயிர் நின்ற பாத்தியில் நீரினைச் சொரிந்தது போலாகும்.

எ. தாழ்ந்தார் அவைக்கண் ஒரு வழியும் சொல்லற்க என்பன கூறப்படுமாற்றை விளக்குக.

- நல்லார் இருந்த அவையிலே நல்ல பொருளுள்ள விடயங்களை எடுத்துச் சொல்பவர்கள் அவ்வறிவில்லாத கீழோர் அவையிலே அவற்றை மறந்தும் சொல்லக் கூடாது.

- நல்லார், தம்மினத்தவர் அல்லாத அவையில் ஒரு பொருள்பற்றிச் சொல்லக் கூடாது. அப்படிச் சொல்லின் அது தூயது அல்லாத முற்றத்தில் சிந்திய அமிழ்தினை ஒக்கும்.

**10. அவையஞ்சாமை** என்ற அதிகாரத்தில்

**அ.** அவையஞ்சாரது சிறப்பு

- சொல்லின் தொகுதி எல்லாவற்றையும் அறிந்த தூய்மையுடையவர், அவையின் வகை அறிந்து கற்றுவல்ல அவையின்கண் ஒன்றைச் சொல்லும் பொழுது, அச்சத்தினால் குற்றமுள்ளதாகச் சொல்லார்.

- கற்றவர்கள் மனங்கொள்ளும் வகையில் சொல்ல வல்லவர் கற்றவர் எலோரினாலும் போற்றப்படுவர்.

- கற்றவர்களின் அவையின் தாம் கற்றவற்றை அஞ்சாது அவர்களது மனதில் பதியுமாறு சொல்லவல்லவர், கற்றார் பலரினதும் இவர் நன்கு கற்றவர் என்று, உலகத்தவரால் சொல்லப்படுவார்.

- பகைவரிடத்து அஞ்சாது சென்று சாகவல்லவர் பலர். கற்றோர் அவையில் அஞ்சாது சென்று சொல்லவல்லவர் சிலர்.

**ஆ.** அவையஞ்சாமைக்குக் காரணம்

- வேற்று வேந்தர் அவையில் அஞ்சாமல், அவர் சொல்லிய சொற்களுக்குப் பதில் அளிக்கும் பொருட்டு நூல்களைக் கற்கும் நெறியில் சொல்லிணக்கம் கூறும் அளவை நூலினை அமைச்சர் கற்க வேண்டும்.

**இ.** அவையஞ்சுவாரது இழிவு

- வீரமில்லாதவருக்கு வாளொடு என்ன தொடர்புண்டு? அதுபோல அவைக்கு அஞ்சுபவர்க்கு நூலோடு என்ன தொடர்பு உண்டு?

- கற்றோர் அவையினைக் கண்டு அஞ்சுகின்றவன் கற்ற நூலானது, பகைவர் உள்ள இடத்தில் அதற்கு அஞ்சும் பேடியின் கையிலுள்ள ஒளிபொருந்திய வாளினை ஒத்த தாகும்.

.

- நல்லார் இருந்த அவையில் நல்ல சொற்பொருள்களை தம் அச்சம் காரணமாக அவருக்கு ஏற்ப சொல்ல முடியாதவர், பலவகை நூல்களைக் கற்றிருந்தும் பயனற்றவர் ஆவார்.

- நூல்களைக் கற்றும் அவற்றின் பயன் அறிந்து வைத்திருந்தும் நல்லார் அவைக்கு அஞ்சி அங்கு செல்லாதவரை கல்லாதவரினும் கடையர் என உலகத்தார் சொல்வர்.

- அவைக்களத்துக்கு அஞ்சி, தாம் கற்றவற்றைச் சொல்லத் தெரியாதவர்கள், உயிர் வாழ்வாராயினும் இறந்தவரோடு ஒத்தவராவர்.

## மணிமேகலை

1. **அ.** மாயமில் மாதவன் என்று குறிப்பிடப்படுபவர் யார்?

   வஞ்சனையற்ற பெருந்தவத்தோன்.

   **ஆ.** பெருமகன் என்று குறிப்பிடப்படுபவர் யார்?

   அரசன்

2. **அ.** தீவினையால் உண்டாகும் பிறப்புக்கள் எனக் குறிப்பிடப்படுவன யாவை?

   விலங்குகள், நரகர், பேய்கள்.

   **ஆ.** தீவினை கடிவதால் உண்டாகும் பிறப்புக்கள் எனக் குறிப்பிடப்படுவன யாவை?

   தேவர், மக்கள், பிரமர்

3. இங்கு புத்த பகவானின் பெருமை எவ்வெவ்வகையில் வெளிப்படுத்தப்படுகிறது?

   - பேரறிவுடையவன் (புலவன்)
   - பொய்யற்றதான மெய்ப்பொருளை முழுமையாக உணர்ந்தவன்
   - அவனுடைய அருளுரைகளைக் கேட்டு அவற்றின் வழி நடப்பவர்கள் அன்றி மற்றவர்கள் பிறவித்துன்பத்தினின்றும் நீங்க முடியாது.

4. கூற்றத்தின் வலிமை எவ்வாறு உணர்த்தப்படுகிறது?

   மாற்றரும் கூற்றம் என்ற தொடர் மூலம்,

   அதாவது தடுத்தற்கரிய கூற்றம் வருவதற்கு முன் அறத்தைச் செய்யுங்கள்.இறப்பு, அதனை யாராலும் தடுத்துவிட முடியாது என்ற உண்மையை உணர்த்துவதன் மூலம் தெளிவுறுத்துகிறார்.

5. இங்கு இடம்பெற்றுள்ள அணியை இனங்கண்டு அதனைக் கையாண்டுள்ள முறையில் நீர் காணும் சிறப்பினை விளக்குக.

   உருவக அணி கையாளப்பட்டுள்ளது.

   'நாக்கடிப்பாக வாய்ப்பறை அறைந்தீர்' என்ற தொடரில் 'வாய்' பறையாகவும் 'நா' அந்தப் பறையை அறையும் கருவியாக / குறுந்தடியாகவும் உருவகிக்கப்பட்டுள்ளன.

   முன்னைய காலங்களில் பொதுச்செய்திகளை மக்களுக்கு பறையறைந்து அறிவிப்பதே வழக்கம்.

   இங்கு அற உபதேசங்கள் எல்லோரும் உணரவேண்டியவை என்ற நுண்பொருள் புலப்படும் வகையில் அற உபதேசம் செய்பவரின் வாய் பறையாகவும் அவரது நா தடியாகவும் உருவகிக்கப்பட்டுள்ளமை சிறப்பானதாகும்.

6. தரும வழியில் நடக்கவேண்டும் என்ற உண்மை வலியுறுத்தப்படுமாற்றில் நீர் காணும் சிறப்பினைத் தெளிவுபடுத்துக.

தரும வழியினின்றும் தவறுவதால் தீய பிறவிகளுக்கு ஆளாக நேரிடும். மாறாகத் தரும வழியில் நடப்பதால் நல்ல பிறவிகளை எய்தலாம். தரும வழியில் நடந்து புண்ணியத்தைத் தேடிக்கொள்வது இந்தப் பிறவியிலேயே மேற்கொள்ளப்பட வேண்டியது.
ஆனால் இப்பிறவி நிரந்தரமானது அல்ல.
மரணம் என்று ஒன்று உண்டு.
அதை எவராலும் தடுக்க முடியாது.
ஆகையால் இந்தப்பிறவி நீங்கு முன்பே மெய்ப்பொருள் உணர்ந்தவர்களின் உபதேசங்களைக் கேட்டு அவற்றின்படி தீவினைகளைத் தவிர்த்து நல்வினைகளைச் செய்துவிட வேண்டும்.
என்ற வகையில் நயங்காட்டியும் பயங்காட்டியும் தரும உணர்ச்சியை உபதேசிக்கின்றது.

## பெரியாழ்வார் திருமொழி

1. பெரியாழ்வார் திருமொழிப் பாடல்களினூடாக அவர் வெளிப்படுத்த விழைந்த விடயம்

கண்ணன் மீது கொண்ட பக்தி

2. அதைச்சொல்லும் விதம்

தாய் - பிள்ளை உறவை வைத்துக் கண்ணனைக் குழந்தையாகப் பாவனை பண்ணிப் பாடியுள்ளமை பற்றிக் கூறப்படுதல்.

3. நீராட விருப்பமற்ற குழந்தையை நீராட்டுவதற்கு ஒரு தாய் கையாளும் உத்திகள் பற்றி விளக்குக.

**நிபந்தனை விதித்தல்**

கொச்சை நாற்றமும் புழுதி படிந்த மேனியும் கொண்டுள்ளதால் இன்றிரவு தூங்குவதற்கு உடன்பட மாட்டேன் எனக்கூறுதல்.

**புகழ்ந்து கூறுதல்**

நண்ணலரிய பிரானே..
நாரணா........
புகழ்வாய்ந்த நீலமணி நிற கண்ணன்
அழகனே-வண்ணம் அழகிய நம்பி.
மாணிக்கமே என் மணியே

**பெருமைகளை எடுத்து கூறுதல்.**

பருத்த அடிகளையுடைய மராமரங்களை அம்பினால் துளையிட்டு விழுத்தியமை.
கம்சனின் வஞ்சனையால் தோன்றிய கொடிய சகடத்தைத் திருவடிகளால் உதைத்து முறித்தமை.
பூதகியின் முலையில் பாலுண்ணும் போது அவளது உயிரையும் பறித்தமை.
கொடிய பாம்பை அழித்தமை.

**ஆசை வார்த்தைகளைக் கூறுதல்.**

மஞ்சளும், செங்கழுநீர் மாலையும், நறுமணமிக்க சந்தனமும், அஞ்சனமையும் இருப்பதாகக் கூறுதல்.
அப்பம் முதலான சிற்றுண்டி வகைகளைச் சுவையாகத் தயாரித்துள்ளதாகக் கூறுதல்.

**பிறர் இகழ்வார்களென எடுத்துரைத்தல்.**

ஆயர் குலப் பெணகள் கேலி பேசிச் சிரிப்பார்கள் எனக் கூறுதல்.
நப்பின்னை கண்டால் சிரிப்பாள் எனக் கூறுதல்

**தாய் அன்பை வெளிப்படுத்தல்**

பூதனை முலையிலே பால் உண்ணக் கண்டு மனம் துடி துடித்தல்
கண்ணனின் குறும்புகளை மற்றவர் முன் கூற மாட்டேன் எனல்
புழுதி படிந்த பொன் போன்ற மேனியைக் கண்டு மகிழ்ச்சி அடைவதாகக் கூறுதல்.

**குறும்புச் செயல்களை எடுத்துரைத்தல்.**

பசுக் கன்றுகள் ஓடும் பொழுது அதன் காதுகளில் கட்டெறும்புகளைப் பிடித்து போடுபவன்.
எண்ணெய்க் குடத்தைச் சரித்து உருட்டி விடுபவன்.
நித்திரை செய்யும் குழந்தையைக் கிள்ளி எழுப்புபவன்
பசுக் கன்றின் வாலிலே ஓலையைக் கட்டி விடுபவன் .
பாலையும் தயிரையும் பிறர் அறியாமல் உண்பவன்.
கண்களைப் புரட்டி விழித்துக் குறும்புகள் செய்பவன்.

4. பெரியாழ்வார் திருமொழியில் குறிப்பிடப்படும் கண்ணனது செயற்கரிய செயல்களைக் குறிப்பிடுக.

- மராமரம் சாய்த்தமை.
- பேய்ச்சி முலையுண்டு அவளைக் கொன்றமை.
- தன்னைக் கொல்வதற்காகக் கம்சனால் ஏவப்பட்ட சகடத்தை உதைத்தமை.
- பாம்பைப் பிடித்துக்கொண்டாடியமை.

5. பெரியாழ்வாரின் நீராட்டற் பதிகத்தில் பல்லவர்கால இலக்கியப்பண்பு வெளிப்படுத்தப்படுமாற்றை எடுத்துக் கூறுக?

1. கண்ணனைக் குழந்தையாகவும் தன்னைத் தாயாகவும் பாவனை செய்தல்.
2. உணர்வு பூர்வமான பாசுரங்களின் தோற்றம்.
3. பக்தி அனுபவங்களைத் தனித்தனிப்பாடல் மூலமாகப் பிரபந்த இலக்கியத்தில் வெளிப்படுத்தியமை.
4. இறையனுபவத்தை உலகியலோடு இணைத்துப்பாடல். இந்தப் பாடல்களில் புராணக் கதைகளையும், கருத்துக்களையும் ஆதாரமாகக் காட்டியமை.

6) பெரியாழ்வாரின் நீராட்டற் பதிகத்தில் யசோதையின் தாய்மையுணர்வு வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக.

- பெரியாழ்வார் தன்னை யசோதையாகக் கருதி, தாய் - பிள்ளை உறவாடல் மூலம் கண்ணனை நீராட அழைக்கின்றார்.

- நீராட விருப்பமில்லாக் குழந்தையை இசையவைக்க குழந்தைக்கு விருப்பமான உணவு வகைகளை வைத்திருப்பதாக ஆசை வார்த்தைகளைக் கூறி நீராட அழைத்தல் ( ‘‘அப்பம் கலந்த சிற்றுண்டி அக்காரம் பாலில் கலந்து சுட்டு வைத்தேன்’’)

- கம்சனின் ஏவலால் பூதனை, கண்ணனை அழிக்க முற்பட்ட போது பூதனையிடமிருந்து கண்ணனைக் காப்பாற்ற முயலுதல்.

- குழந்தையை நீராட்டுவதற்காகத் தான் செய்த ஆயத்தங்களைக் கூறி நீராட அழைப்பதன் மூலம் தாய்மையுணர்வு வெளிப்படுதல்.
  ‘‘காய்ச்சின நீரோடு நெல்லி கடாரத்தில் பூரித்து வைத்தேன்’’
  ‘‘மஞ்சளும் செங்கழுநீரின் வாசிகையும் நறுஞ்சாந்தும் அஞ்சனமும் கொண்டு வைத்தேன்’’.

- கண்ணனுக்கு பல்வேறு பெயர்களைக் கூறி, அவனது மேனி அழகை இரசிப்பதன் மூலம் தாய்மையுணர்வு வெளிப்படல் -( அழகனே, பொன்மேனியனே. மணிவண்ணனே, கடல் வண்ண நம்பியே)

- குழந்தையின் குறும்புச் செயல்களைக் கூறி பெருமிதத்துடன் மனமகிழ்ச்சியடைவதன் மூலம் தாய்மையுணர்வு வெளிப்படல் -( எண்ணெய்க்குடத்தை உருட்டுதல், வெண்ணெய் அளைந்த மேனியோடு புழுதியில் விளையாடுதல், கன்றுகளின் காதில் கட்டெறும்பு பிடித்து விடுதல்.)

- கண்ணனின் செயற்கருஞ் செயல்களை வியப்பதன் மூலம் தாய்மையுணர்வு வெளிப்படல் - மராமரம் சாய்த்தமை, தன்னைக் கொல்வதற்காகக் கம்சனால் ஏவப்பட்ட சகடத்தை உதைத்தமை.

- தன் குழந்தையின் அழகுக்கு ,ஈடிணை யாருமில்லை எனக் கூறுவதன் மூலம் தாய்மையுணர்வு வெளிப்படல்.

## சீபர்ப் பதம்

‘‘ஆனைக்குலம் இரிந்தோடித் தன் பிடி சூழலில் திரியத்
தாயைப்பிடி செவி தாழ்த்திட அதற்குமிக விரங்கி
மானக்குற அடல் வேடர்கள் இலையாற்கலை கோலித்
தேனைப் பிழிந் தினிதூட்டிடுஞ் சீவர்பத மலையே
மாற்றுக் களிறடைந்தாய் என்று மதவேழங் கையெடுத்து
மூற்றித் தழலுமிழ்ந்தும் மதம் பொழிந்தும் முகம் சுழியத்
தூற்றத்தரிக்கிலன் என்று சொல்லி அயலறியத்
தேற்றிச் சென்று பிடிசூளறுஞ் சீபர்பத மலையே ’’

1. இச் செய்யுள்களினூடாக யானைகளின் செயற்பாடுகள் கூறப்பட்டுள்ளமை பற்றி விளக்குக.

- ஆண் யானைகள் பெண் யானைகளைத் தேடித் திரிதல் / ஓடுதல்

- பெண் யானைகள் செவிதாழ்த்து ஆண்யானைகளின் குரலோசையைக் கேட்டு நிற்றல்.

- மதம் கொண்ட ஆண் யானை தனது பெண் யானையைத் தூற்றுதல்.

- பெண் யானை தனது நியாயத்தைக் கூறுதல்.

- சுற்றத்தாரிடம் நிலையை விளக்குதல்.

- சபதம் செய்தல்.

2. வேடர்களின் செயற்பாட்டினூடாக எடுத்துக்காட்டப்படும் மனிதவிழுமியப் பண்புகளைக் கூறுக.

பெண் யானைகளுக்கு இரங்கி அவற்றைப்பிடித்து இலையாற் கலை கோலித் தேனை ஊட்டுதல் - அன்புடன் ஊட்டுதல்.

3. சீபர்பபதமலையின் சிறப்புகளைக் கூறுக. அல்லது சீபர்பதமலை பற்றிய வர்ணனைச் சிறப்புக் கூறப்பட்டுள்ளவாற்றை எடுத்துரைக்குக.

- தேனைப் பிழிந்தூட்டிய வேடர்கள் வாழும் மலை (இரக்கமுள்ள வேடர்கள், தேன் வளம் நிறைந்த மலை)
- யானைக்குலமே மனிதர்களிற்குரிய மானத்துடனும் பண்புகளுடனும் வாழும் மலை.
- ஒற்றுமைப் பண்புள்ள மிருகக்கூட்டம் வாழும் மலை.

“ திரியும் புரம் நீறாக்கிய
செல்வன்றன் கழலை
அரிய திருமாலோடயன்
தானும் அவரறியார்
கரியின் இனமோடும் பிடி
தேனூண்டவை களித்துத்
திரிதந்தவை திகழ் வாற்பொலி
சீபர்ப்பத மலையே ”

1. இச்செய்யுளின் பொருளை உமது உரைநடையில் தருக.

முப்புரங்களை எரித்த செல்வனாகிய சிவபெருமானினது பாதங்களை அரிய திருமாலும், பிரமனும் அறியமாட்டார்கள்.ஆண் யானைகளின் கூட்டத்தோடும் பெண் யானைகளின் கூட்டம் தேனை உண்டு களித்து அவை உலாவித் திரிந்து விளங்குவதால் பொலிவெய்திய மலை திருப்பத மலையே.

2. அடிக்கோடிட்ட பகுதியின் சிறப்பினைத் தருக.

பிரமனும், அயனும் காணமுடியாத சிவபெருமானின் திருவடிகளை சுந்தரர் அகக் கண்ணால் கண்டு அவ் இறைவன் வீற்றிருக்கின்ற சீபர்பதமலையின் சிறப்பைக் கூறுகின்றார்.

3. இம்மலையின் சிறப்பு எவ்வாறு எடுத்துரைக்கப்படுகின்றது?

ஆண் யானைகளும் பெண்யானைகளும் கூட்டத்தோடு தேனை உண்டு களித்து உலாவித் திரிகின்றன. இதனோடு அம்மலைப்பகுதியில் சிவபெருமான் வீற்றிருக்கின்றார்.

4. இப்பாடலில் உள்ள பல்லவர்கால இலக்கியப் பண்புகள் யாவை?

1. பக்தி வெளிப்படுகின்றது
2. விருத்தப்பா யாப்பு கையாளப்பட்டுள்ளது
3. பதிக முறையில் பாடப்பட்டுள்ளது.

“ ஏனைத்திரள் கிளைக்க எரிபோல மணி சிதற
ஏனல்லவை மலைச்சாரலிற் திரியும் கரடியும்
மானும் மரையினமும் மயில் மற்றும்பல வெல்லாம்
தேனுண் பொழில் சோலை மிகு சீபர்பத மலையே ”

**1.** இப் பாடலின் ஆசிரியர் - சுந்தரர்

**2.** இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் தருக.

மலைச்சாரலில் பன்றியின் கூட்டம் நிலத்தை உழ அவ்விடத்திலே நெருப்புப் போல மாணிக்கங்கள் வெளிப்பட்டுச் சிதற அவற்றைக் கண்டு தினைகூட்டத்தையுடைய மலைச் சாரலை விட்டு ஒடிய கரடியும், மானும் மரைக் கூட்டமும், மயிலும் மற்றும் பலவும் பின்பு தேனை உண்டு களிக்கின்ற பூஞ்சோலைகளும் பிறசோலைகளும் மிகுந்திருக்கின்ற திருப்பருப்பதம் என்ற மலையே எங்கள் சிவபெருமானது மலை.

**3.** இச் செய்யுளில் உள்ள அணியினை இனங்கண்டு விளக்குக?

உவமை அணி கையாளப்பட்டுள்ளது.

“எரிபோல மணி சிதற”

உவமானம் - நெருப்பு
உவமேயம் - மாணிக்கம்
உவமைஉருபு - போல
பொதுத்தன்மை - பிரகாசம்

**4.** பின்வரும் சொற்களின் பொருள் கூறுக

1. ஏனம் - பன்றி
2. ஏனல் - தினை
3. பொழில் - சோலை

**5.** இப்பாடல் பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?

சுந்தரர் திருக்காளத்தி மலைக்குச் சென்று அங்குள்ள இறைவனைத் தரிசித்து அங்கிருந்த வேளையில் சீபர்பத மலையிலுள்ள இறைவனை அகக்கண்ணால் கண்டு பாடும் சந்தர்ப்பம்.

**6.** சீபர்பதம் என்னும் பதிகத்தினூடாக இயற்கை வளத்தினை எவ்வாறு வெளிப்படுத்துகின்றார்

1. மலைவளத்தைக் கூறுவதினூடாக இயற்கையில் இறைவனைக் காணல்
2. மான், மரை, மயில் ஆகியன தமது விருப்பிற்கேற்ப உணவை உண்டு நீரை அருந்தி தேமாமரநிழலில் உறங்குதல்.
3. பன்றிகள் நிலத்தை உழ மாணிக்கக்கல் வெளிப்படுதல்
4. கரடிகள், மான், மரைக்கூட்டம் மற்றும் பலவும் தேனை உண்டு களிக்கின்ற பூஞ்சோலைகளும் பிறசோலைகளும் மிருந்திருத்தல்

## கைகேயி சூழ்வினைப் படலம்.

கைகேயி சூழ்வினைப் படலத்தில் முடிபுனை விழாக்காணத் திரண்ட மக்கள் நிலை முதல், புகழ் பூண்ட மன்னன் உறை கோயில் புகல் வரையுள்ள பகுதியை அடிப்படையாகக் கொண்டு,

1) முடிசூட்டு விழாவிற்குத் தயாராகும் அயோத்தி மக்களின் செயற்பாடு.

- ஏழு கடலும் ஒன்றிணைந்து இரைந்து சூழ்ந்தது போல அயோத்தி மாநகர மக்கள்யாவரும் ஆரவாரித்து எழுதல்.
- ஆடவர்கள் யாவரையும் இராமனது அண்ணன் தம்பி போல சந்தோசம் கொண்டு விழாக்காண ஆயத்தமாகினர் என்றும். முதியவர் தந்தையான தசரதனைப் போன்றவர் என்றும் அந்தணர் வசிஷ்டரை ஒத்தனர் என்றும் அவர்களது அன்பின் பெருக்கத்தினைக் கம்பர் குறிப்பிடுகிறார்.
- அமுதத்தை உண்பதற்கு ஒன்று கூடிய தேவர்களைப் போல, ஒலிக்கின்ற அலைகளை உடைய கடலால் சூழப்பெற்ற நில உலகம் வெறுமை அடையும் படி அயோத்தியில் அரசர் கூடியிருந்ததாகத் தெரிவிக்கிறார், கம்பர்.
- சகலரும் பெரும் திரளாகக் கூடியதை, அரசர் கூட்டமே மிகுதி என்பவரும், வீரர் கூட்டமே மிகுதி என்பவரும், ஆடவர் கூட்டமே மிகுதி என்பவரும் எனக்கூறி நிறைவில் வந்த சனக் கூட்டத்தை விட இனி வரவிருக்கும் கூட்டமே மிகுதி எனவும் கூறிவெளிப் படுத்தியுள்ளார், கம்பர்.
- ஆடவரது உள்ளங்களைக் கவருவதற்காகப் பெண்கள் தம்மை அழகுபடுத்தினர் என்கிறார் கம்பர். வாளுக்கும் அம்பிற்கும் விடம் தடவுவது போல தமது கண்களுக்கு மையிட்டார்கள் என்கிறார்.
- கற்பிற் சிறந்த மகளிர் கோசலையைப் போன்றவராயினராம் ஏனைய பெண்கள் சீதையைப் போல ஆனந்தம் கொண்டனர் என்கிறார்.
- குவளையின் எழிலும் வேலின் கொடுமையையும் குழைத்து கூட்டித்திவளும் அஞ்சனம் என்று… எனும் பாடலில் நடனம் செய்யும் அழகிய மயில் கூட்டம் போல பெண்கள் வந்தனர் என்கிறார் கம்பர்.

2) வசிட்டரது பெருமை.

- வசிட்ட மா முனிவர் முடிசூட்டு விழாவிற்கான ஆயத்தம் செய்ய மண்டபத்திற்குள் நுழையும் போது பழைய வாயில்களில் இருந்தவர் கொடுத்த மரியாதையை ஒரு பாடலில் குறிப்பிடுகிறார் கம்பர்.

  "தூய நான் மறைகள் வேதப் பாதகர் சொல்ல தொல்லை
  வாயில்கள் நெருக்கம் நீங்க, மாதவக் கிழவன் வந்தான்"
  என்னும் பாடல் வரி வசிஷ்டருக்குக்கொடுத்த மரியாதையைக் குறிப்பிடுகிறது.

- முடிசூடுவதற்குரிய ஆயத்தங்களைச் செய்தலில், பல்வேறு புனித நீரைச் சேகரித்தமை, ஓம குண்டத்திற்குத் தேவையான ஆகுதிப் பொருட்களையும் ஆயத்தம் செய்தமை, வீர சிங்காசனம் வைத்து பிற காரியங்களையும் செய்தமை பற்றியும், கூறுவதன் மூலம் வசிஷ்டரது சிறப்புத் தன்மை புலப்படுத்தப்படுகிறது.

- முடிசூட்டு விழாவிற்கான முகூர்த்த நேரம் நெருங்கியதைச் சோதிடர் அறிவிக்க வசிஷ்டர், இராமனை அழைத்து வரும்படி சுமந்திரனுக்குப் பணிப்பதிலும் வசிஷ்டரது முக்கியத்துவம் புலப்படுத்தப்படுகிறது.

- "மாதவக் கிழவன்", "பிணி அறநோற்று நின்ற பெரியவன்" கம்பரது சொல்லாட்சிகள் மூலம் வசிஷ்டரது பெருமையை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

3) சுமந்திரனது குணவியல்பு.

- "பணி தலை நின்ற காதல் சுமந்திரன்" என்னும் பாடல் வரி அவனது குணாம்சத்தைப் புலப்படுத்துவதாகும். தன் பணியை செவ்வனே செய்ய ஆயத்தமாக நின்றமை அவனது பணிச்சிறப்பிற்கு உதாரணமாகும். இராமன் மீது கொண்ட அன்புப் பெருக்குக்கும் அதனை ஆதாரமாகக் கொள்ளலாம்.

- கைகேயி கோயில் நண்ணி….."என்னும் வரியில் சுமந்திரன், கைகேயியின் அரண்மனைக்கும் ஏனைய இடங்களுக்கும் செல்ல முன் அனுமதி பெறவேண்டியவனாக இருக்கவில்லை என்பது பெறப்படுகிறது.

- "பொன் திணி மாட வீதி பொருக்கென நீங்கிப் புக்கான்" என்னும் பாடல் வரி அவனது அன்பின் பெருக்கைப் புலப்படுத்துகிறது. இராமன் மீது அன்பு கொண்டமையாலேயே விரைந்து (பொருக்கென) சென்றான் என்கிறார்.

- "தொழுது வாய் புதைத்து கூறும்" என்பதில் அவன் இராமன் மீது கொண்ட விசுவாசம் புலப்படுகிறது.

- "பொன் தட மகுடம் சூழ போதுதி விரைவின்" என்பதில் யாவரும் இராமனது வருகையை எதிர்பார்த்து இருந்ததைக் கூறுகிற சொல்லாற்றல்.

- கைகேயியினது கபடத்தன்மையை உணராத அப்பாவியாக, கைகேயி அழைப்பதாகத் தெரிவிக்கிறான் சுமந்திரன்.

4) கம்பரது கவித்துவம்.

- "ஏழு வேலையும், ஒத்த போல இரைத்து" எழுந்ததாக மக்கள் யாவரும் விழாக்காணும் ஆவலை கம்பன் வர்ணிக்கும் சிறப்பு.

- மகளிர் கண்களுக்கு மை தீட்டுவதை உவமை காட்டுகிறார். வாளுக்கும், அம்பிற்கும் விடம் தடவுவது போல கண்களுக்கு மையிட்டனர் என்கிறார்.

- விழாக் காண வந்த மக்களது உணர்வைச் சித்திரிப்பது – யாவரும் இராமனது அண்ணர், தம்பியர், தந்தை தாய் போல அன்பு பாராட்டினர் எனல்.

- கம்பரது கற்பனைத் திறனை "விளக்கு ஒளி மறைந்த மன்னர் மின் ஒளி" என்பதில் விழாக் காண வந்த அரசரது ஆபரணங்களின் ஒளி தீப ஒளியை மறைத்தது என்பதும், கிரீட ஒளி சூரிய ஒளியை மறைத்தது என்பதும் காட்டவல்லன.

- கைகேயியை யமனாக உருவகித்தல்– (பெண்டிரில் கூற்றம்)

- "தன் திரு உள்ளத்துள்ளே தன்னையே நினைதல்" - என்பதன் மூலம் இராமனது அவதாரச் சிறப்பு குறிப்பிடப்படல்.

## சீறாப்புராணம்

### மழையழைப்பித்த படலம்

1) தமிழிலக்கிய வரலாற்றில் சீறாப்புராணம் தோன்றிய காலப்பின்னணி பற்றிச் சுருக்கமாக விளக்குக.

நாயக்கர் காலத்திலும் அதற்குப் பின்னரும் தமிழகத்தில் இஸ்லாமியரின் வருகை ஏற்பட்டது. அக்காலப் பகுதியில் இஸ்லாம், கிறிஸ்தவம் முதலான பிறசமயங்கள் சார்பான இலக்கியங்கள் தமிழில் தோன்றத்தொடங்கின. இஸ்லாமியப் புலவர்களும் தமிழ்ப்பணி புரியத்தொடங்கினர். இதன் தொடர்ச்சியாக ஐரோப்பியர் காலப் பகுதியில் தமிழ்க்காப்பியங்களின் பாணியில் இஸ்லாமியர் தமிழ் இலக்கியக் காப்பியமாக உமறுப்புலவரால் சீறாப் புராணம் இயற்றப்பட்டது.

2) மழை அழைப்பித்த படலத்தில் மழையை அழைப்பித்ததற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

மாரி காலத்தில் நீர்வரண்டுபோய் மரங்கள் தமது இலைகளை உதிர்த்து பசுமையற்றிருக்க தாய்மார் தமது பிள்ளைகளுக்கு உணவாகக் கொடுக்கும் பால் வற்றி, மனிதப் பண்புகள் குன்றி, பறவைகள் தண்ணீருக்காக அலைந்து, மருதநிலம் பாலைவனம் போல் வரண்டு, பெண்கள் அழகும் கற்பும் இழந்து, முதியவர்கள் இறந்து உணவுக்காக அலைந்த சூழல், பரந்த பூமியில் நிலவியதாலேயே சுலைக்குர் (நபி) அவர்கள் முகம்மது நபியிடம் மழைவேண்டிப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொண்டார்.

3) மழையின்மையால் மனிதப் பண்புகள் அற்றுப் போனது பற்றி மழையழைப்பித்த படலத்தில் உமறுப் புலவர் குறிப்பிடுவதை விளக்குக.

மனிதர்களிடம் இயல்பாகவுள்ள தருமம் செய்தல், தவம் செய்தல், தயவுகாட்டுதல் முதலான பண்புகள் வரட்சியின் கொடுமையால் இல்லாமல் ஆகிவிடுகின்றன. சிறுமையான செயல்களும் திருட்டுக் குணமும் பாவம் செய்வாரோடு உறவு கொள்ளும் பண்பும் உருவாயிற்று. வரும் விருந்தினர்களைக் கண்டால் கதவினை மூடிவிட்டுப் பெண்ணிடம் நாணியும் தமது ஆண்மைப் பண்பையும் இழந்தவர்களாக ஆடவர்கள் இருந்தனர்.
இவ்வாறு வரட்சியின் கொடுமையால் மனிதப் பண்புகள் மாறிப்போவதாக உமறுப்புலவர் “ தருமமும் தயவும் …..” என்ற பாடலில் விரிவாகக் குறிப்பிடுகின்றார்.

4) மழையழைப்பித்த படலத்தில் பாலை நிலக்காட்சி வருணிக்கப்படுமாற்றை விளக்குக.

- ❖ மரங்கள் இலைகளை உதிர்த்தன.
- ❖ செடி கொடிகள் பசுமையற்றுக் கருகின.
- ❖ கானல் நீரின் பேய்த்தேர்க் கூட்டங்கள் எங்கும் பரந்திருந்தன.
- ❖ மிருகங்கள் உணவற்று இறந்து போயின.
- ❖ பறவையினங்கள் பறக்க வலிமையற்றும் தாகத்தால் விரைந்து பறந்து வானிலும் நீர்த்துளி இல்லாது நாவறண்டு வாடின.
- ❖ மருத நிலம் பாலைவனம் போலத் தோன்றுதல், குளங்கள் கிணறுகள், நீரோடைகள் வற்றி வரண்டு குடிப்பதற்கு நீரின்றி பெண்கள் அழகு கற்புமின்றி வாடினர்.
- ❖ முதியவர்கள் இரத்தம் வற்றி சிலர் மடிந்தனர், சிலர் மெலிந்தனர்.

5) மழையழைப்பித்த படலத்தில் உமறுப்புலவர் நபிகளார் பிரார்த்தனை (துஆ) புரியும் பாங்கை எவ்வாறு விபரிக்கின்றார்?

மழையின்மையால் ஏற்பட்ட கெடுதிகளைக் கேட்ட நபி மனதிற் கவலைகொண்டு உள்ளத்திலே கருணையை அதிகரித்து அரிய குர்ஆனின் வேதப்பொருளினை உணர்ந்து எல்லோரும் உள்ளத்தில் வைத்திருக்கும் அல்லாவை எண்ணி இரண்டு கைகளையும் உயர்த்தி இறைவனிடம் பிரார்த்தனை (துஆ) செய்தனர்.

6) மழையழைப்பித்த படலத்தில் உமறுப் புலவர் இறைவனின் பெருமைகளைக் கூறுமாற்றை விளக்குக.

- ❖ எல்லோரும் உள்ளத்தில் வைத்திருக்கும் அரிய ஒளி.
- ❖ வேதத்தின் வாழ்வாக விளங்குபவன்.
- ❖ எல்லா இடங்களிலும் பரந்திருப்பவன்.
- ❖ குறைவில்லாதவன்.
- ❖ பிரகாசத்தோடு கூடிய ஒளி பொருந்தியவன்.
- ❖ நீதி முறை குறைவு இல்லாதவன்.
- ❖ முதற் காரணமானவன்.
- ❖ அழிவில்லாது நிறைந்திருக்கும் தொழும் சுடரானவன்.

7) முகமது நபிகளின் பிரார்த்தனையின் பின் மழைபெய்யத் தொடங்குவதை உமறுப்புலவர் விளக்குமாற்றை விபரிக்குக.

- ❖ உண்ணுவதற்குப் பொருளின்றி மனங்கலங்கி எல்லா இடங்களும் அலைந்தவர்களுக்கு பொற்குவியல் கிடைத்ததுபோல உலகின் எல்லா இடங்களும் போற்றும் வண்ணம் மேகம் கறுத்தது.
- ❖ ஒரு தாய் கருச்சுமந்து பிள்ளை பெறும் காட்சியோடு கார்முகிலை ஒப்பிட்டுக் கூறுகிறார். கரியமழை முகில் கருஉதித்ததுவே .....
- ❖ முகிலை இறையருள் பிள்ளையாக உருவகித்து அம்முகில் எல்லாத் திசைகளுக்கும் சென்று பரவி மலைகளில் தவழ்ந்து ஆகாயத்தின் மீது நடந்து காற்றெனும் கால்களால் விரைந்தோடிச்சென்று குழந்தைகளுக்குரிய தோன்றல், தவழ்தல், நடத்தல், ஓடுதல் ஆகிய பண்புகளைக் கொண்டு நிலத்தை அடைவதாகக் கூறுகிறார்.
- ❖ சூல் முதிர்ந்த கருமேகம் நிலத்தில் மழையாகப் பெய்தது, கருவுற்றபெண் தாய் வீட்டுக்கு வந்து தலைக் குழந்தை (ஆண் குழந்தை) பெற்றுத் தருவது போல இருந்ததாகக் கூறுகிறார்.
- ❖ குழந்தை பெறும் தாயின் பிரசவ வேதனைகளான மெய்பற்றுதல், அச்சம் மிகுதல், அதிர்ந்த குரலெழுப்புதல், வாய் குழறுதல், பல்லைக்கடித்தல் எனும் செயல்களுடன் மேகமும் அதிர்ந்த சத்தத்துடன் மின்னி, இடிஇடித்து, மழைபொழிவதற்குத் தயாரானதாகக் கூறுகிறார்.

8) மழை அழைப்பித்த படலத்தில் மழைக் காட்சி எவ்வாறு சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

- ❖ இடியும் மின்னலும் சேர்ந்து மலைமீது மழைபொழிய சூரியன் மறைந்து பின்வாங்கிற்று.
- ❖ இருளின் ஆதிக்கம் நிலைபெற்றது.
- ❖ வெள்ளம் கலங்கிய நீரைப் பரப்பியவாறு முன்னே சென்று அங்குள்ள ஆறுகள் அனைத்தையும் மேலெழுந்து மோதிச் சென்றது.
- ❖ வெள்ளம் வயல்களின் வரப்புகளை உடைத்து வாய்க்காலின் இருபுறமும் மடையை எடுத்தெறிந்தது.
- ❖ மழை வெள்ளமானது குறிஞ்சியிலிருந்து மூங்கில் கழைகளை முறித்து அதன் முத்துக்களை முல்லை நிலத்திற்குக் கொண்டு சென்று அங்குள்ள பால், தயிர், நெய் முதலானவற்றை பாலைநிலத்திற்குக் கொண்டு சென்றது. பாலையில் நாகபாம்புகளின் இரத்தினங்களை வாங்கிக் கொண்டுசென்று மருதத்திலுள்ள நெற்போர்களை நெய்தலிற் சேர்த்து அங்குள்ள உப்பைக் கடலில் சேர்த்தது.

9) மழையழைப்பித்த படலத்தில் பெருமழையால் நேர்ந்தமாற்றங்கள் பற்றி விளக்குக.

- ❖ விடாத மழைபெய்ததால் பொருட்களைத் தேடிச் சமைக்க முடியாது சிறுவர்கள் பசியினால் கதறி அழுதனர். இதனால் தாய்மார் மேகத்தைக் கோபித்தனர்.
- ❖ வீட்டுக்குள் மழைநீர் வந்து குளிர்காற்றும் வீசி, வீட்டுக்குள் இருந்தோர்களெல்லாம் நெருப்பில் குளிர்காய்ந்து பற்களும் கிடுகிடு என நடுங்க வருந்தினர்.
- ❖ குளிர்காற்றால் பசுக்கள் மாண்டன, ஆட்டு மந்தைகள் இறந்தன.
- ❖ ஆறுகடந்து வேறோர் ஊர் செல்லமுடியாது அனைத்தும் மெலிந்தன.
- ❖ இந்நிலையில் மழையின் கொடுமையினால் பிறந்த இடமும் அழிந்து உலகம் அறிவிழந்து மயங்குவதைக் கண்ட நபிகளில் ஒருவர் மழையை நிறுத்த குத்துபா ஓதும் முகம்மது நபியிடம் சென்று தொடர்ச்சியாக மழை பொழிவதால் மனிதர்கள் மெலிவதை நிறுத்தி அவர்களுக்குச் சிறப்பையும் செல்வத்தையும் கொடுக்குமாறு இறைவனைப் பிரார்த்திக்குமாறு வேண்டிக் கொண்டார்.

10) மழையழைப்பித்த படலத்தில் முகம்மது நபிகளின் பெருமையை உமறுப்புலவர் கூறுமாற்றை விளக்குக.

- ❖ குளிர்ந்த சந்திரனைப் போல் அருள் செய்பவர்.
- ❖ விடத்தினையுடைய பாம்பை வரவழைத்துப் பேசியவர்.
- ❖ ஒப்பற்ற இறைவனின் தூதர்.
- ❖ புகழ்பொருந்திய வள்ளல்.
- ❖ மழையைத் தணிப்பதற்குப் பிரார்த்தனை செய்யக்கூடிய அறம் தவறாத சத்தியமுடையவர்.
- ❖ தருமமும் அறிவும் ஒழுக்கமும் பொறுமையும் கருணையும் கூடிய ஒப்பற்ற மானுடவடிவம் கொண்டவர்.
- ❖ நண்பராகிய நபி பெருமான்.
- ❖ உலகிலுள்ள யாவர்க்கும் நன்மை கிடைக்கப் பிரார்த்தனை செய்ய வந்தவர்.

11) மழையழைப்பித்த படலத்தில் அலையொடு தழுவி ...... அகமிசையிருந்து ..... ஆகிய பாடல்களில் உமறுப் புலவர் கையாண்டுள்ள உவமை அணிகளை எடுத்துக்காட்டி விளக்குக.

அ) உவமையணி

i) வறுமையால் பூமியில் எங்கணும் அலைந்து திரிந்தோர்க்குத் திரவியக்குவை கிடைத்தது போல உலகின் எல்லா இடங்களும் போற்றும் வண்ணம் கரிய முகில் கருக்கொண்ட காட்சி விளக்கப்பட்டுள்ளது.

- உவமானம் - வறுமையுற்றோர்க்கும் திரவியக்குவை.
- உவமேயம் - வரண்ட பூமியில் மேகங்கருக்கொண்டமை.
- பொதுத்தன்மை – நீண்டகால எதிர்பார்ப்புக்குப் பயன்.

ii) சூல் கொண்ட மேகம் நிலத்தில் மழையாகப் பொழிந்தமை, கருவுற்ற பெண் தலைப்பிள்ளை பெறுவதற்குத் தாய் வீடு வந்தமைக்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

- உவமானம் - கருவுற்ற பெண் தாய்வீட்டிற்கு வந்து ஆண்குழந்தை பெற்றமை.
- உவமேயம் - கருக்கொண்ட மேகம் பூமியில் மழையைப் பொழிந்தமை.
- பொதுத்தன்மை – நீண்ட காலத்துக்குப்பின் மின்னலோடும் இடியோசையுடனும் மழைபெய்வதிலும் தாயானவள் தலைப்பிள்ளை பெறுவதிலுமுள்ள வலி.

## தேம்பாவணி பைதிரம் நீங்குபடலம்.

தேம்பாவணி பைதிரம் நீங்குபடலத்தை ஆதாரமாகக் கொண்ட கருத்துக்கள்.

**அ.** எகிப்து செல்வதற்கு சூசை விரும்பாமைக்கான காரணங்கள்

- எகிப்து யூதேயா நாட்டிலிருந்து தொலைதூரத்தில் இருந்தமை.
- எகிப்தில் அவர்களுக்கு உறவினர்களோ அறிமுகமானவர்களோ இல்லாமை.
- அங்கு தர்ம சிந்தனை கொண்டவர்கள் இல்லாமை.
- எகிப்துக்குப் பயணம் செய்வதற்கான வழிதெரியாமை.
- சேர்ந்து செல்வதற்குத் துணை யாரும் இல்லாமை.
- வழிச்செல்வதற்குத் தேவையான பணமோ பொருளோ அவர்களிடம் இல்லாமை.
- இயேசு குழந்தையாக இருந்தமை பற்றிச் சிந்தித்தமை.
- மரியாளின் மென்மையை எண்ணியமை.

**ஆ.** சூசை, மரியாள் ஆகியோரின் சிறப்புக்கள்

**சூசை**

- சூசை தனது மனைவியோடு சேர்ந்து செயற்படுவதன் மூலம் நல்ல தலைவனாக மதிக்கப்படுதல்.

- வானதூதன் மூலமான கட்டளைப்படி புறப்பட ஆயத்தமாவதில் இறைகட்டளையை ஏற்று நடப்பவர் என்பது புலப்படுதல்.

- மரியாளிடம் பயணத்தை இதமாக எடுத்துச் சொல்வதன் மூலம் இவரொரு பண்பாளர் என்பது வெளிப்படுகின்றது.

- குழந்தையைக் காப்பாற்றுவதன் மூலம் காப்புள்ள தந்தையாவார்.

- தனது கடமையை முழுமையாக நிறைவேற்றுபவர்.

- பயணம் பற்றிய சிந்தனைகளின் மூலம் விடயங்களை ஆராய்ந்து நோக்குபவர்.

**மரியாள்**

- தனது கணவனின் விருப்புக்கேற்ப பயணத்துக்குத் தயாராவதன் மூலம் நல்ல குடும்பப் பெண்ணாகக் காணப்படல்.

- குழந்தையைப் பாசத்தோடு அணைப்பதன் மூலம் சிறந்த தாயாகக் காணப்படல்.

- குழந்தையைக் காப்பாற்றுவதற்காகத் துயரங்களை மனதிலே சுமப்பதன் மூலம் தாய்மைக்கு இலக்கணமாகக் காணப்படுபவள்.

- சூசையின் அழைப்புக்குச் செவிமடுப்பதன் மூலம் இறை கட்டளையை ஏற்று நடப்பவள்.

**இ.** இயற்கைக் காட்சிகள் வர்ணிக்கப்படும் விதம்

- மலையுச்சியினின்று நல்ல மணிகளைக் கொண்ட ஆறுகள் பாய்ந்தோட, புன்னை மரங்கள் நிறைந்த சோலைக்கு அப்பால் யானையின் நெற்றியில் அணிந்த நல்ல இரத்தினங்கள் பதித்த பட்டம்போல் வானத்தின் நெற்றியில் சந்திரன் உதித்தல்.

- வானத்தில் தோன்றிய பிறைமதியின் வருகை விண்ணுலக வேந்தனான குழந்தையேசுவின் உயிரை உண்பேன் என்று உறைக்குள் கிடந்த வேலை உருவி உயர்த்திய வேந்தனைப் பகைத்து எழுந்தது போன்றும் அவனுக்கு எதிராகக் கடலாகிய பறையை அடித்துப் போர்க்குரல் எழுப்புதற்கென்று வானத்தில் கிடந்த ஒரு குறுந்தடி போன்றும் இருந்ததாகக் குறிப்பிடல்.

- குழந்தை நாதனைக் காணும் பொருட்டு விண்மீன்கள் செறிந்து கிடந்து அழகுடன் விரிந்த கண்களை ஒத்திருந்தன எனக் கூறுதல்.

- ஆண்டவனுக்கேற்பட்ட துயரத்தின் காரணமாக அவர்கள் விடும் கண்ணீரைக்கண்டு தாமும் அத் துன்பத்தை அறிவிக்குமுகமாக அங்குள்ள எல்லாக் கோழிகளும் தம் மார்புகளைச் சிறகுகளால் அடித்துக் கொண்டு வானத்தைத் தொடுமாறு கூக்குரல் எழுப்பிக் கூவியதாகக் கூறல்.
- ஆண்டவன் தன்னைவிட்டுப் பிரிந்து மண்ணுலகமடைந்த துன்பத்தைப் பொறுக்க முடியாத வானம் கண்ணீர்விட்டதாகவும் அக்கண்ணீரானது குளிர்ந்த பனியாகி மழைத்தாரைபோல் மிகுதியாகப் பெய்ததால் பசுமையான காடும் அழுதது போலானதாகவும் எனக் குறிப்பிடுதல்.

- இயேசு, மரியாள், சூசை ஆகிய மூவரதும் பிரிவினால் துயருற்ற காடைகள், மயில்கள், புறாக்கள் அழுததோடு மட்டுமன்றிச் சோலையும் அழுததாகக் குறிப்பிடல்.

- அவர்களது பிரிவு கண்டு கிளிகள், குயில்கள், வண்டுகள் அன்னங்கள் அனைத்தும் அழுததாகக் குறிப்பிடல்.

- மூவரதும் பிரிவுத்துயரால் காட்டிலுள்ள மலர்கள் வாசனை வீச மறந்ததாகவும், வண்டினங்கள் தேனை உண்ண மறந்ததாகவும், மான்குட்டிகள் பால் அருந்த மறந்ததாகவும், பசுக்கள் தன் கன்றுகளை மறந்ததாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளமை.

ஈ. தேம்பாவணி காவியத்தின் பண்புகள்.

- பாட்டுடைத் தலைவனாகச் சூசை சித்திரிக்கப்படல்.

- கிறித்துவ தத்துவக்கருத்துக்கள் கூறப்படல்.

- எருசலேம் நகரைப் பாடும்போது தமிழ்நாட்டு நகர்களின் இயற்கை அம்சங்களையே வர்ணித்தல்.

- இல்லறம் சிறிதளவும் துறவறம் பெருமளவும் புகழப்படுகின்றமை.

- அணிகள் கையாளப்படுகின்றமை.

- காப்பியத்துக்குரிய உணர்வுகள் சுவைகளில் ஒன்றான துயரம் சித்திரிக்கப்படல்.

- காப்பியத்துக்குரிய அமைப்புமுறை காணப்படுகின்றமை.
  உ - ம் - படலங்கள், காண்டங்கள்.

## நவீன கவிதைகள்

### பாரதியார் கவிதைகள்

பெண்கள் விடுதலைக்கும்மி

1. பெண்கள் விடுதலைக்கும்மி என்னும் கவிதையில் பாரதியார் முன்வைக்கும் கருத்துக்களைத் தொகுத்துத் தருக.

   - பெண்கள் விடுதலைக்கும்மி பெண் விடுதலையை அடிநாதமாகக் கொண்டது.

   - பெண்விடுதலையை வலியுறுத்தல்.

   - பெண் அடக்குமுறை, மூடத்தனமானது எனச் சாடல்.

   - பெண்களை அடக்குமுறைக்கு உட்படுத்துவோரை எள்ளி நகையாடல்.

   - பெண்கள் விடுதலையை எண்ணி ஆனந்தக் களிப்படைதல்.

   - பெண்களைப் போற்றுதலே மேலான சிறப்புக்கு அடிப்படை எனக் குறிப்பிடல்.

   - ஆணுக்குப் பெண் சளைத்தவளில்லை எனக் குறிப்பிடல்.

   - ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்புப் பொதுவென வாதிடல்.

2. பெண்விடுதலை பற்றிய பாரதியின் முற்போக்கான மனவுணர்வு, கவிதையில் வெளிப்படுமாற்றினை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டுக.

- பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற அகந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.
- கற்பு நிலை என்று பேசவந்தால் அதை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவில் வைப்போம்.
- வற்புறுத்திக் கட்டிக்கொடுக்கும் வழக்கத்தை, தள்ளி மிதித்திடுவோம்.
- பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினிலே பெண்கள் நடத்த வந்தோம்.
- ஆணுக்குப் பெண் இளைப்பில்லை.
- வேதம் படைக்கவும், நீதிகள் செய்யவும், சாதிகள் படைக்கவும் செய்திடுவோம்.
- மாதரறங்கள் பழமையெனக் கூறுவதை மாட்சிமை பெறச் செய்வோம்.

## ஞாயிறு

1. ஞாயிற்றின் பெருமை எடுத்துக்காட்டப்படுமாற்றினைத் தெளிவுபடுத்துக.

- ஒளி தருபவன், மழை தருபவன், புகழ் தருபவன், அறிவுத் தெய்வத்தின் கோயில் ஒளி, சுடர் விளக்கம், காட்சி, மின்னல், இடி அனைத்தும் உனது நிகழ்வுகள்.
- புகழ், வீரம் உனது லீலை.
- நீர் தருபவன். காற்று வீசுபவன்.
- தீராத இளமையுடையவன்.

2. ஞாயிற்றின் செயல்களாகப் பாரதியார் குறிப்பிடுபவை எவை?

- ஒளி, காற்று, மின்னல், மழை தருதல்.
- அறிவு, புகழ், உயிர் தருதல்.
- உடலைத் தந்து வளர்த்தல், மாய்த்தல்.
- மனிதனது வாழ்வுக்கு சூரியனின் அவசியம் பற்றி முடிவு கூறுதல்.

3. கவிஞனின் எடுத்துரைப்பு முறை குறித்துத் தெளிவுபடுத்துக.

- அனைத்துச் செயற்பாடுகளையும் ஞாயிறு செய்கிறது எனப் புகழ்வது.
- வசன கவிதை அமைப்பு.
- கேள்வி கேட்டு வாசிப்பவரது ஆவலைத் தூண்டுவது.
- முன்னிலைப்படுத்திப் பாடியிருப்பது.

## பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி

1. தாயாக உருவகித்துள்ளமை பற்றி எடுத்துரைக்க.
   - எம்தாயே எனல்.
   - தெள்ளமுதன்ன எம் அன்னை
   - மதலையர் எழுப்பவும் தாய் துயில்வாயோ?
   - குதலை மொழிக்கிரங்காத தாயோ நீ?
   - ஈன்றவளே பள்ளியெழுந்தருள் என்று கூறல்.

2. பொழுது புலர்ந்தமையைக் குறிப்பிடும் விதம் குறித்துத் விவரிக்க.

   - பொழுது புலர்ந்தது எனல்.
   - இருட்காலம் போயின.
   - புள்ளினம் ஆர்த்தன.
   - சங்கம் ஊதின.
   - அந்தணர் வேதம் ஓதுதல்.
   - பரிதியின் பேரொளி வானிடைக் கண்டோம் எனல்.

3. பாரதியின் நாட்டுப்பற்று இக்கவிதையில் வெளிப்படுமாற்றினை விபரிக்குக.

   - பாரதமாதாவைத் திருப்பள்ளியெழுச்சி வடிவில் துயில் எழுப்பிப் பாடியமை.
   - நாடு உறங்கிக் கிடப்பதாகவும் அதனைத் துயிலெழுப்ப வேண்டும் எனவும் நினைத்தமை.
   - நாட்டைத் தாயாகவும் தம்மைப் பிள்ளையாகவும் உருவகித்தமை.
   - பாரதமாதாவைப் பல பெயர்கள் சொல்லி அழைத்தமை, - எம்தாயே, ஆருயிரே, எம் அன்னை.
   - நின் எழில் காண்பதற்கு எம் ஆவலை நீ அறியாயோ?
   - பாரதர்க்கரசே, பதினெட்டு மொழியுடையவள்.

## பாரதிதாசன் கவிதை - பத்திரிகை.

1. காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான் எனக் கவிஞர் கூறுவது எதனை? அதனை எவ்வாறு விளக்குகிறார்?

   - பத்திரிகையைக் கூறுகின்றார்.
   - மேலும் அதனை ஒரு பெண்ணாக உருவகித்தும் பத்திரிகையின் உள்ளடக்கங்களை எடுத்துக் கூறியும், எளியசொல், எளிய நடை, எளிய சந்தம், பொருத்தமான அணிகளைக் கையாண்டும் விபரித்துள்ளார்.
   - புரட்சிக் கவிஞரின் சொல்லாற்றலுக்குச் சிறந்த உரைகல்லாக இப் பாடல் விளங்குதல்.

2. பத்திரிகையின் சிறப்புப் பற்றிக் கவிஞர் கூறுவன யாவை?

   - அறியாமை என்னும் இருளை அகற்றுவது.
   - சோர்வுற்றிருப்போருக்கு உற்சாகமூட்டுவது.
   - உலகினை ஒன்று சேர்ப்பது.
   - பல்துறைசார்ந்த விடயங்களைத் தருவது.

3. பத்திரிகையின் பணிகள் பற்றிக் கவிஞர் யாது கூறுகின்றார்?
   - அறிஞர் கருத்துக்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பது.
   - அறையில் நடந்த செய்திகளை அம்பலத்துக்குக் கொண்டுவருவது.
   - அறிவற்றவர்களுக்கு அறிவுள்ள விடயங்களை எளிமையாக அள்ளிக்கொடுப்பது.
   - களைப்புற்ற மனங்களுக்கு ஊக்கமளிப்பது.

**4.** ‘ஐந்து ஆண்டு வரப்பெற்றார் பத்திரிகை நாளும் உண்டென்றால் வாழ்க்கை பெற்றார்’ எனும் வரிகள் மூலம் கவிஞர் கூறுவது எதனை?

ஐந்து வயதினை அடைந்தவர் தினமும் பத்திரிகை வாசிக்கும் பழக்கத்தினைக் கொண்டிருந்தால் அவர் வாழ்க்கையைப் பெற்றார் எனக் குறிப்பிடுகின்றார்.

5. “கடும் புதர் விலகிச் சென்று களாப்பழம் சேர்ப்பார் போல” எனும் உவமையை விளக்கி அது எதனைக் குறிப்பிடப் பயன்பட்டுள்ளது எனவும் விபரிக்க.

- இவ் உவமையணியில் களாப்பழம் சேகரிப்போர் உவமானமாகவும் நுணுக்கமான விடயங்களைச் சேகரிக்கும் செய்தியாளர் உவமேயமாகவும் கவிஞர் படும் சிரமங்கள் பொதுத்தன்மையாகவும் அமைந்துள்ளன.

**6.** பத்திரிகை என்ற கவிதையில் தனது கருத்தை வெளிப்படுத்தப் பாரதிதாசன் கையாண்ட உத்திகளைத் தெளிவுபடுத்துக.

- பத்திரிகையைப் பெண்ணாக உருவகித்து அதை முன்னிலைப்படுத்திக் கூறுகின்றமை.
- அணிகள் மூலம்தெளிவுறுத்தல்.
  உருவகம் - கதிரொளி கண்ணில் பாய்ந்திடும் எழுச்சி
  உவமை - நறுமண இதழ்ப் பெண் ; களாப்பழம் சேர்ப்பது போல.
- பத்திரிகையின் உள்ளடக்கம் பற்றிப் பலவாறு எடுத்துரைத்தல்.
    - வானிடை நிகழும் கோடி மாயங்கள்
    - உலகில் நிகழும் பல்வேறு நிகழ்வுகள்
    - சிறுகதைகள்
    - இரகசியமான விடயங்களை அம்பலப்படுத்தல்
    - ஓவியம், சிற்பம், கவிதை, காவியம், நகைச்சுவை என்பன இடம்பெறல்.

**7.** பத்திரிகையின் முக்கியத்துவம் பற்றிப் பாரதிதாசன் கூறுபவை யாவை?

- ஊரினை நாட்ட இந்த உலகினை ஒன்று சேர்க்க பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பெண்.
- அறிஞர் இதய ஓடை, ஆழநீர் கொண்டு, மக்கள் ஞானம் செழித்திட, குறுகிய செயல்கள் தீர்ந்து குவலயம் ஓங்கச் செய்வாய் எனல்.
- உன்நலம் காணார் ஞாலம் காணார் எனல்.
- எல்லாவற்றையும் கொடுக்கும் உன் தாள்.
- கறையுள்ளம் தூய்மை செய்வாய், களைப்பில் ஊக்கம் செய்வாய் எனக் கேட்டல்.
- அனைவருக்கும் எளிதாய்க் கிடைப்பாய்.
- பத்திரிகை நாளும் உண்டென்றால் வாழ்க்கை பெற்றார் என்கிறார்.
- மக்களது உள்ளத்திலுள்ள நுணுக்கங்களைத் / திறமைகளை வெளியே கொண்டுவருவது.
- சிறுவயதிலிருந்தே பத்திரிகையை வாசித்தால் வாழ்க்கை வளம் பெறும் எனத் திடமாகக் கூறல்.

**பாரதிதாசன் கவிதை - பாரதி உள்ளம்.**

**1.** “பாரதி உள்ளம்” எனும் கவிதை மூலம் பாரதிதாசன் வெளிப்படுத்த விழைந்த விடயம் யாது?

- சாதி ஒழிக்கப்படல் வேண்டும் எனவும் அவ்வாறு ஒழிந்தால் தமிழ் வளர்ப்பது இலகுவாகும் எனவும் கருதியமை.
- தமிழ் மீதும் தமிழ் நாட்டின் மீதும் கொண்ட பற்று.
- பாரதியின் சொல்லும் செயலும் ஒன்றாகவே இருந்தது என்பதையே பாரதியின் உள்ளம் எனக் கருதுகின்றார்.

2. பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் இடையிலான உறவு பாரதி உள்ளம் என்ற கவிதை ஊடாக எவ்வாறு வெளிப்படுகின்றது?

- பாரதி கூறிய வார்த்தைகளை தனது கவிதையிலும் கையாண்டமை.
- என்றுரைப்பார், என்னிடத்தில் எனக் கூறியமை.
- நம் பாரதி எனக் கூறியமை.

3. பாரதியின் தமிழ்ப்பற்று, நாட்டுப்பற்று எவ்வாறு வெளிப்படுகிறது?

- தமிழை வளர்க்க வேண்டும் என்றமை.
- சாதி ஒழிந்தால் தமிழ் வளரும் எனல்.
- செந்தமிழ் நாட்டினில் பற்று உண்டாகுதல்.
- செந்தமிழ் வாழிய வாழி நல்ல செந்தமிழ் நற்றமிழர்க் கெழில்மூச்சு எனும் சொல்லாட்சிகளைக் கையாளுதல்.

**கம்பதாசன் கவிதை - தொழில்.**

1. இப்பாடலில் கவிஞர் கூறவிழைந்த விடயத்தினை விளக்குக.

இக்கவிதை தொழிலின் மேன்மையை வலியுறுத்துகிறது. இவ்வுலகில் படைக்கப்பட்ட சூரியன், கடல், காற்று, நதிகள், மலர்கள் என அத்தனையும் தொழில் செய்வதாக எடுத்துக்கூறி தொழிலின் மேன்மையைப் புலப்படுத்துகின்றார்.

2. இக்கவிதையில் கவிஞர் குறிப்பிடும் தொழிலாளர்கள் யாவர்?
    - மண்ணை உழுது நெல்லைப் பெற்றுத்தரும் உழவர்கள்.
    - மானத்தோடு வாழ உடை நெய்யும் நெசவாளர்.
    - நாட்டின் பகைமைகளை வீழ்த்தும் யுத்த வீரர்கள்.
    - மொழியினைக் காக்கும் கவிஞர்கள் என அனைவரும் தொழிலாளரே என வகைப்படுத்துகின்றார்.

3. இக்கவிதையினுடைய தொழிலாக ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகின்றார்?

"தொழிலாளர் ஓங்கிடுக அவர் பசிதுடைக்கத் தொண்டாற்றல் நமது தொழில் கவிதைத் தொழில்" எனக் கவிதையினுடைய தொழில், தொழிலாளர்கள் பசிதுடைக்கத் தொண்டாற்றுவதென கவிஞர் விளக்குகின்றார்.

4. இக்கவிதையில் கவிஞர் தொழிலின் முக்கியத்துவத்தை எவ்வெவ்வாறு விளக்குகின்றார்?

தொழிலின்றி உலகம் அழிந்துவிடுமெனவும் அழிவதுகூடத் தொழிலாகுமெனவும் எமது சுதந்திரமும் தொழிலே எனவும் அழகுள்ள ஒன்றை அழகாக்குவதும் தொழிலே எனவும், அச்சமில்லாது உயர்வுபெறுவதும் தொழிலே எனவும், நமது கருத்துக்களும் தொழிலே எனவும் களங்கமில்லாத கற்பும் தொழிலே எனவும் தொழிலின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றார்.

5. இக்கவிதையின் ஆசிரியர் பற்றிக் குறிப்பிடுக.

- தமிழகத்தைச் சேர்ந்த கவிஞர் கம்பதாசனின் இயற்பெயர் 'அப்பாவு'.
- நாடகத்திலும் ஈடுபாடு கொண்ட இவர் சி. எஸ். இராஜப்பா என்ற பெயரிலும் கம்பதாசன் என்ற பெயரிலும் தமது ஆக்கங்களை எழுதினார்.
- திரைப்படத்தில் நடித்தும் பாடல்கள் எழுதியும் உள்ளார்.
- பல கவிதைத் தொகுதிகளையும், சிறுகதை, நாடகம், காவியம் எனப் பல நூல்களையும் தந்துள்ளார்.

## குறிஞ்சித் தென்னவன் கவிதை – சம்பளநாள்

1. குறிஞ்சித்தென்னவன் கவிதையால் சம்பளநாள் பற்றிக் கூறப்படும் அபிப்பிராயம் யாது?

இவரது கவிதைகளில் வாழ்க்கைச் செலவுக்குச் சம்பளம் போதாது அமைகின்றது. அதனால் வீட்டில் ஏற்படுகின்ற முரண்பாடுகளும் சித்திரிக்கப்படுகின்றன. மொத்தத்தில் சம்பளநாள் மகிழ்ச்சிக்குரிய ஒரு நாளாக அன்றி முரண்பாட்டிற்கும் கவலைக்கும் இன்னுமொரு பிரச்சினையைத் தொடங்கி வைக்கின்ற துர்ப்பாக்கிய நாளாகவும் இக்கவிதையிற் சித்திரிக்கப்படுகின்றது.

2. குறிஞ்சித் தென்னவனின் கவிதையில் சம்பளநாள் பெண்ணின் சோகக் குரலாகவே அமைந்து விடுகின்ற தன்மையை எடுத்துக்காட்டுக.

- இக்கவிதையில் இடம்பெறும் சின்னப்பையன் தவிர மற்றெல்லாப் பாத்திரங்களும் பெண்களின் சோகக் குரலாகவே அமைந்துள்ளன. பலகாரங்கள் விற்பவளைக் கண்டால் செந்தாமரை போன்ற சிறுமிகளின் தவிப்பு.
- அரைநாள் கூலியைப் பெற்றுவிட்ட குப்பாயியின் குறை.
- குறைந்த சம்பளம் பெற்ற சின்ன ருக்குமணியின் கவலை.
- சீட்டுப்பணம், சில்லறைப்பணம் முதலானவற்றைக் கொடுக்கத் தவிக்கும் வள்ளியின் மனம்.
- பிள்ளைகளின் வீட்டுத் தேவைகளையும் நிறைவேற்ற முடியாத பாப்பாத்தியின் குரல்.
- வீட்டு நிலையை அறியாத உழைப்பில்லாத புருஷனைப் பற்றிய நீலாவதியின் புலம்பல் ஆகியன இக்கவிதையில் பெண்களின் சோகங்களாக அமைகின்றன.

3. குறிஞ்சித்தென்னவனின் கவிதையினூடு வெளிப்படும் மலையகப் பிரதேச அடிநிலை மக்களின் நாளாந்த அனுபவங்களை விபரிக்குக.

சீட்டுப்பிடித்தல், நகை அடைவுவைத்தல், வட்டிக்குக் கடன்படல், மளிகைச் சாமான்களைக் கடனுக்கு வாங்குதல், ஆண்கள் மதுவருந்துதல், பலகாரங்களை விற்பனை செய்தல்.

4. சம்பள நாளன்று தொழிலாளர் அனுபவிக்கும் துன்பங்கள் யாவை?

- பிள்ளைகள் பெற்றோரிடம் அடிவாங்கும் நாளாக அமைதல்.
- மற்றவர்களது குறைகளைப் பேசும் நாளாக அமைதல்.
- கடன்தொல்லை தாங்காது புலம்பும் நாளாக அமைதல்.
- அடாவடித்தனம் செய்யும் கணவனை எண்ணி வருந்தும் நாளாக அமைதல்.
- முரண்பாடு காரணமாக பொலிஸ், கச்சேரி, கோடுகளுக்குச் செல்லும் நாளாக அமைதல்.

5. இக்கவிதையின் ஆசிரியரான குறிஞ்சித் தென்னவன் பற்றிக் குறிப்பிடுக.

- மலையகத் தமிழ்க்கவிதை மரபில் குறிப்பிடத்தக்கவர்.
- மலையக மக்களுடன் வாழ்ந்து, அவர்களது அனுபவங்களைத் தமது கவிதைகளில் சித்திரித்தவர்.
- மலையக மக்களின் வாழ்க்கை மாற்றத்திற்காக அயராது சிந்தித்தவர்.
- உரிமையற்றோர் பேசும் ஒளிப்பிழம்புகள் எனும் கவிதைத் தொகுதியை வெளியிட்டார்.
- இவரது கவிதைகளில் சில சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- குறும்பா வடிவத்திலும், நாடக வடிவத்திலும் மலையக மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்தவர்.
- ''குறிஞ்சித் தென்னவன் கவிச்சரங்கள்'' பெயரில் சாரல் நாடன் இவரது கவிதைகளைத் தொகுத்து வெளியிட்டார்.
- மரபுக் கவிஞரான குறிஞ்சித் தென்னவனின் இயற்பெயர் வி.சி. வேலு என்பதாகும்.

## முருகையன் கவிதை - மாடு மாடு என்று பல ஏசி.....

1. இக்கவிதையினூடாகக் கவிஞர் கூறவிழையும் செய்தியினை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

    ஏழைகளின் உழைப்பினைச் சுரண்டுவோருக்கு எதிராக ஒருநாள் சுரண்டப்படுவோர் கொதித்தெழுவர் என்பது கவிதை கூறும் செய்தி. வேலைக்காரப் பையனை மாடாகப் பாவித்து வேலைவாங்கும் வீட்டு எஜமானைச் சாடும் கவிதையில் ''சாறுபிழிந்து சக்கை வாங்குவீர்'' என்ற தொடர் தொழிலாளியின் உழைப்புச் சுரண்டப்படுவதையும், ''மாடும் கயிறு அறுக்கும்'' எனும் தொடர் ஏழைகள் கொதித்தெழுவர் என்பதையும் சுட்டுகின்றன.

2. ஏழைகளைச் சுரண்டி வாழும் பணக்காரர்களின் சொகுசு வாழ்க்கை இக்கவிதையில் எவ்வாறு சித்திரிக்கப்படுகின்றது?
    - ஏழைகள் உடலைப் பிழிந்து உழைக்காவிட்டால் வங்கியில் காசு புரளுமா?
    - ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் உண்டு மகிழ முடியுமா?
    - நோன்மதி நாட்களில் உல்லாசத்தில் ஈடுபட முடியுமா?

    முதலான வினாக்கள் மூலம் சித்திரிக்கப்படுகின்றது.

3. வேலைக்காரப் பையனின் துன்பம் இக்கவிதையில் எவ்வாறு சித்திரிக்கப்படுகின்றது?

    ''மாடுகள் தங்கள் வாய்நுரை தள்ள
    மூசிமூசி உழைக்காவிட்டால்
    உங்கள் வீட்டில் உலைகள் கொதிக்குமா?''
    என்ற தொடரில் கடின உழைப்பினால் மாடுகள் படும் துன்பம் வேலைக்காரப் பையன் படும் துன்பமாகக் காட்டப்பட்டு சித்திரிக்கப்படுகின்றது.

4. இக்கவிதையின் ஆசிரியர் பற்றிக் குறிப்புரை வரைக.
    - ஈழத்துத் தமிழ்க் கவிஞர்களுள் ''முருகையன்'' முக்கியமானவர், நவீன கவிஞர்.
    - முற்போக்குச் சிந்தனையோடு எழுதிய இவர், உழைப்பாளி மக்கள் மீது மிகுந்த அக்கறை கொண்டவர்.
    - தென்மராட்சியின் கல்வயல் என்னும் கிராமத்தில் பிறந்த இவர், இறுதியில் யாழ். பல்கலைக்கழகத் துணைப் பதிவாளராகக் கடமையாற்றினார்.
    - பல்வேறு கவிதை நூல்களையும் திறனாய்வு நூல்களையும் மொழிபெயர்ப்பு தொடர்பான நூல்களையும் நாடகங்களையும் எழுதியுள்ளார்.

## மஹாகவி கவிதை - மீண்டும் தொடங்கும் மிடுக்கு.

1. இக்கவிதையினூடாக 'என் ஊரான்' பற்றிக் கவிஞர் யாது கூறுகின்றார்?

    - வறட்சி பொருந்திய இம்மண்ணிலே சப்பாத்தி முள்ளும் சரியாக விளையாது. ஏர் ஏறாது. எனினும் பாறையைப் பிளந்து பயன் விளைவிப்பவன்.
    - ஆழத்து நீருக்கு அளந்து, நாற்றினை வாழச்செய்வதற்காக தன்னுயிரை வழங்குபவன்.
    - எதிர்பாராத வெள்ளத்தினால் பயிர் அழிந்தபோதும், மீண்டும் உழுது பயிர் செய்பவன். வானத்தைப் பார்த்து அயர்ந்து நிற்கும் பழக்கமற்றவன்.

2. நெற்பயிரின் அழகைக் கவிஞர் எப்படி விபரிக்கிறார்?

    ''தங்க நகைகள் தலைக்கணிந்த பெண்கள் கூடிக் குனிந்து கும்மி கொட்டுவது போல் காதினிக்கப் பாடி கவலை மறக்கச் செய்கின்றதும் போல்'' எனக் கதிர்களின் அழகை விபரிக்கின்றார். மேலும், ''பொற்காசு'' என்பதன் மூலம் நெல்லுப் பொதியையும், ''ஒரு கதிரைக் கிள்ளி முகர்வதன் மூலம் கிறுகிறுத்துப் போகின்றான்'' என அதன் சிறப்பையும் விளக்குகின்றார்.

3. மழையினால் பயிர்கள் அழிந்து போவதை கவிஞர் எப்படி விபரிக்கின்றார்?

திடீரென்று மழையும் கொலைக்காற்றும் வருவதால் ஆட்டத்து மங்கையர் போல நின்ற பயிர்கள், பாட்டத்தில் வீழ்ந்தழிந்து பாழாகிப்போக, கொள்ளைபோல் வந்த வெள்ளம் வயலை விழுங்கியதாகக் கூறுகின்றார்.

4. 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' எனும் தலைப்பு இக்கவிதைக்கு எவ்வாறு பொருந்தும்?

மிகுந்த முயற்சியுடன் வளர்ந்த நெற்பயிரின் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ந்த அவன், மறுநாள் அதன் அழிவு கண்டு சோர்ந்து விடாது மீண்டும் பழையபடி வலக்கரத்தில் மண்வெட்டியைப் பற்றிக் கிண்டுவதை விபரிப்பதன் மூலம் இத்தலைப்பின் பொருத்தப்பாட்டை அறியலாம்.

5. ஆசிரியரின் மொழிநடை பற்றிக் கருத்துரைக்குக.

- மிகவும் தாக்கமுள்ள விபரண நடை
- பேச்சோசைப் பாங்கிலமைந்த செய்யுள்நடை
- வெண்பா யாப்பை மிக எளிமையாகக் கையாண்டுள்ளமை.
- நிகழ்வுகளை சொற்களினூடாகக் காட்சிப்படுத்தியுள்ளமை.
- உவமைகள், உருவகங்கள் பொருத்தமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனம.

### புரட்சிக்கமால் கவிதை - என் இறைவன்....

1. இக்கவிதையில் கவிஞர் யாது கூற வருகின்றார்?

இறைவனைப் புகழ்ந்து, அவனின் பெருமையையும் ஆற்றல்களையும் சக்தியையும் விளக்குகிறார்.

2. கவிஞர் எவ்வெவ்வாறு இறைவனை நினைத்து ஓதுவதாகக் கூறுகிறார்?

அருளுக்கு முதலானவன்; அன்புள்ளவன்; உலகத்தைக் காப்பவன்; மனிதர்கள் ஓதுவதற்கு மொழி அறிந்தவன்; வலிமை மிக்கவன் முதலான பண்புகளுள்ள இறைவன் திருநாமத்தைச் சொல்லி ஓதுவதாகக் குறிப்பிடுகின்றார்.

3. இக்கவிதையில் குறிப்பிடப்படும் இறைவனின் ஆற்றல்கள் யாவை?

வலிமை மிக்கவன்; ஒரு சொல்லால் உலகம் முழுவதையும் ஆளும் வல்லமையுடையவன் தன்னில் மாத்திரம் தங்கியிருப்போருக்கு அண்மையில் இருப்பவன், தனக்குச் சொந்தமானவர்களின் துயர் களைபவன், தீங்கு நினைப்போர்க்கு சிறு துரும்பின் மூலமே பெருந்துன்பம் விளைவிக்கக்கூடியவன்.

4. ''இருமை உலகம் அவன் அறிவில் இரண்டு துளிகள் எனலாமே'' இக்கூற்றினை விளக்குக.

இருமை உலகு என்பது இம்மை, மறுமை ஆகும். அவனது அறிவில் – படைப்பில் அவை இரு துளிகளே. அந்தளவுக்கு அவன் எல்லாவற்றையும் படைக்கும் ஆற்றலுள்ளவன் என்பதனையே கவிஞர் மேற்படி கூற்றின்மூலம் விளக்குகின்றார்.

5. இக்கவிதையின் சிறப்புக் குறித்துக் கருத்துரைக்குக.

- இக்கவிதையில் சமயங்களுக்கப்பால் " இறைவன் ஒருவனே " என்பது பிரதிபலிக்கின்றமை.
- இறைவனின் பெருமை, ஆற்றல், செயல்கள் மூலம் அவனைப் புரிந்துகொள்ள முடியும் என்பதை விளக்குகின்றமை.
- பொருத்தமான நிறுத்தக்குறிகள் மூலம் கவிதையில் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றமை.
- சிறப்பான அணிநயம் (உவமை, உருவகம் எதுகை, மோனை, சொல்லாட்சி) என்பன இக்கவிதைக்கு மெருகூட்டுகின்றமை.

**சுபத்திரன் கவிதைகள் - ஆண்டவன் நீதான்....**

ஆளப்பிறந்த விவசாயி - இங்கு
அடங்கிக் கிடந்தா னொரு நாளில்
கூழைப் பிசைந்தான் குடிசையிலே - அவன்
குறுகிக் கிடந்தான் கொள்கையிலே

நிலத்தையுழுவான் நிலத்தினிலே - தன்
நினைவு இழந்து சாகுமட்டும்
கலப்பை யிழுக்கும் மாட்டுடனே - அவன்
காலங் கழித்தான் கண் கலங்கி

உண்பது முடுப்பதும் வயல்தனிலே - அவன்
உறங்கிக் கிடப்பதும் வயல்தனிலே
விண்தான் தனது கூரையென - ஐயோ
வியர்வை தன்னில் குளித்திடுவான்

உழுபவர்க்கு நிலமெல்லாம் - இங்கு
உருத்தா யாக்கிடச் சட்டங்கள்
நலிவு இன்றிச் செய்திடுவோம் - இந்
நல்லவர் தம்மை உயர்த்திடுவோம்.

பண்ணை முறையில் பலநூறு - வயல்
பரப்பை உழுது உழைக்கட்டும்
திண்ணை தூங்கித் திரிபவர்கள் - அதைத்
தின்ன நினைத்தால் செருப்படிதான்.

காட்டை வெட்டிக் களமாக்கி - அதைக்
கதிர்கள் கொட்டும் தலமாக்கும்
நாட்டின் இறைவன் விவசாயி - ஏன்
நன்றி மறந்தாய் முதலாளி

அன்னை நாட்டைக் காப்பவனே - அதைப்
பசியில் நின்று மீட்பவனே
அனைத்தும் நீதான் அமுதூட்டும் - எம்
ஆண்டவன் நீதான் நீ வாழ்க.

1. இக்கவிதையில் கவிஞர் கூறவந்த விடயம் யாது?

நாட்டைக் காப்பவன் விவசாயியாக இருந்தபோதும், அவனது துயரம் மாறவில்லை எனக்கூறி " உழுபவர்க்கே நிலம் சொந்தமாகவேண்டும் " என்ற கருத்தைக் கூறுகின்றார்.

2. கவிஞர் கருத்தை எடுத்துரைக்கும் முறை எத்தகையது?

- பொதுவுடைமைவாதக் கருத்துக்களை முன்வைத்து கொள்கைப் பிரகடனம் செய்வது போலக் கூறுவது.
- விவசாயி அனுபவிக்கின்ற துன்பங்களை எடுத்துக்கூறி அவர்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டுமென எடுத்துக் கூறுவது.
- வேலை வாங்கும் நில உடமையாளர்களை எச்சரிக்கும் தொனியுடன் கூறுதல்.
- எளிமையான நடையில் உணர்வுபூர்வமாகக் கூறுதல்.
- சந்த நயத்துடன் கூறுதல்.

3. விவசாயியின் உயர்வு எவ்வாறு எடுத்துரைக்கப்படுகின்றது?

ஆளப்பிறந்தவன், அன்னை நாட்டைக் காப்பவன், பசியினின்று மீட்பவன் அதனால் காட்டை வெட்டிக் களமாக்கும் நாட்டின் இறைவன் என்றெல்லாம் உயர்வு கூறப்படுகின்றது.

4. இக்கவிதையில் விவசாயியின் வாழ்வு வளம்பெற யாது செய்ய வேண்டும் எனக் கூறுகிறார்?

உழுபவர்க்கு நிலம் உரித்தாகிடச் சட்டங்கள் இயற்றல் வேண்டும். கூட்டுப்பண்ணை முறையில் விவசாயம் செய்யவேண்டும் எனல்.

5. இக்கவிதையில் கவிஞர் விவசாயியின் துயரங்களை எவ்வாறு சித்திரிக்கின்றார்?

ஆளப்பிறந்தவன் அடங்கியவனாக வாழ்தல். கூழைப் பிசைந்து குடிசையில் வாழ்பவன். கொள்கையில் குறுகியவனாக வாழ்பவன். கண்கலங்கி வாழ்பவன். உண்பது, உடுப்பது, உறங்குவது அனைத்தும் வயலிலே. விண்ணைக் கூரையெனக் கொண்டு, வியர்வையில் வாழுபவன்.

6. விவசாயிகள் எப்படி வாழவேண்டுமென கவிஞர் எதிர்பார்க்கின்றார்?

- உழுபவனுக்கு நிலம் உரிமையாகும் சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.
- நல்லவர்களின் வாழ்வை உயர்த்திட வேண்டும்.
- பண்ணை முறையில் பலநூறு வயல்கள் உழுது உழைக்க வேண்டும்.
- தன்னைச் சுரண்ட வருவோருக்கு செருப்படி கொடுக்க வேண்டும்.

7. இக்கவிதையின் ஆசிரியர் பற்றிக் கூறுக.

- தங்கவடிவேல் என்னும் இயற்பெயர் கொண்ட 'சுபத்திரன்' என்பவர்.
- மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர்.
- 1960 களில் ஈழத்தின் முற்போக்குக் கவிஞர்களில் ஒருவராகச் செயற்பட்டவர்.
- துன்பப்படும் மக்களின் துயரங்களையும் முதலாளித்துவ எதிர்ப்பையும், மனித நேயத்தையும், வெளிப்படுத்திய இவர், அரசியல் தொடர்பான சில கவிதைகளையும் எழுதியுள்ளார்.
- கம்யூனிஸ்ட் கட்சியின் இதழான 'தொழிலாளி' எனும் பத்திரிகையில் இவரது கவிதைகள் அனேகம் வெளிவந்தன.
- இரத்தக்கடன், சுபத்திரன் கவிதைகள் என்பன இவரது வெளிவந்த கவிதைத் தொகுப்புக்களாகும்.

## ந. பிச்சமூர்த்தி கவிதை - பூக்காரி

1. இக்கவிதையினூடாக ஆசிரியர் கூறவிழைந்தது யாது? அதனை எவ்வாறு விளக்குகின்றார்?
   - அன்பைப் புறக்கணித்து மனிதகுலம் யுத்தத்தில் மோகம் கொண்டிருப்பதை உணர்த்தி, மீண்டும் மீண்டும் மிகுந்த நம்பிக்கையுடன் அன்பை வலியுறுத்துவதாக இக்கவிதை அமைந்துள்ளது.
   - நவீன உத்தியில் அமைந்த இக்கவிதையில் பூக்காரி பூ விற்பவளாகக் காட்டப்பட்டாலும் அவள் அன்பை விற்கின்ற சமாதானத்தின் குறியீடாக விளங்குகின்றாள்.
   - மழைக்காலத்தில் பூவுக்கும் பூக்காரிக்கும் வேலையில்லாதது போலப், போர்க்காலத்தில் அன்புக்கு வேலை இல்லை என்பதை இக்கவிதை எடுத்துக்காட்டுகின்றது.
   - ''பூக்காரியைப் போல கனவுத்தெய்வம் அன்புச்சரக்கு
     அழியாத சரக்கு தின்றாலும் எக்காலமும்
     தித்திக்கும் சரக்கு
     வேண்டுவோர் வாரீர் வாங்குவோர் கூவீர் என'' அன்பைச் சந்தைப்படுத்துவதை எடுத்துக்காட்டி ஒப்பீட்டு ரீதியாகவும் அணிகள், குறியீடுகள், காட்சிப்படுத்தல் என்பவையூடாகவும் இக்கவிதையில் விளக்கப்பட்டுள்ளது.

2. இக்கவிதையில் மழையையும் மழையையொட்டிய காட்சியையும் கவிஞர் எவ்வாறு விளக்குகின்றார்?

   மழைபொழியும் இரவில் ஈ, குருவி ஏதும் பறக்கவில்லை. மீன்கள் துள்ளுவதாகவும், மின்னல் அதிகமாக மின்னுவதாகவும், கூதல் மிகுந்திருந்ததாகவும், அதற்கு அஞ்சிய பெண்கள் அடுப்பங்கரையை நாடித் தீமூட்டிக் குளிர்காய்வதாகவும், கவிஞர் மழையையும், மழையையொட்டிய நிகழ்வுகளையும் சித்திரிக்கின்றார்.

3. போரின் துன்பத்தை இக்கவிதையில் கவிஞர் எப்படி விளக்குகின்றார்?

   சூலமெழுந்தது. அண்டம் அதிர்ந்தது, உலகெங்கும் கூடாரம், ஊரெங்கும் விஷப்புகை, வானெங்கும் பிளேன் இறகு, தெருவெங்கும் பிணமலை, பீரங்கிக்குரல் என யுத்தத்தின் துன்பத்தைக் கவிஞர் விளக்குகின்றார்.

4. கவிஞரின் உள்ளம் எவ்வரிகளில் பிரதிபலிக்கின்றது?

   ''பிளேன் இறகின் உயரம், தெய்வக்குரல் ஏறவில்லை.''
   ''நெஞ்சுடையாக் கனவுத் தெய்வம்.''
   ''கூவுதலைக் குறைக்கவில்லை.''
   ''அன்பே சிவமாவான் மங்கலமாய் மலர் தருவான்.''
   வேண்டுவோர் வாரீர்! வாங்குவோர் கூவீர்!!'' எனும் வரிகளில் பிரதிபலிக்கின்றது.

5. இக்கவிதை ஆசிரியர் பற்றிக் குறிப்பிடுக.
   - மணிக்கொடி கால எழுத்தாளராகப் புகழ்பெற்ற 'ந. பிச்சமூர்த்தி'யின் இயற்பெயர் வேங்கட மகாலிங்கம் என்பதாகும்.
   - சிறுகதைகள் மூலம் அறிமுகமான இவர், ஏராளமான கவிதைகளையும் எழுதியுள்ளார்.
   - அமெரிக்கக் கவிஞரான 'வால்ட் விட்மன்', 'பாரதி' ஆகியோரின் கவிதைகளால் ஈர்க்கப்பட்ட இவர், புதிய கவிதைகளை எழுதித் தமிழில் புதுக்கவிதையின் முன்னோடி ஆனார்.
   - அவரது கவிதை நூலின் முன்னுரையில் (1970) ''கவிதை என்றால் என்ன? என்ற கேள்விக்கு யாராலும் சரியான விடையைக் காணமுடியவில்லை. அசை எது? சீர், அடி, தளை, மோனைகளிலோ ஒலி அழுத்தத்தினாலோ அமைவது கவிதை என்று கூறுவது அதன் முழுத்தன்மையையும் விளக்கப் போதுமானதல்ல. அதற்கான முயற்சியை நழுவ விடுவதற்குமில்லை'' எனக் கூறியுள்ளார்.
   - 2ஆம் உலக மகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் பிச்சமூர்த்தியின் பூக்காரி என்ற கவிதை எழுதப்பட்டது.

**நீலாவணன் கவிதை - இன்றுனக்கும் சம்பளமா?**

"ஏன் கடலே இரைகின்றாய்? இன்றுனக்கும்
சம்பளமா? ஏழைவீட்டில்
தான் நீயும் பிறந்தனையோ? தமிழா நீ
கற்றதுவும் தகாதவார்த்தை!
தேன் கடலாய் ஓடுமெங்கள் திருநாட்டில்
பிறந்தபயன் தெரிகின் றாயோ?
வான்தந்த வளமிலையோ? வயல்தந்த
நிதி இலையோ? வாடாதே நீ......."

"காற்செருப்புக் கழன்றதுவா? கட்டுதற்கும்
இடமிலையா? கால்நூற் றாண்டாய்த்
தோற்பொருத்தித் தோற்பொருத்தித் துணையாக
உழைத்த அவை தொழிலில் ஓய்ந்தால்
போற்றுதற்கோர் பொதுக்கூட்டம் போட்டதிலே
பொன்னாடை போர்த்து மேலும்
பாற்சோறும் பட்சணமும் படைப்பதற்கு
நின்னிடத்தே பணமா இல்லை?"

"இபோசா பஸ்களிலே ஏறுகையில்
வியர்வையினால் ஏழை தோழன்
யப்பானார் இறக்குகிற புறாமார்க்கு
மல்வேட்டி அடடா 'டப்டப்'
'சப்' பென்று மூச்சுவிட்டு சல்லடையாய்
மாறிற்றோ? சனத்துக்குள்ளே
இப்படியும் அவமானம் ஏதேனும்
வந்ததுவோ? இரைகின்றாய் நீ"

"சட்டம்பி ஆனவன்றே சந்தையிலே
வாங்கிவந்து, சலியா தின்று
பொட்டுதிப் போனாலும் புழுதிமிகப்
படிந்தாலும், போன மாதம்
கட்டறுந்த குடையினை எம் கந்தோருக்
கெடுத்துப்போய் கவன மின்றிப்
பட்டணத்துக் கடை எதிலும் பறிகொடுத்து
விட்டனையோ? பதறுகின்றாய்!"

"கல்லூரி மாணவி உன் மகள்கமலா
ஏதேனும் காசா கேட்டாள்?
அல்லாஹ் போல், அனுதினமும் சில்லறைக்குக்
கடன்தந்த அலியார் நானா
பொல்லாத வார்த்தை ஏதும் புகன்றாரோ?
பொருமுகிறாய்! போன ஆண்டு
நில்வைக்கு வரிசையிலே நின்படலை
மட்டும் அங்கார் நிற்கின்றாரோ?"

"அந்திபட்டும் இருசாமம் ஆச்சுதினிக்
கடன்காரர் ஆரும் அங்கே
இந்தவரை நில்லார்கள் என்மனையாள்
மட்டுமங்கே இருப்பாள் ஏங்கி
நொந்தென்ன கண்டோம் யாம்? இல்லாமை
யாம்கொடிய நோயைப் போக்க
விந்தைமருந் தறியாமல் விதியென்று
பேசுகின்றோம்! வீடு செல்வோம்."

" ஏன் கடலே இரைகின்றாய்? இன்றுனக்கும் சம்பளமா?....... " என்று தொடங்கும் கவிதையை அடிப்படையாகக் கொண்டு கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.

1. ஏழை ஆசிரியனொருவன் தன் மனக்குமுறல்களையும் ஏக்கங்களையும் இயலாமைகளையும் பிரச்சினைகளையும் சித்திரித்துக் காட்டுவதை விளக்குக.

- கவிதை முழுவதும் ஏழை ஆசிரியனின் மனக் குமுறல்களையும் ஏக்கங்களையும் இயலாமைகளையும் பிரச்சினைகளையும் கூறுகின்றார் கவிஞர்.
- ஏழை ஆசிரியர் கடன் பட்டே காலத்தைக் கழிக்க வேண்டியுள்ளது.
- சம்பளத்து அன்று கூட வீட்டுக்கு போகமுடியாத நிலை.
  " அந்திபட்டும் இருசாமம் ஆச்சுதினிக் கடன்காரர் ஆரும் இந்தவரை நில்லார்கள் " என்னும் வரி இதனை உணர்த்துகிறது.
- இவை மனக்குமுறல், ஏக்கங்களைக் காட்டுவன.

இயலாமைகள்

- காற்செருப்பு வாங்கமுடியாமை.
- கிழிந்த வேட்டி - புதுவேட்டி வாங்க முடியாமை.
- கட்டறுந்த குடைக்குப் பதில் குடை வாங்கமுடியாமை.
- மகளுக்குக் காசு கொடுக்க முடியாமை.
- அலியார் நானாவின் கடன்கொடுக்க முடியாமை.

2. தான் கூறவந்த கவிதைப் பொருளை விளக்கக் கையாண்ட உத்திகளைக் கூறுக.
   - கடலை விளித்து உரையாடுவது.
   - கடலை விளித்து எழுப்பப்படும் கேள்விகள் மூலம் தாம் கருதிய பாடுபொருளை விளக்குகின்றார்.
   - கவிஞர் தனக்கு ஏற்பட்ட துன்பங்களைக் கடலைப் பார்த்து கேட்பதன் மூலம் மன ஆறுதல் அடைகின்றார்.
     உ:ம் : "ஏன் கடலே இரைகின்றாய்?" " ஏழை வீட்டில்தான் பிறந்தனையோ?"
     "இன்று உனக்கும் சம்பளமா?" " காற்செருப்புக் கழன்றதுவோ?"

3. இதில் காணப்படும் அணிகளைக் கூறி விளக்குக.
   - உருவக அணி : உ-ம் : தேன்கடல் - தேனாகிய கடல் இல்லாமையாம் நோய்
   - உவமையணி : உ-ம் : அல்லா போல்......

4. இக்கவிதையில் அங்கதச் சுவைகளுக்கு உதாரணம் தருக.
   புகழ்வது போல் இகழ்வது அங்கதமாகும்.

உ-ம் : "தேன்கடலாய் ஓடுமெங்கள்
திருநாட்டில்......"
"பாற்சோறும் பட்சணமும் படைப்பதற்கு"
"நின்னிடத்தே பணமா இல்லை?..."
"ஏழைத்தோழன் யப்பானார் இறக்குகிற புறா மார்க்கு................."

## உமர்கய்யாம் பாடல்கள்

(மொழிபெயர்ப்பு)

1. கவிதைகளினூடாக கவிஞர் வெளிப்படுத்த விழைந்த விடயம் பற்றிக் கூறுக.

    - ரோஜா மலர்கொண்டுள்ள பெருமிதமும் நம்பிக்கையும்.
    - உலகில் யாவும் நிலையற்றவை, மனிதனது எண்ணங்கள் உட்பட எதுவும் நிலையற்றது.
    - கொடையாளியானால் என்ன? உலோபியானால் என்ன? எந்த மனிதனும் ஈற்றில் மண்ணாவது உலக இயல்பு.

    என்பவையே வெளிப்படுத்த விழைந்த விடயங்களாகும்.

2. கவிஞர் வெளிப்படுத்த விழைந்த விடயங்களைக் கூறக் கையாண்ட உத்திகளைக் கூறுக.

    - உதாரணங்கள் காட்டி விளக்கப்பட்டுள்ளது.
      பாலையின் தூசி மணல்மீது படியும் பனிபோன்று வாழ்வு நிலையற்றது எனல்.
    - ஒப்பீடுசெய்து விளக்கப்பட்டுள்ளது
      பணத்தினை அள்ளி அள்ளிக் கொடுத்தோரும், பூட்டி ஒளித்து வைத்தோரும் கூட இறப்பது உறுதி என, இருவகை மனிதர்களையும் ஒப்பீடு செய்தல்.

3. பாடப்பகுதியில் தரப்பட்டுள்ள உமர்கய்யாம் பாடல்களுக்கான மூன்று மொழி பெயர்ப்புக்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளையும், அவற்றுக்கான காரணங்களையும் விளக்குக.

**வேறுபாடுகள்**

- ஒரு கவிதையைப் பலர் மொழிபெயர்க்கும் போது மொழிபெயர்ப்பில் வேறுபாடுகள் காணப்படுவது இயல்பு.
- உமர்கய்யாமின் குறிப்பிட்ட பாடல்களின் மூன்று மொழிபெயர்ப்புகளிலும் பொருள்ஒற்றுமை காணப்படினும் சொல்லும் முறையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.
- மூன்று மொழிபெயர்ப்புக்களின் தொடக்க வரிகளிலேயே இந்த வேறுபாட்டைக் காணலாம்.
  யோகியார் : " சுற்றி நடம் புரியும் ரோஜா சுடர் கூறுதல் காண் ....."
  அப்துல்காதர் லெப்பை : " பாராய் அந்த ரோஜாவைப் பார்த்து நகைக்கும்
  அதனழகைத் தேராய் அதுசொல் வார்த்தை இது."
  கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை : " சிரித்த ரோஜாமலரைப் பார்.
  செப்பும் இனிய மொழியைக் கேள்."
- யோகியாரின் மொழிபெயர்ப்பில் சொற்சுருக்கம் காணப்படுகிறது.
- அப்துல்காதர்லெப்பை மொழிபெயரப்பு சற்று நீளமானது.
- கவிமணி இரண்டு சிறுவாக்கியங்களில் எளிமையாக மொழிபெயர்த்திருக்கிறார்.

இத்தகைய வேறுபாடுகள் மொழிபெயர்ப்பு முழுவதிலும் காணப்படுகின்றன.

காரணங்கள்

- ஒப்பீட்டளவில் யோகியாரின் மொழிபெயர்ப்பில் எளிமை குறைவாகவும் கவிமணியிடம் எளிமை அதிகமாகவும் காணப்படுகிறது.
- இந்த வேறுபாடுகளுக்கு மொழிபெயர்ப்பாளரின் செய்யுள் ஆட்சியில் காணப்படும் வேறுபாடுகளும் மொழிபெயர்ப்பு பற்றிய அவர்களது கருத்துக்களும் காரணம் எனலாம்.

## கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை கவிதை - சூரியகாந்தி

.
கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையின் சூரியகாந்தி எனும் கவிதையை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

**1.** இக்கவிதை மூலம் கவிஞர் வெளிப்படுத்தும் விடயம் என்ன?

சூரியகாந்திப் பூவினது அழகினையும் செயற்பாடுகளையும் காதல்வயப்பட்ட பெண்ணொருத்தியின் செயற்பாடுகளாகக் கற்பனை செய்வதே கவிஞர் வெளிப்படுத்தும் விடயம் ஆகும்.

**2.** தனது கருத்துக்களைக் கூறக் கவிஞர் பயன்படுத்தும் உத்திகள் எவை?

- சூரியனைக் காதலனாகவும் சூரியகாந்தியைக் காதலியாகவும் உருவகித்தல்.
- தற்குறிப்பேற்ற அணிகளைப் பயன்படுத்தல்.

  " என்ன அரிய வரம்பெற இன்றும்நீ
  இத்தவம் செய்வது பூமகளே."
- வினாக்களை வினாவுதல்

  " ஆயிரம் கண்களும் வேண்டுமோடி?
  வந்த வருத்தமும் ஏதடியோ?"
- நகைச்சுவையாகக் கூறுதல்

  " கஞ்சமகள் வந்து காணிற் சிரிக்குமோ?
  கண்ணீர் உருக்குமோ? யாரறிவார்?"
- பேச்சுவழக்குச் சொற்களைப் பொருத்தமான இடங்களில் கையாளுதல்

## சிறுகதைகள்.

### 1. ஒரு கூடைக்கொழுந்து.

**I. அ.** தன்மான உணர்வால் உந்தப்பட்ட ஒரு பெண்ணின் உழைப்பும் மனஉறுதியும் எவ்வாறு சித்திரிக்கப்படுகின்றன?

தன்மான உணர்வால் உந்தப்பட்ட ஒரு பெண்ணின் உழைப்பும் மன உறுதியும் இக் கதையினூடாகச் சித்திரிக்கப்படுதல்.

1. தன்மான உணர்வு ஏற்படக்காரணம்
   கொழுந்து நிறை அதிகம் பதியப்பட்டமையால்.
   கணக்குப்பிள்ளைமேல் தொழிலாளர்களின் சந்தேகம்.
   மீண்டும் ஒருமுறை அதேயளவு நிறைக்கொழுந்து எடுக்கப்பட வேண்டிய தேவை.

2. உழைப்பு
   கைகள் வேகமாக இயங்குதல், இருகைகளும் இரண்டு வீச்சில் நிறைதல்.
   கேட்கப்பட்டதை விட நாலு இறாத்தல் அதிகமாக இருத்தல்.
   தனது வேலையுடன் ஏனைய பெண்களுக்கும் உதவுதல்.

3. மனஉறுதி
   "யாரு முடியாதுன்னா? என்னாலே எடுக்க முடியும் எடுத்துக்காட்டுகிறேன்" எனச் சவால் விடும் போது.
   ஆறுமுகத்திடம் "முடியாதுன்னு தெரிஞ்சா சபதம் போடுவேனா?' எனக் கேட்கும் போது.
   சவாலை எதிர்கொள்ளும் மன உறுதி புலப்படல்.

**ஆ.** மலையகப் பிரதேசத்தின் வாழ்வியல் அம்சங்களை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்பட்ட உத்திகளை விளக்குக?

வாழ்வியல் அம்சங்கள் - உத்திகள்

1. சம்பவங்களூடாக விளக்குதல்.
   கொழுந்து கொய்யும் பெண்களின் நடத்தை மாற்றம்.
   நிறை எடுத்தல்.
2. பாத்திர வர்ணனை இருப்பிட வர்ணனை.
   கங்காணி மேற்பார்வை.
   லட்சுமியின் நேர்மை.
3. உரையாடல்
   "நீங்க பண்ணுற காரியங்களுக்கு நிறைவேறா புடிச்சித் தருவாங்களோ?
   தொலைஞ்சு போ கடேசித் தொங்கலுக்கு ....."
4. பிரதேச மொழி நடை.

II. "ஒரு கூடைக் கொழுந்து" என்ற சிறுகதையினை அடிப்படையாகக் கொண்டு,

**அ.** இச் சிறுகதையின் கதைக் கருவினைத் தெளிவுபடுத்துக.

- ஒரு மலையக இளம்பெண் தொழிலாளி ஒருத்தியின் திறமைக்கு இடப்படும் சவால்.
- தோட்டத் தொழிலாளர்கள் மீதான அடக்குமுறையும் அதனால் அவர்கள் அடைகின்ற துயரங்களும்.

**ஆ.** பின்வரும் பாத்திரங்களின் குணவியல்புகளை விளக்குக.

1. லட்சுமி
2. கணக்குப் பிள்ளை
3. கங்காணி

பாத்திரங்களின் குணவியல்புகள்.

**லட்சுமி**

- இக் கதையின் பிரதான பாத்திரமாக விளங்குபவள்.
- இளமைத் துடிப்பு மிக்கவள்.
- கலகலத்த சுபாவம் மிக்கவள்.
- எளிமையான அழகுடையவள்.
- தொழிலின் மீது பக்தி கொண்டவள்.
- தன் சக தொழிலாளர்களுடன் வெட்டிப் பேச்சுப் பேசுபவள்.
- பயந்த சுபாவம் கொண்டவள்.
- தன் மனதுக்கு நியாயமெனப் பட்டதை எவ்விடத்திலும் தயங்காது எடுத்துரைப்பவள்.
- தன்மானம், மனஉறுதி, வைராக்கியம் மிக்கவள்.
- பெண்மைக்கும் அதன் மென்மைக்கும் இடையில் உறுதி கலந்த மனநிலையில் எதனையும் ஏற்று நடக்கும் பாத்திரம்.
- துணிவு மிக்கதாக ஓர்மம் உடையதாக, நம்பிக்கையுடையதாக வெளிப்படும் பாத்திரம்.
- எதற்கும் தன்னந்தனியாக நின்று முகம் கொடுக்கும் பாத்திரம்.
- தன் சபதத்தை நிறைவேற்றுவதில் பிடிவாதம் கொண்டவள்.
- இலட்சிய நோக்குக் கொண்ட பாத்திரம்.
- தன்மான உணர்வு மிக்கவள்.
- இலட்சியப் பெண்ணாக புரட்சியின் தொடக்கமாக, அஞ்சா நெஞ்சம் கொண்டவளாக விளங்குபவள்.

**கணக்குப்பிள்ளை**
- அதிகார அடக்குமுறை கொண்டவர்.
- தன்னையும் லெட்சுமியையும் சம்பந்தப்படுத்தி மற்றவர்கள் பேசுவதையும் தவிர்க்கமுனையும் பாத்திரம்.
- இறுதியில், லெட்சுமியின் உழைப்பை மட்டுமன்றி அவளையும் நேசிக்கும் பாத்திரம்.

**கங்காணி**
- லெட்சுமிக்கும் கணக்குப்பிள்ளைக்குமிடையே ஊடாடும் பாத்திரம்.
- கணக்குப்பிள்ளையால் கூப்பிடப்படும்போது, முதுகு கூனுமளவு பவ்வியம் காட்டுபவர்.
- இறுதியில் உழைப்பின் பக்கமே நின்று பேசும் பாத்திரம்.

**இ.** மலையகப்பிரதேச மொழிப் பயன்பாட்டைஇக்கதை பிரதிபலிக்குமாற்றை விளக்குக.
- பிரதேச மொழிப்பயன்பாடு
  பாத்திரங்களின் உரையாடல்கள் யாவும் மலையகப் பேச்சு மொழியிலேயே அமைந்துள்ளன.
  உ-ம் - தொரைச்சாமி அம்மா, நொப்பன், பூடகம், அவுகளுக்கு, ஒப்பராணை, ஆளுக, பொடசக்காரி, பேசியாப்புல.
- கதைக்களம்
  கொழுந்தெடுக்கும் தேயிலைத் தோட்டம், மலையகப் பிரதேசம், லட்சுமியின் லயம்.

**ஈ.** இக்கதையினைப் புலப்படுத்த ஆசிரியர் கையாண்ட உத்திகளைக் கூறுக.
- கதையை வாசிப்போரின் உள்ளத்திலே தொடர்ந்து படிக்கத்தக்க ஆர்வத்தை எழுப்பும் வகையில் நிகழ்ச்சிகளை அடுக்கியோ, மாற்றியோ, வாசகர் இனி என்ன நடக்குமோ என்று எதிர்பார்க்குமாறு உத்திகளைக் கையாளல்.
- பல விடயங்களுக்கு அழுத்தம் கொடுக்க முற்படல்.
- நாசூக்காகக் கதை முடிவினை எடுத்துக் காட்டுதல்.
- அணிப்பிரயோகம்
  உவமையணி - ஆடி அசைந்து அம்மன் பவனி வருவது போல்.
  தூங்கும் புலியை விலாவில் குத்தினால் முறைப்பது போல சிலிர்த்துப் பார்த்தாள்.

**ஈ.** இக்கதையினைப் புலப்படுத்த ஆசிரியர் கையாண்ட உத்திகளைக் கூறுக.

ஆசிரியர் கையாண்ட உத்திகள்.
- கதையைப் படிப்போருக்கு தொடர்ந்து இடைவிடாது படித்து முடிப்பதற்கு விருப்பம் ஏற்படத்தக்க வகையில் ஆசிரியர் உத்தியைக் கையாளும் திறன்.
- கதையை வாசிப்போரின் உள்ளத்திலே தொடர்ந்து படிக்கத்தக்க ஆர்வத்தை எழுப்பும் வகையில் நிகழ்ச்சிகளை அடுக்கியோ, மாற்றியோ, வாசகர் இனி என்ன நடக்குமோ என்று எதிர்பார்க்குமாறு உத்திகளைக் கையாளல்.
- பல விடயங்களுக்கு அழுத்தம் கொடுக்க முற்படல்.
- நாசூக்காகக் கதை முடிவினை எடுத்துக் காட்டுதல்.

**உ.** இக்கதையில் கதைக்களம் அடையாளப்படுத்தப்பட்ட விதத்தினை விளக்குக.

கதைக்களம்
- இக்கதைக்கான களம் லெட்சுமியின் வீடு, கொழுந்தெடுக்கும் மலை, கொழுந்து நிறுக்குமிடம் ஆகியனவாகும்.
- கதையின் தொடக்கமே மலையில கொழுந்தெடுக்கும் நிறை (நிரை) யுடன் தொடர்புபட்டதாகவே தொடங்குகின்றது. கொழுந்தெடுக்கும் மலைப்பகுதி, கொழுந்தெடுக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கேற்ப நிரை நிரையாகப் பிரித்துக் கொடுக்கப்படும். இந் நிரைக்குட்பட்ட தேயிலைச் செடியில் இருந்து கொழுந்து பறிக்கப்படல் வேண்டும். அதிகமாகக் கொழுந்தெடுப்பதில் குறியாயுள்ளவர்கள் முதல் தொங்கல், கடைசித்தொங்கல் பகுதிக்குப் போவதேயில்லை. அதற்கான காரணம் பின்வருமாறு,

''முதல் தொங்கல் என்றால் ஒழுங்கான முறை கிடையாது. எல்லாம் குறைநிறைகளாக ஆயிரம் தடவை ஏறி இறங்க வேண்டும்''

பறிக்கப்பட்ட கொழுந்தை நிறுக்குமிடமாக ஸ்ரோருக்கு முன்னால் உள்ள இடம் அமைந்திருக்கிறது. கதையின் முக்கியமான பகுதிக்குக் களமாக இவ்விடம் அமைந்திருக்கின்றது.
கணக்கப்பிள்ளை, கங்காணி, லெட்சுமி, கொழுந்தை நிறுப்பவர்கள் ஆகிய கதாபாத்திரங்கள் இவ்விடத்திலேயே சங்கமிக்கின்றன.
கதையின் திருப்பு முனைக்கும் இவ்விடம் களமாக அமைகின்றது.
கதையின் ஒரு பகுதியாக லெட்சுமியின் காதலன் ஆறுமுகமும் அவளும் சந்திக்கும் இடமாக லெட்சுமியின் லயக்குடிசையும் அமைகின்றது.

இவ்வாறாக இக்கதைக்குக் கொழுந்தெடுக்கும் மலைப்பகுதி, கொழுந்தை நிறுத்தெடுக்கும் ஸ்டோருக்கு முன்னால் உள்ள பகுதி, லெட்சுமியின் லயத்துவீடு என்பன கதைக்களமாக அமைந்திருக்கின்றன.

**ஊ.** மலையக மக்களின் வாழ்வியல் நிலை எடுத்துக்காட்டப்படுகின்றமையை விளக்குக.

- கொழுந்தெடுத்தல் பற்றிய விபரிப்புக்கள், உரையாடல்கள்.
- இருட்டை விரட்டத் தகரலாம்பு பாவித்தல்
- விறகாகத் தேயிலை மிலாறுகளைப் பயன்படுத்தல்
- காதல் பேச்சுக்கூட வயிற்றுப்பிரச்சினை பற்றியதாகவே அமைதல்
- வறுமையான வாழ்வு

## 2. சாபவிமோசனம்.

1. இராமாயண பரிச்சயம் இல்லாதவர்களுக்கு இந்தக்கதை பிடிபடாமல் - பிடிக்காமல் கூட இருக்கலாம் என்ற புதுமைப்பித்தன் சாபவிமோசனச் சிறுகதையின் ஆரம்பத்தில் கூறுவதற்கான காரணம் யாது?

- இராமாயணத்துடன் தொடர்புபட்ட விடயங்களுக்கு மாறான, புதிய கண்ணோட்டத்திலான பாத்திர உருவாக்கங்களும் அவற்றின் செயற்பாடுகளும் சாபவிமோசனம் சிறுகதையில் இடம்பெற்றுள்ளன.
  (உ-ம்) : இராமாயணத்திலே அகலிகை என்னும் பாத்திரம் சாபவிமோசனத்துக்கு உட்பட்டுப் பின்னர் சாபவிமோசனம் பெற்றுத் தமது பழைய வாழ்க்கையை அதாவது கணவனான கௌதமனோடு சேர்ந்து வாழ்கின்ற வாழ்க்கையை மேற்கொள்கின்றது. ஆனால் சாபவிமோசனத்தைப் பெற்ற பின்னர் யதார்த்த உலகத்தில் அகலிகை போன்ற பெண்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் பற்றிப் புதுமைப்பித்தன் எடுத்துக்காட்ட விழைகின்றார்.

- சக்கரவர்த்தித் திருமகன் எனக் கருதப்பட்ட இராமனுடைய சந்தர்ப்பவாதம் இச்சிறுகதையில் அம்பலப்படுத்தப்படுகிறது. அதாவது சிறுவனாக இருந்தபோது அகலிகைக்கு வழங்கிய நீதியையும் பின்னர் முதிர்ச்சி அடைந்து அரசனான பின்னர் உலகத்திற்குப் பயந்து உலகத்தைத் திருப்திப்படுத்தச் சீதைக்கு வழங்கிய நீதியையும் கேள்விக்குட்படுத்தி இராமனின் குணவியல்புகளின் இரட்டை வேடத்தை புதுமைப்பித்தன் அம்பலப்படுத்துகின்றார்.

- பெண் நிலையில் நின்று நோக்கும் போது சீதையை அக்கினிப்பிரவேசம் செய்ய வைத்தமை கண்டனத்துக்குள்ளாகிறது.

- அது தொடர்பாக அகலிகை வழங்குகின்ற கேள்விகளும் பழைமைப் பண்பாட்டினை விமர்சிக்கின்றன.

- இராமாயணத்தில் இல்லாத சம்பவம், பாத்திர இயல்புகளை அகலிகை என்னும் பாத்திரத்தின் இயல்புகளை வெளிப்படுத்துவதற்காக எடுத்தாண்டுள்ளார்.
  உ-ம் : கைகேயி சீதை சந்திப்பு

**2.** பின்வரும் கூற்றுக்களுக்கு விளக்கம் தருக.

1. சாலையோரத்தில் பூத்திருந்த மலர்கள் அவர்களைப் பார்த்துச் சிரித்தன.

   சாபவிமோசனம் ஏற்பட்ட பின்னால் கூட அகலிகை கோதமர் வாழ்க்கையில் மனப்போராட்டங்கள் தொடர்ந்தன. கோதமனுக்குத் தான் ஏற்றவளா? என்பது அகலிகையின் பிரார்த்தனை, அகலிகைக்குத் தான் ஏற்றவனா என்பது கோதமனின் பிரார்த்தனை.
   இருவரதும் அத்தகைய நிலைகண்டு ஒருவிதத்தில் அவர்களை ஏளனம் செய்வது போன்று சாலையோரப் பூக்கள் சிரித்தன என்று தற்குறிப்பேற்ற நோக்கில் புதுமைப் பித்தன் எடுத்துரைக்கின்றார்.

2. அகலிகையின் மனப்பாரத்தை நீக்க வந்த மாடப்புறா.

   சாபவிமோசனம் பெற்ற பின்னரும், அகலிகை தனது மனப்பாரத்தை இந்திரனது தவறான செயல் ஏற்படுத்திய மனக்காயம் நீங்கா நிலையில், தான் குடும்ப வாழ்க்கைக்கு உகந்தவள் அல்லள் என்ற தனது மனப் பாரத்தை இறக்குவதற்கு எவருமில்லாத அநாதரவான நிலையில், அதனை ஏற்றுக்கொள்வதற்கேற்ற விதத்தில் அரச வர்க்கத்தைச் சார்ந்த சீதையின் வருகை நிகழ்கின்றது.

- ‘அலை அடங்கவில்லை’ என்று தனக்குள் மெதுவாகச் சொல்லிக்கொண்டான் ஜனகன்.

  ‘அலை அடங்கவில்லை’ என்று ஜனகன் குறிப்பிடுவது கோதமர் சார்ந்த விடயமாகின்றது. அதாவது கோதமர் யோசனை அடங்கா நிலையில் அவ்வாறு அவர் குறிப்பிடுகின்றார். கோதமர் யோசனையின் அடிப்படை அவர் ஆத்திர உணர்ச்சிக்கு உட்பட்டு அதனால் அகலிகைக்கு சாபம் இடுகின்றார். அதுபற்றி இக்கூற்று பொருத்தப்பாடானதே ஆகும்.

- சாபவிமோசனம் என்னும் சிறுகதையில் கோதமன், அகலிகை என்ற பாத்திரங்களது உள்ளத்துணர்வுகளை ஆசிரியர் வெளிப்படுத்தும் பாங்கினை விளக்குக.

**கோதமன்.**

- சாபவிமோசனத்துக்குப் பின்னரான வாழ்வு பிரமாண்டமான மதிலாக அவர்களைச் சுற்றுகின்றது.
- கோதமனால் முன்புபோல மனக்களங்கமின்றிப் பேச நா எழவில்லை. அவளை விலைமகள் என்று சுட்டியது தன்னையே பொசுக்க வைத்துவிட்டது போல இருக்கிறது.
- ‘என்ன வேண்டும்’ என்று அகலிகையிடம் கேட்கும் போது, அவை பொருளற்ற வார்த்தைகளாய் இருத்தல்.
- திருமணம் கூடிப் பசுவை வலம் வந்து ஏமாற்றிப் பறித்தது தானே என்ற விரக்தி உணர்வு.
- அகலிகைக்குத் தான் ஏற்றவனா? என்பது அவன் கவலை. இருவிதமான கோட்டைகளுக்குள் இருக்கும் தனிமை உணர்வு.
- விமோசனத்தை எதிர்பார்த்து தீர்த்த யாத்திரை முதலிய பல முயற்சிகள் எல்லாம் தோல்வியுற்றமை.
- இறுதியில் குழந்தை வரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு, அகலிகை கல்லாக, கைலையை நாடிச்செல்லும் விரக்தி நிலை.

**அகலிகை**

- கோதமனுக்குத் தான் ஏற்றவளா என்ற கவலை.
- கணவனை அன்பால் திளைக்க வைத்தல். புதுமணப் பெண்போல அங்கம் கனிதல், எனினும் மனதில் ஏறிய கல் இறங்கவில்லை.
- தன்னைப் பிறர் கூர்ந்து பார்க்காதபடி நடக்க விரும்புதல்.
- சூழ இருப்போர் எல்லோருமே இந்திரர்களாகத் தென்படுதல்.
- ஒவ்வொரு சொல்லையும் மீண்டும் மீண்டும் சரிபார்த்தல்.
- மகனைக்கூட மனதால் தழுவ வேண்டிய, அவனும் அந்நியமான நிலை.
- ரிஷி பத்தினிகளிலே 'இவள்தான் அகலிகை' என்ற வார்த்தையால் மனசு சுடுகாடு மாதிரி வெந்து தகித்தல். சாபவிமோசனம் கண்டாலும், மனத்தில் சாபவிமோசனம் கிடைக்காதா? என்ற ஏக்கம்.
- இறுதி எதிர்பார்ப்பும் தீக்குளிப்புச் சம்பவத்தால் ஏமாற்றமாகிப் போக, கண்ணகி வெறித்தாண்டவமாடும் நிலையின் மாற்றம்.
- கணவனே இந்திரனாகத் தோன்ற, மீண்டும் கல்லாகும் நிலை.

**4.** பாத்திரங்களை மனக்கண்முன் கொண்டுவரும் வர்ணனைகள்.

காலையில் ஒரு கற்சிலை.

தளர்ந்து நொடிந்து போன தசைக்கூட்டத்திலும், வீரியத்துள் வைக்கும் மோகன வடிவம்.

**5.** அகலிகை என்ற பாத்திரத்தின் மனச்சுமையைக் குறைப்பதில் கோதமனின் பங்களிப்பினைத் தெளிவுபடுத்துக.

1. அவளின் பசி தீர்க்கும் பழங்களைக் கொண்டுவந்து கொடுத்தல்.
2. அகலிகை விருப்பப்படி சரயூ நதிக்கரையில் குடிசை அமைத்தல்.
3. மிதிலைக்குப் போகலாமா என்று அகலிகை கேட்டவுடன் புறப்படுதல் - கையைப் பிடித்துக்கொண்டு பயப்படாதே என்று ஆறுதல் கூறுதல்.
4. தனிமையை விரும்பினாலும் அகலிகை மனசு ஒடிந்துவிடக் கூடாது என்பதற்காக சேர்ந்திருத்தல்.

- தீர்த்த யாத்திரை செல்லும் கோரிக்கையை ஏற்று இரவிலேயே புறப்படுதல்.
- இறுதியில் அக்கினிப் பிரவேசம் தொடர்பாக அவள் மனம் குழம்பியிருக்க குழப்பத்தைத் தீர்ப்பதற்காக குழந்தையை வரிக்க முயலுதல்.

## 3. ஒளி

**1.** கரீம் என்ற பாத்திரம் பொருளாதார ரீதியாக எதிர்கொண்ட நெருக்கடிகளும், அதிலிருந்து மீளுவதற்கான முயற்சிகளும்.

நெருக்கடிகள் :

- அடிப்படை வசதிகளற்ற நெருக்கடியான வாழ்வு. இரு அறைகள் கொண்ட கிடுகுச்செத்தையையே சுவராக அமைந்த குடிசை.
- உணவுக்கான போராட்டம் - சமைப்பதற்கு விறகோடு போராடுதல், ஊசலரிசிப் பழஞ்சோறும் சூடுகாட்டிய மட்டிச் சதைப் பழங்கறி உணவு.
- தந்தைக்குரிய கடமையை நிறைவேற்ற இயலாத கையறு நிலை.
  "நேர்ந்து, தவமிருந்து, நெய்யால் விளக்கெரித்து, ஆசைக்குப் பெற்று, அருமைக்கு வளர்த்த ஏகபுத்திரி, "அவனைத்தான்..... " என்று ஒற்றைக்காலில் "நாரைத் தவம் புரிகின்ற.........." மகளின் நிலை
- திருமணத்திற்கு வேண்டிய பணத்தைத் திரட்டுவதில் எதிர்கொண்ட நெருக்கடிகள்
- உழைப்பைச் சுரண்டும் தோணியுடையானின் செயற்பாடு

மீளுவதற்கான முயற்சிகள் :

- தோணியுடையான், கரீமிற்கு வழங்கியது நெருப்புக்கு இரையாகும் நிலையிலிருந்த தோணியாக இருந்த போதும், அதனைப் பயன்படுத்தி உழைக்க முயன்றமை.
- "ஆண்டவா! வல்ல பெரிய றகுமானே! ஏழைக்கிரங்கு முகம்பாரு நாயகனே" என இறைவன் துணையிருந்து நல்லவழி காட்டுவான் என்ற நம்பிக்கையைச் சுமந்து கொண்டு வாழ்வை எதிர்கொண்டமை.
- மகனை அழைத்துக்கொண்டு தொழில்புரியச் சென்றமை.
- டைனமைட் பயன்படுத்தி மீன்பிடிப்பது சட்டவிரோதம் என்பதை அறிந்திருந்தும் சூழ்நிலைக் கைதியாக பணத்திற்காகச் செயற்பட முனைந்தமை.
- வெடியினால் கைபோன நிலையிலும் தொழிலில் முனைந்து நின்றமை.
  "ஒரு கைபோனா மத்தக் கையிருக்கு. அவன் நாடினத்தை நம்ம தேடினாத்தான் அக்காவின் கழுத்தில தாலிகட்டிப் பாக்கலாம்"

2. கதாசிரியரின் கதை சொல்லும் திறன் வெளிப்படுமாற்றை விளக்குக.?

- இறைநம்பிக்கையும் தொழிலுறுதியும் உயர்விற்கு வழிசெய்யும் என்ற நம்பிக்கையை உணர்த்தும் வகையில் கதையை உணர்வுபூர்வமாக நகர்த்துகின்றார்.
- இலக்கிய விடயங்களை மையப்படுத்திய குறியீட்டுச் சொற்களின் கையாள்கை : கும்பகர்ணவரம், குசேலகாண்டப்பாராயணம், மார்க்கண்டேயவரம்

- அணி கையாள்கை
  உவமை :
  "முண்டக மொக்காக முருகு தள்ளும் மடந்தையின் நெஞ்சத்து நுங்கு...."
  "அங்குசத்தின் பிரயோகத்தில் அடங்கியிருக்கும் யானையாக....."
  "கொல்லன் பட்டறைப் பிடிச்சிராவியாக ........"
  "ஆடல் அணங்கை ஆலிங்கனிக்கத் துடிக்கும் காதல் நாயகன் போல"
  முதலானவை
  உருவகம் :
  'கலியாணச்சந்தை'
  'நம்பிக்கைப் பல்லவி'
  'கடற்குமாரி'
  'எலிவளையாக இரு அறைகளைக் கொண்ட குடிசை' என்பன

- மொழிநடை :
  உணர்வுச் செறிவுடைய வர்ணனைகள் மிகுந்த சிறியதும், பெரியதுமான வாக்கிய அமைப்பு
  "ஊசி மல்லிகைப்பூவின் வாசனையில், நெருப்புக் குச்சியின் நுனியில் தீயின் நாக்கு பரதம் பயில்கின்றன" - வர்ணனை

- பிறமொழிச்சொற்கள் : டைனமைட், பொலிஸ், றேக்கை, கறுவா, ரகுமான்

- பழந்தமிழ்ச்சொல் - கால் அதர்

3. இச்சிறுகதைக்கு 'ஒளி' என்ற தலைப்பின் பொருத்தப்பாட்டினை விளக்குக.

- வாழ்வில் ஒளியைத் தேடும் குடும்பத்தின் கதையே ஒளி என்ற சிறுகதையாகும்.
- "அந்த வல்ல பெரிய றகுமான் முகம் பார்ப்பான்" என்ற இறை நம்பிக்கையிலான தொடர் இறைவனின் அருளால் ஒளி கிடைக்கும் என்பதைச் சுட்டிக் காட்டுவதனால் இத்தலைப்பு பொருத்தமானது.

- பாலை வெளியாக வெறிச்சோடிக் கிடந்த இல்லறச் சோலையிலே, வசந்தம் வருவித்த ஒரே குத்து விளக்கு ஒளி உமிழ வகையின்றி, மூலையிலே முடங்கிக் கிடக்கிறது. திரிவிட்டு, நெய்வார்த்துத் தீபமேற்றி வைத்தால் தானே குத்துவிளக்கு குல விளக்காக ஒளிதரும் என்ற சித்திரிப்பினூடாக கரீம் வாழ்க்கையில் ஒளியேற்ற முனைவதைக் காணலாம். எனவே இச் சிறுகதைக்கு இத் தலைப்பு பொருத்தமானது.
- கதை இறுதியில் கழுத்தில் அவளின் மனங்கவர்ந்த ஆணழகன் தாலி கட்டுவதான் வதுவைக் காட்சி ஒளி ஊடாகக் கரிமின் மனத்திரையில் நிழலாடுகின்றது. அவனது வலக்கையிலுள்ள வெடியின் திரி எரிந்து வருவதும் மகளுக்கும், மருமகனுக்கும் எடுக்க இருக்கும் மங்கல ஆராத்தியை நினைவூட்டுகின்றன. இந்நேரத்திலேயே இடி இடித்து வள்ளத்தை உலுக்கியதால் வெடி தவறுதலாக வெடித்து அவனது கை துண்டாடப்பட்டு விடுகின்றது. ஒரு கை போன நேரத்திலும் மறுகையின் உதவியுடன் தொடர்ந்தும் மீன்பிடிக்க முயல்கின்றான் கரீம். தனது உயிரையும் துச்சமாக மதித்து அவன் இவ்வாறு செயற்படுவதற்குக் காரணம் தன் மகளின் வாழ்க்கையில் திருமணம் என்ற ஒளியை ஏற்றி வைப்பதற்காகவேயாகும். ஆகவே ஒளி என்ற தலைப்புக்கும் அத்தலைப்பை அடியொற்றி வரும் கதைக்குமிடையே பொருத்தப்பாடு உண்டு.

**4.** இக்கதையின் கருப்பொருள்.

கதைக்கரு – கடற்றொழில் செய்யும் ஒரு சாதாரண மனிதன், தனது குடும்பப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக வேறெந்த உதவியுமற்ற நிலையில் தவறென்று தெரிந்தும் பிழையான நடவடிக்கையில் இறங்குவதையும் அதன் விளைவையும் இக்கதை சித்திரிக்கின்றது.

**5.** 'ஒளி' என்ற சிறுகதையினூடாக ஆசிரியர் கூறமுனையும் முக்கியமான கருத்துக்கள்.

1. ஏழை மீனவக் குடும்பத்தின் வறுமை.
2. வறுமையிலும் சீதனம் கொடுத்து தன் மகளின் திருமணத்தை நடாத்த முற்படுகின்றமை.
3. ஒரு ஏழைத் தகப்பனின் எதிர்பார்ப்புகளும் ஆசைகளும்.
4. வாழ்க்கையில் அடையும் துன்பங்கள்.

**6.** 'ஒளி' என்ற சிறுகதையின் சிறப்பம்சங்கள்.

- ஒரு ஏழை மீனவக் குடும்பத்தின் வறுமைநிலை உணர்ச்சி பூர்வமாகச் சித்திரிக்கப்படல்.
- ஆசிரியரின் கற்பனைத்திறன்.
- வர்ணித்துக் கூறும் பாங்கு.
- பொருத்தமான அணிப்பிரயோகம் உவமையணி, உருவகஅணி.
- மொழி நடை உணர்வு பூர்வமானதாகவும் கவர்ச்சியானதாகவும் விளங்குதல்.
- வினாத்தன்மை வாய்ந்த வாக்கியங்களாகத் தான் கூற வந்த விடயங்களுக்கு அழுத்தம் கொடுத்துள்ளமை.
- சம்பவங்களை விட சம்பவங்களின் அடியாகத் தோன்றும் மனவுணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தமை.

**7.** கதாசிரியரின் மொழிநடைச் சிறப்பு.

மொழிநடை

- இக்கதையின் பெரும்பகுதி ஆசிரியர் கூற்றாகவே காணப்படுகின்றது.
    - ஈரப்பதனின் பளுவால் மெல்லென நீந்தும் சீதக்காற்று.
    - நெருப்புக்குச்சியின் நுனியில் தீயின் நாக்கு பரதம் பயில்கிறது.
    - வாழ்க்கை எனும் கொல்லன் கொப்பரையில் கொழுந்து தள்ளும் வறுமைத் தீயின் பசித்த நாக்குகளுக்கு இரையாகும் குடும்பத்தில் வசந்தம் சிரிக்கும்.

- உவமை அணி தாராளமாகக் கையாளப்பட்டுள்ளது.
  கார்மேகக் கம்பளத்தில் முத்துப்பரல்கள் உருள்வது போல, கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஒரு நீர்த்துளி, பரலை நுங்கு நுரைக் கொந்தளிப்புடன் எழிற்தோற்றம் காட்டுகின்றது.
- உருவகம் கலந்த வர்ணனை காணப்படுகின்றது. (உ-ம்) பாலை வெளியாக வெறிச்சோடிக்கிடந்த இல்லறச் சோலையிலே வசந்தம் வருவித்த ஒரே குத்துவிளக்கு, ஒளி உமிழ வகையின்றி மூலையிலேயே முடங்கிக் கிடக்கின்றது.
- திறன் வாய்ந்த வினாக்களைப் பயன்படுத்தி தான் கூறவந்த விடயங்களுக்கு அழுத்தம் கொடுத்துள்ளார். (உ- ம்) விளக்குத் துண்டுகோல் பெண்ணுக்கு? மாப்பிள்ளை என்ன குப்பையில் கீரையா? கரீமைப் போன்றவர்கள் இலகுவில் பெற்றுவிட.
- சம்பவங்களைவிட சம்பவங்களின் அடியாகத் தோன்றும் மனவுணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்

  வெடி வெடித்து ஒரு கையை இழந்த தன் மகளின் திருமணத்தை நடத்திப் பார்க்க வேண்டும் என்ற கரீமின் சிந்தனையோட்டங்கள் கதையின் இறுதியில் முக்கியத்துவம் பெறுவதைக் காணலாம்.

4. ''அந்த வல்ல பெரிய றகுமான் முகம் பார்ப்பான்'' என்ற வாக்கியம் பல தடவைகள் இடம் பெற்றமைக்கான காரணங்கள் யாவை எனக் கருதுகிறீர்?

- இறை நம்பிக்கை.
- தான் தனது மார்க்கத்திற்கு முரணான வேலையைச் செய்த போதும், தான் இறைநம்பிக்கை உள்ளவன் என்பதனை வலியுறுத்திக் கொள்வதற்காகவும் இவ் வாக்கியம் பல தடவைகள் இடம்பெற்றுள்ளன.

## 4. தாய்.

01. தாய் சிறுகதையினூடாக வெளிப்படுத்தப்படும் தாயின் மன உணர்வுகளை விளக்குக.

- தாய்மையின் பண்புகளையும் ஆசாபாசாங்களையும் விருப்பு வெறுப்புக்களையும் நம்பிக்கை, அவநம்பிக்கைகளையும் நன்கு புலப்படுத்துகின்றது. மல்லிகைத்தீவை தாய் அறிமுகம் செய்யும் போது அவளது பெருமித உணர்வு வெளிக்காட்டப்படுகிறது.
- ''அவர் போன பிறகு நான் பட்ட துயரத்தைச் சொல்லவோ? ... '' என்று சொல்லத் தொடங்கும் போது அவளது துயரம் கதை எங்கும் வியாபித்து நிற்கிறது.
- நெல்லைக் குத்தி, மா இடிச்சு, வெள்ளாம வெட்டும் காலத்தில் அப்பம் சுட்டு சம்பாதித்து தன் பிள்ளைகளைக் காப்பாற்றினாள். இதன் மூலம் அவளது தன்னம்பிக்கை விரிகின்றது.
- '' ரெண்டு வருசத்தில் என்ர மகள் வாத்தியாராக வந்திடுவா. அதற்குப் பிறகு எனக்கு என்ன குறை? காலுக்கு மேல் கால் போட்டுக் கொண்டு சாப்பிடுவேன் '' என்ற பெருமிதமும் எதிர்பார்ப்பும் கொள்கின்றாள். மகளின் படிப்புக்கு தன்னைப் பிழிந்து, மாதம் நாற்பது ரூபா அனுப்பும் தாயின் வீரம் அது, பட்ட துயரை மறைக்கின்றது. ''கூலிக்கு கொத்தி, கோழி வளர்த்து, அப்பஞ்சுட்டு வித்த......'' என்ற அவள் பட்ட கஷ்டங்கள் விரிகின்றன.
- மகளின் பிரியாவிடைக்கு பணத்துக்காக தாய் வட்டிக்குக் கடன் படுகின்றாள். மோதிரத்தை விற்கின்றாள். பணத்துடன் மகளைச் சந்திக்கச் செல்லும் தாய்மனம் ''பெத்த மனம் பித்தாய் நிற்பதும் பிள்ளை மனம் கல்லாய் விடுவதும்'' உணர்ச்சியின் முழு மொத்த அவலத்தைக் காட்டுகின்றது.
- ''எங்கம்மா இந்த வேலைக்காரியிடம் காசைக் கொடுத்து அனுப்பியிருக்கா '' என்று தாய்க்கு ''வேலைக்காரி''ப் பட்டம் சூட்டப்பட்ட போது, தாய் அடைந்த வேதனையை ஆசிரியர், ''எனக்குப் பூமி பிளந்து என்னை விழுக்கினாப் போல இருக்கு'' என்று வெளிப்படுத்துகின்றார்.
- ''சொல்லுடா எனக்குப் பைத்தியமாடா'' என தாய் கேட்பது, தாய்மை உணர்வுக்காக அவள் பட்ட கஷ்டங்கள், படாதபாடுகள், வேர்வை சிந்திப் போராடியமை எல்லாமே போலி உறவில் கேலிக்குரியதாகின்றது.

02. தாயின் எதிர்பார்ப்புக்களும் ஏமாற்றங்களும் ஆசிரியரால் வெளிக்காட்டப்படுமாற்றை விளக்குக?

- ''தாய்'' எனும் சிறுகதை தாய் ஒருத்தியின் மன உணர்வுகளைச் செம்மையாக வெளிப்படுத்தி நிற்கின்றது. தாயின் எதிர்பார்ப்புகள் சுக்கு நூறாக உடைந்து சிதறுவதை ஆசிரியர் காட்டியுள்ளார்.
- தன் மகளை எவ்வளவு கஷ்டப்பட்டாவது படிப்பிக்க வேண்டு மென்ற எதிர்பார்ப்புடையவளாக காட்டப்படுகின்றாள். ''என்ர சதுரத்தைச் சாறாப் புழிஞ் சென்றாலும் நான் அனுப்புவன். நீ கவலைப்படாமக் கவனமாகப் படி புள்ளே.''
- பாடசாலை பிரியாவிடை வைபவத்துக்கு அறாவட்டி வாங்கிக், காதுத் தோட்டைவிற்று, காசைக் கொடுத்தல்.
- மகள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவானதும் தன்னுடைய எதிர்காலம் பற்றி யோசித்து சந்தோசமடைகின்றாள்.
- தன் மகளிடம் பணத்தைக் கொடுத்ததன் பின்னர் தன்னுடைய நண்பியிடம் கூறிய கூற்று ''எங்கம்மா இந்த வேலைக்காரியிடம் காசைக் கொடுத்து அனுப்பியிருக்கா'' தாயின் ஏமாற்றத்தை ஆசிரியர் ''எனக்குப் பூமி பிளந்து என்னை விழுக்கினாப் போல இருக்கு'' என்று கூறுகின்றார்.
- ''என்னை பைத்தியம் என்று ஊருக்கு சொல்லுறாங்க மகனே'' என்று கூறுவது ஏமாற்றத்தின் உச்சக்கட்டமான நிலையாகும்.

03. இச் சிறுகதையில் கிராமிய மண்வாசனை இழையோடி உள்ளது. ஆதாரங்களுடன் விளக்குக.

- பிரதேசப் பண்புகளைத் தன் கதைகளில் வெளிப்படுத்தும் இராசரத்தினம் ''தாய்'' கதையிலும் மண் வாசனையை வீசச் செய்கின்றார்.
- மல்லிகைத் தீவு கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் தாய்மை உணர்வுகள் இக்கதையில் பேசு பொருளாய் திகழ்கின்றது.
- மல்லிகைத் தீவின் பாதை, சேறும் சகதியுமாய் திகழ்கின்றது. ''இன்னமும் நல்லா ரோட்டுப் போடல. கோட கொண்டல் காலத்தில.........எங்க ஊர் மண் நல்ல பசையுள்ள மண்'' என்ற மண்ணின் இயல்பைப் பேசுவதோடு மண் வானை தொடர்கிறது.
- மல்லிகைத்தீவு மக்கள் வயல் காணி அற்றவர்கள். வேறு ஆட்களின் வயலைக் குத்தகைக்கு எடுத்து கமம் செய்வார்கள் என்பது '' இந்த வயல்களுக்கு எல்லாம் சொந்தக்காரர்கள் திருக்கோணமலையிலும், கிண்ணியாவிலையும், மூதூரிலையுந்தான் இருக்காங்க'' என்று கூறுவதிலிருந்து அறிய முடிகின்றது.
- ''கார்த்திகை மாதத்தில் அடைமழை காரணமாக கையில் காசு இருக்காது. தொழிலும் இருக்காது. எல்லோரும் கடன்படும் பஞ்சகாலம் இது'' என்று பருவகால மாற்றங்களுக்கேற்ப இடம் பெறும் நிகழ்வுகள் கூறப்படுகின்றன.
- '' வெள்ளாம வெட்டுக் காலத்தில் ஊருக்கு வந்தியெண்டால் தண்ணி குடிச்சிக்க மாட்டா. ஏனென்டா எல்லாக் கிணத்தடியிலும் மணச்சவுக்காரத்தை மேலில தேய்ச்சித் தேய்ச்சிக் குளிக்கிறதால் கிணத்துத் தண்ணியெல்லாம் சவுக்கார மணமாகத்தான் இருக்கும்.''
- தொழில்கள் கூறப்படுகின்றன. கூலிக்குக் குத்தி, கோழி வளர்த்து, அப்பஞ் சுட்டு வித்தல்.
- உணவு முறை - ''பானையான் மீன் வாங்கி, அதில சிலதை பொரிச்சு குழம்பு ஆக்கி, கட்டிப்போனன்''

04. இச் சிறுகதை ஆசிரியரின் மொழி நடைச்சிறப்பினை விளக்குக?

- தாய் எனும் சிறுகதையில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழி, சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியது. கதைக் களத்துக்கேற்ற பிரதேச மொழிநடை, பாத்திரத்தின் வயது நிலைக்கேற்ப கையாளப்பட்டுள்ளது.
- சிறப்பான தொடர்களும், சொற்களும் இதற்குச் சான்றாக உள்ளன.
  கேட்டிச்சுப் போயிருக்கும், கசியத் தொடங்கிடும், குழைஞ்சி போயிடும் போன்ற தொடர்கள் குறிப்பிடத்தக்கவை.

- ஆசிரியர் 'கிளீன்', 'றெயினிங்', 'சூட்கேஸ்', 'எலவன்ஸ்', 'வஸ்', 'ரவுண்' போன்ற ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தும் தாய்ப் பாத்திரத்தின் பேச்சு மொழியில் பிறமொழிச் செல்வாக்கு இணைந்திருக்கும்.
- பிரதேசச் சொற்களாகக் 'கம்புக்குச்சி', 'அவணம்', 'மணச்சவுக்காரம்', 'ஆயம்', 'வெள்ளாமை', 'சதுரம்' போன்றவற்றையும், பிறமொழிச் சொற்களாக 'ஆஸ்பத்திரி', 'விறாந்தை', 'வாங்கு', முதலியன உரையாடல் நடுவே பயன்படுத்தப்பட்டுள்ளன.
- கதை நகர்விலும், கதாபாத்திரத்தின் குணவியல்புகளிலும் பேச்சுத்தமிழ் முக்கிய பங்களிப்பைச் செய்துள்ளது. ''என்னடா தம்பி.........சுரிக்குள்ள மாட்டிக் கொண்டியா'' என்று தொடங்கி ''என்ர சாதி சனம் ஈச்சிலம்பத்தையிலையும் இருக்கு. பேச்சு வந்தோடன் நானும் போகப்போறன் அங்க'' என முடியும் வரையுள்ள பகுதிகளில் மொழியின் வாசனையை நுகரலாம்.
- தாய் என்ற பாத்திரம் தனிநிலை உரையாடல் மூலம் கதை கூறும் பாத்திரமாக இருப்பதால் அப்பண்புக்கேற்ற மொழிநடையை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.
- ''இவளிட்டையும் வயல் காணி சொந்தமாக இல்லையெண்டல்லோ சொன்னேன்'' என்று அறிமுகமில்லாத இருவர் சந்திக்கும் போது, முதுமை நிலையிலுள்ளவர் தனது பேச்சு மொழியாற்றல் மூலம் தொர்பாடல் செய்கின்ற பழைய முறைமையை, இக்கதை நன்கு பதிவு செய்துள்ளது. ''ஆமடா உன்னைப் பார்த்தா, உன்ர உடுப்பைப் பார்த்தா வாத்தியார் போலத் தான் கிடக்கு. எங்க ஊருக்கு புதுசா வந்திருக்கியோ?''
- கதை சிறியதாக இருப்பினும் கையாண்டுள்ள மொழிநடை மூலம் உயிரோட்டம் பெறுகின்றது. ஆசிரியர் மொழியை மிகக் கவனமாகக் கையாண்டு தனது படைப்பாற்றலைப் பக்குவமாக வெளிப்படுத்தியுள்ளார்.

05. ''பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு'' என்னும் முதுமொழி இச்சிறுகதைக்குப் பொருந்துமா என ஆராய்க.

- ''பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு'' என்னும் முதுமொழி இச் சிறுகதைக்கு மிகவும் பொருத்தமானதே.
- தந்தை இறந்ததிலிருந்து, எஸ்.எஸ்.சி.பாஸ்பண்ணிட்டு மகள் வீட்டோடை வந்து இருந்ததிலிருந்து நெல்லைக்குத்தி, மாவை இடிச்சி தன் பிள்ளைகளைப் காப்பாத்தினேன் என்று தாய் கூறுவதிலிருந்து, பிள்ளைகளுக்காக அவள் பட்ட துன்பம் தெரிகின்றது.
- மகளுக்கு றெயினிங் பள்ளிக்கு முடிவு வந்ததிலிருந்து தாய் அசந்து போகாது, கையிலை கிடந்த காப்பு ஜோடியை வித்துத் தேவையானவற்றை வாங்கிக் கொடுக்கிறாள்.
- றெயினிங் ஸ்கூலிலிருந்து மகள் செலவுக்கு காசு போதாது மேலதிகமாக நாற்பது ரூபா வேணும் என்று கடிதம் எழுதிய போது '' நான் என் சதுரத்தைச் சாறாகப் புளிஞ் சென்றாலும் நான் உனக்குப் பணம் அனுப்புவன். நீ கவலைப்படாமற் படிபுள்ளே '' என அத்தாய் பதில் எழுதுகின்றாள்.
- இரண்டு வருசம் முடியும் போது, ''பிரியாவிடைக்கு உடுக்க சேலை வாங்க நூறு ரூபா வேணும்'' என்ற போது, அறாவட்டிக்கு கடன்பட்டும் காதுத் தோட்டை விற்றும் காசைப்புரட்டி, அதை அனுப்பாமல் தானே கொண்டு போய்க் கொடுக்க நினைத்துக் கொண்டு செல்லும் போது, சாப்பாடும் கட்டி மீனும் பொரிச்சுக் கொண்டு மனதில் நிறைந்த ஆசையோடு மகளின் றெயினிங் ஸ்கூலுக்குச் சென்று அவளைக் காணுவதற்காக காத்திருந்த போது, வந்த மகளோ சற்றேனும் சிரிக்காது வந்த உடனேயே காசையும் சாப்பாட்டையும் வாங்கிக் கொண்டு '' எங்க அம்மா இந்த வேலைக்காரியிட்ட கொடுத்தனுப்பியிருக்கிறா '' எனச் சற்றேனும் கூசாது தனது நண்பியிடம் மகள் கூறிக் கொண்டு செல்வதைத் தாய் கேட்டு அதிர்ந்து போனாள். மனம் உடைந்து போனாள். இத் தகவல்களை வைத்து நோக்கும் போது ''பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு'' என்னும் முதுமொழி பொருத்தமானதே என்பது தெளிவாகிறது.

## 5. யுகசந்தி.

01. பழைய யுகத்திலிருந்து புதிய யுகத்திற்கான மாற்றமாக யுகசந்தி சிறுகதை அமைந்துள்ளது என்பதனை விளக்குக.

- பழைய யுகமும் புதிய யுகமும் சந்திப்பதாகவே இக்கதை அமைந்துள்ளது. பழைய யுகத்தின் அடையாளமாக கௌரிப்பாட்டி திகழ்கின்றாள். புதிய யுகத்தின் அடையாளமாக கீதா விளங்குகின்றாள். கௌரிப்பாட்டி என்ற பாத்திரத்தை ஆசிரியர் அறிமுகம் செய்யும் அதேவேளை கீதா என்னும் பாத்திரத்தினையும் இணைத்து பழைமையையும் புதுமையையும் இணைத்துச் சுட்டிக் காட்டுகின்றார்.
- மரபுகள் சம்பிரதாயங்கள் நிறைந்த தமிழ்நாட்டுச் சூழலில் வாழ்ந்த மக்களின் வாழ்வியலைக் களமாகக் கொண்டு அமைந்த இக் கதை, பழைமையைப் போற்றும் அதேவேளை, புதுமைகளை ஏற்று நடக்கின்ற சமுதாயமாக மாறுவதாகக் காட்டப்படுகின்றது.
- மரபிலிருந்து விடுபட முடியாதுள்ள கணேசையர் கௌரிப்பாட்டியினூடாக அதனை ஏற்றுக் கொள்கின்ற நிலைமைகள், பழைய யுகத்திலிருந்து புதிய யுகத்திற்கான மாற்றமாக அமைந்துள்ளதைக் காணலாம்.

02. பழைய யுகத்திற்கும் புதிய யுகத்திற்குமான இணைப்புப் பாலமாக கௌரிப்பாட்டி விளங்குகின்றாள் ஆராய்க.

- யுகசந்தி சிறுகதை பழைய யுகத்திற்கும் புதிய யுகத்திற்குமான இணைப்புப்பாலமாகக் கதையில் வரும் கௌரிப்பாட்டியே விளங்குவதைக் காணலாம்.
- கணவனை இழந்த கௌரிப்பாட்டி மொட்டை வழித்து, கைம்மை நோன்பு நோற்றுப் பழைய மரபுகள் சம்பிரதாயங்களுக்கேற்ப வாழ்கின்றாள்.
- தனது பேத்தியாகிய கீதாவும் கணவனை இழந்தவளாக வரும் போது, கீதாவிற்கு அருகிலிருந்து ஏற்ற துணையாக வாழும் கௌரிப்பாட்டி கீதா மறுமணம் செய்யப்போவதாக எடுத்த முடிவை ஆதரிக்கிறாள்.
- கணேசையர் கீதாவின் முடிவை எதிர்த்து அவளை வெறுத்த போது, கணேசையரின் சிந்தனையைத் தூண்டிக் கீதாவின் முடிவை சரியென நியாயப்படுத்துபவளாக கௌரிப்பாட்டி விளங்குகின்றாள்.
- இந்த வகையில் மொட்டை வழித்து, கைம்மை நோன்பு நோற்று மரபுவழி வாழ்ந்த யுகதோற்றமான கௌரிப்பாட்டி கீதாவின் மறுமணத்தை ஆதரித்து, புதிய யுகத்தையும் இணைக்கும் இணைப்புப் பாலமாக விளங்குகின்றாள் எனலாம்.

03. யுகசந்தி சிறுகதையின் பிரதான கருவாக அமைவது எது?

யுகசந்தி சிறுகதையின் பிரதான கருவாக அமைவது, கண்மூடித்தனமான பழைய சம்பிரதாயங்களுக்கும் மூடநம்பிக்கைகளுக்கும் கட்டுப்பட்டு வாழ்ந்த இந்திய உயர் சமூகம், அத்தகைய கட்டுப்பாடுகளினின்றும் விடுபடத் தொடங்குவதை ஒரு பிராமணக் குடும்பத்தை அடிப்டையாகக் கொண்டு உணர்த்த முற்படுவதாக அமைந்துள்ளது.

04. கணேசையர், கௌரிப்பாட்டி, கீதா ஆகிய பாத்திரங்களின் குணவியல்புகளைத் தருக.

**கணேசையர்**

- இவர் கௌரிப்பாட்டியின் மகன். தந்தையின் இழப்பையும் அதனால் விழைந்த சோகத்தையும் உணராதவர்.
- அம்மாப்பிள்ளையாக அம்மா சொற்படி நடப்பவராக தாயின் மீது அதிகம் மரியாதை கொண்டவராக விளங்குகின்றார்.

**கௌரிப்பாட்டி.**

- எழுபது வயது நிரம்பப் பெற்றவள்.
- இளம் வயதிலேயே கணவனை இழந்தவள்.
- பழமையைப் பேணி வாழ்பவள். கைம்மை நோன்பை மேற்கொள்பவள். அதன் துன்ப துயரங்களை அனுபவித்து வருபவள்.
- புதிய யுகத்திற்கான மாற்றத்தை வரவேற்பவள். புதிய சிந்தனையைக் கொண்டவள்.
- தனது மாற்றத்தைச் செயலிலும் காட்டுபவள்.

இவ்வாறாக கௌரிப்பாட்டி விளங்குகின்றாள்.

**கீதா.**

- இவள் கணேசையரின் மகள். கௌரிப்பாட்டியின் பேத்தி.
- கணவனை இழந்தும் கௌரிப்பாட்டி போல மொட்டை வழிக்காது, தனது உயர்விற்காகப் படித்த பெண்.
- புதிய யுகத்திற்கான பிரதிநிதி. தான் எடுத்த முடிவிலே நிதானமானவள். மறுமணத்திற்கான முடிவெடுத்துக் கொண்ட பெண்.
- வேலை செய்பவள். பழைய நம்பிக்கைகள் மூடநம்பிக்கைகளை விரும்பாதவள்.
- தாய், தந்தை, பாட்டி. மீது அன்பு கொண்டவள். சுயநலம் கொண்டவள்.

இவ்வாறாக கீதா விளங்குகின்றாள்.

**05.** கீதாவின் கடிதத்தை வாசித்த கௌரிப் பாட்டியின் மனநிலை எவ்வாறு புலப்படுத்தப்படுகிறது?

கடிதத்தை வாசித்த கௌரிப்பாட்டியின் மனநிலையை நோக்கும் போது, தரையிலே விழுந்த கடிதத்தை என்ன விபரீதம் என்று எடுத்து வெளிச்சத்தில் படித்து விபரத்தை அறிந்தவள். “என்னடா இப்படி ஆயிட்டுதே ” என்பதைத் தவிர வேறென்றும் சொல்லவோ செய்யவோ சக்தி இழந்தவளாய் ஏக்கம் பிடித்து நின்றாள். கையையும் மனதையும் நெரித்துக் கொண்டு தவியாய்த் தவித்தாள். திகைப்டைந்து கண்களில் நீர் சொரிய, வயோதிப நெஞ்சு பாரத்தால் துடித்தாள். மௌனித்துப் போனாள். புத்தியுடன் கடிதத்தை மீண்டும் படித்தாள். மனதை வைராக்கியமாக்கி கீதாவின் பக்க நியாயங்களை ஏற்கத்துணிந்தாள். கணேசையரின் மனம் திகைக்கும் படி கீதாவின் முடிவை நியாயமானது என எடுத்துரைத்தாள். கீதாவின் முடிவை ஏற்று அவளோடு தானும் போவதாகக் கூறுகின்றாள். இவ்வாறாக கீதாவின் கடிதத்தைக் கண்ட கௌரிப்பாட்டியின் மனநிலை புலப்படுத்தப்படுகிறது.

**06.** ‘யுகசந்தி’ என்னும் தலைப்பு இக்கதைக்கு பொருந்துமாற்றினை விபரிக்குக.

‘யுகசந்தி’ என்னும் தலைப்பு இக்கதைக்கு மிகவும் பொருத்தமானதே. பழைய யுகம் புதிய யுகம் ஆகிய இரு யுகங்களை இணைப்பதாக கதை அமைவதால் ‘யுகசந்தி’ என்னும் தலைப்பு இக்கதைக்குப் பொருத்தமானதாகவே அமைந்துள்ளது.

**07.** இச் சிறுகதையில் ஆசிரியரின் மொழிநடைச் சிறப்பினைத் தருக.

- பாத்திரங்களின் சமூக நிலையைப் புரிந்து கொண்டு அப்பாத்திரங்களின் உரையாடலை அமைக்கும் சாமர்த்தியம் சிறப்பிற்குரியது.
- பாத்திரங்களுக்கேற்ப உரையாடல்களை ஏற்படுத்தல்.
- பிரதேசவழக்குச் சொற்களைக் கையாளுதல். வடமொழிச் சொற்களைக் கையாளுதல்.
- பொருத்தமான உவமைகளைக் கையாளுதல்
- கதைக் கருவிற்கேற்ப அழுத்தமான கருத்துக்களை முன்வைத்தல்.
- வர்ணனைப்பாங்குடன் கதையை நகர்த்துதல்.
- ஆங்கில மொழிச் சொற்களைப் பயன்படுத்துதல்.
- உருவக அணிகளை கையாளுதல். உ-ம் :- வாழ்க்கை நெருப்பு. வைதவ்யம் கொடும் தீ
- பிராமணக் கிளை மொழிகளைக் கையாளுதல்.

## நாவல்.

### 1. நீண்ட பயணம்.

**I** ‘நீண்ட பயணம்’ நாவலை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

1. தாழ்த்தப்பட்ட மக்களின் அவலம்.
2. உயர் சாதியினரின் இழிவான நடத்தைகள்.
3. மாதவன் - செல்லத்துரையன் ஆகியோரின் இணைவு கதை வளர்ச்சியில் ஏற்படுத்தும் தாக்கம்.
4. நீண்ட பயணம் நாவலினூடு புலப்படும் விடயங்கள்..

**1. தாழ்த்தப்பட்ட மக்களின் அவலம்**

- கிராமத்துப் பாடசாலைகளில் கல்வி பெற முடியாத நிலை.
- விரும்பியவாறு பெயர்வைத்துக் கொள்ள முடியாத நிலை.
- ஆடை, ஆபரணங்கள் அணிதல், போக்குவரத்தில் ஈடுபடல், கடைகளில் உணவு உண்ணல் என்பவற்றைத் தாம் விரும்பியவாறு செய்யமுடியாத நிலை.
- கோயில்களில் சுதந்திரமாக வழிபாடு செய்ய முடியாத நிலை.
- நீதி பெற முடியாத நிலை.
    - நல்லான் இறந்தமை தொடர்பான வழக்கு.
    - பூமணியைக் காதலித்த மாணிக்கனை அவளது தாயும் அயற் பெண்களும் கொன்றபோதும், சாட்சிகளின்மையால் வழக்குத் தள்ளுபடியானமை.
- குடியிருக்கும் நிலம், தோட்டம், கிணறு என்பன உயர் சாதியினருக்குச் சொந்தம் என்பதால் உயர் சாதியினரின் விருப்பப்படி வாழ வேண்டிய நிலை.
- மதம் மாறிய பின்பும் சாதிசார் அடக்கு முறைகளுக்கு உள்ளாதல்.

**2. உயர் சாதியினரின் இழிவான நடத்தைகள்.**

- சமூக சமத்துவம் பேணாது செயற்படல்.
- திருட்டுத் தனமாகச் சாராயம் காய்ச்சும் தொழிலில் பெண்கள் ஈடுபடல்.
- கிலுட்டுத் தாலிக் கொடியைக் கட்டி ஏமாற்றுதல்.
- தவறான உறவு நிலைகள்.
- புனிதமான நாட்களிலும் தமது காரியத்தைச் சாதிக்க இறைச்சி, சாராயம் என்பவற்றைப் பொலிசாருக்கு வழங்குதல்.
- பெண்களே ஒருவனை அடித்துக் கொலை செய்தல்.
- தேர்தல் ஒன்றிற்குக் குறுக்கு வழிகளைக் கையாளுதல்.

**3. மாதவன் - செல்லத்துரையன் ஆகியோருக்கிடையிலான தொடர்பு கதை வளர்ச்சியில் ஏற்படுத்தும் தாக்கம்.**

- இருவரும் நண்பர்கள் - கதைத் தொடர்ச்சியில் இவர்களின் நெருக்கமான அன்பு புலப்படல்.
- மாதவனின் செயல்கள், சிந்தனைகள் என்பன செல்லத்துரையைக் கவர்தலும், மாதவன் மீது அவனுக்குத் தனி மதிப்பு ஏற்படுதலும்.
- செல்லத்துரையன் உணர்ச்சிவசப்படும் சந்தர்ப்பங்களில் அவனுக்கு அறிவுரை கூறி ஆற்றுப்படுத்துபவன் மாதவன். அதன் மூலம் கதை வளர்ச்சி திட்டமிட்ட முறையில் செல்கிறது.
- சமூக விடுதலைப் போராளியான செல்லத்துரையனை மாதவன் நெறிப்படுத்துவது கதை வளர்ச்சியை நெறிப்படுத்துவதாக அமைதல்.
- செல்லத்துரையன் கிராம சங்கத் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தக்க காரணங்களைக் கூறி அவனைப் போட்டியிடச் செய்தவன் மாதவன்.

- முதலாவது கிராம சங்கத் தேர்தலில் தோல்வியடைந்த போதிலும் மறுமுறை ஐந்து ஆசனங்களில் இரண்டினைப் பெற்றுக் கொடுப்பதற்காகச் செல்லத்துரையனுடன் சேர்ந்து உழைத்தவன்.
- தேர்தலில் வெற்றி பெறுவதற்காகக் குறுக்கு வழிகளைக் கையாள முயன்றவர்களின் திட்டங்களை நடைபெறவிடாது தடுத்தவன் மாதவன்.
- இருவருக்குமிடையிலான தொடர்பு, அச்சமூகத்தினரின் ஒற்றுமையை வளர்ப்பதோடு, அச்சமூகத்தினர் தலை நிமிர்ந்து நடக்கவும் காரணமாகியது.

**4.** நீண்ட பயணம் நாவலினூடு புலப்படும் விடயங்கள்.

**அ.** இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணச் சமூக அமைப்பில் தாழ்த்தப்பட்டவர்களின் நிலை.

- ஆலய வழிபாட்டில் சமவுரிமை மறுப்பு.
- மதமாற்றமும் தீண்டாமையும்.
- குடிமை முறை.
- உழைப்பிற்கேற்ற ஊதியம் இன்மை.
- கல்வி கற்கத் தடை.
- ஆடை அணிவதில் கட்டுப்பாடு.
- விருப்பமான பெயர்கள் வைக்கத் தடை.
- கிணறுகளில் தண்ணீர் அள்ளத் தடை.
- தேநீர்க்கடைகளில் சமவுரிமை மறுப்பு.
- சாதிக்குள் சாதி பார்க்கும் வழக்கம்.

**ஆ.** யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலின் அம்சங்களை விளக்குக.

- சாதி வேறுபாடு.
- உணவு, உடை, பழக்கவழக்கங்கள்.
  - நாளாந்த உணவு நடைமுறைகள் பற்றிய செய்திகள் இந்நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
  - தாழ்ந்த சாதிப் பெண்களைப் பொறுத்தவரை உடை அணிவதில் ஓரளவு மாற்றம் ஏற்பட்டிருந்தது.
- வாழிடங்கள்.
- திருமண நடைமுறைகள்.
- அடக்கு முறைகள்.
- தொழில்கள்
- வழிபாட்டு முறைகள்.
- பொருளாதார அம்சங்கள்.

**II.** நீண்ட பயணம் நாவலை அடிப்படையாகக் கொண்டு…

**அ.** தாழ்த்தப்பட்ட மக்கள் அரசியலை ஆயுதமாகப் பயன்படுத்தும் செயற்பாடு.

- தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் அறியாமையை எப்படியாவது தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு தேர்தலில் வெற்றி பெறத் துடிக்கும் உயர் வகுப்பினரின் கபடத்தனத்தைத் தோலுரித்துக் காட்டவேண்டும் என்ற நிலை.
- சமூக விடுதலைப் போராட்டம் என்பது நீண்ட பயணம். அதில் வெற்றி உள்ளூர் அரசியலில் வெற்றி பெறக் கிடைக்கும் வாய்ப்பு.
- குரும்பையூரில் வாழ்ந்த தாழ்த்தப்பட்டோர் உள்ளூர் அரசியலில் கிடைத்த வாய்ப்பைச் சரியான முறையில் பயன்படுத்தி வெற்றி பெறல்.
- தாழ்த்தப்பட்ட மக்களின் ஒற்றுமை அரசியல் வெற்றிக்கு வழிவகுத்தல் - ஒற்றுமையின் அடிப்படையிலான அரசியல் வெற்றி சமூக விடுதலைக்கு வழிவகுத்தல்.

- முதலாவது தேர்தலில் தோற்ற போதும், இரண்டாவது தடவையும் தேர்தலில் நிற்றல் என்பது, அரசியல் ஆயுதத்தின் முக்கியத்துவத்தை அவர்கள் உணர்ந்தமையைக் காட்டுகிறது.
- அரசியல் வெற்றி சமூக விடுதலையைப் பெறும் வழியின் மைல்கல். அரசியலின் முக்கியத்துவம் தெரிந்த மாதவன் கூற்று வருமாறு.

  "இது ஒரு சிறு வெற்றிதான். இந்தக்களிப்பில் எங்களின் நீண்ட பயணத்தை மறக்கக்கூடாது. நாங்கள் இனிமேல்தான் விழிப்போடு போராட வேண்டும்."
- அரசியல் வெற்றியால், 'பள்ளர், பறையர், தாழ்ந்த சாதியல்ல. இனிமேல் தலைநிமிர்ந்து நடக்கலாம்' என்று கூறுதல்.
- அரசியலில் மாற்றம் காரணமாக நிலவுடமைச் சமூகத்தின் ஆதிக்கம் குறைவடைவதாக ஆசிரியர் கருதுதல்.
- அரசியல் மாற்றத்தால் ஆலயக் கதவுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்துவிடப்படும் என நம்புதல்.

**ஆ.** செல்லத்துரையன் தேர்தலில் இரண்டாவது முறையாகப் போட்டியிட்டபோது, இடம்பெற்ற தேர்தல் ஏற்பாடுகள்.

- மேற்கு வட்டாரத்தில் செல்லத்துரையனும் இராசையாவும் போட்டியிடல். தெற்கு வட்டாரத்தில் சிதம்பரப்பிள்ளை ஆசிரியரும், சின்னராசாவும், மாணிக்கனும் போட்டியிடல்.
- தெற்கு வட்டாரத்தில் போட்டியிட்ட சிதம்பரப்பிள்ளை ஆசிரியரும் சின்னராசாவும் மாணிக்கன் வெற்றி பெறலாம் என உறுதியோடு இருந்தனர்.
- கிழக்கில் அந்தோனியோடு இரு வேளாளர்கள் போட்டியிட்டனர்.
- பள்ளர்கள் வோட்டை மட்டும் கொண்டு பள்ளர்கள் வெற்றி பெற முடியாது எனப் போட்டியிட்ட வேட்பாளர்கள் தட்டிக் கழிக்கும் நிலைமை.
- செம்பாட்டு மக்களை விதானையார் அச்சுறுத்த, மாணிக்கன் செல்லத்துரையன் ஆகியோர் மாதவனிடம் சொல்ல, மாதவன் உடனடி நடவடிக்கை எடுக்கும் நிலை.
- அரசாங்க அதிபர், பொலிஸ் அதிகாரிகளின் எச்சரிக்கை வந்ததால் விதானையார் அமைதியாதல்.
- இராசையாவிடம் அதிக பணம் இல்லாததால் தனது ஆதரவாளர்களுடன் வீடுகளுக்குச் சென்று பறையர்களைப் பள்ளர்களுக்கு எதிராகத் தூண்டிவிட முனைந்த போதும் அது பயனளிக்காமை.
- தேர்தல் அன்று, இராசையா பள்ளர், பறையர் பகுதிகளுக்குக் கார்களை அனுப்ப அவர்கள் கார்களில் ஏற மறுக்கும் நிலை.
- சின்னராசா கடைசி நாட்களில் பள்ளர்களுக்குச் சாராயம் கொடுக்க ஏற்பாடு செய்த போது, மாதவன் மதுபரிபாலனப் பகுதிச் சுப்பிரண்டனுக்கு அறிவித்ததால், இராசையாவும் சின்னராசாவும் இச் செயற்பாட்டைக் கைவிட்ட நிலை.
- கிழக்குப் பக்கத்தில் எல்லோரும் ஒரே மதத்தவர் என்ற காரணத்தால் அந்தோனிக்கு வாக்களிப்பர் என அதிக கவனம் செலுத்தப்பட்டமை.
- சின்னராசா பணம் கொடுத்து வாக்கு வாங்க முயலல்.
- செம்பாட்டுப் பகுதியில் செல்லத்துரையன் மாலைவரை நின்று மக்களை வாக்களிக்க அனுப்பிக் கொண்டிருத்தல்.

**இ.** நாவலாசிரியரின் மொழி நடைச் சிறப்பினை விளக்குக.

- எல்லோரும் விளங்கிக் கொள்ளும் வகையிலான மொழிக் கையாட்சி.
- யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழைச் சிறப்பாகக் கையாண்டமை.
- ஆசிரியர் கூற்றாக வரும் இடங்களில் எளிமையான வாக்கியங்களைக் கையாண்டமை.
- வர்ணனைச் சித்திரிப்பு யதார்த்த பூர்வமாக இருத்தல்.
- மரபுத் தொடர்கள், பழமொழிகள் மற்றும் பிரதேசப் பண்பாடுகள், பேச்சு வழக்குகள் முதலியன கையாளப்பட்டமை மொழிச்சிறப்பைக் காட்டுகின்றன.

## கட்டுரைகள்.

### விஞ்ஞானமும் அகராதியும்

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் 'விஞ்ஞானமும் அகராதியும்' எனும் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக

**1.** மேனாட்டவர் வருகையினால் தமிழ் இலக்கியம் பெற்ற வளர்ச்சிகள்.

- முதன்முதலில் விஞ்ஞானத் துறையில் யாழ்ப்பாணத்திலேயே நூல் எழுதப்பட்டது. வட்டுக்கோட்டையில் உள்ள மிஷனரிமாரின் உதவியால் விஞ்ஞான நூல்களை மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டன.
- சாமுவேல் டி கிறீன் என்பவர் மொழிபெயர்ப்புச் செய்ததோடு, தான் கற்பித்த மாணவரையும் இப்பணி செய்யத் தூண்டினார்.
- அகராதி நூல் ஒன்று ஆக்கப்பட்டது. யாழ்ப்பாண அகராதி அதாவது மானிப்பாய் அகராதி என அழைக்கப்பட்ட நூல், நிகண்டுகளைப் போல் அல்லாது அகரவரிசைப்படுத்தி எழுதப்பட்டது. பிற்காலத்தில் இது பேரகராதி (விரிவகராதி) என வெளியிடப்பட்டது.
- அச்சியந்திரத்தின் வருகையினால் பலநூல்கள் பதிப்பிக்கும் முயற்சிகள் வளர்ச்சி காணத் தொடங்குதல்

**2.** அகராதித் துறையில் ஈழத்தவரது பங்களிப்பு

- முதன்முதலில் தமிழில் அகராதி ஆக்கப்பட்டது இலங்கையிலே என்பர்.
- அச்சியந்திர வருகை. மிஷனரிமாரது பணிகள் காரணமாக ஈழத்தவர் இத்துறையில் கால்பதித்தனர். மானிப்பாய் அகராதி முதலிலும், பேரகராதி அதிலுள்ள பிழைகளைத் திருத்தியும் வெளியிடப்பட்டமை.
- நா. கதிரைவேற்பிள்ளையின் அகராதி - இவர் தொடக்கி வைத்த அகராதிப்பணி மதுரைச் சங்கத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டு 'சங்க அகராதி' என வெளியிடப்பட்டது.
- சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர் கற்றறிந்தவர்களுக்கென ஓர் அகராதியை 'இலக்கியச் சொல்லகராதி' என்னும் பெயரில் வெளியிட்டார்.
- நாவலர் கோட்டம் அ. முத்துத்தம்பிப்புலவர் ஆங்கில தமிழ் அகராதியை எழுதினார்.
- பருத்தித்துறையைச் சேர்ந்த சி. சுப்பிரமணியசாஸ்திரியார் சொற்பொருள் விளக்கம் எனும் அகராதி எழுதினார்.

**3.** கட்டுரையாசிரியரது மொழிநடை.

- எளிமையான நடை - தடை எதுவுமின்றி இயல்பாகச் சொல்லும் நடை.
- சிறிய வாக்கியங்கள் மட்டுமன்றி பெரிய வாக்கியங்களும் கையாளப்பட்டுள்ளமை.
- ஒவ்வொரு வாக்கியமும் தேவை கருதியே ஆக்கப்பட்டுள்ளமை.
  தேவையற்ற சொற்பிரயோகம், வர்ணனை மேலதிக விளக்கம் எதுவுமே இன்றி அமைந்தமை.
- தேவையேற்பட்ட போது மட்டுமே வேற்றுமொழிச் சொற்கள் கையாளப்பட்டமை.
- பொருத்தமான இடங்களில் மட்டுமே தகவல்கள், தரவுகள் என்பன சேர்க்கப்பட்டு, ஆதாரங்கள் கூறப்பட்டமை.
- கட்டுக்கோப்பான முறையிலே கட்டுரை, படிமுறையாக வளர்த்தெடுக்கப்பட்டுள்ளமை.
- கூறவேண்டிய கருத்துக்கள் யாவும் நேரடியாகவே கூறிமுடித்தமை.

## தமிழ்ச் செல்வாக்கு.

1. தெ. பொ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை,

- தமிழ் இலக்கிய உலகத்தால் போற்றப்படும் தமிழ் அறிஞர்.
- அறிவுலகின் குருதேவர்.
- இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்.
- மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், திறனாய்வாளர், ஒப்பிலக்கணவித்தகர், மொழியியல் ஆய்வாளர், ஆராய்ச்சிக்கட்டுரையாளர், ஆன்மீகப்பற்று, சமயப் பன்மொழிப் புலமை.
- பத்மபூசன், கலாநிதிப்பட்டங்கள் பெற்றவர்.

2. தெ. பொ. மீ இன் தனித்துவமான ஆய்வு, 'தமிழ்ச் செல்வாக்கு' என்ற கட்டுரையின் ஊடாக வெளிப்படுகிறது. ஆராய்க.

- தமிழ் பற்றிய ஆய்வை இந்தியாவை மட்டும் களமாகக் கொள்ளாது, வெளியேயும் ஆய்வை மேற்கொண்டமை.
  உ-ம் : தூரகிழக்கு நாடுகள்.
- ஈழத்துப் பூதந்தேவனார் பற்றிய ஆய்வு.
- நாவலர், விபுலானந்தர் பணிகள் பற்றிய ஆய்வு.
  உ-ம் : தமிழர் பண்பாடு
- சைவம், பௌத்தம் பரவல்
  சைவம் - திருவெம்மானை, திருப்பாவை
  பௌத்தம் - மணிமேகலை
- தத்துவம் - பண்பாடு - ஆட்சி தொடர்பான பார்வை

3. இலங்கை, இந்தியப் பண்பாட்டுடன் பௌத்தம் இணைந்துள்ள தன்மையை விளக்குக.

- தமிழ் தாய்மொழி.
- சிங்களவர், தமிழர் இணைந்து வாழ்தல்.
- பண்பாட்டுத் தொடர்பு.
- தென்னிந்தியப் பௌத்தம் இலங்கைப் பௌத்தத்துடன் தொடர்புகொண்ட தன்மை.
- பல தமிழ்ச் சொற்கள் சிங்கள மொழியில் கலந்தமை.
- சிங்கள செய்யுள் அடிகள் தமிழில் காணப்படும் தன்மை.
- பௌத்தர் மரபில் மணிமேகலை கிழக்குக் கடற்கரை காவல் தெய்வம்.
- இந்து பௌத்தமதம் கீழைக்கடற்கரையில் பரவியுள்ள தன்மை.

## விண்மீன்களுக்குத் திரும்ப ஏகுதல்.

விண்மீன்களுக்குத் திரும்ப ஏகுதல் என்ற ஏ.ஜே. கனகரத்னாவின் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

**அ.** இக்கட்டுரை மூலம் ஆசிரியர் கூறவந்த விடயம் என்ன?

அறிவுபடைத்த உயிரினங்கள் வேறு கோள்களில் இருந்திருக்குமாயின் அவை எப்பொழுதாவது பூமிக்கு வந்திருக்கக்கூடுமா? என்ற வினாவுக்கு விடையாக டானிக்கனின் வாதத்தையும் அதற்கான சான்றுகளையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**ஆ.** வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் விண்மீன்களில் இருந்து அறிவுபடைத்த உயிரினங்கள் இவ்வுலகிற்கு வந்தன என்பதற்கு டானிக்கன் முன்வைக்கும் வாதங்களும் ஆதாரங்களும் எவை?

- விஞ்ஞானிகளே இக்கருத்தை ஏற்றுக்கொள்ளல். ஜான்ஸ்டைக், அமெரிக்க விண்வெளி உயிரியலாளர் கார்ல் சகான், பேராசிரியர் 'லோவஸ்த், ரொக்கட்டின் தந்தை டார்மன் ஓபேத்.
- அச்சுக்கலை, கடிகாரக்கலை, கார், ஆகாயவிமானம் என்பவை ஏறத்தாழ ஒரே காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தற்செயற் சம்பவம் அன்று. பிறகோள்களில் இருந்து வந்த உயிரினங்கள் கற்பித்துப் போனவையே மீளப் பெறப்பட்டுள்ளது.
- சீனா - திபெத் எல்லையில் காணப்பட்ட குகைகளின் சுவர்களிலுள்ள விண்வெளி வீரர் போன்ற உடையணிந்தவர்களின் ஓவியம், கருங்கல் தட்டுக்கள், மலைவாசிகளின் கர்ணபரம்பரைக் கதைகள்.
- புராணங்களில் கூறப்படும் கதைகளை ஆதாரமாகக் காட்டுதல்.

**இ.** வீண்மீன்களுக்கு இடையேயான பயணம் எதிர்காலத்தில் சாத்தியம் என்பதற்கு டானிக்கன் முன்வைக்கும் கருத்துக்கள் எவை?

- எதிர்கால விண்வெளிப் பயணத்தைத் திட்டமிடும் போது, மரபுவழிச் சிந்தனைப் போக்குகள் அகற்றப்பட வேண்டும்.
- விண்வெளி வீரர்களுக்குக் குளிரூட்டி உடம்பை விறைக்கச் செய்து, விண்மீனை அடைந்தவுடன் இயங்கச் செய்தல்.
- எதிர்கால மின்னியக்கக் கருவிகள் மனித உடம்பிலிருந்து பிரிக்கப்பட்ட மூளையினால் இயக்கப்படும். பிறவாத பிள்ளையின் மூளையைப் பயன்படுத்தி விண்வெளிப் பயணத்திற்குத் தேவையான தகவல்களை ஊட்டி, பூமியின் தூதராக்கி ஏனைய கிரகவாசிகளுடன் தொடர்பை ஏற்படுத்தல்.
- காலநேரம் பற்றிய எமது கருத்துக்கள் நிலவுலகம் சார்ந்தவை. வருங்கால சந்ததியினர் இதனை மீறுவர்.
- எதிர்ச் சடப்பொருளால் இயங்கும் பறக்கும் சிறகு கண்டுபிடிக்கப்பட்டால், அவற்றின் வேகத்தால் ஒரு சில ஆண்டுகளில் விண்மீன்களுக்குச் செல்லலாம்.
- ஒளியைவிட வேகமாகப் பயணம் செய்யக்கூடிய 'ரக்கியோன்ஸ்' கண்டுபிடிக்கப்படலாம்.

**ஈ.** கட்டுரையாசிரியரின் உரைநடையிற் காணப்படும் சிறப்புக்களை விளக்குக.

- எரிக் டானிக்கனின் நூலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இக்கட்டுரையில் டானிக்கனின் கருத்துடன் தனது கருத்துக்களையும் இணைத்துக் கட்டுரையை வளர்த்துச் செல்லும் பாங்கு.
- இந்துப் புராணங்களில் இடம்பெறும் கருத்துக்களையும் ஆதாரமாக இணைத்துக் கூறும் திறன்.
- எள்ளல் தொனியுடன் கருத்துக்களைக் கூறுதல்.
- வினாக்களைக் கேட்டுச் சிந்திக்க வைத்த பின் விளக்கமளித்தல்.

  விண்மீன்களுக்குத் திரும்பி ஏகுதல், அப்படியென்றால் நாம் விண்மீன்களிலிருந்து வந்தவர்களா?
- நடைமுறை வாழ்க்கையுடன் ஒப்பிட்டு விளங்கவைத்தல்.

  எமது மனநிலையைப் பொறுத்து 10 நிமிடங்கள் 1 மணித்தியாலமாகவும், 1மணித்தியாலம் 10 நிமிடங்களாகவும் தோன்றலாம் அல்லவா?
- பழமொழிகளைப் பயன்படுத்தி விளக்குதல்

  இதற்கெல்லாம் ஆங்கிலப் பழமொழிகள் சமாதானம் கூறுகிறது. இறுதியாக நகைப்பவன்தான் மிகச் சிறப்பாக நகைப்பான்.

# பகுதி - II

# இலக்கணம்

**அடையப்பட வேண்டிய தேர்ச்சிகளும் தேர்ச்சி மட்டங்களும்**

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 7.0 | : | மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியைச் செம்மையாகக் கையாள்வர். |
| **தேர்ச்சிமட்டம்** | 7.1 | : | மொழியின் இன்றியமையாமை, வளர்ச்சி, செயற்பாடு, அவற்றின் பின்னணி என்பவற்றை அறிந்து கூறுவார். |
| | 7.2 | : | எழுத்துக்களின் வகைகளையும் தொகைகளையும் அறிந்து பயன்படுத்துவார். |
| | 7.3 | : | சொற்களைப் பொருளறிந்து சேர்த்தும் பிரித்தும் எழுதுவார். |
| | 7.4 | : | சொற்களின் அமைப்பையும் வகைகளையும் அறிந்து, மொழியைச் செம்மையாகப் பயன்படுத்துவார் |

## பல்தேர்வு வினாக்கள்.

1. பின்வருவனவற்றுள் ஈரிதழ் ஒலி இடம்பெறும் சொல்.
   1. கலை 2. விலை 3. இலை 4. மலை 5. சிலை

2. பின்வருவனவற்றுள் மூக்கொலிகள்.
   1. ப், ர் 2. ய், த் 3. ன், ந் 4. வ், ழ் 5. க், ங்

3. பின்வருவனவற்றுள் அடிநாக்கும் அடி அண்ணமும் சேர்ந்து உச்சரிக்கும் எழுத்துக்கள்
   1. ப், ம் 2. க், ங் 3. ச், ஞ் 4. ட், ண் 5. த், ந்

4. பின்வருவனவற்றுள் நாக்கு மேல்நோக்கி வளைந்து அண்ணத்தைத் தொட ஒலிக்கும் எழுத்துக்கள்
   1. ர், ல், ன் 2. ப், ம், ஞ் 3. க், ச், ஞ்
   4. ய், வ், ற் 5. ட், ண், ள்

5. பின்வருவனவற்றுள் 'க'கரம் வல்லினமாக ஒலிக்கும் சொல்
   1. பகல் 2. மேகம் 3. பற்கள் 4. அகலம் 5. தகவல்

6. பின்வருவனவற்றுள் 'உ'கரம் இதழ் குவிந்து உச்சரிக்கப்படும் சொல்
   1. புயல் 2. அது 3. எழுது 4. படு 5. கடுகு

7. பின்வருவனவற்றுள் 'எ'கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
   1. எலி 2. எருமை 3. எட்டு 4. எச்சம் 5. எதிர்

8. பின்வருவனவற்றுள் 'ஈ' காரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
   1. ஈரம் 2. ஈசல் 3. ஈச்சை 4. ஈழம் 5. ஈமம்

9. பின்வருவனவற்றுள் 'த' காரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
   1. தம்பி 2. தேர்தல் 3. சித்தம் 4. பார்த்து 5. பக்தி

10. பின்வருவனவற்றுள் 'க' காரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
    1. கடல் 2. பக்கம் 3. வெக்கம் 4. சொற்கள் 5. மார்கழி

11. பின்வருவனவற்றுள் உடன்நிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்றுள்ள சொல்
    1. காக்கை 2. வாழ்க்கை 3. சேர்க்கை 4. படர்க்கை 5. வருகை

12. பின்வருவனவற்றுள் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் மட்டும் வரும் எழுத்துக்கள்
    1. ஈ, ல் 2. ஈ, ள் 3. ஈ, ழ் 4. ள், ழ் 5. க், த்

13. தமிழ்ச் சொற்களில் உடன்நிலை மெய்ம்மயக்கத்தில் மட்டும் வரும் எழுத்துக்கள்
    1. க, த, ப 2. ழ ள, ர 3. க, த, ய
    4. ட, ண, ன 5. ந, ன, ண

14. 'க'கரம் வேற்றுநிலை மெய்ம்மயங்கில் வந்துள்ள சொல்
    1. வெட்கம் 2. பக்கம் 3. அங்கம் 4. பற்கள் 5. பக்தி

15. சொல் இறுதியாய் வராத உயிர் எழுத்துக்கள்
    1. ஓ, ஔ 2. எ, ஒ 3. உ, ஓ 4. ஏ, ஓ 5. இ, ஒ

16. முதல் எழுத்து என்பது
1. சொல் முதலில் வரும் எழுத்து 2. உயிர் எழுத்து 3. உயிரும் மெய்யும்
4. உயிர்மெய் எழுத்து 5. ஆய்த எழுத்து

17. பின்வருவனவற்றுள் உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்
1. ஆடு 2. வயிறு 3. எஸ்கு 4. பட்டு 5. எ·கு

18. சார்பெழுத்து என்பது
1. சார்ந்து வரும் எழுத்து 2. முதலெழுத்து அல்லாத எழுத்து
3. உயிர்மெய் எழுத்து 4. உயிர்மெய் எழுத்தும் ஆய்த எழுத்தும்
5. உயிர்மெய், ஆய்த எழுத்துக்களும்.

19. தற்காலத் தமிழில் வழங்கும் பிறமொழிச் சொற்களில் மட்டும் சொல் இறுதியில் வரும் தமிழ் எழுத்துக்கள்
1. ங், வ் 2. ச், ண் 3. ஸ், ட் 4. ஸ், க் 5. க், ண்

20. தற்காலத் தமிழில் வழங்கும் அடிப்படை எழுத்துக்களின் எண்ணிக்கை
1. 217 2. 30 3. 31 4. 35 5. 34

21. பின்வருவனவற்றுள் பகாப்பதம்
1. அவன் 2. ஈசன் 3. குகன் 4. கலைஞன் 5. மகன்

22. பகுபதத்தில் பகுதி என்பது
1. பகுபதத்தின் முதல் வரும் உறுப்பு 2. பகுபதத்தின் அடிச்சொல்
3. ஒரு பகுபத உறுப்பு 4. ஒரு பகுபதத்தில் வரும் பகாப்பதம்
5. விகுதிக்கு முதலில் வருவது

23. வந்துவிட்டேன் இச்சொல்லின் பகுதி
1. வ 2. வா 3. வந்து 4. வந்துவிடு 5. வர

24. காட்டுப்பகுதி என்பது
1. பகுதி கூட்டாக வருவது 2. பகுதி இரட்டித்து வருவது
3. இரண்டு அடிச்சொற்கள் இணைந்து வருவது 4. இரண்டு பகுதிகள் இணைந்து வருவது
5. பகுதியும் விகுதியும் இணைந்து வருவது

25. மரங்களையா இச்சொல்லில் உள்ள விகுதி எது?
1. கள் 2. ஆ 3. ஐ
4. கள், ஐ 5. கள், ஐ, ஆ

26. வந்திருந்தான். இசசொல்லின் சரியான பகுபத உறுப்புகள்
1. வந்து + இரு + ந்த் + ஆன் 2. வந்திரு + ந்த் + ஆன்
3. வா + ந்து + இரு + ந்த் + ஆன் 4. வந்து + இரு + த் + த் + ஆன்
5. வந்து + இருந்த் + ஆன்

27. வினைச்சொற்களில் இடைநிலை
1. காலம் காட்டும் 2. திணை, பால் காட்டும்
3. காலமும் எதிர்மறையும் காட்டும் 4. வேற்றுமை உணர்த்தும்
5. எதிர்மறை உணர்த்தும்

28. பின்வருவனவற்றுள் 'அற்று' சாரியை ஏற்ற சொல்
1. காற்றை 2. கிணற்றை 3. அவற்றை 4. மாற்றத்தை
5. பற்றற்றானை

29. வீட்டிற்கு - இச்சொல்லில் இடம்பெற்றுள்ள சாரியை
1. இல் 2. இன் 3. இற் 4. கு 5. டிற்

30. பின்வருவனவற்றுள் அம் சாரியை இடம்பெற்றுள்ள சொல்
1. மனம்தான் 2. பிரம்பால் 3. குணப்பெயர்
4. விளாங்காய் 5. பனங்காய்

31. பின்வருவனவற்றுள் பகுதி விகாரப்பட்டுப் புணர்ந்த சொல்லை எடுத்துக்காட்டுக.
1. கண்டேன் 2. இருந்தேன் 3. படித்தேன்
4. பார்த்தேன் 5. செய்தேன்

32. பெயர்ச்சொற்களின் பிரதான பண்புகளுள் முதன்மையானது.
1. திணை, பால் உணர்த்தல் 2. வேற்றுமை ஏற்றல்
3. பெயரடைகளைப் பெற்று வருதல் 4. சுட்டு அடைகளைப் பெற்று வருதல்
5. காலம் காட்டுதல்

33. நாங்களும் உங்களுடன் வருகிறோம். இவ்வாக்கியத்தில் நாங்கள் என்பது
1. மாற்றுப்பெயர் 2. தன்மைப்பெயர் 3. தன்மைப் பன்மைப் பெயர்
4. உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பெயர் 5. உளப்படுத்தாத் தன்மைப்பெயர்

34. மாமா நீங்கள் எப்போது வந்தீர்கள்? இவ்வாக்கியத்தில் நீங்கள் என்பது.
1. முன்னிலைப்பெயர் 2. முன்னிலைப் பன்மைப் பெயர்
3. முன்னிலை ஒருமைப்பெயர் 4. மரியாதை ஒருமைப்பெயர்
5. மரியாதைப் பன்மைப் பெயர்

35. அவர்கள் தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள். இவ்வாக்கியத்தில் தங்கள் என்பது
1. படர்க்கைப்பெயர் 2. தற்சுட்டுப் படர்க்கைப்பெயர்
3. படர்க்கைப் பன்மைப் பெயர் 4. மரியாதை ஒருமைப்பெயர்
5. மரியாதைப் பன்மைப் பெயர்

36. ''அமைச்சர் அவர்களே தங்கள் வரவு நல்வரவாகும்''. இவ்வாக்கியத்தில் தங்கள் என்பது
1. படர்க்கைப் பொருளில் வந்துள்ளது.
2. படர்க்கை ஒருமைப் பொருளில் வந்துள்ளது.
3. முன்னிலைப் பொருளில் வந்துள்ளது.
4. முன்னிலைப் பன்மைப் பொருளில் வந்துள்ளது.
5. முன்னிலை மரியாதை ஒருமைப் பொருளில் வந்துள்ளது.

37. மூவிடத்துக்கும் பொதுவான வினாப்பெயர்
1. யார் 2. எவர் 3. யாது 4. எவள் 5. என்ன

38. பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயர்
1. பொரித்தல் 2. பொரியல் 3. பொரித்து
4. பொரித்தவன் 5. பொரித்தமை

39. பெயர் அல்லது வினை அடிகளுடன் விகுதிகள் சேர்த்து ஆக்கப்படும் பெயர்ச்சொல்
1. ஆக்கப்பெயர்
2. கூட்டுப்பெயர்
3. தொழிற்பெயர்
4. வினையாலணையும்பெயர்
5. பண்புப் பெயர்

40. முயற்சி என்பது
1. பண்புப்பெயர்
2. தொழிற்பெயர்
3. வினையடியாகப் பிறந்த ஆக்கப்பெயர்
4. பெயரடியாகப் பிறந்த ஆக்கப்பெயர்
5. கூட்டுப்பெயர்

41. தொழிலாளி என்ற சொல்லில் ஆழி என்பது
1. பெண்பால் விகுதி
2. ஆண்பால் விகுதி
3. ஆக்கப்பெயர் விகுதி
4. இருபால் பொது விகுதி
5. தொழிற்பெயர் விகுதி

42. இரண்டு அல்லது பல அடிச்சொற்கள் இணைந்து உருவாகும் ஒரு பெயர்ச்சொல்
1. ஆக்கப்பெயர்
2. கூட்டுப்பெயர்
3. தொழிற்பெயர்
4. தொகைப்பெயர்
5. தொகைநிலைத்தொடர்

43. கால்நடைப் பண்ணைகளில் தொற்றுநோய் பரவுகிறது. இவ்வாக்கியத்தில் கால்நடை என்பது
1. கூட்டுப்பெயர்
2. வேற்றுமைத்தொகை
3. ஆகுபெயர்
4. தொகாநிலைத்தொடர்
5. பண்புத்தொகை

44. இரும்புக்கரம் என்பது
1. கூட்டுப்பெயர்
2. வேற்றுமைத்தொகை
3. பண்புத்தொகை
4. உவமைத்தொகை
5. உம்மைத்தொகை

45. பாராளுமன்றம் என்பது
1. வேற்றுமைத்தொகை
2. வினைத்தொகை
3. கூட்டுப்பெயர்
4. தொகாநிலைத்தொடர்
5. உம்மைத்தொகை

46. தொழிற்பெயர்கள் எல்லாம்
1. பெயரடைகளை ஏற்கும்
2. எண் அடைகளை ஏற்கும்
3. சுட்டு அடைகளை ஏற்கும்
4. பெயர் எச்சங்களை ஏற்கும்
5. வினையடைகளை எற்கும்

47. மயில் ஆடியது அழகாய் இருந்தது. இவ்வாக்கியத்தில் ஆடியது என்பது
1. வினைமுற்று
2. இறந்தகால வினைமுற்று
3. தொழிற்பெயர்
4. ஆக்கப்பெயர்
5. வினையாலணையும் பெயர்

48. பின்வருவனவற்றுள் தொழிற்பெயர் அமைப்புக்குப் புறம்பானது
1. போதல்
2. படித்தல்
3. போனமை
4. போகாதது
5. போனவன்

49. பின்வருவனவற்றுள் வினையாலணையும் பெயருக்குப் பொருத்தமான வரைவிலக்கணம்
1. வினையடியாகப் பிறக்கும் பெயர்
2. வினையடியாகப் பிறந்து, வினையையும் கருத்தாவையும் உணர்த்தும் செயல்
3. வினையடியாகப் பிறந்து, வினை, காலம், கருத்தா ஆகியவற்றை உணர்த்தும் பெயர்
4. வினையடியாகப் பிறந்து, வாக்கிய இணைப்புக்குப் பயன்படும் சொல்
5. பெயர் வடிவம் பெற்ற வினைச் சொற்கள்

50. பின்வருவனவற்றுள் பலர்பால் பெயர்கள்
1. அவன் 2. ஆசிரியர்
3. அண்ணர் 4. தம்பிமார் 5. பெரியார்

51. எனக்கு அண்ணனைத் தெரியும். இவ்வாக்கியத்தில் எழுவாய்
1. நான் 2. எனக்கு 3. கண்ணன்
4. தோன்றா எழுவாய் 5. எழுவாய் இல்லை

52. பின்வருவனவற்றுள் எப்போதும் இரண்டாம் வேற்றுமை ‘ஐ’ உருபு ஏற்றுவரும் பெயர்
1. மரம் 2. பெண் 3. சோறு 4. பால் 5. சந்திரன்

53. அன்பால் எதிரிகளையும் வெற்றிகொள்ளலாம். இவ்வாக்கியத்தில் ‘ஆல்’ உருபு உணர்த்தும் பொருள்
1. கருத்தா 2. காரணம் 3. கருவி
4. நீங்கல் 5. முதற்காரணம்

54. அவர் இறந்தது நோயினால் அல்ல. இவ் வாக்கியத்தில் ‘ஆல்’ உருபு உணர்த்தும் பொருள்
1. வினைமுற்று 2. இறந்தகால வினைமுற்று
3. தொழிற்பெயர் 4. ஆக்கப்பெயர்
5. வினையாலணையும் பெயர்

55. அப்பா நேற்று எனக்குப் பணம் அனுப்பினார். இவ்வாக்கியத்தில் ‘கு’ உருபு உணர்த்தும் பொருள்
1. கொடை 2. நட்பு 3. தகுதி
4. காலக்குறிப்பு 5. அனுபவப்பேறு

56. எனக்குத் தலை இடிக்கிறது. இவ்வாக்கியத்தில் ‘கு’ உருபு உணர்த்தும் பொருள்
1. தகுதி 2. அனுபவப்பேறு
3. கொடை 4. முறை
5. காரணம்

57. பின்வருவனவற்றுள் தனிவினை
1. வருகிறேன் 2. வந்திருந்தேன்
3. வந்துகொண்டிருந்தேன் 4. வரப்போகிறேன்
5. வர இருக்கிறேன்

58. பொலிசார் திருடனைக் கண்டுபிடித்தார்கள். இவ்வாக்கியத்தில் வரும் கண்டுபிடி என்பது
1. தனிவினை 2. துணைவினை
3. கூட்டுவினை் 4. ஏவல்வினை
5. செய்வினை

59. தெரிநிலை வினையின் பிரதானமான பண்பு
1. பால் காட்டுதல் 2. திணை காட்டுதல்
3. திணையும் பாலும் காட்டுதல் 4. காலம் காட்டுதல்
5. திணை, பால், எண், இடம் உணர்த்தல்

60. ‘‘அப்பா நீங்கள் அங்கே போகாதீர்கள்’’. இவ்வாக்கியத்திலுள்ள ‘போகாதீர்கள்’ என்பது
1. ஏவல் வினை 2. எதிர் மறைவினை
3. எதிர்மறை ஏவல் வினை 4. எதிர் மறை மரியாதை ஏவல் ஒருமை
5. ஏவல் பன்மை

61. பின்வருவனவற்றுள் 'செய்தால்' என்ற வாய்பாட்டு வினை
   1. வந்ததால்  2. வந்தால்
   3. வருவதால்  4. வரவால்
   5. வருவதனால்

62. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினை
   1. செய்  2. படி  3. வா  4. எடு  5. பார்

63. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றாத வினை
   1. இரு  2. டை  3. சிரி  4. அழு  5. நடி

64. தம்பி குழந்தையை அழவைத்தான். இவ்வாக்கியத்தில் அழவை என்பது
   1. ஏவல்வினை  2. பிறவினை  3. தனிவினை  4. காரணவினை
   5. செய்வினை

65. நான் உங்களுடன் வரப்போகிறேன் இவ்வாக்கியத்தில் போ என்பது
   1. ஏவல்வினை  2. துணைவினை  3. முதல்வினை
   4. தெரிநிலைவினை  5. செய்வினை

66. அந்தக் கடையில் சுடச்சுட அப்பம் சாப்பிடலாம். இவ்வாக்கியத்தில் வரும் சுடச்சுட என்பது
   1. பெயரெச்சம்  2. வினையெச்சம்  3. பெயரடை
   4. வினையடை  5. செய்ய வாய்ப்பாட்டு எச்சம்

67. கிராமத்து மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து விட்டனர். இவ்வாக்கியத்தில் வரும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்
   1. எண்  2. ஐயம்  3. எச்சம்  4. முற்று  5. சிறப்பு

68. 'அப்பா ஊருக்குப் போயிருப்பாரோ' இவ்வாக்கியத்தில் வரும் ஓ இடைச்சொல் உணர்த்தும் பொருள்
   1. ஐயம்  2. பிரிநிலை  3. மிகை
   4. திடக்குறிப்பின்மை  5. வினா

69. பின்வருவனவற்றுள் இயல்புப் புணர்ச்சி
   1. மரத்தை  2. செத்தான்  3. அவர்கள்
   4. மரங்கள்  5. பற்கள்

70. பின்வருவனவற்றுள் விகாரப் புணர்ச்சி
   1. செய்தான்  2. போனான்  3. படித்தான்
   4. வந்தான்  5. செய்வான்

71. மரம் என்ற மகர ஈற்றுப்பெயர் ஐ உருபு ஏற்கும் போது பெறும் சாரியை
   1. அம்  2. அற்று  3. அத்து  4. அன்  5. அம்

72. பகுபத உறுப்புக்கள் அனைத்தும் அமைந்த சொல்
   1. படித்தான்  2. இருந்தான்  3. சென்றனன்
   4. ஓடினான்  5. அலைந்தனன்

73. கற்றான் என்ற சொல்லின் விகாரமடைந்துள்ள பகுபத உறுப்பு
   1. பகுதி  2. விகுதி  3. சாரியை  4. சந்தி  5. இடைநிலை

74. பின்வருவனவற்றுள் பண்புப் பெயர் விகுதியாக அமைவது
   1. மை  2. கு  3. அன்  4. இல்  5. அம்

75. பின்வருவனவற்றுள் பெயர்த்தொடர் அல்லாதது?
   1. யாரோ சில பையன்கள்  2. அழகான பையன்
   3. அன்று வந்த பெண்  4. வீட்டுக்கு விரைவாகச் சென்றான்.
   5. முதலாவது மனிதன்

76. பின்வருவனவற்றுள் வினையடைத் தொடராக அமைவது
   1. மிகமிக அன்பான  2. எல்லோரையும் விட மிகவும் விரைவாக
   3. மிகமிக அருவருப்பான  4. மிகவும் சிறப்பான
   5. மிக உயரமான

77. பின்வருவனவற்றுள் தனி வாக்கியம் அல்லாதது எது?
1. பருத்த உடலுள்ள மனிதன் பைய நடக்கிறான்.
2. கலா அழகாகச் சிரித்தாள்
3. கண்ணனும் சலீமும் சென்றார்கள்
4. அது ஒரு கனாக்காலம்
5. பறவைகள் கூடுகட்டியுள்ளன.

78. பின்வருவனவற்றுள் பெயர்ப்பயனிலை கொண்ட வாக்கியம்
1. அந்த மனிதன் போகிறான்
2. இவன் ஒரு சிறுவன்
3. கண்ணதாசன் சிறந்த கவிஞன்
4. அவர் மிகவும் நல்லவர்
5. இந்த வீடு அவனுடையது.

79. பின்வருவனவற்றுள் வினா தொக்கிய வாக்கியம் அல்லாதது எது?
1. அவனுக்கு விசர்
2. உனக்கு மகிழ்ச்சி
3. எனக்குக் கோபம்
4. சிலருக்கு வேதனை
5. அப்பா கோபமாக இருக்கிறார்

80. 'படித்தான்' என்பது
1. குறிப்பு வினை
2. தெரிநிலை வினை
3. பிறவினை
4. எதிர்மறைவினை
5. செயப்பாட்டு வினை

81. அவன் நல்லவன் என்பதில் 'நல்லன்' என்பது
1. தெரிநிலை வினை
2. செயப்படுபொருள் குன்றிய வினை
3. குறிப்பு வினை
4. செயப்படுபொருள் குன்றாத வினை
5. எச்சவினை

82. "ஓங்குக, ஒழிக" எனும் வியங்கோள் வினைகள் உணர்த்தும் பொருள்
1. வைதல், வாழ்த்தல்
2. வாழ்த்தல், வேண்டல்
3. விதித்தல், வேண்டல்
4. வாழ்த்தல், வைதல்
5. விதித்தல், வாழ்த்தல்

83. கம்பராமாயணம் கம்பரால் இயற்றப்பட்டது. இதில் இயற்றப்பட்டது என்பது
1. தன்வினை
2. பிறவினை
3. செய்வினை
4. செயப்படுபொருள் குன்றிய வினை
5. செயப்பாட்டு வினை

84. செயப்படுபொருள் குன்றிய வினைக்கு உதாரணமாக அமையக் கூடியது
1. நடந்தான்
2. எழுதினாள்
3. உண்டனர்
4. தேடினர்
5. பிடித்தது

85. இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவான வினை
1. தெரிநிலை வினை
2. தன் வினை
3. பிறவினை
4. செய்வினை
5. வியங்கோள்வினை

86. செய்து எனும் வாய்ப்பாட்டு வினையெச்சம்
1. எடுத்து
2. படிக்க
3. போகாது
4. ஓடாமல்
5. வரும்

87. பின்வருவனவற்றுள் நிகழ்காலப் பெயரெச்சங்களின் அமைப்பு
1. t ṗ d a b + சந்தி + அ
2. வினையடி + விகுதி
3. வினையடி + சாரியை + அ
4. வினையடி + கால இடைநிலை + அ
5. வினையடி + சந்தி + உம்

88. முற்றாகவும் எச்சமாகவும் வரக்கூடிய சொல்
1. வந்த 2. ஓடி 3. செய்து 4. பார்த்தான் 5. பறக்கும்

89. பின்வருவனவற்றுள் பெயரெச்சம் எது?
1. ஓடி 2. வந்து 3. ஓடிய 4. இருந்து 5. உண்டு

90. பின்வருவனவற்றுள் எதிர்மறை இடைநிலை எது?
1. த் 2. ட் 3. ஆத் 4. ன் 5. கின்று

91. அடிச்சொல்லின் ஈற்றுமெய் இரட்டித்துக் காலம் காட்டும் சொல்
1. உண்டான் 2. வருவான் 3. கண்டான் 4. புக்கான் 5. ஓடுவான்

92. பின்வருவனவற்றுள் வல்வினை
1. கொடுப்பாள் 2. உண்பாள் 3. நிற்பாள்
4. செய்வாள் 5. தருவேன்

93. பின்வருவனவற்றுள் முற்றாகவும் எச்சமாகவும் வழங்கப்படும் ஒரு வினைச்சொல்
1. வாழ்க 2. சென்றது 3. உண்ணும் 4. கற்றார் 5. வந்தது

94. 'செய்யாதே' என்பதில் இடம்பெறும் எதிர்மறை இடைநிலை
1. யா 2. ஆத் 3. த் 4. இல் 5. ஏ

95. அதிகாலையில் நித்திரை விட்டு எழும்பு என்ற வாக்கியத்தில் எழும்பு என்பது
1. ஏவல் வினைமுற்று 2. வியங்கோள் வினைமுற்று
3. தன்மை வினைமுற்று 4. செய்வினை 5. பிறவினை

96. 'உண்ணற்க' என்பதில் உள்ள எதிர்மறை இடைநிலை
1. அல் 2. இல் 3. அற் 4. அன் 5. அற்க

97. பின்வருவனவற்றுள் கால இடைநிலை இடம்பெறாத வினைமுற்று
1. கண்டான் 2. அறிவான் 3. ஓடினான்
4. உண்ணும் 5. படித்தான்

98. பின்வருவனவற்றுள் பகுபதமாக அமைவது
1. மரம் 2. நிலம் 3. அறிஞன் 4. நிலவு 5. தீ

99. 'செத்தான்' என்பதன் பகுதி
1. செத்து 2. சா 3. செத்த 4. செத் 5. செ

100. பகுபதத்தின் பகுதி என்பது
1. பகுபதத்தின் முதலில் வரும் உறுப்பு
2. விகுதி ஏற்கும் சொல்
3. விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி என்பவற்றை ஏற்கும் அடிச்சொல்
4. ஒரு பகுபதத்தில் இடம்பெறும் பகாப்பதம்
5. வேற்றுமை உருபு ஏற்கும் வடிவம
.

101. 'நடந்தான்' எனற பகுபதத்தில் காலம் காட்டும் உறுப்பாக அமைவது
1. நட 2. ந் 3. த் 4. ந்த் 5. ஆன்

102. பின்வருவனவற்றுள் பெயர்ப்பகுபதமாக அமைவது
1. மலை 2. பிள்ளை 3. கிள்ளை 4. கவிஞன் 5. ஓடும்

103. போகமாட்டாள் என்பதில் வரும் எதிர்மறை இடைநிலை
1. க 2. மாட் 3. மாட்டா 4. ஆட்
5. மாட்டு

## குறுவினா விடை

1. முதல் எழுத்துக்களை வகைப்படுத்தி விளக்குக.

முதலெழுத்துக்கள் உயிர் எழுத்து, மெய்யெழுத்து என இரு வகைப்படும். தமிழில் 12 உயிர்எழுத்துக்களும் 18 மெய் எழுத்துக்களும் காணப்படுகின்றன. உச்சரிக்கும் கால அளவைப் பொறுத்து உயிர் எழுத்துக்களை,
குறில் : அ, இ, உ, எ, ஒ
நெடில் : ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என வகைப்படுத்துவர்.

உச்சரிப்பு முறை கருதி மெய்யெழுத்துக்களைப் பிரிக்கும் விதம்.
வல்லினம் : க், ச், ட், த், ப், ற்
மெல்லினம் : ங், ஞ், ண், ந், ம், ன்
இடையினம் : ய், ர், ல், வ, ள், ழ் என வகைப்படுத்துவர்.
உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் தனித்தியங்கும் தன்மை உடையன என்பதால் இவற்றை முதலெழுத்துக்கள் எனலாம்.

2. சார்பெழுத்து என்றால் என்ன என்பதற்கு உதாரணம் தந்து சுருக்கமாக விளக்குக.

முதலெழுத்துக்களைச் சார்ந்து நின்று இயங்குபவை சார்பெழுத்துக்களாகும்.
உயிர், மெய்கள், ஆய்தம் என்பன முதலெழுத்துக்களில் சில சொற்களில் அமையும் பொழுது தமக்குரிய ஒலிப்பு அளவில் ஒலிக்காது, சிறிது வேறுபட்டு ஒலிக்கின்றதாக அமைந்தவையும் சார்பெழுத்துக்களாகக் கொள்ளப்படுகின்றன.
சார்பெழுத்துக்கள் பத்து வகைப்படும்

1. உயிரளபெடை
2. ஒற்றளபெடை
3. ஆய்தம்
4. குற்றியலுகரம்
5. குற்றியலிகரம்
6. ஐகாரக்குறுக்கம்
7. ஔகாரக் குறுக்கம்
8. மகரக் குறுக்கம்
9. ஆய்தக் குறுக்கம்
10. உயிர்மெய்

3. குற்றியலுகரம் பற்றி சுருக்கமாக விளக்குக.

உகரத்துக்குரிய மாத்திரை அளவு ஒன்று. ஆனால் உகரம் சில இடங்களில் தன் மாத்திரை அளவினின்றும் குறைந்தொலிக்கும். அத்தகைய உகரம் குற்றியலுகரம் ஆகும்.
தனிக்குற்றெழுத்தல்லாத ஏனைய எழுத்துக்களின் பின்னே சொல்லின் இறுதியில் வல்லின மெய்யின் மேல் உகரம் ஏறி வருவது குற்றியலுகரம் என்பர்.

குற்றியலுகரத்தின் அயல் எழுத்தை அடிப்படையாகக் கொண்டு ஆறாக வகைப்படுத்துவர்.
1. வன்தொடர்க் குற்றியலுகரம் - பத்து
2 மென்தொடர்க் குற்றியலுகரம் - பஞ்சு
3. இடைத்தொடர்க் குற்றியலுகரம் - வெய்து
4. நெடிற்றொடர்க் குற்றியலுகரம் - நாடு
5. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் - பசு
6. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் - எ.்.கு

4 .அளபெடை பற்றி விளக்கி, அதன் தற்காலப் பயன்பாடு பற்றிக் குறிப்பிடுக.

அளபெடை என்பது அளபெடுத்தல் ஆகும்.
எழுத்து நீண்டொலித்தல் ஆகும்.
நெட்டெழுத்துக்கள் ஏழும் தமக்குரிய மாத்திரையினின்றும் நீண்டொலித்தல் உயிரளபெடை எனப்படும்.

- அளபெடுத்தற்கு அடையாளமாக அதனதன் இனக்குற்றெழுத்து அதனதன் பக்கத்தில் எழுதப்படும்.
- சொல்லின் முதல், இடை, இறுதி நிலைகளில் நீண்டொலிக்கும்.
  உ-ம் : ஓஒதல் வேண்டும் - சொல்லின் முதல்
  தெய்வம் தொழாஅ - சொல்லின் இடை
  நசைஇ - சொல்லின் இறுதி
- செய்யுளில் ஓசை குறையுமிடத்து, மெல்லின எழுத்துக்கள் ஆறும், ஈ, ழ் தவிர்ந்த நான்கு இடையின எழுத்துக்களும் ஆய்த எழுத்துமாகப் பதினொரு எழுத்துக்களும் தமக்குரிய அரை மாத்திரையிலிருந்து நீண்டொலித்தல் ஒற்றளபெடை எனப்படும்.
- நீண்டொலித்தற்கு அடையாளமாக அதே மெய் அதன் பக்கத்தில் எழுதப்படும்.
  உ- ம் : திரள்ள் சேனை
- தற்காலத் தமிழில் அளபெடையை யாரும் பயன்படுத்துவதில்லை.

5. இடைநிலை மெய்ம்மயக்கம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

மெய்யெழுத்துக்கள் இரட்டித்து அல்லது பிற மெய்களுடன் இணைந்து சொல் இடையில் வருவது இடைநிலை மெய்ம்மயக்கம் ஆகும்.

1. உடநிலை மெய்ம்மயக்கம் - சொல்லிடையில் ஒரே மெய் இரட்டித்து வருவது (மன்னன்)
2. வேற்றுநிலை மெய்ம்மயக்கம் - சொல்லிடையில் வெவ்வேறு மெய்கள் இணைந்து வருவது. உ-ம் : அன்பு - ன், ப் உடன் மயங்கும்.

6. தற்காலத்தமிழில் கிரந்த எழுத்துக்களின் பயன்பாடு பற்றி கருத்துரை வழங்குக.

- வடமொழிக் கலப்பினால் தமிழில் புகுந்த எழுத்துக்கள் (ஜ, ஜ, ஸ, ஹ, க்ஷ)
- தற்காலத் தமிழில் சில கிரந்த எழுத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- பிறமொழிப் பெயர்களைத் தமிழில் எழுதுவதற்கு இவ் எழுத்துக்கள் அவசியமாகின்றன.
- ஸ்ரீ, க்ஷ ஆகிய கிரந்த எழுத்துக்கள் அரிதாகத் தற்காலத்தில் தமிழில் வழங்கப்படுகின்றன.

7. பகாப்பதம், பகுபதம் பற்றித் தெளிவுபடுத்துக.

பகுதி, விகுதி முதலான உறுப்புக்களாகப் பகுக்க முடியாத சொல் பகாப்பதம் எனப்படும்.
பெயர் - இலங்கை
வினை - நட
இடை - கொல்
உரி - நனி என்னும் நால்வகைச் சொற்களிலும் பகாப்பதங்கள் உள்ளன.

பொருள் தரக்கூடிய உறுப்புகளாகப் பிரிக்கக் கூடிய சொற்கள் பகுபதம் எனப்படும்.
பெயர்ப்பகுபதம் - அறிஞன்
வினைப்பகுபதம் - உண்டான் எனும் இருவகைப் பகுபதங்கள் அமையும்.

ஒரு பகுபதத்தில் குறைந்த பட்சம் இரண்டு கூறுகளாவது இருத்தல் வேண்டும்.
கூடும் - கூடு + உம்
பகுதி + விகுதி

ஒரு பகுபதத்தில் இடம்பெறும் கூறுகளை அவற்றின் தொழிற்பாட்டின் அடிப்படையில் ஆறு பிரிவுகளாக வகைப்படுததலாம்.

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம்.

8. பகுபத உறுப்பான பகுதி பற்றி விளக்குக.

- பகுபதத்தின் அடிச்சொல்லையே பகுதி என்பர்.
- தெரிநிலைப் பகுபதங்களுக்குப் பெரும்பாலும் வினைச்சொற்களும், சிறுபான்மை பெயர்ச்சொல், இடைச்சொல், உரிச்சொற்கள் பகுதியாக வரும்.

  படித்தான் - பகுதி - படி (வினையடி)
  சித்திரித்தான் - பகுதி - சித்திரம் (பெயரடி)
  போன்றான் - பகுதி - போல்
  சான்றான் - பகுதி - சால்
- தெரிநிலை வினைப்பகுதிகள் எப்போதும் ஏவல் வடிவிலேயே அமையும்.
- இரண்டு சொற்களாலான தனிச்சொல்லாக இயங்கும் பகுதிகளை கூட்டுப்பகுதி என்பர். (குருவிக்கூடு)

9. பெயர் இடைநிலை பற்றி விளக்குக.

- பெயர் இடைநிலைகள் மிகச் சிறுபான்மை வழக்காகும்.
- இவ் இடைநிலைகள் காலம் காட்டுவதில்லை

கவிஞன் : கவி - பகுதி, ஞ் - இடைநிலை, அன் - விகுதி

10. வினை இடைநிலைகளின் பயன்பாட்டை விளக்குக.

- ஒரு வினைப்பகுபதத்தின் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வந்து காலம் உணர்த்தும் உறுப்பு வினை இடைநிலை எனப்படும்.
- இறந்தகால இடைநிலை, நிகழ்கால இடைநிலை, எதிர்கால இடைநிலை என மூன்று வகைப்படும்.
- நிகழ்கால இடைநிலைகள் - ஆநின்று, கின்று, கிறு

  உ-ம்: நடக்கிறான் - நட + கிறு + ஆன்
- இறந்தகால இடைநிலைகள் - த், ட், ற், இன், ன், இ

  உ-ம் : போ + ன் + ஆன் - போனான்
- எதிர்கால இடைநிலைகள் - ப், வ்

  உ-ம் : நட + ப் + ஆன் - நடப்பான்.
  வா + வ் + ஆன் - வருவான்.

11. சாரியை பற்றித் தெளிவுபடுத்துக.

- பகுபத உறுப்புக்களான பகுதியையும் விகுதியையும் அல்லது இடைநிலையையும் விகுதியையும் இணைப்பதற்குப் பயன்படும் பகுபத உறுப்பு சாரியை எனப்படும்.
- சாரியைக்குப் பொருள் இல்லை.
- இரண்டு பகுபத உறுப்புகளுக்கு இடையில் வந்து, அவற்றை இணைப்பதே சாரியையின் செயற்பாடாகும்.
- அன், அம், அத்து, அற்று, அன் முதலிய சாரியைகள் இன்று வழக்கில் உள்ளன.

  உ-ம் : புளி + காய் - புளி + அம் + காய் - புளியங்காய்
  மர + ஐ - மரம் + அத்து + ஐ - மரத்தை

12. தற்காலத் தமிழில் வழங்கும் தன்மை, முன்னிலைப் பெயர்கள் பற்றி விளக்குக.

- பேசுவோன் தன்னைக் குறிப்பிடும் சொல் தன்மை இடத்தினை உணர்த்தும். .

- தற்காலத் தமிழில் நான், நாம், நாங்கள் ஆகிய மூன்று தன்மைப் பெயர்கள் வழக்கில் உள்ளன.
  இவற்றுள் நான் ஒருமையையும் நாம், நாங்கள் என்பன பன்மையையும் குறிக்கும்.
- வேற்றுமை உருபு ஏற்கும் போது இவை பின்வருமாறு மாற்றமடைகின்றன.

| | | |
|---|---|---|
| நான் + ஐ | - என் + ஐ | - என்னை |
| நாம் + ஐ | - எம் + ஐ | - எம்மை |
| நாங்கள் + ஐ | - எங்கள் + ஐ | - எங்களை |

- தன்மைப் பன்மையானது, 1) உளப்பாட்டு தன்மைப் பன்மை 2) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை என இரு வகைப்படும்.
  பேசுபவன் கேட்பவனையும் உளப்படுத்திப் பேசினால் அது உளப்பட்டு தன்மை. உ-ம் :-
  இது நம்முடைய பாடசாலை
  இதன் வளர்ச்சிக்கு நாம் பாடுபடவேண்டும்.
  பேசுபவன் கேட்பவனை உளப்படுத்தாது தன்னையும் தான் சார்ந்த பிறரையும் சுட்டி பேசினால் அது உளப்படுத்தா தன்மைப் பன்மை
  உதாரணம் எங்களுடைய பாடசாலைக்கு ஒரு தரம் நீங்கள் வரவேண்டும்.

- பேசுவோர் முன்னிலையில் உள்ளவரைக் குறிப்பிடும் சொல் முன்னிலைப் பெயராகும்.
- நீர், நீங்கள் - இவ் இரண்டு முன்னிலைப் பெயர்களே தற்காலத் தமிழில் பொதுவழக்கில் உள்ளன.
- நீர் என்ற முன்னிலைப் பெயர், சில கிளை மொழிகளில் வழக்கிலுள்ளது.
- நீ - ஒருமையில் மரியாதை உள்ளவர்களை அல்லது அந்தஸ்து குறைந்தவர்களை சுட்டப் பயன்படுகின்றது.
- நீங்கள் - ஒருவரை மரியாதையுடன் சுட்ட ஒருமையில் பயன்படுகின்றது. அல்லது பலரைச் சுட்டப் பயன்படுகின்றது.

- பேசப்படும் பொருள் படர்க்கை இடமாகும்.
  உயர் திணை, அ்.றிணை, ஆண்பால், பெண்பால் மரியாதை உணர்த்தும் பெயர் என்ற வேறுபாடுகள் காணப்படுகின்றன.
  அவன், அவர்கள், மரம், பறவை.
- பழந்தமிழில் ‘உ’ இடைச்சுட்டின் அடியாகப்பிறந்த உவன், உவள், உவர்கள், உது, உவை ஆகிய படர்க்கைப் பெயர்கள், தற்காலத்திலே மரியாதை ஒருமையில் மட்டுமே வழங்கப்படுகின்றன.
  உவை வந்தவையோ?
- இவர், அவர் ஆகிய படர்க்கைப் பெயர்கள், தற்காலத்தில் மரியாதை ஒருமையில் மட்டுமே வழங்கப்படுகின்றன.
  அவர் வந்தாரா?

13. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, உளப்படுத்தாத் தன்மைப் பன்மை இரண்டுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை தெளிவுபடுத்துக.

- நாம், நாங்கள் இரண்டும் தன்மைப் பன்மை பெயர்களாகும்.
- பயன்பாட்டில் இவை இரண்டுக்கும் இடையே வேறுபாடு காணப்படுகின்றது.
- நாம், நம்முடைய என்பன கேட்போனையும் உள்ளடக்குவது.
  உ-ம் : இது நம்முடைய பாடசாலை - உளப்பாட்டுத் தன்மைப் பன்மை எனப்படும்.
- நாங்கள், எங்களுடைய என்பன கேட்போனை உளப்படுத்துவதில்லை.
  உ-ம் : இது எங்களுடைய பாடசாலை - உளப்படுத்தாத் தன்மைப் பன்மை எனப்படும்.

14. தற்சுட்டுப் படர்க்கைப் பெயர்கள் பற்றி விளக்குக.

- நான், நாம், நாங்கள் ஆகிய மாற்றுப் பெயர்கள் தற்காலத் தமிழில் வாக்கியத்தின் எழுவாய்ப் பெயரைச் சுட்டப் பயன்படுகின்றன.
- வேற்றுமை உருபு ஏற்கும் பொழுது வடிவமாற்றம் பெறுகின்றன.
  உ-ம் : தான் + ஐ - தன் + ஐ - தன்னை
- திணை, பால் வேறுபாடு காட்டாமல் உயர்திணை, அஃறிணை, ஆண்பால், பெண்பால் எல்லாவற்றுக்கும் பொதுவாக வழங்குகின்றது.
- எழுவாய்ப் பெயரைச் சுட்டுவதற்கு
  கண்ணன் தன் வீட்டுக்குப் போனான். தான் (தன்) என்ற பெயர் கண்ணனையே சுட்டுகின்றது.
- தான் என்ற பெயருக்குப் பதிலாக அவன், அவள், அது ஆகிய படர்க்கைப் பெயர்களையும் பயன்படுத்தலாம்.
  குருவி அதன் குஞ்சுக்கு இரைதேடச் சென்றது.

15. ஆக்கப்பெயரின் அமைப்பை உதாரணம் தந்து விளக்குக.

- பெயர், அல்லது வினைச்சொல்லுடன் ஓர் ஆக்கப்பெயர் விகுதியைச் சேர்த்து உருவாக்கப்படும் ஒரு பெயர்ச்சொல் ஆக்கப்பெயர் எனப்படும்.
  பெயர் + விகுதி நோய் + ஆளி - நோயாளி
  வினை + விகுதி உணர் + ச்சி - உணர்ச்சி

16. கூட்டுப் பெயரின் அமைப்பை உதாரணம் தந்து விளக்குக.

- ஒரு பெயர்ச்சொல்லுடன் பிறிதொரு பெயர்ச்சொல், ஒரு வினைச்சொல்லுடன் ஒரு பெயர்ச்சொல்லை இணைத்து ஆக்கப்படுவது கூட்டுப்பெயர் ஆகும்.
  பெயர் + பெயர் - வான் + ஒலி - வானொலி
  வினை + பெயர் - எறி + கணை - எறிகணை

17. வேற்றுமைத் தொகை பற்றி விளக்குக.

- ஒரு வேற்றுமைத் தொடரில் அமைய வேண்டிய வேற்றுமையுருபு (ஐ, ஆல், கு, இன், அது, கண் ஆகிய இரண்டு முதல் ஏழாம் வேற்றுமை வரை உள்ள உருபுகள்) மறைந்து நிற்க, சொற்கள் இணைந்து தொகைச் சொல்லாக அமைவது வேற்றுமைத் தொகை எனப்படும்.

  - மீன் சந்தை (ஐ) - இரண்டாம் வேற்றுமைத்தொகை
  - தங்கக்காப்பு (ஆல்) - மூன்றாம் வேற்றுமைத்தொகை
  - கூலிவேலை (கு) - நான்காம் வேற்றுமைத்தொகை
  - கண்ணீர் (இல்) - ஐந்தாம் வேற்றுமைத்தொகை
  - கடற்கரை (அது) - ஆறாம் வேற்றுமைத்தொகை
  - வீட்டு மிருகம் (கண்) - ஏழாம் வேற்றுமைத்தொகை

18. தற்காலத் தமிழில் வழங்கும் தொழிற்பெயரின் அமைப்பை உதாரணம் தற்து விளக்குக.

- வினை அடியாகப் பிறந்து வினை நிகழ்வினை, நிகழாமையை உணர்த்தும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்.

  1. வினையடி + தல் / த்தல் / அல் - படித்தல்.
  2. வினையடி + கால இடைநிலை + அது / மை - ஆளுமை.
  3. வினையடி + எதிர்மறை இடைநிலை + அது / மை - போகாதது

19. வினையாலணையும் பெயர் என்றால் என்ன? அதன் அமைப்பை உதாரணம் தந்து விளக்குக.

- வினையடியாகப் பிறந்து, வினையையும் வினைபுரியும் கர்த்தாவையும் உணர்த்தும் பெயர் வினையாலணையும் பெயர் எனப்படும்.
  உ-ம் : வந்தவனை - வருதல் என்ற வினையையும் அந்த வினையைப் புரிந்த கர்த்தாவையும் படர்க்கை ஆண்பால் உணர்த்துகின்றது.

20. பெயர்ச் சொற்களின் ஐம்பால் பாகுபாடு பற்றிச் சுருக்கமாக விளக்குக.

- தமிழில் பால் பாகுபாடு ஆண், பெண் என்ற அடிப்படையிலும் ஒருமை, பன்மை என்ற அடிப்படையிலும் அமைந்துள்ளன.
- உயர்திணை ஒருமைப் பெயர்கள் ஆண்பால், பெண்பால் எனப்படுகின்றன.
  அவன் - ஆண்பால், அவள் - பெண்பால்
- உயர்திணைப் பன்மைப் பெயர்கள் பலர்பால் எனப்படுகின்றன. - சிறுவர்கள்
- அ∴றிணை ஒருமைப் பெயர்கள் ஒன்றன்பாலாகும். - மாடு
- அ∴றிணைப் பன்மைப் பெயர்கள் பலவின்பாலாகும் - மாடுகள்

21. பால்பகா அ∴றிணைப் பெயர் பற்றி தெளிவுபடுத்துக.

- அ∴றிணை ஒன்று பன்மை விகுதி பெறாமல் ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாக அமையின் அது பால்பகா அ∴றிணை பெயர் எனப்படும்.
  உ-ம் : ஒரு தேங்காய் - நூறு தேங்காய்
  ஒரு ரூபாய் - இரண்டு ரூபாய்

23. எழுவாய் வேற்றுமை பற்றிச் சுருக்கமாக விளக்குக.

- ஒரு பெயர்ச்சொல் வாக்கியத்தில் எழுவாயாகச் செயற்படுவது எழுவாய் வேற்றுமை எனப்படும்.
- எழுவாய் வேற்றுமைக்கு உருபு இல்லை.
- உருபு ஏற்காத பெயர்ச்சொல்லே எழுவாயாகச் செயற்படும். (மரம் விழுந்தது.)

24. இரண்டாம் வேற்றுமை உருபின் பயன்பாடு பற்றித் தெளிவுபடுத்துக.

ஒரு பெயர்ச்சொல் செயற்படுபொருளாகத் தொழிற்படுவதற்கு இரண்டாம் வேற்றுமை உருபு உதவுகின்றது.

| | |
|---|---|
| ஆக்கல் | - வீட்டைக் கட்டினான். |
| அழித்தல் | - வீட்டை உடைத்தான். |
| அடைதல் | - வீட்டை அடைந்தான். |
| நீங்கல் | - ஊரை விட்டு நீங்கினான். |
| ஒத்தல் | - அவன் தகப்பனை ஒத்தவன். |

இவைகளில் ‘‘ஐ’’ உருபு எப்போதும் இணைந்தே வந்து செயப்படுபொருளை உணர்த்தி நிற்கும். ஐ உருபு இல்லாமல் வந்து ஐ உருபு உணர்த்தப்படுவதும் உண்டு.

25.ஆல் வேற்றுமை உருபு எவ்வெப் பொருளில் வழங்குகின்றது என்பதை விளக்குக.

ஆல் உருபு கருவி, கருத்தா பொருள்களில் அமையும் என்பது இலக்கணநூலார் கருத்து.
உ-ம் : கம்பரால் கம்பராமாயணம் இயற்றப்பட்டது - கருத்தாப் பொருள்
சாவியால் கதவைத் திறந்தான் - கருவிப் பொருள்

காரணப்பொருள், மூலப்பொருள்களுக்கும் ஆல் வேற்றுமை உருபு பயன்படுத்தப்படுகின்றது.
உ-ம் : குமரன் உழைப்பால் உயர்ந்தான் - கருத்தாப் பொருள்
தங்கத்தால் செய்த காப்பு - மூலப் பொருள்

26. உடன்நிகழ்ச்சி வேற்றுமை பற்றிச் சுருக்கமாக விளக்குக.

இரண்டு அல்லது பல பெயர்ச்சொற்கள் ஒரே சமயத்தில் ஒரே வினை நிகழ்வுக்கு உள்ளாவதைச் சுட்டுவது உடன்நிகழ்ச்சி வேற்றுமை எனப்படும்.
உ-ம் : கணவனோடு மனைவி வந்தாள்.
மரம் வேரோடு சாய்ந்தது.

27. கொடை வேற்றுமை பற்றிச் சுருக்கமாக விளக்குக.

கொடைப்பொருள் இவ்வேற்றுமையின் பிரதான பொருள் என்பதால் இது கொடை வேற்றுமை எனப்படுகின்றது. இதனை நான்காம் வேற்றுமையினுள் அடக்கிக் கூறுவர்.
உருபு - கு, பொருள் - கொடை, பகை, நட்பு, முறை, தகுதி, அதுவாதலால், காரணப்பொருள், எல்லைப்பொருள் போன்றன.
உ-ம் : அப்பா தம்பிக்குப் பணம் கொடுத்தார் - கொடை
கற்றவர்க்கு அழகு அடக்கம் - தகுதி

28. நீங்கல் வேற்றுமை பற்றி விளக்குக.

நீங்கல் வேற்றுமை ஐந்தாம் வேற்றுமை என இலக்கணநூல்கள் கூறுகின்றன. நீங்கல் என்பது ஓரிடத்திலிருந்து விலகுவதைக் குறிக்கும். நீங்கல் பொருள் தவிர ஒப்புப்பொருள், எல்லைப்பொருள், ஏதுப்பொருள் ஆகியவற்றையும் இவ்வேற்றுமை சுட்டும் எனக் கூறப்படுகின்றது.
உருபு - இல், இன் சொல்லுருபு - இருந்து
உ-ம் : தென்னை மரத்திலிருந்து தேங்காய் விழுந்தது.

29. உடைமை வேற்றுமை பற்றித் தெளிவுபடுத்துக.

உடைமை வேற்றுமையை ஆறாம் வேற்றுமை என இலக்கண நூல்கள் கூறும். இங்கு இரண்டு பெயர்ச்சொற்களுக்கு இடையேயுள்ள உறவை, உடைய, அது எனும் உருபுகள் சுட்டி நிற்கின்றன.
உருபுகள் : அது, இன் சொல்லுருபு - உடைய
உ-ம் : கண்ணனுடைய புத்தகம், எனது தந்தை

30. இடவேற்றுமை உருபுகளையும் அவற்றின் பொருளையும் தெளிவுபடுத்துக.

இட வேற்றுமை ஏழாம் வேற்றுமை என இலக்கண நூல்கள் கூறும்.
உருபுகள் - கண், இல், இடம் போன்றன பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் தற்காலத்தில் இல், இடம் எனும் உருபுகள் பெரிதும் பயன்படுகின்றன.
உ-ம் : குருவி வானத்தில் பறக்கிறது, கண்ணனிடம் புத்தகம் இருக்கிறது

31. வினைச்சொற்களின் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.

வேற்றுமை உருபை ஏற்காமை வினைச்சொற்களின் முக்கிய பண்பாகும்.
- செயலை உணர்த்துவன - ஓடினான், எழுதினான்
- ஏவல் பொருளில் வருவன - நட, வா, இரு
- காலம் காட்டுவன - நடக்கின்றேன், நடந்தேன், நடப்பேன்
- வினை விகுதிகளைப் பெறுவன - வந்தேன் (விகுதி - ஏன்)
- வினையடைகளைப் பெறுவன - வேகமாக ஓடினேன்

32. தனிவினை, கூட்டுவினை என்பதை வேறுபடுத்தி விளக்குக.

தனி வினையடியைக் கொண்ட வினைச்சொற்கள் தனிவினை எனப்படும்.
உ-ம் : வா, போ, இரு

கூட்டு வினையடியைக் கொண்ட வினைச்சொற்கள் கூட்டுவினை எனப்படும். இக்கூட்டுவினை பின்வரும் வகையில் ஆக்கப்படுகின்றன.

பெயர் + வினை = வினை - தந்தி + அடி = தந்தியடி
வினை + வினை = வினை - கண்டு + பிடி = கண்டுபிடி
இடை + வினை = வினை - பின் + பற்று = பின்பற்று

33. தெரிநிலை வினைமுற்றின் அமைப்பை உதாரணம் தந்து விளக்குக.

வினையடி, கால இடைநிலை, திணை, பால், எண், இட, விகுதி என்ற அமைப்பில் வருவன தெரிநிலை வினைமுற்று எனப்படும்.

உ-ம் : உண்கின்றான் - உண் + கின்று + ஆன்

விடு, பெறு போன்ற வினைகள்கால இடைநிலை பெறாது ஈறு மெய் இரட்டித்து இறந்தகாலம் காட்டும்.

உ-ம் : பெற்றான் - பெறு - பெற்று - பெற்றான்

34. எதிர்மறை வினைமுற்றின் அமைப்பை விளக்குக.

வினை நிகழாமையை உணர்த்தும் வினைகள் எதிர்மறை வினைகள் எனப்படும்.
மூன்று நிலைகளில் எதிர்மறை வினைமுற்றின் அமைப்புக்கள் காணப்படுகின்றன.

1. ஆ.... ஆத் ஆகிய எதிர்மறை இடைநிலை பெறுவன - அவை வரா, அது வராது
2. மாட்டு என்ற எதிர்மறை இடைநிலை பெறுவன - செய்யமாட்டேன்
3. இல்லை என்ற எதிர்மறை இடைநிலை பெறுவன - நீ போகவில்லை

35. ஏவல் வினைமுற்றுப் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

முன்னிலையில் இருக்கும் ஒருவரை ஒரு செயலைச் செய்யுமாறு அல்லது செய்யாமல் இருக்குமாறு பணிக்கப் பயன்படும் வினை ஏவல் வினை எனப்படும்.

1. ஏவல் ஒருமை - கைவிடு
2. ஏவல் பன்மை - வாருங்கள்
3. எதிர்மறை ஏவல் ஒருமை - போகாதே
4. எதிர்மறை ஏவல் பன்மை - செய்யாதீர்கள்

36. வியங்கோள் வினைமுற்றின் அமைப்பையும் பொருளையும் விளக்குக.

வினையுடன் க, இய, இயர் விகுதி பெற்று வருக, வளர்க, வாழ்க, ஒழிக, வீழ்க, வாழிய, வாழியர், வாழட்டும் என்ற வகையில் வரும் வியங்கோள் வினை வாழ்த்தல், வைதல், வேண்டல், விதித்தல் பொருள்களில் இருதிணை ஐம்பால் மூவிடத்திலும் வரும்.

37. பெயரெச்சத்தின் அமைப்பை உதாரணம் தந்து விளக்குக.

இறந்தகாலப் பெயரெச்சம் செய்த, நிகழ்காலப் பெயரெச்சம் செய்கின்ற, எதிர்காலப் பெயரெச்சம் செய்யும் என்ற வாய்ப்பாட்டில் அமைகின்றன. இறந்தகால, நிகழ்காலப் பெயரெச்சங்கள் ஒருவகை அமைப்பும் எதிர்காலப் பெயரெச்சம் வேறுவகை அமைப்பும் உடையன.

- இறந்தகாலப் பெயரெச்சத்தின் அமைப்பு
  வினையடி + இறந்தகால இடைநிலை + அ - வந்த, நின்ற, கண்ட
- நிகழ்காலப் பெயரெச்சத்தின் அமைப்பு
  வினையடி + நிகழ்கால இடைநிலை + அ - படிக்கின்ற, ஓடுகின்ற, செய்கின்ற
- எதிர்காலப் பெயரெச்சத்தின் அமைப்பு
  வினையடி + உம் - செய்யும், ஓடும், நிற்கும்

38. செய்து வினை எச்சத்தின் அமைப்பையும் பயன்பாட்டையும் விளக்குக.

- வினையடி + இறந்தகால இடைநிலை + உ - செய்து, படித்து, நடந்து (பெரும்பாலானவை இவ் வடிவத்தையே பெற்றுள்ளன)
- வினையடி + இ - ஓடி, பாடி, தேடி
- போ என்ற வினை மட்டும் போய் என்ற வினையெச்ச வடிவத்தைப் பெறுகின்றது.

இவ்வினையெச்ச வடிவம் கூட்டுவினை ஆக்குவதற்கும், வாக்கியங்களை ஒன்றோடொன்று இணைப்பதற்கும் பயன்படுகின்றன.

உ-ம் : வினை + வினை = வினை
எடுத்து + வை - எடுத்துவை

39. செய வினை எச்சத்தின் அமைப்பையும் பயன்பாட்டையும் விளக்குக.

வினையடி + அ என்ற அமைப்புடையன. - காண, படிக்க, நடக்க
கூட்டுவினைகளை ஆக்குவதற்கும் வாக்கியங்களை இணைப்பதற்கும் இவ்வெச்ச வடிவம் பயன்படுகின்றன.

- கூட்டுவினை ஆக்கம்
  செய்ய எனும் வினையெச்சத்துடன் வினைகளைச் சேர்த்துக் கூட்டுவினைகள் ஆக்கப்படுகின்றன.
  உ-ம் : செய்ய + முடியும் - செய்யமுடியும்
- வாக்கிய இணைப்பு
  உ-ம் : கமலா ஆடினாள், விமலன் பாடினான் ஆகிய இவ்விரு வாக்கியங்களையும், கமலா ஆட விமலன் பாடினான் என இணைக்கப்படுகின்றது.

- நான் நண்பனைப் பார்க்கக் கண்டிக்குச் சென்றேன் என்ற வாக்கியத்தில் நான் கண்டிக்குச் சென்றேன் தலைமை வாக்கியம். நண்பனைப் பார் என்பது துணை வாக்கியம். இங்கு நண்பனைப் பார்க்க என வினையெச்சத் தொடராக மாற்றப்பட்டு பிரதான வாக்கியத்துள் இணைக்கப்படுகின்றது.

40. செய்தால் வினை எச்சத்தின் அமைப்பையும் பயன்பாட்டையும் விளக்குக.

வினையடி + இறந்தகால இடைநிலை + ஆல் என்ற அமைப்புடையன.
உ-ம் : படித்தால், கற்றால், செய்தால்
இது நிபந்தனை வினையெச்சம் எனவும் கூறப்படுகின்றது.

41. செயப்படுபொருள் குன்றிய, குன்றா வினைகளை வேறுபடுத்துக.

வாக்கியத்தில் செயப்படுபொருளை ஏற்று வரக்கூடிய வினைகள் எல்லாம் செயப்படுபொருள் குன்றாவினைகள் எனப்படும்.
உ-ம் : சாப்பிடு, எழுது, படி எழுது - நான் கவிதை எழுதினேன்
செயப்படுபொருளை ஏற்காத வினைகள் செயப்படுபொருள் குன்றிய வினைகள் எனப்படும்.
உ-ம் : சிரி, ஓடு, அழு, நட ஓடு - நான் வேகமாக ஓடினேன்

42. செயப்பாட்டு வினையின் அமைப்பை விளக்குக.

செயப்படுபொருளை எழுவாயாகக் கொள்ளும் வினை செயப்பாட்டு வினை எனப்படும்.
செயப்பாட்டு வினையின் அமைப்பு :
வினையெச்சம் (செய்ய) + படு + கால இடைநிலை + திணை பால் விகுதி

உ-ம் : கொல்லப்பட்டான் - கொல்ல + பட்ட + ஆன்
கொல்லப்படுகிறான் - கொல்ல + படு + கின்று + ஆன்
கொல்லப்படுவான் - கொல்ல + படு + வ் + ஆன்

43. பிறவினையும் காரண வினையும் வேறுபடுத்திக் காட்டுக.

ஒரு வினையின் பயன் கருத்தாவையன்றி பிறிதொன்றைச் சேருமாயின் அவ்வினை பிறவினை எனப்படும்.

உ-ம் : தம்பி பானையை நிலத்தில் உருட்டினான்.

இங்கு பானையை உருட்டியவன் தம்பி. ஆனால் வினையின் பயனை அடைந்தது அதாவது உருண்டது பானை ஆகும்.

கருத்தா தானே வினையை நிகழ்த்தாமல் பிறிதொருவனைக் கொண்டு வினையை நிகழ்த்தி வினை நிகழ்வதற்கும் காரணமாக இருத்தல் காரணவினை எனப்படும்.

உ-ம் : கண்ணன் பானையை உருட்டுவித்தான் என்பதில் கண்ணன் என்ற எழுவாய் அதாவது கருத்தா வினையை நிகழ்த்தவில்லை. வினை நிகழ்வின் காரணமாக உள்ளார். எனவே பிறவினையிலிருந்து காரணவினை வேறுபடுகின்றது.

44. முதல் வினைக்கும் துணை வினைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை விளக்குக.

அடிப்படைப் பொருளைத்தரும் வினை முதல்வினை எனப்படும்.

உ-ம் : நான் கண்ணன் போவதைப் பார்த்தேன்.

இங்கு பார் என்ற வினை கண்களால் பார்த்தல் என்ற அடிப்படைப் பொருளைத் தருகின்றது.

ஒரு கூட்டுவினையில் முதல்வினையோடு இணைந்து வந்து தன் அடிப்படைப் பொருளையன்றி வேறு இலக்கணப் பொருளைத்தரும் வினை துணைவினை எனப்படும்.

உ-ம் : வியாபாரி என்னை ஏமாற்றப் பார்த்தான்.

இங்கு பார்த்தான் என்பது முயன்றான் என்றும் பொருளைத் தருகின்றது.

45. தனிப் பெயரடை, ஆக்கப் பெயரடை பற்றி விளக்குக.

புது, சிறு, கரு, நெடு, நல் முதலிய அடிச்சொற்களுடன் இய, அ முதலிய விகுதிகளை இணைத்து ஆக்கப்படும் புதிய, சிறிய, கரிய முதலியனவும் தனிப் பெயரடைகள் எனப்படுகின்றன.

பெயர் + ஆன, பெயர் + உள்ள என்ற அமைப்புடைய பெயர் அடைகள் அல்லது கூட்டுப் பெயரடைகள் எனப்படுகின்றன.

உ-ம்: கசப்பான, பண்பான, அழகுள்ள

46. தனி வினையடை, ஆக்க வினையடை பற்றி விளக்குக.

நேற்று, இன்று, நாளை, இனிமேல், மெல்ல, அடிக்கடி போன்றன தனி வினையடைகளாகும். நேற்று, இன்று போன்றன பகாப்பதங்கள். அடிக்கடி, இனிமேல் போன்றன பகுபதங்களாகும். பகாப்பதங்கள் போலவே பகுபதங்கள் தனிச்சொற்கள் போல இயங்குகின்றன. இவற்றைத் தனி வினையடிகள் எனலாம்.

பெயர்ச்சொற்களுடன் ஆக, ஆய் வினையடி விகுதிகளை இணைத்து ஆக்கப்படும் வினையடை ஆக்கவினையடை எனப்படும்.

உ-ம் : வேகமாக, படிப்படியாக, இனிமையாக

47. வினையடைகளின் வகைகளுக்கு உதாரணம் தருக.

வினையடைகளை அவற்றின் பொருள் அடிப்படையில் பலவகையாகப் பாகுபடுத்தலாம்.

- காலம் உணர்த்தும் வினையடைகள்
  வினை எப்பொழுது நிகழ்ந்தது என்பதை உணர்த்தப் பயன்படும் வினையடைகள்.
  உ-ம் : காலையில், இப்பொழுது
- இடம் உணர்த்தும் வினையடைகள்
  வினை எங்கு நிகழ்ந்தது என்பதை உணர்த்துவது.
  உ-ம் : இங்கே, கீழே, பின்னால்
- முறை உணர்த்தும் வினையடைகள்
  வினை எவ்வாறு நிகழ்ந்தது என்பதை உணர்த்துவது.
  உ-ம் : இலகுவாக, இனிமையாக, வேகமாக
- காலத்தொடர்ச்சி உணர்த்தும் வினையடைகள்
  வினை நிகழும் காலத்தொடர்ச்சியை உணர்த்துவது.
  உ-ம் : திடீர் திடீரென, நாள்தோறும்
- அளவு உணர்த்தும் வினையடைகள்
  வினை எந்த அளவில் நிகழ்கிறது என்பதை உணர்த்துவது.
  உ-ம் : சிறுபான்மையாக, குறைவாக, பெருமளவில்
- வினையடைகள் அடுக்கி வருதல்
  வினையடைகள் அடுக்கி வருதல் - பன்மைப் பொருள் உணர்த்துவன.
  உ-ம் : அழகழகாக, சின்னச்சின்னதாக

48. இடைச்சொற்கள் என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்துக.

தனித்து நின்று பொருள் தராமல், பெயர், வினை ஆகியவற்றுடன் சேர்ந்து வந்து இலக்கணப் பொருள்தரும் சொல் உறுப்புக்கள் இடைச்சொற்கள் எனப்படும். இடைச்சொற்கள் பல வகைப்படும்.

- வேற்றுமை உருபுகள் - ஐ, ஆல், கு, இன், அது, உடைய, ஓடு, இல், இருந்து
- பன்மை விகுதிகள் - கள், மார்
- திணைபால் விகுதிகள் - ஏன், ஓம், ஆய், ஈர்கள், ஆன், ஆள், ஆர், ஆர்கள், அது, ஆ
- கால இடைநிலைகள் - கின்று, கிறு, த், ட், ற், இன், ன், ப், வ்
- தொழிற்பெயர் விகுதிகள் - தல், அம், மை
- சாரியை - அத்து, அற்று, அம்
- எதிர்மறை இடைநிலைகள் - ஆ, ஆத், மாட்டு
- சொல்லுருபுகள் - மூலம், கொண்டு, இருந்து, பற்றி வரை

49. அகப்புணர்ச்சி, புறப்புணர்ச்சி பற்றி உதாரணம் தந்து விளக்குக.

ஒரு சொல்லின் உறுப்புக்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து வருவது அகப்புணர்ச்சி எனப்படும்.
உ-ம் : நாம் + கள் - நாங்கள்

இரண்டு அல்லது பல சொற்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து சொற்றொடராகவோ, வாக்கியமாகவோ வருவது புறப்புணர்ச்சி எனப்படும்.
உ-ம் : நாங்கள் மரத்தை வெட்டினோம்.

50. வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி பற்றி தெளிவுபடுத்துக.

எழுவாய் வேற்றுமையும், விளி வேற்றுமையும் தவிர்ந்த ஏனைய ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலிய வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டும், மறைந்தும் வர சொற்கள் புணர்வது வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும்.

ஒரு சொல்லின் உறுப்புக்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து வருவது அகப்புணர்ச்சி எனப்படும்.

உ-ம் : வீடு கட்டினான், வீட்டைக் கட்டினான்

வேற்றுமைப்புணர்ச்சி தவிர்ந்த ஏனைய எல்லாவகைப் புணர்ச்சிகளும் அல்வழிப்புணர்ச்சி எனப்படும்.

உ-ம் : அவள் வந்தாள், பாம்பு பாம்பு, குருவி கூடு கட்டியது

# உரைநடைப்பகுதி

## அடையப்பட வேண்டிய தேர்ச்சிகளும் தேர்ச்சி மட்டங்களும்

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 1.0 | : | தொடர்பாடல் திறனை விருத்தி செய்யும் வகையிலே கட்டுருவாக்கத்திறன் உள்ளவராகச் செயற்படுவார். |
| | 3.0 | : | உரைநடை இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன்வைப்பார். |
| | 4.0 | : | இலக்கியங்களைக் கற்பதன் ஊடாகத்தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார். |
| தேர்ச்சிமட்டம் | 1.1 | : | செயல்திறனும் வினைத்திறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார். |
| | 1.2 | : | சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவகையில் பண்போடு உரையாடுவார். |
| | 1.3 | : | எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் புலப்படுத்திப் பண்போடு பேசுவார். |
| | 1.4 | : | குறித்த விடயம் தொடர்பாக வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் நிகழ்ச்சிகளிலும் தமது கருத்துக்களை ஆற்றலுடன் முன்வைப்பார். |
| | 1.5 | : | பல்வேறு சந்தர்ப்பங்கள் நோக்கங்களுக்கு ஏற்ப செயற்படுவார். |
| | 3.1 | : | உயிர்த்துடிப்புள்ள கட்டுருவாக்கச் செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவார். |
| | 3.2 | : | இலக்கியங்கள் தோன்றிய பின்னணியை அறிந்து கூறுவார். |
| | 3.3 | : | பாடத்தை அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்துக் கருத்துக்களை முன்வைப்பார். |
| | 4.1 | : | பல்வேறு ஆக்கங்களை வாசித்துக் கிரகித்து, அவற்றில் இடம்பெறும் மொழிக்கூறுகளைப் பகுத்துக் கருத்துக்களை முன்வைப்பார். |
| | 4.2 | : | ஆக்கங்களை வாசித்துப் பெற்ற அனுபவத்தினூடாகச் சுய ஆக்கங்களைப் படைப்பார். |
| | 5.2 | : | புலவர்கள் படைப்பாளிகளினது படைப்பாற்றல் திறன்களையும் படைப்புகள் பற்றியும் எடுத்துக்கூறுவார். |
| | 7.4 | : | சொற்களின் அமைப்பையும் வகைகளையும் அறிந்து மொழியைச் செம்மையாகப் பயன்படுத்துவார். |
| | 7.5 | : | வாக்கிய அமைப்பையும் அதன் வகைகளையும் பிரயோகிப்பார் |

## கட்டுரைப் பகுதி.

### இயற்கை அனர்த்தங்களும் பாதுகாப்பும்.

1. இயற்கை அனர்த்தங்கள் எவை?
   சுனாமி / ஆழிப்பேரலை
   வெள்ளப்பெருக்கு
   வரட்சி
   இடிமின்னல்
   மண்சரிவு
   பூமியதிர்வு

2. இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?
   இயற்கையானவை
   செயற்கையானவை

3. இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுத்தும் பாதிப்புகள் எவை?
   இயற்கையின் அழிவுகள்
   உயிர்ச்சேதம்
   உடைமைகள்

4. முன்னெச்சரிக்கை செய்யும் அமைப்புக்களாகக் கருதத்தக்கவை எவை?
   அரசு, தனியார்

### பேச்சுத்தமிழும் செந்தமிழும்.

1. தமிழில் இருவகை வழக்குகள்
   பேச்சுவழக்கு, இலக்கிய வழக்கு

2. நவீனகாலம் வரை செந்தமிழே செல்வாக்குப் பெற்றிருந்தது..
   இலக்கியங்கள், இலக்கண நூல்கள், உரைநூல்கள் அனைத்தும் இலக்கியத் தமிழிலேயே எழுதப்பட்டவை.
   செந்தமிழ் அனைவர்க்கும், எல்லாத் தமிழ் பேசும் பிரதேசங்களுக்கும் பொதுவான நியமத்தமிழ் எனக் குறிப்பிடப்படுகிறது.

3. பேச்சுத்தமிழ் பிரதேசத்திற்குப் பிரதேசம், சமூகத்திற்குச் சமூகம் வேறுபடும்.. இவற்றை கிளைமொழிகள் என்றும் அழைப்பர்.
   சமூகக் கிளைமொழி - மீனவ சமூகம், விவசாய சமூகம்
   பிரதேசக்கிளைமொழி - மலையகம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு

4. நவீன இலக்கியங்களின் வரவின் பின் அவ்வப் பிரதேசப் பேச்சுத்தமிழ் இலக்கியங்களிற் செல்வாக்குப் பெறல்.
   நாவல், சிறுகதை, நாடகம்

5. பண்டைய இலக்கணங்கள் இலக்கியத் தமிழிற்கு முதன்மை கொடுத்தல்
   நவீன இலக்கணகாரர் பேச்சுத்தமிழிற்கு முதன்மை கொடுத்தல்.

## விஞ்ஞானமும் சமூகமும்.

1. இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை. மனித அறிவியலின் வியத்தகு வளர்ச்சியில் புதிய கண்டுபிடிப்புக்கள் தோற்றம் பெறல்.

2. விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களைத் துறைசார்ந்து நோக்குவதுடன் அவற்றின் சமூகப் பயன்பாடுகள்பற்றியும் குறிப்பிடல்.
   - வைத்தியம்
   - போக்குவரத்து
   - விவசாயம்
   - கல்வி
   - விண்வெளி ஆய்வுகள்
   - வாழ்வாதாரத் தேவைகள்

3. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால் சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்புக்கள்

4. சமூகத்திற்கு ஏற்ப விஞ்ஞானத்தைப் பயன்படுத்த வேண்டிய தேவை.

## விஞ்ஞான வளர்ச்சியும் தமிழும்.

1. விஞ்ஞானவளர்ச்சியும் தமிழ்மொழியும் எனும் கட்டுரைக்கான உரிய முன்னுரை

2. விஞ்ஞான வளர்ச்சி
   பல்துறை வளர்ச்சிகள்
   மொழிவிருத்திக்கான விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள்

3. தமிழ்மொழி
   காலத்துக்குக் காலம் அது அடைந்துவரும் வளர்ச்சி
   தமிழ் உள்வாங்கிய விஞ்ஞானம்

4. தமிழ்மொழி விருத்திக்கு விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் பயன்பட்டமை
   எழுத்தாணி முதல் கணினி - இணையம் வரை
   எழுத்து அமைப்பு
   எழுதுகருவிகள்

5. "அறிவியற்தமிழ்" எனும் தமிழ் வகையின் தோற்றமும் வளர்ச்சியும்
   தமிழில் துறைசார் கலைச்சொற்கள்
   தமிழ்மொழி மூலம் அறிவியல் கற்றல் - கற்பிக்கப்படுதல்

## ஒழுக்கம் விழுப்பம் தரும்.

- ஒழுக்கம் பற்றிய விளக்கம்
- விழுப்பம் பற்றிய விளக்கம்
- ''ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
  உயிரினும் ஓம்பப் படும்''
  
  திருக்குறளை மையமாக வைத்து கட்டுரையின் உடல் பகுதியில் விளக்கம் கொடுக்கலாம்.
- ஒழுக்கத்தால் உயர்ந்தவர்கள்
- ஒழுக்கத்தின் பெருமைகள்
- ஒழுக்கம் இன்மையால் ஏற்படும் இழிவுகள்
- முடிவுரை மேற்கூறியவற்றின் தொகுப்பாக அமையலாம்.

## நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாத்தல்.

- கட்டுரைத் தலைப்புக்கு உகந்த முன்னுரை, தெளிவு, விளக்கம்
- நாட்டுப்புறக் கலைகள் - விபரித்தல்.
- நாட்டுப்புறக் கலைகள் - பயிலப்பட்டு, ஆற்றுகை செய்யப்பட்டு மரபுவழி கடத்தப்பட்டு வந்த விதம்.
- அவற்றைப் பேணிப் பாதுகாக்கும் முறைகள், வழிகள்.
- கலைகளைப் பயிலுதல், படைத்தல் (ஆற்றுகை செய்தல்).
- கலைகளுக்கான அதிகாரத்தை வழங்குதல்.
- நவீன தொழில்நுட்ப வளர்ச்சிகளைப் பயன்படுத்தும் கதைகளைப் பாதுகாத்தல்.
- கலைகளைப் பாதுகாக்க உரிய அரச, தனியார் ஆதரவுகளைப் பெறுதல்.
- அவற்றைப் பாதுகாப்பதால் மொழி, சமூக, பண்பாட்டு, இன அடையாளங்கள் கடத்தப்படுவதின் முக்கியத்துவம் பற்றி பொதுமக்களுக்குப் புலப்படுத்தல்.

## சிற்றிதழ்களும் நவீன தமிழிலக்கிய வளர்ச்சியும்

- சிற்றிதழ் என்றால் என்ன?
- சிற்றிதழின் நோக்கம்
- யாரை நோக்கமாகக் கொண்டெழுவது

  இவை போன்றவை முன்னுரையில் அமையலாம்.
- சிற்றிதழ் விற்பனையையும் இலாப நோக்கையுமன்றிக் காத்திரமான கருத்துப் பரிவர்த்தனையை இலட்சியமாகக் கொண்டு நடத்தப்படுவது.
- சனரஞ்சக வாசகர்களை மையமாகக் கொள்வதில்லை.
- அறிவை, தெரிந்த இலக்கிய, சமூக கருத்துக்களை வெளிப்படுத்துவதாக அமைவது சிற்றிதழ் இலக்கியமாகும்.
- முக்கியமான சிற்றிதழ்கள் சில :

  மணிக்கொடி, சூறாவழி, கிராம ஊழியன், சரஸ்வதி - (தமிழகம்)

  மறுமலர்ச்சி, பாரதி, மல்லிகை, தாயகம், ஞானம், மூன்றாம் மனிதன், கொழுந்து (இலங்கை)
- தற்கால இலக்கிய வளர்ச்சியில் இவற்றின் முக்கியத்துவம்
- புதிய விமர்சனச் சிந்தனைகள் வெளிப்படக் களமமைத்தல்
- இலக்கிய சர்ச்சையில் ஈடுபடல்
- மொழி பெயர்ப்புப் படைப்புகளுக்கு முக்கிய இடமளித்தல்
- தரமான படைப்புக்கள் வெளிவர வழிவகுத்தல்

## புலம்பெயர் இலக்கியம்.

**முன்னுரை**

புலம்பெயர்வு என்பது ஒரே அரசியல், பூகோள எல்லையை விட்டுப் பெயர்ந்து சமூக அரசியல், பண்பாட்டுச் சூழ்நிலைகளால் பெரிதும் வேறுபட்ட பிரதேசத்தில் வாழ நேரிடுகிறவர்களைக் குறிக்கிறது. இவ்வாறு புலம்பெயர்ந்தவர்கள் தமது அனுபவங்களை இலக்கிய வடிவங்களைக் கைக்கொண்டு படைப்பாக்கினர்.

- கவிதை, சிறுகதை, நாவல் ஆகிய இலக்கிய வடிவங்கள் புலம்பெயர் படைப்பாளிகளால் பெரிதும் எடுத்தாளப்பட்டுள்ளன.

**பேசுபொருள் :**

தாயகம் குறித்த ஏக்கம், புதிய பண்பாட்டுச்சூழல், பொருளாதார நெருக்கடிகள், வேலையில்லாத் திண்டாட்டம், வேலைத்தள அனுபவங்கள், நிறவாதம், தனிமனித சுதந்திரம், பாலியல் சார்ந்த விடுதலை, அன்னியமயப்பாடு, இயக்க, சாதிய முரண்பாடுகள், பெண்ணியம் எனப் பல விடயங்கள் இலக்கியங்களில் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

**கவிதை :**

வ. ஐ. ச. ஜெயபாலன், சேரன், ஆதவன், இளவாலை விஜேந்திரன், செழியன், ஊர்வசி, மைத்திரேயி, கி. பி. அரவிந்தன், ஷோபா சக்தி, செல்வம், நட்சத்திரன், செவ்விந்தியன், திருமாவளவன், பாலகணேசன், படைப்பு முயற்சிகள், துருவச் சுவடுகள், புலம்பெயர் கவிதைகள் உள்ளிட்ட நூறிற்கு மேற்பட்ட கவிதைத் தொகுப்புக்கள்.

**சிறுகதை :**

அ. முத்துலிங்கம், பொ. கருணாகரமூர்த்தி, கலாமோகன், சக்கரவர்த்தி, பார்த்தீபன், விமல் குழந்தைவேல், ஷோபா சக்தி, முருகபூபதி, ராஜேஸ்வரி, பாலசுப்பிரமணியம், சுமதிரூபன், அ.இரவி, சித்தார்த்த சேகுவாரா, சிறிதரன் உள்ளிட்ட படைப்பாளிகளின் சிறுகதைகள் எண்பதிற்கும் அதிகமான தொகுப்புக்கள்.

**நாவல் :**

கவிதை, சிறுகதை என்பவற்றோடு ஒப்பிடுகையில் நாவலின் வரவு குறைவாகவே உள்ளது. கருணாகரமூர்த்தி, பார்த்தீபன், ராஜேஸ்வரி, கி. செ. துரை, முருகபூபதி, முல்லை அமுதன் ஆகியோர் குறிப்பிடத்தக்க நாவலாசிரியர்கள் ஆவர்.

உ-ம் : ஷோபா சக்தியின் கொரில்லா, ஈழப்போராட்ட அரசியலை மையப்படுத்தியது.
ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் - ஒரு கோடை விடுமுறை இலங்கை - இலண்டன் ஆகிய சூழலை மையப்படுத்தி வெளிவந்துள்ளது.

**சஞ்சிகைகள்**

பிரான்ஸில் 36 இற்கு மேற்பட்ட சஞ்சிகைகளும் (அம்மா, ஆதங்கம், சமர்) ஜேர்மனியில் 30 இற்கு மேற்பட்ட சஞ்சிகைகளும் (ஊதா, அக்கினி, தளிர்) இங்கிலாந்து, சுவிஸ், டென்மார்க், நோர்வே, கனடா, அவுஸ்திரேலியா எனப் பலநாடுகளில் இருந்தும் நூறிற்கு மேற்பட்ட சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன.

இணைய சஞ்சிகைகளின் வருகை என்பனவும் புலம்பெயர் இலக்கியக் களத்தில் காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகின்றன.

## ஊடகங்களின் தமிழ்ப் பணி.

1. செய்தியை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குக் கொண்டு செல்வது.
   இரு வகை:
   1. அச்சியல் ஊடகம் - பத்திரிகை, சஞ்சிகை.
   2. மின்னியல் ஊடகம் - தொலைக்காட்சி, வானொலி, இணைய வலைப்பின்னல்.

2. பத்திரிகைகள் சஞ்சிகை ஆரம்பித்ததிலிருந்தே தமிழ்ப்பணி
   பொது மக்களுக்கு விளங்கும் எளிமையான அறிவிப்பு நடைமுறை அறிமுகம்.
   மணிக்கொடி - சிறுகதை வளர்ச்சி.
   வானம் பாடி க ச ட த ப ற - புதுக்கவிதை வளர்ச்சி.
   ஈழகேசரி, மறுமலர்ச்சி - ஈழத்து நவீன இலக்கியங்கள்.

3. வானொலி, தொலைக்காட்சி.
   பண்டைய நவீன இலக்கியங்கள், கோட்பாடுகள் பற்றிய உரைகள், பேட்டிகள்.
   புதிய இலக்கிய வெளியீட்டு முயற்சிகள் பற்றிய செய்திகள் - எழுத்தாளர்கள் பற்றிய தத்துவங்கள்.
4. இணையம் : இணைய நூலகங்களில் பெருந்தொகையான பண்டைய நவீன இலக்கியங்கள் பதிவேற்றப்பட்டிருத்தல். இணையத்திற்கென்றே சஞ்சிகைகள் வடிவமைப்பு.

5. ஊடகங்களின் செல்வாக்கினால் இலக்கியங்களை வாசிக்கவும், எழுதவும் நேரமற்ற நிலை. தொலைக்காட்சி நாடகங்கள், தொடர் நாடகங்கள்.

## விஞ்ஞானத்தின் வியத்தகு முன்னேற்றம்

- ‘அறிவியல் சார்ந்த வளர்ச்சி’ விஞ்ஞான வளர்ச்சிக்கு வித்திட்டதை எடுத்துக் காட்டல்.
- மனித வாழ்வுடன் விஞ்ஞானம் பிணைந்திருப்பதை எடுத்துக் காட்டல்.
    - சமையலறை உபகரணங்கள்.
    - தொலைத்தொடர்புச் சாதனங்கள்.
    - பொழுது போக்குச் சாதனங்கள்.
    - வாழ்க்கைத் தேவைகளை இலகுவாக்கும் பொறிகள்.
    - போக்குவரத்துப் பொறிகள்.
    - நோய் நிலையறி கருவிகள், மருந்துகள் கண்டுபிடிப்பு.
- உலகை உருக்குலைக்கும் ஆயுதங்களது பாவனையும் அதனால் ஏற்படும் மனித வாழ்வுச் சீர்குலைவும் பற்றி விளக்குதல்.
- விஞ்ஞான அறிவை நன்மை கொடுக்கும் விதத்திலே கையாள்வதே சிறந்தது என்பதை வலியுறுத்தல்.

## தொலைத் தொடர்புச் சாதனங்கள்

- தொலைத் தொடர்புச் சாதனங்கள் பற்றிய அறிமுகம்.
- அச்சாதனங்கள் மூலம் மக்கள் அடைந்த நன்மைகள்.
- உலகில் எங்கு இருப்பவருடனும் வீட்டிலிருந்தே உடனுக்குடன் தொடர்பு கொள்ள முடியும். முகம் பார்த்து கலந்துரையாடக் கூடியதாகவும் அமைதல்.
- கணினி, இணையத்தளம் என்பதனால் மனித சமுதாயம் பெறத்தக்க முன்னேற்றம் - தெடர்பாடலின் இலகுத் தன்மை.

## செம்மொழியான தமிழ் மொழி

1. உலகிற் செம்மொழிகள்.

    கிரேக்கம், எபிரேமியம், சீனம், இலத்தீன், சமஸ்கிருதம், அரபு, தமிழ்.பாரசிகம்

    நீண்ட இலக்கியப் பாரம்பரியம்.

    செவ்வியல் இலக்கியங்கள் இருத்தல்.

2. தமிழ் 1994 ஆம் ஆண்டு செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

    காரணங்கள் : 1. 2000 வருடங்களிற்கு மேற்பட்ட சிறந்த இலக்கியப் பாரம்பரியம்.

    2. இன்றும் வழக்கில் உள்ளமை.

3. செம்மொழியாக்கப்பட்டதால் ஏற்பட்ட நன்மைகள்.
    1. சர்வதேச அங்கீகாரம்.
    2. உலகப் பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழிப் பீடங்கள்
    3. பிற நாட்டவர்கள் தமிழ் மொழியைக் கற்கும் வாய்ப்பு.

3. செய்ய வேண்டிய பணிகள்.
    1. தமிழ் மொழி இலக்கியங்களுட் சிறந்தவற்றைப் பிற மொழிகளில் மொழி பெயர்த்தல்.
    2. பிற மொழி இலக்கியங்களை தமிழில் மொழி பெயர்த்தல்.
    3. கணனியில் அனைவர்க்கும் பொதுவான நியமத் தமிழ் எழுத்துக்களை உருவாக்கல்.

## செய்யும் தொழிலே தெய்வம்.

- ஒவ்வொருவரும் உயிர் வாழ்வதற்கு உழைப்பு முக்கியம் பெற்றமை - தொழில் தெய்வம் எனப் போற்றப்பட்டமை.
- தொழில் உழைப்பு ஊதியம் சமூக வரலாற்றில் பெறும் இடம்.
- தொழில்களும் தொழில் வாய்ப்புக்களும் அவற்றின் மீதான கேள்விகளும்.
- தொழில்களின் அடுக்கமைவு மரபு நவீன தொழில்கள்.
- எத்தொழிலைச் செய்தாலும் அதனைச் சீரும் சிறப்புடனும் செய்தல் வேண்டும்.
- செய்யும் தொழிலுக்கு முன்னுரிமை கொடுப்பது உரிய கடமைகளைச் செவ்வனே மேற்கொள்வது.

- இறை நம்பிக்கையில் ''தெய்வம்'' நம்பியவரைக் கைவிடுவதில்லை என்பது போல் தொழிலும் ஒருவனைக் கைவிடுவதில்லை.
- சிந்தனையுடன் செய்த தொழில் ஒருவனை வாழ்நாள் முழுவதும் காப்பாற்றும்.

## பெண் விடுதலையும் இன்றைய சமூகமும்.

- ''பெண் விடுதலை'' பற்றிய கருத்துக்களை முதன்முதல் மக்கள் மத்தியில் விதைத்தவர் பாரதியார்.
- பாரதியார் தெரிவித்த கருத்துக்கள் சில:
    - பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினிலே பெண்கள் நடத்த வந்தோம்.
    - வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம். என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.
    - நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை...
- பெண் விடுதலை இன்றைய சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றிய விளக்கம்.
- பெண் சுதந்திரம் அதாவது விடுதலை என்னும் கருத்து, சில இடங்களில் பாரிய விளைவுகளை, தாக்கங்களை ஏற்படுத்துவது பற்றிக் குறிப்பிடல் - சமூகச் சீர் குலைவு.
- அந்நிலைக்கு பெண் விடுதலை காரணம் அல்ல என்பதும் அதனைத் தவறாக சில பெண்கள் கையாள்வதை எடுத்துக் காட்டி, அதனால் பெண் சமூகம் சீர் கெடுவது பற்றி விளக்குதல்.
- தமிழ்ச் சமூகக் கட்டுக் கோப்புக்குள் பெண் விடுதலை எனும் கருத்து விதைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி முடித்தல்.

## நாட்டார் பாடல்கள்.

- நாட்டார்பாடல்கள் படிப்பறிவில்லாத பாமரர்களால் பாடப்பட்டவையாகும்.
- உள்ளத்து உணர்ச்சித் தாக்கங்களால் வெளிப்படுத்தப்பட்டவை.
- வேலை செய்யும் போது களைப்பை மறப்பதற்கும், சந்தோசத்தின் வெளிப்பாடாகவும், சடங்குகள், கோயில் திருவிழாக்கள், துக்கங்களின் வெளிப்பாடாகவும் நாட்டார்பாடல்கள் காணப்படுகின்றன.
- தமிழில் நாட்டார்பாடல்கள் மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளன.
- பிறப்புத் தொடக்கம் இறப்பு வரையிலும் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த பாடல்கள் காணப்படுகின்றன.
- பிள்ளை பிறந்தவுடன் மருத்துவிச்சிப் பாடலுடன் ஆரம்பித்து இறந்தவருக்கு ஒப்பாரிப்பாடல் வரை நாட்டார் பாடல்கள் காணப்படுகின்றன.
- சங்க இலக்கியங்கள் தொடக்கம் திரைப்படப் பாடல்கள் வரை நாட்டார் பாடல்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

## கிரகித்தல்

**பயிற்சி – 1**

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

ஆன்ம இயல்பை வெளியிடுபவன் கவிஞன் என்று கூறுவதனால், கவிதைக்கு வேண்டும் இயல்புகள் சில நமக்குப் புலனாகின்றன. முதற்படியாக அவன் கூறுவனவற்றிலே உண்மையின் முத்திரை பதிந்திருத்தல் வேண்டும். உண்மையில்லாமற் போனால் சிறந்த கவிதை தோன்ற மாட்டாது. ஒருவன் நாடகாசிரியனாக இருக்கலாம். பிற பாத்திரங்களின் குணங்களைத் தானே மேற்கொண்டு அவற்றிற்கேற்பச் சொல்லாடலாம். தொழில் புரியலாம். அப்பொழுதும் அவன் உண்மையாகவே பாத்திரங்களின் குணங்களில் பிரவேசித்தல் வேண்டும். உண்மையாகவே பாத்திரங்களை அவன் சிருஷ்டித்தல் வேண்டும். போலி என்பது சிறிதும் தகாது. ஒருவன் அழகான

சிறுசெய்யுட்களை இயற்றலாம். சுவையுள்ள கருத்துக்களை அவற்றில் அமைக்கலாம். ஆனால், இக்கருத்துக்களின் அடிப்படையில் உண்மையிருத்தல் வேண்டும். உணர்ச்சியிருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் இச்செய்யுட்கள் கவிதை என்று சொல்லக்கூடிய தகுதியை அடையும்.

**''உள்ளத்தில் உண்மை யொளி உண்டாயின்**
**வாக்கினிலே ஒளியுண்டாகும்.''**
என்று பாரதி கூறியது இதனை உறுதிப்படுத்தும்.

அடுத்து, இங்கே கூறிய உண்மையோடு தெளிவு என்ற இயல்பும் அவன் கவிதைகளிலே காணுதல் வேண்டும். மணற்பரப்பில் ஓடுகின்ற நன்னீர் தெளிவாயிருப்பதுபோல கவிதையும் தெளிவாயிருத்தல் வேண்டும். இங்ஙனம் தெளிவின்றிச் சேறு முதலியவற்றால் கலங்கி ஓடும் ஓடைநீர் பருகுவதற்குத் தகுதியற்றது. இது போலவே தெளிவின்றி எங்கும் கருகலாய், எவ்வளவு முயன்றாலும் ஐயப்பாட்டின் நீங்காததாய் உள்ள செய்யுட்கள் நாம் கற்று இன்புறுதற்குரிய கவிதைகள் ஆகமாட்டா.

கவிதைக்குரிய வேறோர் இயல்பும் அடுத்தபடி இங்கு மனங்கொள்ளத்தக்கது. அது எளிமையாகும். எப்பொழுதும் எளிய தோற்றத்தோடு அமைதல் மிக அரியதொரு காரியமாம். கம்பனுடைய கவிதைகள் எளியவாய் வெள்ளையாய் உள்ளன என்று பலரும் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். ஆனால், இவ்வாறிருத்தல் அவன் கவிதையின் சிறப்பை உணர்த்துகிறதேயன்றி உள்ளத்தின் வறுமையை உணர்த்துவதாகாது. கடினமான அகராதிப் பதங்களை எடுத்து வழங்கிச் செய்யுட் பொருளைக் கருகலாக்கி அமைக்கும் கவிஞர்கள் சிறந்த கவிஞர்கள் ஆகமாட்டார்கள்.

1. நல்ல கவிதையின் இயல்புகளாக, கட்டுரையாசிரியர் எவற்றைக் கருதுகின்றார்?
   i. உண்மையாக இருத்தல் ii. உணர்ச்சியாக இருத்தல்
   iii. தெளிவு iv. எளிமை

2. சிறந்த கவிஞர்களாக மாட்டாதவர்கள் யாவர் என ஆசிரியர் கருதுகின்றார்?

   கடினமான அகராதி பதங்களை எடுத்து வழங்கி, செய்யுட் பொருளை கருகலாக்கி அமைப்போர் சிறந்த கவிஞராகமாட்டார் என ஆசிரியர் கருதுகின்றார்.

3. ''உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்……'' எனும் பாரதி பாடலை எதனை உறுதிப்படுத்துவதற்காக ஆசிரியர் மேற்கோளாகக் கூறுகின்றார்?

   கவிஞர் அடிப்படையில் கூற எடுத்துக்கொண்ட விடயம் உண்மையானதாக இருத்தல் வேண்டும். இவ்வுண்மை, உணர்ச்சி கலந்து சொல்லப்படும் போது, செய்யுளானது கவிதையாக உயர்ச்சி அடைகிறது எனுங் கருத்தை உறுதிப்படுத்தவே இம்மேற்கோள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

4. ''கம்பனுடைய கவிதைகள் எளியவாய் வெள்ளையாய் உள்ளன'' என்ற வாக்கியத்தில் வெள்ளையாய் உள்ளன என்ற தொடரின் மூலம், உணர்த்தப்படும் விடயம் யாது?

   சிக்கலின்றி, பொருள் புலப்படுத்தக்கூடியதாக, வாசகர்க்கு இலகுவாக இருக்கின்ற தன்மை

**பயிற்சி – 2**

கீழ்வரும் உரைப்பகுதியைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

மானிப்பாய் அகராதியின் பின் தமிழ் அகராதி ஒன்றும் தமிழ் நாட்டில் வெளிவரவில்லை பல குறைகள் இருந்த போதிலும் இவ்வகராதிகள் சென்னையில் பலமுறை அச்சு வாகனமேறிற்று. ஏனெனில் ஆங்கிலம் அறியாத தமிழருக்கு அதுவே ஒரேயொரு அகராதியாய் இருந்தது. ஒவ்வொரு

பதிப்பிலும் இதற்குச் சொற்களை சேர்த்துப் பெருக்கினர். சொற்களைக் கூட்டக் கூட்டக் கடைசியில் இருந்த அளவினின்றும் அது மிகப் பெரியதாய் வளர்ந்தது. அதனால் ஈற்றில் "யாழ்ப்பாண அகராதி" அல்லது "மானிப்பாய் அகராதி" என்ற அதன் பெயர் மாறி "பேரகராதி" அல்லது "விரிவகராதி" என்று அழைக்கப்பட்டது. ஒவ்வொரு பதிப்பிலும் பிழைகள் மலிந்து மலிந்து ஏறின.

இத்தறுவாயில் இவ்வகராதியை அடிப்படையாகக் கொண்டு நா. கதிரவேற்பிள்ளை என்பவர் தமது ஆராய்ச்சியினால் ஓர் அகராதியைத் தொடங்கினார். அவரும் வட்டுக்கோட்டை மிஷனெறியிற் கற்ற மாணவர்களில் ஒருவர் சங்கத மொழியினின்று எடுத்துத் தமிழில் வழங்கிய சொற்களையெல்லாம் இதில் சேர்த்துள்ளார். அன்றியும் சங்கத மொழி நிகண்டுகளிலுள்ள தமிழ் மொழியில் வழங்காத சொற்களையும் எடுத்துள்ளார். மிகச் சிறந்த தமிழ் அகராதி எதுவும் தற்பவமாகவோ தற்சமமாகவோ சங்கத மொழியிலுள்ள சொற்களை உள்ளடக்க வேண்டும் என்பதே அவரின் நோக்கம்.

1. அகராதி வளர்ச்சிக்கு இலங்கை ஆற்றிய பங்களிப்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?
2. மானிப்பாய் அகராதியின் சிறப்பு பற்றி கட்டுரையாசிரியர் குறிப்பிடுவது யாது?
3. நா.கதிரவேற்பிள்ளையின் அகராதி முயற்சிபற்றி குறிப்பிடப்படுவது யாது?
4. கட்டுரையாசிரியரின் மொழிநடைச் சிறப்புப்பற்றிக் குறிப்பிடுக?

**பயிற்சி - 3**

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களிற்கு விடை தருக.

பிராகிருதம் பேச்சு மொழியாகவும், அரசவை மொழியாகவும் இருந்ததாக அசோகர் கல்வெட்டுக்களிலிருந்து தெரிய வருகிறது. இப்போது கிடைக்கும் பிராகிருத மொழிப் படைப்புகள் செய்யுள்களாகவும் கல்வெட்டுக்களாகவும் உள்ளன. இவற்றோடு பாளியிலுள்ள பௌத்த நூல்களும் அர்த்தமாகதியிலுள்ள சமண நூல்களும் சேரும். இந்தியாவில் புழங்கும் பல பிராகிருத மொழிகள் மகாராஷ்டிரியின் திரிபு என்றும் அது சமஸ்கிருதத்தின் திரிபு என்றும் சிலவற்றின் இலக்கணங்கள் கூறுகின்றன. இவற்றில் ஒரு கூறு மொழியமைப்போடு தொடர்புடையது என்றால் மறு கூறு வரலாற்றுத் தன்மையுடையதாயுள்ளது.

தென்னிந்தியத் திராவிட மொழிகளில் தமிழ் தனக்கென ஓர் இலக்கண மரபைக் கொண்டுள்ளது. சமஸ்கிருதப் பகுப்பாய்வு முறைகளைச் சில போது கையாண்டாலும் அது தமிழ் இலக்கணத்தை விளக்குவதில் தன்னிறைவு பெற்றதாகவுள்ளது. பிற திராவிட மொழிகள் குறித்து முற்காலத்தே எழுதப்பட்ட இலக்கண நூல்களில் அவை சமஸ்கிருதத்திலிருந்து கிளைத்ததாகக் கூறப்பட்டுள்ளன. தமிழில் இல்லாத அளவிற்கு மிக அதிகமாக சமஸ்கிருத, பிராகிருத சொற்கள் தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளில் காணப்படுவதும் சமஸ்கிருத ஒலியமைப்போடு கூடிய அவற்றின் நெடுங்கணக்கு முறையும் இத்தகைய கருத்துக்கான உந்து சக்திகளாகக் கூடும் தமிழ் இலக்கணம் அதன் எழுத்து முறை ஆகியவற்றின் தனியியல்பு திராவிட மொழிக் குடும்பக் கண்டுபிடிப்புக்கான முக்கிய சான்றாகவுள்ளது.

1. பிராகிருத மொழிகள் குறித்து நிலவும் இரு வேறுபட்ட கருத்துக்கள் யாவை? அவற்றுள் இவ்வாசிரியருக்கு உடன்பாடான கருத்து எது?
2. தமிழ் இலக்கணத்தை விளங்குவதில் தன்னிறைவு பெற்றதாக விளங்குவது எது?
3. தமிழ் தவிர்ந்த பிற திராவிட மொழிகளின் மூல மொழி சமஸ்கிருதம் என்ற கருத்து எழுந்தமைக்கு ஆசிரியர் ஊகிக்கும் காரணங்கள் எவை?
4. திராவிட மொழிக் குடும்பக் கண்டுபிடிப்புக்கான முக்கிய சான்று எது?
5. நெடுங்கணக்கு முறை என்பதன் பொருளைத் தெளிவு படுத்துக?

**பயிற்சி - 3**

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களிற்கு விடை தருக.

ஆற்றல் நிறைந்த செஞ்சொற் புலவர்களால் அமைக்கப்பட்ட பாடல்களுக்கு உயிருண்டு, வலிமையுண்டு. பிரான்சு தேசத்துக்குப் புத்துயிரளித்துச் சமத்துவம், சோதரத்துவத் தோடு கூடிய சுய ராச்சியத்தைப் பெறச் செய்தது ஓர் இன்னிசைக் கவிதையன்றோ? இமயம் முதற் குமரியீறாகக்

கிடந்த வளம் நிறைந்த நமது தாய் நாட்டின் மீது அனைவருக்கும் அன்புண்டாகச் செய்து ஒன்று கூட்டி வைத்தது வங்க மொழிக் கவிவாணர் ஒருவர் பாடிய ''வந்தே மாதரம்'' என்னும் பாட்டன்றோ? உயிரற்றுக் கிடக்கும் வெற்றெலும்புக்கும் உயிரளிக்குமாற்றல் பாட்டுக்கு உள்ளதாதலின் உத்தம கவிகளின் பாடல் நாட்டுக்குப் பெருநலத்தையளிக்கும் நீர்மையவாம்.

இரண்டு கோடி தமிழ் மக்களுக்கும் புத்துயிரையும் புதிய ஆற்றலையும் தந்து, உலகத்திலுள்ள ஏனைய மக்கட்டொகுதியினரோடு ஒப்புற விருத்தி உயர்வினையளிக்கும் நீர்மையவாகிய சங்கச் செய்யுள்கள் தொன்மையானவாதலின் கற்றோர்க்கு அன்றி மற்றோர்க்குப் பயன்படாவாயின. சங்கச் செய்யுட்களுள்ளே செறிந்து கிடக்கும் காதலின்பத்தையும், வீர மேம்பாட்டையும் யாவரும் எளிதிலுணர்ந்து கொள்ளற் பொருட்டு இலகுவான நடையிலமைந்த இன்னிசைத் தமிழ்ப் பாடல்களாற் சொல்ல வல்ல கவிவாணருள் முதல் வைத்தெண்ணப்படும் தகைமை சான்றவர் ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார். தமிழ்நாடு செய்த தவப்பயனாயுதித்த பாரதியார் தமது இன்னிசைப் பாடல்களினால் தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் அளத்தற்கரிய பேருபகாரத்தைச் செய்திருக்கிறார்.

1. செஞ்சொற் கவிவாணர் இயற்றும் கவிதையின் தன்மை பற்றிய கட்டுரையாசிரியரின் கருத்தை விளக்குக?
2. சங்கச் செய்யுளின் தன்மை பற்றியும் அதன் தற்காலப் பொருத்தப்பாடு பற்றியும் ஆசிரியர் கூறுவதைத் தெளிவு படுத்துக?
3. பாரதியார் பற்றிய கட்டுரையாசிரியரின் மதிப்பீடு எத்தகையது?
4. ஆசிரியரின் மொழி நடை பற்றிக் கருத்துரை வழங்குக?

## சுருக்கம் எழுதல்

**சுருக்கம் எழுதும் போது எய்தப்படும் திறன்கள்**

- கூர்ந்து அவதானிக்கும் திறன்
- கிரகித்தல் திறன்
- சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கும் திறன்
- செறிவான மொழியைக் கையாண்டு கருத்துக்களை ஒழுங்கமைக்கும் திறன்
- பொருள் புலப்பட நேர்த்தியாக எழுதும் திறன்

**சுருக்கத்தின் பண்புகள்**

- மூலப்பகுதியின் மையக் கருத்து சிதைவின்றி அமைத்தல்
- சொந்த மொழிநடையில் அமைத்தல்
- தெளிவுறக்கூறல்

**சுருக்கம் எழுதும் படிமுறைகள்**

- வாசித்தலும் கிரகித்தலும்
- கருத்துக்களை நிரற்படக் கோர்த்தல்
- சுருக்கமெழுதல்
- ஒப்பிடல்
- சொல் எண்ணிக்கையைக் கணித்தல்
- ஒரு பந்தியில் எழுதல்

**சுருக்கம் எழுதுவதற்கு முன்பாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்**

- **வாசித்தல்** : எடுத்துக் கொண்ட பகுதி என்ன விடயத்தை கூறுகின்றது என்பதை போதிய விளக்கம் ஏற்படுத்தும் வரையும் மயக்கமின்றி அறிந்து கொள்வதற்காக அதனைப் பலமுறை வாசிக்கவேண்டும்

- **கிரகித்தல்** : பந்தியில் கூறப்படும் பிரதான விடயங்களை ஆராய்ந்து கிரகித்துக் கொள்ளவேண்டும்
- **குறித்தல்** :ஆராய்ந்து கிரகித்துக் கொண்டதைக் குறித்துக் கொள்ளவேண்டும்
- **தெரிதல்** : குறித்துக் கொண்ட அமிசங்களில் மிகப் பிரதானமானவற்றை தேர்ந்து எடுத்து முறைப்படி நிரற்படுத்தி கொள்ளுதலும் அவற்றில் முக்கியமானவற்றை தெரிதலும் சிறந்தது.
- **எழுதுதல்** :
  - சுருக்கம் எழுதுவதற்கு கொடுக்கப்பட்ட பந்தியை பலமுறை வாசித்து எழுதல்
  - சுருக்கம் எழுதுவதற்கான பந்திகள் பலவாக அமைந்திருப்பின் ஒவ்வொரு பந்தியின் மூலக்கருத்துக்களையும் துணைக்கருத்துக்களையும் குறித்துக் கொள்ளல்
  - நிரற்பட குறிப்புக்களை ஒழுங்கமைத்து எழுதுதல்
  - சுருக்கமாக எழுதும் போது சொந்தமான வசனநடையில் இலக்கணமைவுக்கமைய எழுதுதல்
  - வாசிப்பதற்கு பொருள் தெளிவாக விளங்குமாறு எளிய நடையில் பிரதான கருத்துக்களில் இருந்து வழவாது எழுதுதல்
  - பிறர்கூற்றை தன் கூற்றாக மாற்றி சொந்த மொழிநடையில் எழுதல்
  - சொல் எண்ணிக்கையைக் கவனத்தில் கொண்டு எழுதல்
  - உரையாசிரியர் தம் கருத்தினை வலியுறுத்துவதற்காக அல்லது கருத்தினை சுவைப்பட கூறுவதற்காக பலவழிமுறைகளை கையாண்டு இருக்கலாம் அவற்றிலிருந்து பிரதான கருத்தை தெரிவு செய்தல்

**சுருக்கம் எழுதும் போது தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள்**

- சுருக்கத்துக்கு கொடுக்கப்பட்ட பந்தியை பலமுறை வாசித்து அதில் உள்ள அவசியமற்ற விடயங்களை தவிர்த்தல் வேண்டும்
- பந்தியில் இடம்பெறும் வர்ணனைகளைத் தவிர்க்கவேண்டும்
- உவமை, உருவகம் போன்ற அணிகளைத் தவிர்க்க வேண்டும்
- சுருக்கி எழுதும்போது பந்தியில் அமையாத சொந்தக் கருத்துக்களைத் தவிர்க்க வேண்டும்
- விதிக்கப்பட்ட சொற்களை விட அதிகமாகவோ குறைவாகவோ எழுதுவதைத் தவிர்க்க வேண்டும்
- சுருக்கத்தைப் பந்தியிலுள்ள மூலப்பகுதியின் மையக்கருத்து சிதையுமாறு தரமற்று எழுதல் தவிர்க்கவேண்டும்
- தன்கூற்றாய் அமைவதை அவ்வாறே எழுதுவது தவிர்க்கப்படவேண்டும்
- பழமொழிகள், மேற்கோள்கள் உதாரணம் காட்டி விளக்கல் முதலானவை தவிர்க்கப்படவேண்டும்
- சுருக்கத்தில் கையாளப்பட்ட செய்யுள்கள் தவிர்க்கப்படவேண்டும்
- தன்மை, முன்னிலைச் சொற்களைத் தவிர்த்துப் படர்க்கையில் எழுதுதல்

**சுருக்கம் எழுதுவதற்கான பயிற்சிகள்.**

**பயிற்சி : 1**

பின்வரும் உரைப்பகுதியை 45 – 50 சொற்களில் சுருக்கி தருக.

மக்களுக்கு அறிவு வளர்ச்சி ஏற்பட ஆவன செய்வது ஊடகவியலாளர்கள் பொறுப்பு. அதே நேரம் அந்த அறிவை ஜனநாயக அடிப்படையில் மக்களுக்கு வழங்குவது பற்றியும் அவர்கள் கரிசனையாக இருக்க வேண்டும். அறிவு வளர்ச்சியானது சுதந்திர அடிப்படையிலும் தேர்வு அடிப்படையிலும் வளர வேண்டும். அதாவது அரசாங்கமோ அரச அதிகாரிகளோ இது தான் உண்மை என்று கூறும் போது ஆராயாமல் அதனை மக்களிடம் கொண்டு சேர்ப்பது எமது கையாலாகாத தனத்தையே பிரதிபலிக்கும் அங்கு எங்கள் ஆராயும் சுதந்திரம் பறிபோகின்றது. உதாரணத்திற்கு ஒரு நாடு எங்களுக்கு மிகச்சிறந்த அடிப்படையில் குறைந்த வட்டியில் கடன் தருகின்றது என்று அரசாங்கம் அறிவித்து அந்த நாட்டை புகழ்கின்றது என்று வைத்துக் கொள்வோம். ஆனால் பெரிய பெரிய உள்நாட்டு ஒப்பந்தத் தேர்வுகளில் மற்றைய நாடுகளை விண்ணப்பம் செய்ய இடமளிக்காமல் மேலே குறிப்பிட்ட குறைந்த வட்டி தரும். நாட்டுக்கு மட்டும் சிறப்பிடம்

அளிக்கப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அதன் தாற்பரியம் என்ன? ஆயிரம் இலட்சத்துக்கு மற்றைய நாடுகளால் செய்து முடிக்கக் கூடிய ஒரு செயற்பாட்டை அந்த நாடு இரண்டாயிரம் இலட்சத்துக்கு செய்யப் போவதாக அறிவிக்கின்றது. எங்கள் நாடு வேறு வழியின்றி முன்னர் குறைந்த வட்டிக்கு பணம் வந்தால் அதற்கு ஒத்துக் கொள்கிறது. அங்கு குறைந்த வட்டி என்று புகழப்பட்ட நாடு இங்கு கொள்ளை இலாபத்திற்கு ஒப்பந்தத்தை ஏற்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எமது நாட்டுக்கு ஏற்படும் பயன், பாதிப்பு இவற்றை அலசி ஆராயாமல் அரசாங்கம் தரும் முதற் செய்தியை மட்டும் அரசாங்கம் எதிர்பார்ப்பது போல் அதற்கு அடிபணிந்து வெளியிட்டால் நாட்டுக்கு வேறு விதத்தில் ஏற்படப் போகும் பாதிப்புப் பற்றி மக்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது.

சமாந்தரமாக நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளை அலசி ஆராய்ந்து ஒன்றுக்கொன்று எவ்விதத்தில் அவை தொடர்புடையவை அவை மக்களையும் நாட்டையும் எந்தளவுக்கு பாதிக்கின்றன, பயன் தருகின்றன என்பதையெல்லாம் ஆராய்ந்து மக்களுக்கு அறிவூட்டுவது ஊடகவியலாளர் கடமை.அது மட்டுமல்லாமல் நடைபெறப் போகும் ஏதாவது செயற்பாடுகளால் நாட்டு மக்களுக்கு வருங்காலத்தில் ஏற்படவிருக்கும் பாதிப்புக்கள் பற்றி ஆராய்ந்து அவற்றை முன்கூட்டியே அறிவிப்பதும் ஊடகவியலாளர் பொறுப்பாகும்.

**சுருக்கம்**

மக்களுக்கு அறிவு வளர்ச்சி ஏற்பட ஆவன செய்வதும் அந்த அறிவை ஜனநாயக அடிப்படையில் மக்களுக்கு வழங்குவதும் சமாந்தரமாக நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளை அலசி ஆராய்ந்து ஒன்றுக்கொன்று எந்த விதத்தில் அவை தொடர்புடையவை என்பதையும் நாட்டையும் மக்களையும் எந்தளவுக்கு அவை பாதிக்கின்றன, பயன் தருகின்றன என்பதை ஆராய்ந்து மக்களுக்கு அறிவூட்டுவதும் நாட்டு மக்களுக்கு வருங்காலத்தில் ஏற்படவிருக்கும் பாதிப்புகள் பற்றி ஆராய்ந்து முன்கூட்டியே அறிவிப்பதும் ஊடகவியலாளர் கடமைகளாகும்.

**பயிற்சி : 2**

பின்வரும் உரைப்பகுதியை 45 – 50 சொற்களில் சுருக்கி தருக.

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த உரைநடை ஆசிரியர்களுள் சிவஞான சுவாமிகள் ஒப்புயர்வற்று விளங்கியது போலவே, பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலர் சிறப்புற்று விளங்கினார். தமிழ்மொழி வளர்ச்சிக்கு உரைநடை விருத்தி அவசியமென்று வற்புறுத்தியவர்களுள் ஆறுமுகநாவலரும் ஒருவர். கிறிஸ்தவமதப் பிரசாரத்தினால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவ சமயத்திற்கு உண்டான தளர்ச்சியை நீக்கிய நாவலர் பெருந்தகை, தமிழ்மொழியை வளர்ப்பதற்கு பல முயற்சிகளைச் செய்துள்ளார். சென்னையிலே அச்சியந்திரசாலை ஒன்றை அமைத்து பல தமிழ் நூல்களை திருத்திய முறையில் பிழையறப் பதிப்பித்துதவினார். எடுத்துக் கொண்ட காரியம் எதனையும் சோர்வின்றி திருத்தமாக செய்யும் இயல்பினர். நாவலர் என்பதற்கு வழுக்கள் யாதுமின்றி அவர் அச்சிட்ட நூல்களே சான்றாகும்.

செய்யுள் இலக்கியங்கள் வேண்டிய அளவு தமிழில் இருப்பதால் அவற்றை இயற்றுவதிலும் உரைநடை நூல்களை இயற்றுவதே தமிழ் மொழியை வளர்ப்பதற்கு சிறந்த வழி என்று கொண்டு பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றை உரைநடையில் எழுதி உதவியதோடு அவர் பல கட்டுரைகளையும் கண்டன நூல்களையும் மாணவர் கற்பதற்கு வேண்டிய உரைநடை நூல் பலவற்றையும் எழுதியுள்ளார். நாவலரது உரைநடை, பழமையையும் புதுமையையும் ஒழுங்கு தழுவிய முற்போக்குமுடைய ஒரு சிறந்த நடையாகும். பழைய இலக்கண முறைகளை

அனுசரித்து உரையாசிரியர்கள் எழுதிய நடையைப் போன்ற ஒரு கம்பீரமான நடையில் எழுதக்கூடிய ஆற்றல் உடையவராய் இருந்த போதும் தமிழறிவில் குறைந்தோரும் எளிதில் பொருள் காணக்கூடிய வகையில் காலத்திற்கேற்றவாறு வழக்கிலுள்ள வழுவற்ற சொற்களையும் பிரயோகித்துச் சிறந்த நூல்களை எழுதினார். அதனால் அவர் வசனநடை கைவந்த வல்லாளர் எனப் பாராட்டப்பட்டார்.

**சுருக்கம்**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கிய ஆறுமுகநாவலர் தமிழ் வளர்ச்சிக்கு செய்யுளைவிட உரைநடையே அவசியமென வற்புறுத்தினார். கிறிஸ்தவமதப் பிரசாரத்தினால் சைவ சமயத்திற்கு உண்டான தளர்ச்சியை நீக்க இவர் சென்னையில் அச்சியந்திரசாலை ஒன்றை அமைத்து பல நூல்களை திருத்தமாகப் பதிப்பித்தார். பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் கட்டுரைகள், கண்டனங்கள், மாணவர்க்கு ஏற்ற நூல்கள் முதலியவற்றை உரைநடையில் எழுதினார். இவரது உரைநடையில் இளமையும், புதுமையும் கம்பீரமும், எளிமையும் ஒருங்கே காணப்பட்டன. இதனால் இவர் வசனநடை கை வந்த வல்லாளர் எனப் பாராட்டப்பட்டார்.

**பயிற்சி : 3**

பின்வரும் உரைப்பகுதியை 45 – 50 சொற்களில் சுருக்கி தருக.

அசோகர் பௌத்தரை மட்டும் நேசித்து மற்றவரைத் துன்புறுத்தினாரில்லை. அவர் பௌத்தரையும் குடிமக்களாகவே கருதினர். மற்றவரையும் குடிமக்களாகவே கருதி எல்லோருக்கும் ஒரே நியாயம் வழங்கினார். இருவர் அரசும் உலகிற்கு எடுத்துக்காட்டுக்களாக நிற்கும் மாண்பு வாய்ந்தன.

அக்பர் ஆட்சிமுறை திறமை வாய்ந்ததாகவே இருந்தது. அதன் கண் அன்பும் நீதியும் விரவியே நின்றன. நல்ல மைச்சும் வீரப்படைத்தலைமையும் அக்பர் ஆட்சிக்குத் தூண்களாக நின்றன. அவர்தம் ஆட்சியில் அரசுக்குரிய அங்கங்களெல்லாம் ஒழுங்குபட அமைந்திருந்தன. அவ்வமைப்புக்களின் வகைகளை ஈண்டு விரித்துக்கூற வேண்டுவதில்லை. அக்பர் ஆட்சியில் அடிகோலப்பெற்ற சீர்திருத்த முறைகளே பெரிதும் கருதற்பாலன.

அக்பர் முஸ்லீம். அவர் ஆண்ட நாடோ இந்துக்களாலும் முஸ்லீம்களாலும் ஆக்கப்பட்டது. இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பலதிற வேற்றுமைகளுண்டு. அவ்விருவர்களுக்கும் ஒற்றுமை காண்டல் அருமையிலும் அருமை என்று சொல்லப்படுவது வழக்கம். அருமையிலும் அருமையை அக்பர் எளிமையிலும் எளிமையாக்கினார். அரசர் மனம் ஒரு பக்கம் சாராது நேரிய நடுமையில் நின்றால் அருமைகளெல்லாம் எளியனவாகும். வேற்றுமை ஒற்றுமை என்பன மனதில் இருப்பன. மனதில் வேற்றுமை விளைந்தால் உலகிலும் வேற்றுமை விளையும். அதில் ஒற்றுமை நிலவினால் உலகிலும் ஒற்றுமை நிலவும்.

அக்பர், முஸ்லீம் வயிற்றில் பிறக்க நேர்ந்தமையால், அவர் இந்துக்களை அடக்கவோ தம் கொள்கையில் ஈர்க்கவோ முயன்றிருத்தல் வேண்டுமோ? அது மூர்க்கர் செயலாகும். அக்பர் அறிஞர். அன்பர் பரந்த நோக்குடையவர். அவருக்கு இந்துக்களும் நாட்டவராகவே காணப்பட்டனர். முஸ்லீம்களும் நாட்டவராகவே காணப்பட்டனர். இருவரிடத்திலும் அவருக்கு வேற்றுமை தோன்றவில்லை.

அக்பர் அரசாங்கத்திலும், சேனையிலும் பிறவற்றிலும் இந்துக்களையும் அமர்த்தினர். முஸ்லீம்களையும் அமர்த்தினர். அவர் இந்து என்றோ முஸ்லீம் என்றோ கருதி எவரையும் வேலையில் அமர்த்துவதில்லை. அவர்தம் மனம் எல்லாரையும் மனிதரென்றே கருதிற்று. அக்பர் மனம் வேற்றுமையில் நில்லாமையால் குடிமக்கள் மனமும் வேற்றுமையில் நிற்கவில்லை. இந்து – முஸ்லீம் ஒற்றுமை அக்பர் ஆட்சியில் உரம் பெற்றே நின்றது.

# இலக்கிய வரலாறு

**அடையப்பட வேண்டிய தேர்ச்சிகளும் தேர்ச்சி மட்டங்களும்**

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** 1.0 | : | தொடர்பாடல் திறனை விருத்தி செய்யும் வகையிலே கட்டுரு வாக்கத்திறன் உள்ளவராகச் செயற்படுவார். |
| 3.0 | : | உரைநடை இலக்கியங்களைக் கற்று, அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன்வைப்பார். |
| 5.0 | : | தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பார். |
| 7.0 | : | மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியைச் செம்மையாகக் கையாள்வார். |
| **தேர்ச்சி மட்டம்** 1.1 | : | செயல்திறனும் வினைத்திறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார். |
| 1.2 | : | சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவகையில் பண்போடு உரையாடுவார். |
| 1.3 | : | எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் புலப்படுத்திப் பண்போடு பேசுவார். |
| 1.4 | : | குறித்த விடயம் தொடர்பாக வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் நிகழ்ச்சிகளிலும் தமது கருத்துக்களை ஆற்றலுடன் முன்வைப்பார். |
| 1.5 | : | பல்வேறு சந்தர்ப்பங்களுக்கும் நோக்கங்களுக்கும் ஏற்ப செயற்படுவார். |
| 3.1 | : | உயிர்துடிப்புள்ள கட்டுருவாக்கச் செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவார். |
| 5.1 | : | காலப்பகுதியின் பின்னணியையும் அவ்வக்காலப்பகுதியில் எழுந்த இலக்கியங்களையும் அறிந்து, கருத்துக்களை முன்வைப்பார். |
| 5.2 | : | புலவர்கள், படைப்பாளிகளினது படைப்பாற்றலை திறன்களையும் படைப்புக்கள் பற்றியும் அறிந்து கூறுவார். |
| 7.1 | : | மொழியின் இன்றியமையாமை, வளர்ச்சி, செயற்பாடு, அவற்றின் பின்னணி என்பவற்றை அறிந்து கூறுவார். |

இக்காலத்தில் புதியதொரு மறுமலர்ச்சியுங் காணப்படுகின்றது. அவை பல தடவைகள் அழிக்கப்பட்டாலும், பின்னரும் இன்னும் அதிக சிறப்புடன் விளங்குவதைக் காண்கிறோம். உலோகாயத நாகரிகங்கள் ஒருமுறை அழிந்தால் மறுபடியும் அவை உயிர் பெறுவதில்லை. ஆதலால், பொறுமையுடன் இருப்பீர்களாக எதிர்காலம் நம்மிடந்தானிருக்கிறது.

## தமிழ் இலக்கிய வரலாறு.

### சங்ககாலம்

1. சங்ககால இலக்கியங்களை அவற்றின் பொருள் மரபிற்கிணங்க பாகுபடுத்திக் காட்டுக.

**அகத்திணை நூல்கள்**

1. எட்டுத்தொகை நூல்களுள்
    - நற்றிணை
    - குறுந்தொகை
    - ஐங்குறுநூறு
    - கலித்தொகை
    - பரிபாடல் (அகமும் புறமும் விரவிய நூல்)

2. பத்துப்பாட்டு நூல்கள்
    - குறிஞ்சிப்பாட்டு
    - முல்லைப்பாட்டு
    - பட்டினப்பாலை (அகமும் புறமும் விரவிய நூல்)
    - நெடுநல்வாடை (அகமா புறமா என்னும் சர்ச்சைக்குரிய நூல்)

**புறத்திணை நூல்கள்**

1. எட்டுத்தொகை நூல்களுள்
    - புறநானூறு
    - பதிற்றுப்பத்து
    - பரிபாடல் (அகமும் புறமும் விரவிய நூல்)

2. பத்துப்பாட்டு நூல்களுள்
    - திருமுருகாற்றுப்படை
    - பொருநராற்றுப்படை
    - பெரும் பாணாற்றுப்படை
    - சிறுபாணாற்றுப்படை
    - மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை)
    - மதுரைக்காஞ்சி
    - நெடுநல்வாடை (அகமா புறமா என்னும் சர்ச்சைக்குரிய நூல்)

2. சங்ககால அகத்திணை இலக்கியங்களின் பொருள் மரபினை எடுத்துக்காட்டி விளக்கஞ் செய்க.

- சங்க இலக்கியங்கள் அகத்திணை, புறத்திணை என்னும் பிரதான பொருள் மரபுகளை உள்ளடக்கியுள்ளன.
- இப்பொருள்மரபு மக்கள் வாழ்க்கை முறையின் அடிப்படையில் வகுக்கப்பட்டதாகும்.
- அகத்திணை மரபு
    - ✍ அகத்திணை என்பது காதல் ஒழுக்கம்.

- மனமொத்த தலைவனும் தலைவியும் தம்முள் கூடிய கூட்டத்து துய்த்த இன்பத்தை இத்தன்மையானதென வெளிப்படுத்த முடியாத உணர்வு அகம் எனப்படும்.
- அகத்திணைப் பாக்கள் ஒருவர் பெயரைச் சுட்டிக் கூறப்படாத பாக்களாகும்.
- அகத்திணை ஒழுக்கங்களாவன : புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என்பன.
- புணர்தல் குறிஞ்சி நிலத்திற்குரிய அக ஒழுக்கமாகும்.
- இருத்தல் முல்லை நிலத்திற்குரிய அக ஒழுக்கமாகும்.
- ஊடல் மருத நிலத்திற்குரிய அக ஒழுக்கமாகும்.
- இரங்கல் நெய்தல் நிலத்திற்குரிய அக ஒழுக்கமாகும்.
- பிரிதல் பாலை நிலத்திற்குரிய அக ஒழுக்கமாகும்.
- இவை அன்பினைந்திணை எனப்படும்.
- அன்பினைந்திணை மரபில் அடங்காத பிற அக ஒழுக்கங்கள்.
  1. கைக்கிளை 2. பெருந்திணை
- கைக்கிளை என்பது ஒருதலைக்காமம். இது மூன்று வகைப்படும்.
- பருவமெய்தாத பேதையிடம் ஆடவன் ஒருவன் காதல் கொண்டு அவளைப் பற்றி பலவாறு சொல்லி இன்புறுதல்.
- ஒத்த அன்பினராய தலைவனும் தலைவியும் எதிர்ப்பட்டுக் கூடும் கூட்டத்தின் முன் பெரும்பாலும் தலைவனிடம் நிகழும் காட்சி, ஐயம், தெளிவு, தேறல் என்னும் நிலை.
- கொல்லேறு தழுவுதல் முதலியவை காரணமாக நிகழும் மணமுறைகள்.

- பெருந்திணை
  - பெருந்திணை என்பது பொருந்தாக்காமம்.
  - ஒருவன் ஒருத்தியிடம் மிக்க காமத்தனாகி அவளை அடையப் பெறாது மடலேறுதல், வரை பாய்தல் முறைகள் மூலம் தன்னை மாய்த்துக்கொள்ளுதல் முதலானவை.

3. சங்ககால புறத்திணை இலக்கியங்களின் பொருள் மரபினைத் தொளிவுபடுத்துக.
   - புறத்திணை என்பது காதல் சாராத ஏனையவற்றைப் பாடுவதாகும்.
   - போர், வீரம், கொடை, நிலையாமை முதலியன இதன் பாற்படும்.
   - பெயர்சுட்டிக் கூறப்படும் காதற்பாக்களும் புறத்திணையுள் அடக்கப்படும்.
   - ஐவகைப் பேரொழுக்கங்கள்
     - வெட்சி - (குறிஞ்சி)
     - வஞ்சி - (முல்லை)
     - உழிஞை - (மருதம்)
     - தும்பை - (நெய்தல்)
     - வாகை (பாலை)

4. உள்ளுறை உவமம் என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்தி, அகத்திணை பாடல்களில் உள்ளுறை உவமம் பயன்படுத்தப்படுமாற்றை விளக்குக.

   - ஒரு பாத்திரம் தான் கூறவிரும்பும் தகவலை வெளிப்படையாகக் கூறாமல் இயற்கை நிகழ்வுகள் மற்றும் நடத்தைகளை விபரிப்பதன் மூலம், குறிப்பால் உணர்த்துதல் உள்ளுறை உவமம் எனப்படும்.
   - அகத்திணைப் பாடல்களில் உள்ளுறை உவமம் தலைவனுடைய இயல்பைச் சுட்டுவதற்கும் தலைவனுக்குச் சில விடயங்களை அறிவுறுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

     **உ - ம்**

     “புனவன் துடவை...................” என்னும் பாடலில் கடவுளுக்கு நேர்ந்து விட்ட தினைக்கதிரை உண்டுவிட்டு நடுங்கும் மயில் பற்றிக் கூறப்படுகிறது.
     இது அறியாமல் செய்த பிழைக்குத் தண்டனை அனுபவிப்பதைக் குறிக்கிறது. இதுபோல் தலைவனும் தவறு செய்வானாயின் தெய்வத்தின் பழிக்கு / தண்டனைக்கு ஆளாவான் என்னும் செய்தி இங்கு உள்ளுறையாக உணர்த்தப்படுகின்றது.

இறைச்சிப் பொருள்.

இது உள்ளுறை உவமத்தைப் போலக் கருப்பொருளில் இருந்து உய்த்துணரப்படும்.

- ஆயினும் இரண்டிற்கும் வேறுபாடு என்னவெனில் உள்ளுறையில் கூறப்பட்ட பொருளும் உய்த்துணரும் பொருளும் ஒத்து முடியும்.
- இறைச்சியில் கூறப்பட்ட பொருளும் உய்த்துணரும் பொருளும் ஒத்து முடிந்து அதனின்று மற்றொரு தொனிப்பொருள் அவாவப்பட்டு நிற்கும்.
- அதாவது ஒன்றைச் சொல்லும் போது இன்னொன்று நினைவுக்கு வரும்.

உ-ம் :

அகநானூற்றுச் செய்யுள்

''கோழிலை வாழைக் கோள் முதிர்'' எனத் தொடங்கும் செய்யுளின் பின்வரும் அடிகளைக் குறிப்பிடலாம்.

''பைம்புதல் வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன
நெடுவெண் திங்களும் ஊர் கொண்டன்றே''

இதன் பொருள் :

பசுமையான புதர்கள் சூழ்ந்த வேங்கை மரங்களும் ஒள்ளிய பூங்கொத்துக்கள் விரியப் பெற்றுள்ளன. வெண்மையான பூரண சந்திரனையும் ஊர் கொண்டுள்ளது என்பதாகும். ஆயினும் இவை உணர்த்தும் உள்ளார்ந்த பொருள் வேறாகும்.அதாவது வேங்கை மரங்கள் பூத்துள்ளன என்பதால் தினை அறுவடைக்காலம் வந்து விட்டதால் தலைவி தினைக்காவலுக்காக வரமாட்டாள். எனவே அவளை பகலில் சந்திக்க முடியாது. இரவில் பூரணசந்திரன் காய்வதால் இரவிலும் தலைவியை சந்திக்க முடியாது எனத் தோழி கூறுகின்றாள்.

இவற்றைத் தலைவனுக்கு உணர்த்துவதனூடாக பகற்குறியும், இரவுக் குறியும் சாத்தியமற்றதென்பதையும் எனவே தலைவியைத் திருமணம் செய்வது சிறந்ததென்பதையும் தோழி வலியுறுத்துகின்றாள்.

இவ்வாறு இயற்கை வர்ணனையாக அமையும் கருப்பொருளில் இருந்து உய்த்துணரும் பொருளின் மூலம் பிறிதோர் செய்தியை / கருத்தை வெளிப்படுத்தி நிற்பதே இறைச்சிப் பொருளாகும்.

5. சங்ககால அகத்திணைப் பாடல்களில் இடம்பெறும் கைக்கிளை பெருந்திணை ஒழுக்கங்கள் பற்றி விளக்கிக் கூறுக.

- தனிநிலைச் செய்யுள்களாக சங்கச் செய்யுள்கள் காணப்படுகின்றன.
- சிறிய சொற்கள் செய்யுள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- அடைமொழிகளும் தொகை மொழிகளும் அதிகம் கையாளப்பட்டுள்ளன.
- அகவற்பா (ஆசிரியப்பா) பெருமளவில் கையாளப்பட்டுள்ளது.
  உ-ம் : அகநானூறு, புறநானூறு
- வஞ்சிப்பா (உ-ம் : மதுரைக்காஞ்சி)
- கலிப்பா (உ-ம் : கலித்தொகை)
- பரிபாட்டு(உ-ம் : பரிபாடல்)
  முதலான பா வகைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- சங்க இலக்கியங்களில் சில இடங்களில் அந்தாதி அமைப்பு முறை கையாளப்பட்டுள்ளது.
  (உ-ம் : பதிற்றுப்பத்தின் நான்காம் பத்து)

6. பின்வரும் இலக்கியங்கள் குறித்துக் குறிப்புரை எழுதுக.

**1. நெடுநல்வாடை :**

- நெடுநல்வாடை நக்கீரரால் பாடப்பெற்றது. 188 அடிகளில் ஆசிரியப்பாவில் எழுந்த இந்நூல் அகமா, புறமா என்ற சர்ச்சைக்குரியது.

- பிரிவால் வருந்திய தலைவிக்கு வாடைக்காற்று தலைவனின் பிரிவை நெடிதாக்கி நெடுவாடையாகியது. அதே வேளை வினைமேற் சென்ற தலைவனுக்கு அவ்வாடை நல்வாடையாகியது. இதனால் நெடுநல்வாடை எனப்பட்டது.
- ''வேம்பு தலையாத்த நோன்காழ் எ்.கம்'' எனும் பாடல் அடி பாண்டியனைக் குறிப்பிடுவதனால் இவ்விலக்கியம் புறத்திணைக்குரியது என ஒரு சாராரும் வேம்பு பாண்டியனுக்குரிய அடையாளமாக இங்கு அமையவில்லை. அது மருத்துவத்தில் தொற்று நீக்கியாகவும் பயன்படுத்தத்தக்கது என்ற அடிப்படையில் நெடுநல்வாடை அகம் சார்ந்தது என்ற கருத்தை வலியுறுத்துவோரும் உளர்.

2. **பரிபாடல்**

- பரிபாட்டு பாவகையைச் சார்ந்தது. அகமும் புறமும் விரவிய இலக்கியமாகப் பரிபாடல் கொள்ளப்படுகிறது.
- 70 பாடல்களில் தற்பொழுது 22 பாடல்களே கிடைக்கப்பெற்றுள்ளன.
- கிடைக்கப்பெற்ற 22 பாடல்களில் திருமால் குறித்து 6 பாடல்களும் செவ்வேள் குறித்து 8 பாடல்களும் சமயம் சார்ந்த விடயங்களை விபரிப்பதன் மூலம் புறத்திணை சார்ந்த அம்சங்களை வெளிப்படுத்துகின்றன.
- வைகை குறித்து வரும் 08 பாடல்களின் மூலம் மதுரை நகரத்தை மையப்படுத்தி தலைவன், தலைவியின் அக உணர்வுகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

3. **மதுரைக்காஞ்சி :**

- மாங்குடி மருதனாரால் பாடப்பெற்ற மதுரைக்காஞ்சி எனும் இலக்கியம் வஞ்சியடிகள் விரவிய ஆசிரியப்பாவில் அமைந்துள்ளது.
- மதுரையைப் பாடுவதனாலும் நிலையாமையைப் புலப்படுத்துவதனாலும் மதுரைக்காஞ்சி எனப் பெயர் பெற்றது.
- பாண்டியன் நெடுஞ்செழிய மன்னனின் வீர ஆற்றல், நெடுஞ்செழியனைப் பகைத்த பகை மன்னர்களுக்கு நேர்ந்த கதி, மதுரையின் வளர்ச்சிச் சிறப்பு முதலியன முக்கியம் பெறுகின்றன.
- மதுரையின் ஒருநாள் நிகழ்வுப் பாங்கினை எடுத்துக் காட்டுவதனூடாக நிலையாமை சார்ந்த விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

4. **பட்டினப்பாலை :**

- கடியலூர் உருத்திரங்கண்ணனாராற் பாடப்பெற்ற பட்டினப்பாலை எனும் இலக்கியம் அகமும் புறமும் விரவிய நூலாக உள்ளது.
- திருமாவளவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட இந்நூலில் நெய்தல் நிலமான காவிரிப் பூம்பட்டினத்தை மையப்படுத்திய விபரிப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.
- பட்டினப்பாலையில் வரும் பாலை எனுஞ் சொல் பிரிவைக் குறித்து வந்துள்ளது. சோழ நாட்டின் வணிகம், வளம், மக்கள் விளையாட்டு என்பவற்றோடு தலைவன், தலைவி ஆகியோரின் உணர்வு வெளிப்பாடுகளும் இடம்பெற்றுள்ளன.

.

## சங்கமருவிய காலம்

1. சங்கமருவிய காலம் என்ற சொற்பொருளை விபரிக்க.

- சங்ககாலத்தைத் தொடர்ந்து வரும் காலம் சங்ககாலத்திற்குப் பின்னான காலம் - (Post Sangam period)

- அடையாளப்படுத்த முடியாத நிலையில் சங்க காலத்தை முதன்மைப் படுத்திச் சொல்ல வேண்டிய தேவை
- களப்பிரர்காலம் - அரசியல் சார்ந்தது
- அறநெறிக்காலம் - பாடுபொருள் சார்ந்தது.

2. சங்கமருவியகால இலக்கியங்களை அவற்றின் பொருள் அடிப்படையில் பாகுபடுத்துக.

அறம், அகம், புறம், வாழ்வியல் சார்ந்தவை (உ-ம் : ஆசாரக்கோவை), பக்தி சார்ந்தவை

3. 'அறநூல்கள்' எழுந்தமைக்கான காரணிகள் யாவை?
   - சங்ககாலப் போரால் ஏற்பட்ட விரக்தி
   - அவலமான வாழ்வுச் சூழலிலிருந்து விடுபடுவதற்கான வழிகாட்டல்
   - சமண பௌத்த மதங்களின் சார்புநிலை
   - சமண, பொத்த மதங்களின் பொதுமக்கள் சார்பு
   - தமிழக சூழலில் வைதீகத்தின் இறுக்க நிலை
   - சமண, பௌத்தத்தின் கோட்பாட்டில் வித்தியாதானம் முக்கியம் பெறல்

4. 'இருண்டகாலம்' என்ற தொடரின் பொருத்தப்பாடு பற்றி விபரிக்க.
   - அரசியல் வரலாற்றுத் தெளிவின்மையால்.
   - சமய முரண்பாடு காரணமாக வைதீகம் மேலோங்கி சமய சமயக் கருத்துக்களைப் புறக்கணித்தல்
   - வேள்விக்குடிச் செப்பேடு - களப்பிரரைக் கலி அரசர் என இழிவுபடுத்திக் கூறியமை
   - கல்வெட்டுக்களின்படி களப்பிரரது வரலாறு அறியப்பட்டமை.
   - உன்னதமான நூல்கள் இக்காலத்தில் தோற்றம் பெற்றன.
     உ-ம் : திருக்குறள், சிலப்பதிகாரம்
   - தமிழ்நாட்டில் தமிழ்மொழியில் இலக்கியங்களை வாழவைத்தவர் களப்பிரர் - 2 நிலை
     1. சாதாரண மக்களின் பேச்சு வழக்கை அடியொற்றி இலக்கியங்கள் எழுந்தமை
     2. உயர்ந்த இலக்கிய மரபுகளை உருவாக்கியமை.

5. சங்கமருவிய காலத்தில் எழுந்த திருக்குறளின் சிறப்பு பற்றி விபரிக்குக.
   - உலகப் புகழ்பெற்ற பொதுமறை நூல்.
   - அனைத்து சமயம், நாடு, காலத்திற்கும் பொருந்தும் உண்மைகளை கூறுகின்றமை
   - உலக மொழிகள் பலவற்றுள்ளும் மொழிபெயர்க்கப்பட்டமை.
     (ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், உருதிய மொழி)
   - பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் தலையாய நூலாக விளங்குகின்றமை.
   - அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பால்களுக்கூடாக அரிய கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.
   - ஏழு சீர்களைக் கொண்ட ஒன்றே முக்கால் அடியிலான குறள் வெண்பாவிற்கூடாகக் கருத்துக்களை நுட்பமாக விளக்குகின்றமை

6. இக்காலத்தில் எழுந்த காப்பியங்கள் பற்றி விபரிக்குக.
   அல்லது 'இரட்டைக் காப்பியம் என்ற தொடர் சிலப்பதிகாரத்துக்கும் மணிமேகலைக்கும் பொருந்துமாற்றை விபரிக்குக.
   **சிலப்பதிகாரம்**

   - ஐம்பெரும் காப்பியங்களில் முதல் எழுந்த காப்பியமாக விளங்குகின்றது.
   - இளங்கோவடிகளால் இயற்றப்பட்டமை.
   - தமிழ்நாட்டுக் கதையினைக் கருப்பொருளாகக் கொண்டு கோவலன் கண்ணகி வரலாற்றைக் கூறுகின்றமை.
   - சோழ நாட்டில் உருவாகி பாண்டிய நாட்டில் வளர்ச்சி பெற்று சேர நாட்டில் முழுமைபெறும் காப்பியம்.

- புகார்க்காண்டம் (10 காதைகள்), மதுரைக்காண்டம் (13 காதைகள்), வஞ்சிக்காண்டம் (7 காதைகள்) ஆகிய மூன்று காண்டங்களை கொண்டமைந்துள்ளது.

**மணிமேகலை**

- சிலப்பதிகாரக்கதைத் தொடர்ச்சியான கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் வரலாற்றைக் கூறுகின்றது.
- மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரால் இயற்றப்பட்டமை
- பௌத்தமதக் கோட்பாடுகளை வலியுறுத்தும் சமயக் காப்பியம்.
- இந்திரனுக்கு விழாவெடுத்த விழாவறை காதை தொடக்கம் பவத்திறம் அறுகவெனப் பாவை நோற்ற காதை ஈறாக முப்பது காதைகளைக் கொண்டமைந்துள்ளது.
    1. சீத்தலைச் சாத்தனார் வஞ்சிக் காண்டத்தில் கண்ணகி கதையை இளங்கோவடிகளுக்குக் கூறினார்.
    2. மணிமேகலை சிலப்பதிகாரத்தின் தொடர் என்ற கூற்று சிலப்பதிகாரத்தில் உண்டு.
    3. இரு கதைகளிலும் பெண்கள் முக்கிய பாத்திரமாதலால் திருமணமான பெண் - தெய்வமாதல், கன்னிப்பெண் - தெய்வமாதல்

7. காரைக்கால் அம்மையாரின் பிரபந்தங்கள் பற்றிக் குறிப்பிடுக.

    திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் - 1 - 2
    அற்புதத் திருவந்தாதி
    திருவிரட்டை மணிமாலை

8. **பதிகம்** என்ற இலக்கிய வடித்தை விளக்கம் செய்து, காரைக்கால் அம்மையார் பதிக இலக்கியத்தின் முன்னோடியாக விளங்கியதைத் தெளிவுபடுத்துக.

    - மனதில் தோன்றும் பக்தி அனுபவத்தை முழுமையாகச் சொல்வதற்கான பாவினம் விருத்தப்பா. அதில் அமைந்த 10 அல்லது 11 பாடல்களைக் கொண்ட ஒரு தொகுதி பதிகம்
    - தமிழில் முதன்முதலில் பக்தி அனுபவத்தை வெளிப்படுத்தும் ஊடகமாக, பதிகத்தைப் பயன்படுத்தியதால் மூத்த பதிகம் என்ற பெயர் வந்தமை.
    - பிற்காலத்தில் பதிகத்தின் அதீத வளர்ச்சிக்கு முன்னோடியாக இருத்தல்

9. காரைக்காலம்மையார் மற்றும் முதல் மூன்று ஆழ்வார்கள் பக்தி இலக்கிய மரபிற்கான மூலவேர்களாக அமைவதை விளக்குக.

    - சைவ, வைணவ பக்திக்கான மூலவர்களாக இவர்கள்தான் உருவாகினார்கள்
    - சைவ வைணவ இணக்க நிலையை ஏற்படுத்தியவர்கள் (ஹரிகர வழிபாடு)
    - கடவுளைப் பல நிலைகளிலும் பார்ப்பதற்கான ஆரம்ப நிலையை உருவாக்கியவர்கள்.

10. சங்கமருவிய கால இலக்கியங்களின் தொடர்ச்சியும் தேய்வும் பல்லவர்கால இலக்கியங்களில் வெளிப்படுமாற்றை விளக்குக.

    தொடர்ச்சி

    1. பக்தி இலக்கிய தொடர்ச்சி
    2. பதிக இலக்கிய வடிவத் தொடர்ச்சி
    3. பாட்டுடைத் தலைவனைப் பல்வேறு கோணங்களில் பாடும் மரபு
    4. அகத்திணை மரபு மற்றும் வளர்ச்சியும்

    தேய்வு

    1. அறப்போதனை
    2. புற இலக்கிய மரபு
    3. உலகியல் தலைவர்க்கு நிகராகத் தெய்வீகம் மாறுதல்

11. சங்கமருவிய கால இலக்கியப் பண்புகள் எவை?

- அறத்தைப் பாடுபொருளாகக் கொண்டவை
- அகம், புறம் ஆகிய மரபுகளின் தொடர்ச்சி
- பக்தி இலக்கியம் தோற்றம் பெறுதல்
- இலக்கியங்கள் சமயப்பிரசார வாகனமாகியமை
- தொடர்நிலைச் செய்யுள் மரபு
- காவியங்களின் தோற்றம்
- பதிகம், அந்தாதி, இரட்டை மணிமாலை போன்ற இலக்கிய வடிவங்களின் அறிமுகம்
- வெண்பா, பெருவழக்கு, விருத்தப்பா, கட்டளைக்கலித்துறை யாப்புகளின் அறிமுகம்.

## பல்லவர் காலம்

1. பல்லவர்கால இலக்கியங்களை அவற்றின் பொருள் மரபுக்கமைய வகைப்படுத்துக.
   பல்லவர்கால இலக்கியங்கள் பொருள், மரபு அடிப்படையில் பின்வருமாறு பாகுபடுத்தத்தக்கன.
   - பக்தி இலக்கியங்கள்
     அ) சைவசமயம் சார்ந்தவை : தேவாரம், திருவாசகம் முதலியன
     ஆ) வைணவ சமயம் சார்ந்தவை : ஆழ்வார் திருப்பாசுரங்கள்
   - பக்தி சாரா இலக்கியங்கள்
     நந்திக்கலம்பம், முத்தொள்ளாயிரம், பாரதவெண்பா, பாண்டிக்கோவை, கொங்குவேளிர் மாக்கதை முதலியன.

2. பக்தி உணர்வை மக்கள்மயப்படுத்த, பக்தி இயக்கம் முன்னெடுத்த உத்திகளைத் தெளிவாக விளக்குக.

   - ஊர்கள் தோறும் யாத்திரை சென்று, அங்குள்ள தலங்களையும் அவற்றில் உறைகின்ற இறைவனையும் புகழ்ந்து பாடல்களைப் பாடியமை.
   - இறைவனைப் பல்வேறு பாவனைகளில் நெருக்கமான உறவுகொண்டு பாடியமை :
     ஆண்டாள் - காதலன்
     பெரியாழ்வார் - குழந்தை
   - நாட்டார் மரபில் நின்றும் கிளைத்தெழுந்த இலக்கிய வடிவங்களைக் கையாண்டமை : ஊஞ்சல், அம்மானை, சுண்ணம்
   - வடமொழி இதிகாச, புராணக் கதைகளை இணைத்துப் பாடல்களைப் பாடியமை.
   - அற்புதங்களைச் செய்தமை
   - இசையோடு கூடிய பாடல்களை இயற்றியமை.
   - பிரதேசப்பற்று வெளிப்படும் வகையில் பாடல்களை இயற்றியமை.
   - பதிகம், அந்தாதி, உலா முதலான சிற்றிலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தியமை.

3. பல்லவர்காலத்துச் சமய சார்பற்ற / பக்திசாரா இலக்கியங்களைக் குறிப்பிட்டு, அவற்றின் பண்புகளைத் தெளிவுபடுத்துக.

   - நந்திக்கலம்பகம்
   - முத்தொள்ளாயிரம்
   - பாரதவெண்பா
   - கொங்குவேளிர் மாக்கதை
   - பாண்டிக்கோவை
   - ஸ்ரீபுராணம்
   - கயசிந்தாமணி
   - இறையனார் களவியலுரை

   அவற்றின் பண்புகள்.
   - மன்னர் புகழ்பாடல்
   - அகம், புறம் இணைந்த நிலை
   - பாட்டுடைத் தலைவனின் பெயர் சுட்டப்படல்
   - வெண்பா, விருத்தப்பா, அகவற்பா, கட்டளைக்கலித்துறை போன்ற யாப்புக்கள் பயன்படல்
   - வடமொழிச் செல்வாக்கு

4. பல்லவர்காலப் பக்தி இலக்கிய வளர்ச்சியில் பின்வருவோர் அல்லது நூல்கள் பெறும் இடத்தினை மதிப்பிடுக.

1. பெரியாழ்வார்

- திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருவாய்மொழி
- கண்ணனைக் குழந்தையாகவும் தன்னைத் தாயாகவும் பாவனை செய்து பாடியுள்ளமை.
- கண்ணனைக் குழந்தையாகக் கருதி, 22 பருவங்களிற் பாடியவற்றுள் 10 பருவங்களைத் தெரிவுசெய்து, சோழர்காலத்தில் ஓட்டக்கூத்தர், குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழைப் பாடியமை.
- கண்ணனின் குறும்புகள், அற்புதங்களை விரிவாகப் பாடியமை.

2. சுந்தரர்

- இறைவனைத் தோழராக் கொள்ளும் தோழமை மார்க்கத்திற் பாடல்கள்
- ‘வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்’ நிலையாமைக் கருத்துக்களைப் பாடியமை
- திருத்தொண்டத் தொகை மூலம் பெரியபுராணத்துக்கு வழிகாட்டியமை.

3. ஆண்டாள்

- திருப்பாவை, நாச்சியார் திருமொழி
- கண்ணனைக் காதலனாகவே கருதிப் பாடியவர்
- மடைதிறந்த வெள்ளம் போன்ற காதல் உணர்ச்சி
- தூது முதலிய அகத்திணைத் துறைகளைக் கையாணடமை.

4. மாணிக்கவாசகர்

- திருவாசகம், திருக்கோவையார்
- ‘‘திருவாசகத்திறகு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்’’ என்று போற்றப்படும் இனிய பாடல்கள்
- சி.யு போப்பினால் மொழிபெயர்க்கப்பட்டது.
- நாட்டுப்பாடல் வடிவங்களைப் பயன்படுத்தியமை
- திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி
- திருக்கோவையார் - அகத்திணைத்துறைகள் நானூறு அடங்கப் பாடப்பட்டது.
- மானுடக்காதலையும் தெய்வீகக் காதலையும் இணைக்கும் மரபு

5. பல்லவர்கால இலக்கியங்களில் சங்ககால அகத்திணை மரபு மாற்றமடைந்தவாற்றை எடுத்துரைக்க.

பல்லவர்கால இலக்கியங்களில் சங்ககால அகத்திணை மரபு பல வழிகளில் மாற்றமடைந்துள்ளது.

- சங்ககால உலகியல் காதல் பல்லவர் கால பக்தி இலக்கியங்களில் ஆன்மீகக் காதலாக மாற்றமடைந்துள்ளது.
- சங்ககாலத்தில் அன்பினைந்திணைக்கும் புறம்பான காதல் ஒழுக்கமாகக் கருதப்பட்ட கைக்கிளை பல்லவர் காலத்தில் ஆன்மீகக் காதலைப் பாட முதன்மைப்படுத்தப்படுகின்றது.
- அக ஒழுக்கத்தினையும் புற ஒழுக்கத்தினையும் ஒன்றுடன் ஒன்று விரவாது பாடும் மரபே சங்ககாலத்தில் காணப்பட்டது. பல்லவர் காலப் பக்திசாரா இலக்கியங்கில் அக, புற ஒழுக்கங்கள் விரவிவருவதைக் காண முடிகின்றது.
- பெயர்சுட்டிப் பாடும் மரபு சங்ககாலத்தில் இல்லை. பல்லவர் கால இலக்கியங்களில் பெயர்சுட்டிப் பாடும் மரபு உண்டு.
- உதிரியாகப் பாடப்பட்ட சங்க அகத்துறைகளை ஒருங்கு சேர்த்து (கோர்த்து) கோவை இலக்கியங்களைப் பாடும் மரபு பல்லவர் காலத்தில் உருவாகிறது.

6. பல்லவர்காலத்தில் எழுந்த மேல்வரும் நூல்களைப்பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

1. முத்தொள்ளாயிரம்

- சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவர் மீது பாடப்பட்ட 900 பாடல்களைக் கொண்ட நூல். தற்போது 109 பாடல்கள் வரையே கிடைக்கின்றன.
- சுவைமிக்க காதற் பாடல்கள்
- மூவேந்தரின் இயற்பெயர் குறிப்பிடப்படாமல் பொதுப்பெயர்களே கூறப்பட்டுள்ளன.
- மன்னர்கள் பிறந்த நட்சத்திரங்களின் போது பிறந்தநாள் விழா கொண்டாடுதல் முதலிய பண்பாட்டம்சங்களை வெளிப்படுத்துகிறது.

2. நந்திக்கலம்பகம்

- தமிழின் முதற் கலம்பகம்
- 3ஆம் நந்திவர்மன் மேற் பாடப்பட்டது.
- பலவகையான பூக்களாற் கட்டப்பட்ட மாலை (கலம்பகம்) போலப் பலவகையான பாக்களாற் கட்டப்படுவது.
- அகவற்பா, வெண்பா, கட்டளைக்கலித்துறை, விருத்தப்பா ஆகிய யாப்புக்கள் மாறிமாறி வரப்பாடப்பட்டது.
- அகத்திணையும் புறத்திணையும் சேர்ந்து வரும் இலக்கியம்

3. உதயணன் மாக்கதை

- கொங்குவேளிர் மாக்கதை என்றும் அழைக்கப்படுவது.
- வடமொழி நூல்களைத் தழுவி இயற்றப்பட்டது.
- வத்தநாட்டுக் கௌகாம்பி நகர அரசன் உதயணன் வரலாறு கூறுகின்றது.
- ஐந்து காண்டங்கள் - அகவற்பாவால் ஆனது.
- பல்வேறு கிளைக்கதைகள் உள்ளன. முதற்சமணக் காப்பியம் கதைத் தலைவனை தன்னிகரில்லாத் தலைவனாகச் சித்திரிக்கும் முதற்காப்பியம்

4. இறையனார் களவியல் உரை

- இறையனார் என்பவரால் இயற்றப்பட்டது என்பர்.
- இறையனார் களவியல் 60 நூற்பாக்களைக் கொண்டது.
- இந்நூலுக்கு நக்கீரர் எழுதிய உரையே இறையனார் களவியல் உரை.
- இது பல்லவர் காலத்திற்குரியது.

7. பல்லவர்கால இலக்கியங்களில் நாட்டார் இலக்கியக் கூறுகள் இடம்பெற்றுள்ளமையை விளக்குக.

- நாட்டார் மரபில் செல்வாக்குப் பெற்ற இலக்கிய வடிவங்கள் கையாளப்படல் : ஊசல் / ஊஞ்சல், சுண்ணம், அம்மானை முதலியன.
- நாட்டார் இலக்கியச் சொற்கள், பழமொழிகள், மரபுத் தொடர்கள் கையாளப்படல்.
- நாட்டார் இலக்கிய ஓசைப்பண்பு பக்தி இலக்கியங்களில் கையாளப்படல்.
- பொதுமக்களைக் கருத்திற்கொண்டும் இலக்கியங்கள் இயற்றப்பட்டிருத்தல்.
- மக்கள் மத்தியில் காணப்பட்ட (மானிட) உறவு நிலைகளை ஆன்மீக நிலைப்படுத்திப் பாடல்கள் செய்யப்படல்.

## சோழர் காலம்.

1. சோழர்கால இலக்கியங்களை வகைப்படுத்திக் காட்டுக.

1. காவியங்கள்

**பெருங்காவியம்**

சீவகசிந்தாமணி - திருத்தக்க தேவர்
வளையாபதி
குண்டலகேசி - நாதகுத்தனார்

**சிறு காவியங்கள்**

சூளாமணி - தோலாமொழித் தேவர்
நீலகேசி
உதயணகுமாரகாவியம்
யாசோதர காவியம்
நாககுமாரகாவியம்
கம்பராமாயணம் - கம்பர்

2. புராணங்கள்

பெரியபுராணம்
கந்தபுராணம்

3.சிற்றிலக்கியங்கள்

1. பரணி
   கலிங்கத்துப்பரணி - சயங்கொண்டார்
   தக்கயாகப்பரணி - ஒட்டக்கூத்தர்
2. உலா
   மூவருலா - ஒட்டக்கூத்தர்
3. பிள்ளைத்தமிழ்
   குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ் - ஒட்டக்கூத்தர்
4. நளவெண்பா - புகழேந்திப்புலவர்
5. ஏர் எழுபது
   சரஸ்வதி அந்தாதி - கம்பர்
   சடகோபர் அந்தாதி
6. திருத்தொண்டர் திருவைந்தாதி - நம்பியாண்டர் நம்பி

3.சைவசித்தாந்த நூல்கள்

1. திருவுந்தியார்
2. திருக்களிற்றுப்படியார்
3. சிவஞானபோதம்
4. சிவஞான சித்தியார்
5. இருபாஇரு.்.து
6. உண்மை விளக்கம்
7. சிவப்பிரகாசம்
8. திருவருட்பயன்
9. வினாவெண்பா
10. போற்றிப் ப.்.றொடை
11. கொடிக்கவி
12. நெஞ்சுவிடு தூது
13. உண்மைநெறி விளக்கம்
14. சங்கற்ப நிராகரணம்

4. இலக்கண நூல்கள்

1. யாப்பருங்கலம் - அமிர்தசாகரர்
2. யாப்பருங்கலக்காரிகை - புத்தமித்திரனார்
3. வீரசோழியம் - குணவீர பண்டிதர்
4. நன்னூல் - பவணந்தி முனிவர்

2. சோழர் காலத்தில் எழுந்த காவியங்களைக் குறிப்பிட்டு அவற்றின் பொருள் மரபினை விளக்குக.
   1. காவியங்கள் - (சோழர்கால இலக்கியத்தில் உள்ளது)
   2. பொருள் மரபு
      - ➢ வடமொழி நூல்களைத் தழுவி எழுதப்பட்டவை
        - கம்பராமாயணம் - வான்மீகி இராமாயணம்
        - சீவகசிந்தாமணி - ஷத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி
      - ➢ வடமொழிப் பண்பாட்டுக் கதை மரபினை தமிழக மன்னர்களையும் நாடு நகரப் பகுதிகளையும் மனதிற்கொண்டே காவியங்கள் உருவாக்கப்பட்டன.
        - கம்பராமாயணம் - (காவிரி நாடன்ன களனிநாடு)
      - ➢ மன்னர் புகழ்பாடுபவையாக உள்ளன
      - ➢ தத்தம் சமயக் கருத்துக்களை எடுத்துக் கூறுபவை
        - சீவகசிந்தாமணி - சமணம்
        - குண்டலகேசி - பௌத்தம்
        - கம்பராமாயணம் - வைணவம்
      - ➢ உலகியல் வாழ்க்கையை விதந்து கூறுபவை
        - சீவகன் - எட்டுப் பெண்களைத் திருமணம் செய்தல்
      - ➢ விருத்த யாப்பில் இயற்றப்பட்டவை

3. சோழர் காலத்தில் எழுந்த சிற்றிலக்கியங்களைக் குறிப்பிட்டு அவற்றின் பண்புகளைத் தெளிவுபடுத்துக.
   சிற்றிலக்கியங்களின் பண்புகள்
   - ▪ மன்னர் புகழ் பாடுபவை
   - ▪ தெய்வங்களின் அவதாரங்களைக் கூறும் தன்மை
   - ▪ பேரிலக்கியங்கள் பெரும்பாலும் வடநாட்டு வரலாறுகளைக் கூற, சிற்றிலக்கியங்கள் தமிழக மன்னர் வரலாறுகளைக் கூறுகின்றன.
   - ▪ உலா, பிள்ளைத்தமிழ், பரணி முதலிய வடிவங்கள்
   - ▪ பேரிலக்கியங்கள் விருத்தப்பாவிற் பாடப்பட்ட மரபுக்கு மாறாக கலிவெண்பா, ஒத்தாழிசைக் கலிப்பா முதலிய யாப்புகளின் பயன்பாடு
   - ▪ வடமொழிச் செல்வாக்கு

4. சோழர்காலத்தில் தோற்றம் பெற்ற அரசவை இலக்கியங்களைக் குறிப்பிட்டு அவற்றின் பொதுவான பண்புகளை எடுத்துக்காட்டுக.

   1. **சீவகசிந்தாமணி**

      - ▪ ஆசிரியர் திருத்தக்க தேவர், சமயசமயக் காப்பிளம், 3147 விருத்தங்கள், காந்தருவத்தையார் இலம்பகம், குணமாலையார் இலம்பகம் முதலிய 13 இலம்பகங்கள்
      - ▪ மணநூல் என்றும் அழைக்கப்படுவது
      - ▪ ஆரம்பகால சங்கமருவிய காலத்தெழுந்த சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை அகவற்பாவிற் பாடப்பட்ட காவியம்.
      - ▪ காவியங்களை விருத்தப்பாவிற் பாடவும் நாட்டுப்படலம், நகரப்படலம் என்பன அமைக்கவும் பிற்காலக் காப்பியம்
      - ▪ ஷத்திரசூடாமணி, ஸ்ரீபுராணம், கயசிந்தாமணி முதலிய வடமொழி நூல்களின் தழுவல்
      - ▪ தமிழ்மொழிக்கு இலியட்டும் இதுவே, ஒடிசியும் இதுவே என்று ஜி.யு. போப் இனால் பாராட்டப்பட்டது.

   2. **கம்பராமாயணம்**

- கம்பரால் இயற்றப்பட்டது.
- வடமொழி வான்மீகி இராமாயணத்தின் தழுவல்
- பாலகாண்டம், அயோத்திய காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்த காண்டம் முதலிய ஆறு காண்டங்கள், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்கள்
- தமிழின் தலைசிறந்த காவியமாகவும் தமிழ்க்கவித்துவத்தின் பேரெல்லையாகவும் பண்பாட்டின் பதிவாகவும் போற்றப்படுவது.

3. **பெரியபுராணம்**

   - சுந்தரரின் திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகவும் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டத் திருவந்தாதியை வழிநூலாகவும் கொண்டு பாடப்பட்டது. 13 சருக்கங்கள் 4286 விருத்தப்பாடல்கள் 63 நாயன்மார்களின் வரலாறு கூறுவது
   - தமிழகம் முழுவதையும் சைவசமயம் என்னும் குடையின் கீழ் ஒன்றுபடவைக்க முனைந்தமை.

4. **நளவெண்பா**

   - புகழேந்திப் புலவரால் பாடப்பட்டது.
   - சுயம்வரகாண்டம், கலிதொடர்காண்டம், கலிநீங்கு காண்டம் ஆகிய மூன்று காண்டங்களும் 424 வெண்பாக்களும்.
   - மகாபாரதத்தில் வரும் நளோபாக்கியானம் என்னும் பகுதியிலுள்ள நளன் கதையை மூலக்கதையாகக் கொண்டது.
   - வெண்பாவின் சிறப்பான பயன்பாட்டால் ‘‘வெண்பாவிற் புகழேந்தி’’ எனப் போற்றப்படுகிறது.
   - வெண்பாயாப்பினால் கதைபொதி காவியமாகப் பாடப்பட்ட சிறப்பினைக் கொண்டமைந்தது.

5. **கலிங்கத்துப்பரணி**

   - ‘‘பரணிக்கோர் சயங்கொண்டார்’’ என்று போற்றப்படும் சயங்கொண்டாரால் பாடப்பட்டது.
   - தமிழின் முதற்பரணி
   - குலோத்துங்க சோழனின் படைத்தளபதியான கருணாகரத் தொண்டைமான் கலிங்க நாட்டின் மேற் படையெடுத்து வென்ற செய்தியைப் பாடுவது.
   - குலோத்துங்க சோழனின் புகழ் பலவகைகளிற் கூறப்பட்டுள்ளது. அவன் கடவுளின் அவதாரமே என்று புலவர் பாடியுள்ளார்.
   - ஒத்தாழிசைக் கலிப்பா யாப்பில் இயற்றப்பட்டது.
   - கடைத்திறப்பு, காடு பாடியது முதலிய 10 உறுப்புக்கள் உள்ளன.
   - சிறந்த கவித்துவம் உடையது.

## நாயக்கர்கால இலக்கியம்

**நாயக்கர்கால இலக்கியப் பண்புகள்**

- சமயச்சார்பு
- தத்துவச்சார்பு
- பழைமை போற்றுதல்
- வித்துவச் செருக்கு
- பொதுமக்கட்சார்பு இலக்கியங்களின் தோற்றம்
- வரண்ட இலக்கியங்கள்
- வசைக்கவி பாடும் மரபு
- பெருந்தொகையான பிரபந்தங்கள் (பிரபந்தகாலம் என்றும் கூறுவர்)

## ஐரோப்பியர் காலம்

1. ஐரோப்பியர்கால உரைநடை வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்த காரணிகள் எவை?

- இந்தியாவில் ஐரோப்பியர் வருகையை அடுத்து அரசியல், பொருளாதார சமூக அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்.
- கிழக்கிந்தியக் கம்பனியின் தோற்றமும் சென்னை கல்விச்சங்கத்தின் வளர்ச்சியும்.
- ஆங்கிலக்கல்வி
- அச்சியந்திரத்தின் வருகை
- பத்திரிகைகளின் தோற்றம்
- மதப்பிரசாரம், எதிர்ப்பிரசாரம்
- நிர்வாகத் தேவை

2. ஐரோப்பியர்கால உரைநடை இலக்கியத்தின் பிரதான பண்புகளைக் குறிப்பிடுக.

- இலக்கணத் தமிழ் மொழிநடை கையாளப்படல்
  உ-ம் : கந்தபுராண, பெரியபுராண வசனநடை
- பிற்காலப்பகுதியில் இலக்கியத் தேவைகருதி மொழி எளிமையாக்கப்படல்
- நிறுத்தக் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதல்
- ஆக்க இலக்கியங்களிலும் கண்டன பிரசுரங்களிலும் பேச்சுவழக்கு மொழிக் கையாளுகை இடம்பெற்றமை
- தமிழ் எழுத்துக்கள் எழுத்துச் சீர்திருத்தங்களுக்குள் உள்வாங்கப்படல்
  உ-ம் : வீரமாமுனிவர் பணிகள்
- ஆங்கிலச் சொற்பிரயோகம்
- தமிழில் ‘அங்கத உரைநடை’ இலக்கியமான பரமார்த்த குருக்கதை போன்ற கதைகளின் வருகை
- ஆனோல் சதாசிவம்பிள்ளையின் ‘நன்னெறிக்கதாசங்கிரதம்’ போன்ற சிறுகதைகளின் வருகை.

3. ஐரோப்பியர்காலத்தில் கிறிஸ்தவர்களின் தமிழ்ப்பணிகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

- 1453 இல் கொன்சான் தி நோபிள் துருக்கியரால் கைப்பற்றப்பட்டதும் மேலைத்தேசத்தவர்கள் கீழைத்தேசங்களுக்கான நாடுகாண் பயணங்களை மேற்கொண்டமையும்.
- தத்துவபோதகசுவாமிகள், வீரமாமுனிவர், சீகன்பால்குஐயர், போப்ஐயர், எல்லீஸ்துரை, கால்டுவெல் முதலானோரின் பணிகள் குறிக்கப்படல்
- பதிப்புத் துறையின் பொருட்டு அச்சுக்கூடங்கள் நிறுவிப் பணியாற்றியமை.
- சீகன்பால்குஐயர் தமிழ்நாட்டில் தரங்கம்பாடி என்னும் இடத்தில் தங்கியிருந்து அச்சுக்கூடம் ஒன்று நிறுவி, அதற்கருகாமையில் காகிதத் தொழிற்சாலை ஒன்றை நிறுவிப் பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டுப் பதிப்புத் துறையில் முன்னோடியாகத் திகழ்ந்தார்.
- அகராதி முயற்சிகள்
  சீகன்பால்குஐயர் லத்தீன் - தமிழ் அகராதி எழுதியமை வண. ஜீ.நைற்று என்பாரும் கபிரியேல் திசேரா, வண. பீற்றர் பேர்சிவல் ஆகியோரின் துணையுடன் யாழ்ப்பாண அகராதி உருவாக்கப்படல்.

- தமிழ்க்கல்வி முயற்சிகள்
  இறைபணி செய்ய வந்த ஐரோப்பியப் பாதிரிமார்கள் கிறிஸ்தவர்களாக்கப்பட்ட தமிழ் மக்களின் கல்விப் பணியிலும் கவனம் செலுத்தினர். கிறிஸ்தவ மதத்தைப் பரவச் செய்யும் நோக்குடன் உருவாக்கப்பட்ட இக்கல்விப்பணி, தமிழ்க்கல்வித் துறையில் புதிய மாற்றங்களை உருவாக்கியது. பாடப்புத்தகங்கள் உருவாக்கப்பட்டன, பூகோள சரித்திரம், இயற்கைப்பாடம் முதலானவை கற்பிக்கப்பட்டன. வானநூல், உடல்நூல் முதலான விஞ்ஞானக் கல்வியும் கற்பிக்கப்பட்டன.
- மொழிபெயர்ப்பு முயற்சிகள்
  ஜீ. யூ. போப் என்பவர் திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகியவற்றையும் புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை ஆகியவற்றின் சில பகுதிகளை மொழி பெயர்த்தார். எல்லிஸ்துரை திருக்குறளில் முதல் நாற்பது அதிகாரங்களை மொழி பெயர்த்தார்.

எச்.எ.கிருஷ்ணபிள்ளை ‘The pilgrim progress’ நூலை ‘இரட்சணிய யாத்திரிகம்’ என்னும் பெயரில் மொழி பெயர்த்தார்.

- ஒப்பிலக்கண முயற்சி - றொபேர்ட் கால்டுவெல்லின் ‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்’
- வரலாற்று ஆய்வு முயற்சிகள் - றொபேர்ட் கால்டுவெல்லின் ‘திருநெல்வேலியின் அரசியல் மற்றும் பொது வரலாறு’
- உரையாசிரியர் பணி : திருக்குறளில் முதல் பதின்மூன்று அதிகாரங்களுக்குத் தமிழ் இலக்கிய மேற்கோள்களுடன் எல்லிஸ்துரை உரை எழுதியமை.
- சுவடிப்பணிகள் - எல்லிஸ்துரையால் வீரமாமுனிவரின் சுவடிகள் கண்டெடுத்துப் பாதுகாக்கப்பட்டமை.
- நாவல் முயற்சிகள் - மாயூரம் வேதநாயகம் பிள்ளையால் ‘பிரதாப முதலியார் சரித்திரம்’ எழுதப்பட்டமை
- இலக்கிய முயற்சிகள்
  வேதநாயகம் சாஸ்திரியாரால் பெத்தலகேம் குறவஞ்சி பாடப்பட்டமை
  மாயூரம் வேதநாயகம் பிள்ளையால் பெண்விடுதலைக்கும்மி பாடப்பட்டமை
  எச்.எ.கிருஸ்ணபிள்ளையால் இரட்சணிய சமயநிர்ணயம், இரட்சணிய மனோகரம், இரட்சணிய குறள் முதலானவை எழுதப்பட்டமை.
- பத்திரிகை முயற்சிகள்
  1831 இல் ‘மதராஸ் ரிலியஸ் டிராக்ட் ஸொஸைடியால்’ ‘தமிழ்ப் பத்திரிகை’ சென்னையில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. ‘Missionary Gleanings, Friendly, Instructor’ முதலான கிறிஸ்தவப் பத்திரிகைகள் முறையே நாகர்கோவில், பாளையங்கோட்டை முதலான இடங்களில் இருந்து அச்சிட்டு வெளியிடப்பட்டன.
- துண்டுப்பிரசுரங்கள் :
- மதுரையில் இருந்த அமெரிக்கன் மிஷன், தஞ்சாவூர், தரங்கபாடிமிஷன் ஆகிய சங்கங்களும் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டன.

4. ஐரோப்பியர் வருகையை அடுத்துத் தமிழ் இலக்கியத் துறையில் ஏற்பட்ட புதிய போக்குகளைக் குறிப்பிடுக.

- உரைநடை முயற்சிகள்
  அ) அங்கத இலக்கியங்கள் தோற்றம் பெற்றமை
  உ-ம் : வீரமாமுனிவர் பரமார்த்த குரு கதை - 1800 களில் கிழக்கிந்தியக் கம்பனியில் பணியாற்றிய பெஞ்சமின் பபிங்டன் என்பவர் முன்னுரையுடன் இதைப் பதிப்பித்து இருக்கிறார்.
  ஆ) வேதவிளக்கம், வேதியர் ஒழுக்கம், வாமனன் கதை, பேதகம் மறுத்தல், ஞானக்கண்ணாடி முதலான நூல்கள் எழுதப்பட்டன.

- பதிப்பு முயற்சிகள்
  உ.வே. சாமிநாதையர் பதிப்பு முயற்சிகளை மேற்கொண்டவர்களுள் ஒருவர். அவரால் சீவகசிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், புறநானூறு, திருமுருகாற்றுப்படை, பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் முதலான நூல்கள் பதிப்பிக்கப்பட்டன.

- பாடநூல் உருவாக்கம்
  பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் உருவான பாடசாலைக் கல்வி முறை சார்ந்து பாடப்புத்தகங்கள் உருவாக்கப்பட்டன. தமிழ்நூல் விவர அட்டவணைகள் 1867 ஆம் ஆண்டு முதல் உருவாக்கப்பட்டுள்ளன. 1900 - 1910 காலங்களில் வெளிவந்த நூல்கள் குறித்த விவரங்களைக் கூறும் தமிழ்நூல் விவர அட்டவணை 3626 நூல்களைப் பற்றிய விவரங்களைக் கொண்டுள்ளது.

- வரலாற்று நூல்களின் உருவாக்கம், கண்டனப் பிரசுரங்கள்

ரொபர்ட் கால்டுவெலின் ‘திருநெல்வேலி மாவட்டத்தின் அரசியல் மற்றும் பொது வரலாறு’ இது 1881 ஆம் ஆண்டில் மதராசு அரசினால் வெளியிடப்பட்டது.

- கண்டன நூல்கள்
  கத்தோலிக்கருக்கும் லூதர்சபையினருக்கும் இடையில் ஏற்பட்ட பகைமை காரணமாக ஏராளமான கண்டனநூல்கள் தோற்றம் பெற்றன. வீரமாமுனிவர் எழுதிய வேதவிளக்கத்துக்கு மறுப்பாக லூதர்சபையினர் ‘திருச்சபைப்பேதகம்’ என்னும் கண்டனநூலை எழுதினர். அந்நூலுக்கு மறுப்பாக வீரமாமுனிவரால் பேதகம் மறுத்தல், லூத்தர் இனத்தியல்பு முதலான நூல்கள் எழுதப்பட்டன.

- புனைகதை இலக்கிய முயற்சிகள்
  பஞ்சதந்திரக் கதை (1826)
  பிரதாப முதலியார் சரித்திரம் (1878), சுகுணசுந்தரி (1887)
  1893 மாசியில் விவேகசிந்தாமணியில் இராஜமையர் கமலாம்பாள் சரித்திரம் நாவலை எழுதினார்.
  மாதவையாவின் பத்மாவதி சரித்திரம் (1898)

- பத்திரிகைகள்
  கிறிஸ்தவப் பத்திரிகைகள் - தற்போதகம் (1840), தே. சோபகாரி (14861)
  கிறிஸ்தவத்தூதன்
  திருச்சபைப் பத்திரிகை (1863), சினேகபோதகன் (1875)
  இந்துமதப் பத்திரிகை - பிரமதீபிகை (1878), சித்தாந்த சங்கிரகம் ( 1877)
  பெண்ணியப் பத்திரிகை - அமிர்தவசனி (1865), இந்துமதப் பெண்மணிகளுக்காகச் சென்னையிலிருந்து வெளிவந்த இதழ்.
  சிறுவர்களுக்கான பத்திரிகை - பாலதீபிகை (1840)
  இலக்கியப் பத்திரிகை - தினவர்த்தமானி

5. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மேல்வருவோர் ஆற்றிய பங்களிப்புக் குறித்து விளக்குக.

- வீரமாமுனிவர் :

  இயற்பெயர் : கான்ஸ்டான்டியஸ் ஜோசப் பெஸ்கி
  தைரியநாதர் என்றும் அழைக்கப்பட்டார். இலக்கியச் சுவடிகள் பல இடங்கள் சென்று தேடி எடுத்ததால் “சுவடி தேடும் சாமியார்” எனவும் அழைக்கப்பட்டார்.

| | |
|---|---|
| காப்பியப்பணி | : தேம்பாவணி |
| சிற்றிலக்கியப்பணி | : திருக்காவல் ஊர்க் கலம்பகம், கித்தேரி அம்மன் அம்மானை, அடைக்கலநாயகி வெண்பா, அன்னை அழுங்கல் அந்தாதி, கருணாகரப்பதிகம் |
| உரைநடைப்பணி | : வேதவிளக்கம், வேதியர் ஒழுக்கம், ஞானக்கண்ணாடி |
| அங்கத இலக்கியம் | : பரமார்த்தகுரு கதை |
| கண்டன நூல்கள் | : பேதகம் மறுத்தல், லூத்தர், இனத்தியல்பு |
| இலக்கணப்பணி | : செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம். |

அகராதிப்பணி
சதுரகராதி, 4400 சொற்களைக் கொண்ட தமிழ் போர்த்துக்கீய அகராதியை உருவாக்கினார்.

தொகுப்புப்பணி :
தமிழில் உள்ள நீதிநூல்களைத் தொகுத்து தமிழ்ச் செய்யுளத் தொகையை எழுதினார்.

எழுத்துச் சீர்திருத்தப்பணி :

தமிழில் உயிர் எழுத்துக்களின் அருகில் 'ர' சேர்த்தும் (அ, அர, எ, எர) உயிர்மெய் எழுத்துக்களின் மேல் குறில் ஓசைக்குப் புள்ளி வைத்து எழுதிக்கொண்டிருந்தார்கள். அவைகளின் நெடில் ஓசைக்கு புள்ளி வைக்காமல் தொல்காப்பியத்தில் இருந்து வழங்கி வந்த இந்தப் பழைய முறையை 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீரமாமுனிவர் மாற்றி ''ஆ, ஏ'' எனவும் நெட்டெழுத்துக் கொம்பை மேலே சுழித்தெழுதும் (கே, பே) வழக்கத்தை உண்டாக்கினார்.

- மாயூரம் வேதநாயகம் பிள்ளை (11 அக்டோபர் 1826 - 21 யூலை 1889)

பிறப்பு : தந்தையார் சரவணமுத்துப்பிள்ளையார், தாயார் ஆரோக்கிய மரி அம்மையார்
புகழ் : 1876 - 1888 ஆண்டுகளில் தமிழகத்தில் ஏற்பட்ட பஞ்சத்தின் போது தமது சொத்துக்கள் அனைத்தையும் கொடையளித்தார்.
தொழிற்பணிகள் : இவர் நீதிமன்றங்களில் பதிவாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றிய பின் 1856 இல் தரங்கம் பாடியில் முனிசீ்ப் வேலையில் அமர்ந்தார். மாயவரம் மாவட்ட முனிசீப்பாக 13 ஆண்டுகள் பணிபுரிந்தமையால் இவரை மாயவரம் வேதநாயகம் பிள்ளை என்றே அழைக்கலாயினர்.

மொழிபெயர்ப்புப் பணிகள் : கி.பி. 1805 முதல் கி.பி.1861 ஆம் ஆண்டுவரை ஆங்கில மொழியில் இருந்த சதர்ன் கோர்ட் தீர்ப்புகளைத் தமிழில் மொழி பெயர்த்துச் சித்தாந்த சங்கிரகம் என்ற நூலாக 1862 இல் வெளியிட்டார். மேலும் 1862, 1863 ஆம் ஆண்டுகளின் தீர்ப்புகளையும் அவ்வாறே வெளியிட்டார். இவ்வாறு தீர்ப்புகளை முதன்முதலில் மொழிபெயர்த்த தமிழறிஞர் வேதநாயகம் பிள்ளை ஆவார்.

புதின இலக்கியத்தின் தந்தை : பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி

கீர்த்தனைகள் : சர்வசமயசமரசக் கீர்த்தனை, சத்தியவேதகீர்த்தனை

தனிப்பாடல்கள் - பொம்மைக் கலியாணம் (நூல்), பெரியநாயகியம்மன் (நூல்) என்னும் நூல்களும் மற்றும் பல தனிப்பாடல்களும் இயற்றியுள்ளார்.
சிற்றிலக்கியப்பணி : 1873 இல் மூன்று நூல்கள், திருவருள் மாலை, தேவமாதர் அந்தாதி இவை செய்யுள் நூல்கள் கிறிஸ்தவமதம் பற்றியது. மத வரலாறு மற்றும் கடவுள் பால் அவருக்கு இருந்த அன்பு இவற்றைப் புலப்படுத்துகின்றது.

- உ.வே. சாமிநாதையர் (உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் மகன் சாமிநாதன்)

பிறப்பு : சாமிநாதன் பிப்ரவரி 19, 1885ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கும்பகோணத்துக்கு அருகே உள்ள உத்தமதானபுரம் என்னும் சிற்றூரில் வேங்கட சுப்பையர் மற்றும் சரசுவதி அம்மாள் இருவருக்கும் மகனாகப் பிறந்தார்.
கல்வி : திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் 5 ஆண்டுகாலம் பயின்றார்.
தமிழ்ப்பணி : சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள் எனப் பல்வகைப்பட்ட தொண்ணூறுக்கு மேற்பட்ட ஓலைச்சுவடிகளுக்கு நூல்வடிவம் தந்து அவற்றை அழிவில் இருந்து காத்தது மாத்திரமன்றி அடுத்த தலைமுறையினர் அறிவுந் தந்தார்.

பேச்சுத்திறன் : உ.வே.சா. கருத்தாழத்தோடு நகைச்சுவை இழையோடப் பேசும் திறமை உடையவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் உ.வே.சா. ஆற்றிய சொற்பொழிவே சங்ககாலத் தமிழும் பிற்காலத் தமிழும் எனும் நூலாக வெளியிடப்பட்டது.

பட்டங்கள் : உ.வே.சா தமிழுக்கும் இலக்கியத்துக்கும் ஆற்றிய பங்களிப்பினைப் பாராட்டி மார்ச் 21 1932 அன்று சென்னைப் பல்கலைக்கழகம் 'மதிப்புறு முனைவர்' பட்டம் அளித்தது. இது தவிர 'மகாமகோபாத்தியாய' மற்றும் 'தக்ஷிண கலாநிதி'ப் பட்டமும் பெற்றுள்ளார். இந்திய அரசு பெப்ரவரி 18 2000 ஆம் ஆண்டில் இவரது நினைவு அஞ்சல் தலை வெளியிட்டுள்ளது.

- பதிப்பு முயற்சிகள்
  சீவகசிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், புறநானூறு, திருமுருகாற்றுப்படை, பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம்
- இறப்பு - 1942 ஏப்ரல் 2

## ஐரோப்பியர் கால இலக்கியங்கள்

உரைநடையில் அமைந்தவை

அ) 18ஆம் நூற்றாண்டுக்குரியவை

| எழுதியவர் | நூல்கள் |
|---|---|
| வீரமாமுனிவர் | வேதவிளக்கம், வேதியரொழுக்கம், பேதகம் மறுத்தல், லூத்தர், இனத்தியல்பு, ஞானக்கண்ணாடி (இவை கிறிஸ்தவ சமயச் சார்புடையவை) |
| வீரமாமுனிவர் | வாமனன் கதை, பரமார்த்தகுரு கதை (தமிழிலே தோன்றிய அங்கத இலக்கியம் என்பர்) தென்னூல் விளக்கம் (இலக்கணநூல்) |
| சிவஞானமுனிவர் | தொல்காப்பியச் சூத்திரவிருத்தி (இலக்கண ஆராய்ச்சி)இலக்கண விளக்கச் சூறாவளி சித்தாந்த மரபுக்கண்டன நூல் (கண்டனநூல்)திராவிட மாபாடியம் (சிவஞான போதப் பேருரை) |

ஆ) 19ஆம் நூற்றாண்டுக்குரியவை

இந்துசமயஞ் சார்ந்தவை

| எழுதியவர் | நூல்கள் |
|---|---|
| வல்லூர் தேவராசபிள்ளை | குசேலோபாக்கியானம், சிறு காவியம் |
| மீனாட்சி சுந்தரம்பிள்ளை | திருக்குடந்தைப் புராணம், சேக்கிழார் பிள்ளைத்தமிழ், வாட்போக்கிக் கலம்பகம், திருவருட்பா |
| இராமலிங்க அடிகள் (வள்ளலார்) | திருவேரகயமக அந்தாதி |

**கிறிஸ்தவசமயஞ் சார்ந்தவை**

| எழுதியவர் | நூல்கள் |
|---|---|
| கிருஸ்ணபிள்ளை | இரட்சணிய யாத்திரிகம் (காவியம்), இரட்சணிய மனோகரம், இரட்சணிய சமய நிர்ணயம். |
| வேதநாயக சாஸ்திரியார் | ஞானக்கும்மி, பெத்லகேம் குறவஞ்சி, ஞான ஏற்பாடு |
| வே.கனகசபைப் புலவர் | திருவாக்குப் புராணம் |

**இஸ்லாமிய சமயஞ் சார்ந்தவை**

| எழுதியவர் | நூல்கள் |
|---|---|
| குணங்குடி மஸ்தான்சாகிபு புலவர் | மஸ்தான் பாடல்கள் |
| சேகுனாப் புலவர் | நாகையந்தாதி, திருமணிமாலை |

| | |
|---|---|
| வண்ணக்களஞ்சியப் புலவர் (ஹமீது இபுராஹீம்) | இராஜநாயகம், தீன் விளக்கம் |
| நஞ்சீயர் (நம்பிள்ளை) | திருவாய்மொழி, திருப்பள்ளியெழுச்சி திருவிருத்த உரை, திருமொழி உரை (ஒன்பதாயிரப்படி) |
| பெரியவாச்சான் பிள்ளை | நாலாயிரம் திவ்விய பிரபந்தங்களுக்கும் உரை (இருபத்து நான்காயிரப்படி) |
| வடக்குத் திருவீதிப்பிள்ளை | திருவாய்மொழி உரை (முப்பத்தாறாயிரப்படி) |
| அழகிய மணவாளர் | திருப்பாவை உரை (ஆறாயிரப்படி)அமலன் ஆதிபிரான் கண்ணின் நுண் சிறுதாம்பு உரை |
| இ. தத்துவபோத சுவாமிகள் | கடவுள் நிர்ணயம், ஆத்தும நிர்ணயம், தத்துவக் கண்ணாடி, |
| (ரொபேர்ட் டி.நோபிலி) (1605-1656) | யேசுநாதர் சரித்திரம் |

தத்துவ போதக சுவாமிகள் 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். எனினும் இவரது உரைநடைப் பண்புகளைக்கருதி ஐரோப்பியர் காலத்தில் வைத்து நோக்குவோரும் உளர்.

## இருபதாம் நூற்றாண்டு.

### சிறுகதை

### சிறுகதை தமிழகப் பின்புலத்திலான பார்வை

1. ஆரம்பகாலத் தமிழ்ச்சிறுகதை வளர்ச்சியில் பாரதியார், வ.வே.சு. ஐயர் ஆகியோரின் முயற்சிகளை மதிப்பிடுக.
   - மேனாட்டுச் செல்வாக்கின் காரணமாக தமிழில் சிறுகதை 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியது.
   - ஆரம்பத்தில் கதை மரபே சிறுகதை மரபாக இருந்தது.
   - தமிழில் தாகூரின் சிறுகதைகளை மொழிபெயர்த்துப் பணிசெய்தவர் பாரதியார். மரபு வழியான சிறுகதைகளைப் படைத்த அவர் தமிழ்ச் சிறுகதையின் முன்னோடி ஆவார். அக்காலச் சமூகப் போக்குக்களைச் சித்திரித்த அவர் கதைகள் காதல், நாட்டுப்பற்று முதலான அம்சங்களைக் குறிப்பாக வெளிப்படுத்தின.
   - ஆறில் ஒரு பங்கு, பூலோகரம்பை, வேணுமுதலி முதலிய கதைகள் சமுதாய உணர்வுகளைக் கருப்பொருளாக்கி அவர் எழுதிய குறிப்பிடத்தக்க கதைகள் பாரதியார் நிறையக் கதைகளை எழுதிய போதும் அவை உருவப் பிரக்ஞையுடன் எழுதப்பட்டவையல்ல.
   - தமிழில் முதல் சிறுகதை முயற்சி பாரதியாரோடு தொடங்கினாலும் வா.வே.சு.ஐயரின் (1881-1925) 'குளத்தங்கரை அரசமரம்' என்ற கதையே சிறு கதைக்குரிய முழுமையான அம்சங்களோடு வெளிவந்தது என்பர். இக்கதை அக்காலத்து வரதட்சணைக் கொடுமையை வெளிப்படுத்தியது. 'மங்கயர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்' என்ற தலைப்பில் அவர் கதைகள் தொகுதியாக வெளிவந்தன. 'லைலா மஜ்னூன்', 'எதிரொலியான்', அழேன் ழக்கே ஆகிய கதைகளில் பிறநாட்டுக் கதாபாத்திரங்களை இவர் அழகாகச் சித்திரித்துள்ளார்.
   - இவரது கதைகளின் கதாபாத்திரங்கள் உயிருடன் நடமாடுவன.
   - உண்மைக்காதல், தியாகம், வீரம் முதலிய மக்கட் பண்புகள் அவரது கதைகளில் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
   - இவரது கதைகள் சமூகப் பிரச்சினைகளை யதார்த்தமாகச் சித்திரித்தவை அல்ல. கற்பனை அம்சமும் மிகை உணர்ச்சியும் மேலோங்கி நிற்பன.
   - இவரது கதைகளில் சிறுகதைக்குரிய பூரண வடிவம் இவரைத் தமிழ்ச்சிறுகதையின் தந்தை என்பர்.
2. தமிழ்ச்சிறுகதை வளர்ச்சியில் மணிக்கொடிக்காலம் பெறும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுக.
   - 1930 - 1940 களில் 'மணிக்கொடி' சஞ்சிகை வெளிவந்தது. இக்காலத்தையே மணிக்கொடிக் காலம் என்பர்.

- இக்காலத்தில் தமிழில் நல்ல இலக்கியத் தரமுள்ள சிறுகதைகள் பலவும் தோன்றின.
- மணிக்கொடியில் சிறுகதை எழுதியவர்களில் புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன், மௌனி, ந.பிச்சமூர்த்தி, பி.எஸ்.ராமையா முதலியோர் மிகவும் முக்கியமானவர்கள். இவர்கள் மூலமே தமிழில் சிறுகதை வேர் கொண்டது.
- இவர்களுள் புதுமைப்பித்தன் முதன்மையானவர். அவர் எழுதிய சுமார் 100 சிறுகதைகள் அவர் மொழிபெயர்த்த உலகச் சிறுகதைகள் தமிழில் சிறுகதை என்னும் இலக்கிய வடிவத்தை முழுமைப்படுத்தின.
- அவருடைய கலை நுட்பமும் கூர்மையான சமூக விமர்சனமும் தமிழ்ச்சிறுகதை வரலாற்றில் அவருக்கு அழியா இடத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளன.
- கு.ப.ரா. இக்காலத்தின் பிறிதொரு முக்கியமான எழுத்தாளர். ஆண், பெண் உறவுச் சிக்கல்களுக்குத் தன் கதைகளில் பெரிதும் முக்கியத்துவம் கொடுத்தார். பெண்களின் மன உணர்வைச் சிறப்பாகச் சித்திரித்தவர் என்று இவர் கருதப்படுகின்றார்.
- மௌனி பிறிதொரு முக்கியமான சிறுகதை எழுத்தாளர். மிகக் குறைவாக எழுதி (சுமார் 30 கதைகள்) அதிக பிரபலம் பெற்றவர் இவர். தன் கதாபாத்திரங்களில் உள்ளுணர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். இவர் கதைகள் இலகுவில் புரிந்துகொள்ள முடியாதவை. சிறுகதையின் திருமூலர் எனப் புதுமைப்பித்தன் இவரைப் பற்றிச் சொல்லியுள்ளார்.
- ந.பிச்சமூர்த்தி, பி.எஸ்.ராமையா முதலியோரும் முக்கியமான மணிக்கொடிக்கால எழுத்தாளர்கள். ல.ச.ராமாமிர்தம், ந.சிதம்பரசுப்பிரமணியம், சி.சு.செல்லப்பா, க.ந.சுப்பிரமணியம், எம்.வி. வெங்கட்ராமன் முதலியோரும் மணிக்கொடிக்கால எழுத்தளர்களாவர்.
- சமூக உணர்வுடனும் வடிவ நேர்த்தியோடும் உள்ளடக்கச் செழுமையோடும் சிறுகதைகளை எழுதித் தமிழ் மண்ணுக்குரிய இலக்கிய வடிவமாகச் சிறுகதையை மாற்றியவர்கள் ‘மணிக்கொடிகால’ எழுத்தாளர்கள்.
- அவ்வகையில் மணிக்கொடிக் காலம் தமிழ்ச்சிறுகதை வளர்ச்சியில் முக்கியத்துவம் பெறுகிறது.

3. ஆரம்பகாலச் சிறுகதைகளின் முக்கிய பண்புகள் யாவை?
    - யதார்த்தப்பண்பு, சமூக உணர்வு, பழைய புராணக் கதைகளை நவீன காலத்துக்கு ஏற்றபடி நோக்கல்
    - பேச்சுவழக்கினைக் கையாளுதல்
    - அளவிற்சிறியதாகவும், இறுக்கமாகவும் கட்டுக்கோப்பு உடையதாகவும் முழுமையும் ஒருமைப்பாடும் கொண்டதாகவும் இருத்தல்
    - காவியத்தின் நிழற்சாயல் காணப்படல். உ-ம்: வ.வே.சு.ஐயரின் கதைகள்
    - வரதட்சிணைக்கொடுமை, விதவை மறுமணம், தீண்டாமை, மதுவிலக்கு, பேய்பிசாசு நம்பிக்கை என்பன சிறுகதையின் பாடுபொருள்களாகக் காணப்படல். உ-ம் : மாதவையாவின் சிறுகதைகள்
    - கட்டுரைப் போக்கான கருத்து வீச்சுக்கள் அதிகமாகவும் கலையம்சம் குறைவாகவும் காணப்படல்.
    - தி.ஜா.ராவின் சிறுகதைகள் தமிழ்நாட்டு சமுதாய வாழ்வில் உள்ள சிக்கலைக் கலையழகோடு காட்டுகிறது.
    - பொருத்தமான பதப்பிரயோகங்களோடு தெளிந்த நடையில் இயங்கிச் செல்லும் கதையே தி.ஜா.ராவின் கதையாகும்.
    - நாட்டுப்புறக் கதை கூறும் மரபும் காணப்பட்டது. - பி.எஸ்.ராமையா
    - தி.ஜா.ராவின் கதைகள் சமூகச் சிக்கல்களைக் கூர்ந்து நோக்கும் திறன் படைத்தவை
    - குழந்தையின் மனநிலையைக் கலை உணர்வோடு சித்திரிப்பதில் பி.எஸ். ராமையா வெற்றி பெற்றார்.
    - தத்துவப் போக்கு, சமுதாயச் சிந்தனைகள், விதியின் ஆற்றல், சாவின் அச்சம், கலையின் நிலைபேறு, தீண்டாமை ஒழிப்பு, கிராமச் சீர்திருத்தம், விதவை விவாகம், ஒத்துழையாமை இயக்கம், மேலை இலக்கிய மரபையும் கீழை இலக்கிய மரபையும் கலந்து எழுதுதல், மனித மன உணர்வுகளை வெளிப்படுத்தல் முதலானவை ஆரம்பகாலச் சிறுகதையின் பண்புகளாகும்.
    - ஆரம்பகால சிறுகதை எழுத்தாளர்களாக அ.மாதவையா, தி.ஜா.ர சங்கு சுப்பிரமணியம், சி.சு. செல்லப்பா, ந.பிச்சமூர்த்தி, பி.எஸ்.ராமையா, புதுமைப்பித்தன், கு.ப.ரா, மௌனி,

ந.சிதம்பரசுப்பிரமணியன் பெ.கோ. சுந்தரராஜன் (சிட்டி) முதலானோர் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.

- இவ் ஆரம்பகாலச் சிறுகதைகள், விடுதலைக்கு முற்பட்ட ஆரம்பகாலச் சிறுகதைகளின் கதைப்பொருள்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்.
    - குழந்தை மணம்
    - கைம்பெண்துயரம்
    - இரண்டாவது திருமணம்
    - பொருந்தாமணம்
    - கலப்பு மணம்
    - சீதனப் பிரச்சினை
    - தீண்டாமையும் மதுவிலக்கும்
    - புராண, இதிகாச, இலக்கிய, வரலாற்றுச் செய்திகள்
    - சுரண்டல்

4. புதுமைப்பித்தன் சிறுகதைகளில் ஆரம்பகாலச் சிறுகதைகளின் பண்புகள் இடம்பெறுமாற்றினைத் தெளிவுபடுத்துக.

- இவரது கதைகள் யதார்த்தப் பண்புடையன. சமூகஉணர்வுள்ள பெருந்தொகையான கதைகளை எழுதியுள்ள புதுமைப்பித்தன் பழைய கதைகளைப் புதிய நோக்கில் பார்ப்பவர். இவரது கதைகளில் திருநெல்வேலித்தமிழ் பயன்படுத்தப்படுகிறது. இவர் பேச்சு மொழியை திறமையுடன் கையாண்டார்.
- சிறுகதை வாழ்க்கையின் 'சாளரம்' என்பது இவரது கருத்தாகும்.
- இவரது சிறுகதைகளுள் குறிப்பிடத்தக்கன. ஒருநாள்கழிந்தது, பொன்னகரம், கடவுளும்கந்தசாமிப்பிள்ளையும், அகலிகை, தொண்டர்நாதன் தூது, சாபவிமோசனம் என்பனவாகும்.
- ஒருநாள் கழிந்தது எனும் சிறுகதையானது சமூக உணர்வுடையதாகும். யாரும் தொடுவதற்குக் கூசுகின்ற விடயங்களை மிகவும் கலையழகோடும் அங்கதச் சுவையோடும் அம்பலப்படுத்துவனவாக இருக்கும்.
- சாதாரண ஒரு மனிதனின் வாழ்க்கையில் ஏற்படும் நம் கண்ணுக்கு அற்பமாகத் தெரியும் விடயங்கள் கூட இவரின் எழுத்தாற்றலின் விளைவாய் ஆழமான விடயங்களின் படப்பிடிப்பாக மாறுவதைக் காணலாம்.
- 'பொன்னகரம்' கதை இவரது தீவிர போக்கைக் காட்டுகின்றது.
- 'கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்' என்ற கதையில் நகைச்சுவை இழையோடுகிறது.
- அகலிகை, பாபவிமோசனம் போன்றன பழைய கதைகளைப் புதிய பார்வையில் இவர் பார்த்ததற்குத் தக்க சான்றாகும்.
- சாதிக்கொடூரம், விதவைக் கொடுமை, இளமைமணம், பொருந்தாத் திருமணம், மூடநம்பிக்கைகள் போன்றவற்றை இவர் உண்மையாகக் கண்டித்தார்.
- இவரது கதைகள் பலதரப்பட்டவை. இயல்பு நவிற்சிப் பாங்கான கதைகள், புதுவிளக்கக் கதைகள், அகநிலை உணர்வுக் கதைகள், கனவுருப் புனைவு சார்ந்த கதைகள், குறியீட்டுருவக் கதைகள், நையாண்டிக் கதைகள், ஒட்டுவமைக்கதைகள், பேய்பிசாசு பற்றிய கதைகள் எனப் பலவகைப்படுத்தி நோக்கலாம்.
- இவரது கதைகளில் மேலை இலக்கிய மரபும், கீழை இலக்கிய மரபும் பின்னிக் கிடக்கின்றமையை அவதானிக்கலாம்.

5. தமிழ்ச்சிறுகதை வரலாற்றில் பின்வருவோர் பெறும் இடத்தினை மதிப்பிடுக.

**பிச்சமூர்த்தி**

- மணிக்கொடிகுழு எழுத்தாளர்களுள் ஒருவர் பிச்சமூர்த்தி.
- இவர் சிறுகதையில் தத்துவ நோக்கைப் புகுத்தி, மனிதனின் ஆன்மீக உயர்வுக்கு வழிகண்டவர். மனிதாபிமானம், அன்பு, தியாகம் ஆகிய பண்புகளாலேயே மனிதன் தெய்வ நிலைக்கு

உயர்ந்து போகிறான் என்பது இவரது கருத்து. ஒவ்வொரு தனிமனிதனின் மனமும் அருள் பழுத்த கனியாகுமேயானால் சமுதாய அமைதி தானே விளையும் என்று அவர் கருதினார்.

- இவரது கதைகளில் மாயமான், நாகூர் ஆண்டவர், பப்பாசாமியார், வானம்பாடி, ஞானப்பால், ஈஸ்வரலீலை என்பன குறிப்பிடத்தக்கன.
- இவரது சிறுகதைகளின் பாடு பொருள்கள் பலதிறப்பட்டவை. அவற்றில் சில வருமாறு.
  தன்னை அறிந்து இன்பமுறமுடியாத ஒருவர் நினைத்ததையெல்லாம் பற்றுக்கோடாக எண்ணி ஏமாந்து போவதை வெளிப்படுத்தும் - மாயமான்
  ஒரே நிகழ்ச்சி பற்றிய இருவேறு மனிதர்களின் பார்வையை வெளிப்படுத்தும் - ஈஸ்வரலீலை
  சமுதாயச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் - 'இரும்பும் புரட்சியும்'
- இவரது கதைகளில் எந்தக் கருத்தையும் வெளிப்படையாகப் பேசுவதில்லை. குறிப்பாற்றல் கொண்ட எளிய தொடர்களை மட்டுமே இவர் பயன்படுத்தியுள்ளார்.
- உருவகநலனும் தொனிப்பொருளும் கலைத்திறனும் ஒருங்கே வெளிப்படுகின்றது. - பாம்பின் கோபம் முதலானவை குறிப்பிடத்தக்க சிறுகதைகளாகும்.

**கல்கி**

- விடுதலைக்கு முற்பட்ட காலத்தில் தோன்றிய தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்களுள் ஒருவர்.
- தமிழ்ச் சிறுகதை அரங்கில் 'சாரதையின் தந்திரம்' என்ற தொகுப்பின் மூலம் கல்கி அறிமுகமானவர். அவர் முதல் சிறுகதைத் தொகுப்பாகிய இந்நூல் 1931ஆம் ஆண்டு வெளிவந்தது.
- 1937ஆம் ஆண்டு கணையாழியின் கனவு என்ற மற்றொரு தொகுதி வெளிவந்தது.
- இவரது குறிப்பிடத்தக்க ஏனைய கதைகள்
    - விசமந்திரம்
    - கேதாரியின் தாயார்
    - கவர்னர் விஜயம்
    - மயில் விழிமான்
    - வீடு தேடும் படலம்
    - புலிராஜா
    - சுண்டுவின் சந்நியாசம்
    - பாழடைந்த பங்களா
    - வைரமோதிரம்
    - மயிலைக்காளை
- இவரது கதைப்பொருள்கள்
    - தீண்டாமை ஒழிப்பு, கிராமச் சீர்திருத்தம், விதவைவிவாகம்
    - ஒத்துழையாமை இயக்கம் - சாரதையின் தந்திரம், கணையாழியின் கனவு
    - சாதி வேற்றுமை - வி, மந்திரம்
    - கிராமச் சீர்திருத்தம், மதுவிலக்குப் பிரசாரம் - கணையாழியின் கனவு
    - பெண்களுக்கு எதிரான கொடுமை - கவர்னர் விஜயம்
    - சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்தல், புனைவியல் தன்மை - மயில்விழிமான்
    - நகைச்சுவைத்தன்மை - 'வீடு தேடு படலம்', 'புலிராஜா'
    - பிறமொழித்தழுவல் - 'பாழடைந்த பங்களா'
- இவரது சிறப்பியல்புகள்
    - சமூகச் சிக்கல்களை இயல்பு நவிற்சிப் பாங்கோடு சித்திரித்தல்
    - கதைகள் நெடுமையானதாய் இருத்தல்
    - வாசகர்களின் உணர்வுகளுக்கு விருந்து படைக்கும் வகையில் நகைச்சுவைப் பண்புடன் கதைகளை எழுதுதல்.
    - வாசகர் தொகையைப் பெருக்க உதவிய சிறுகதை வளர்ச்சிக்கான இவரது குறிப்பிடத்தக்க பங்களிப்பாக அமைதல்.
    - குத்தலும் கேலியும் நிறைந்த தென்னிந்தியத் தமிழ் நடையில் எழுதுதல்
    - பிறமொழிக் கதைகளின் தழுவலாக இருந்தபோதும் தழுவல் என்றே தெரியாத வண்ணம் தமிழ்நாட்டு மண்ணில் வேரூன்றும் படியாக

எழுதியமை

**அகிலன்**

- சிறந்த நாவலாசிரியராகவும் சிறந்த சிறுகதை ஆசிரியராகவும் விளங்கியவர் அகிலன்.
- இவரது சிறுகதைகள்
    - காசுமரம்
    - பூச்சாண்டி
    - இரவும் பகலும்
- சிறுகதைப் பொருள்
    - குழந்தையின் மனநிலையைக் கூறல் - ‘காசுமரம்’
    - மனச்சான்றின் ஆற்றலை விளக்குதல் - ‘பூச்சாண்டி’
    - ஆண் பெண் உறவு - இரவும் பகலும்
- இவரது கதைகளில் உள்ள கலைத்திறன் வாசகர் மனதைக் கொள்ளை கொள்ளும் அளவிற்கு ரசனையை ஏற்படுத்துவதாய் உள்ளது.
- 1960 இன் பின் அகிலன் எழுதிய கதைகள் பெரிதும் பிரசாரப் போக்கைக் கொண்டனவாக உள்ளன.
- உண்மையே அழகு அழகே உண்மை என்ற காந்தியக் கலைக்கோட்பாடு அவரது பிற்காலக் கதைகளின் அடிநிலைப் பண்பாக விளங்குகிறது.

**அழகிரிசாமி**

- தமிழகச் சிறுகதை வரலாற்றின் இரண்டாம் காலகட்டத்தினை உருவாக்கியவர் அழகிரிசாமி.
- சமுதாயச் சிந்தனையும் எளிமையான சித்திரிப்பும் கொண்ட இவரது கதைகள் மரபு வழிப்பட்டவை.
- கதைகள் மெல்லவே விரிந்து செல்லும் ஆற்றல் உடையன.
- இவரது கதைகளில் சில வருமாறு
    - அன்பளிப்பு
    - திருவேணி
    - ராஜா வந்திருக்கிறார்
- இவரது கதைகளின் பொதுவான பண்புகள்
    - பெண்களின், குறிப்பாக வேலைக்குச் செல்லும் பெண்களின் பிரச்சினைகளையும் மன உணர்வுகளையும் துல்லியமாக சித்திரிப்பவர்.
    - சிறுவர்களின் மனநிலையைச் சித்திரிப்பது
    - அங்கதச் சுவையோடு கேலி, கிண்டல், குத்திக்காட்டல் முதலிய பண்புகள் இவரது கதைப் பண்புகளாகும்.

**ஜெயகாந்தன்**

- மிராசுதார்கள், தாசில்தார்கள், ஐசிஎஸ் வர்க்கத்தாரும் வக்கீல்மார்களும் கதைமாந்தர்களாக இடம்பெற்ற சிறுகதைகள்.
- உலகத்தில் நடைபாதைவாசிகள், ரிக்ஷாக்காரர்கள், விபச்சாரிகள், பிச்சைக்காரர்கள், தொழிலாளர்கள், குஷ்டரோகிகள், உளநோயாளர்கள் ஆகியோரைக் குடியேற்றி புதிய மாற்றத்தை உண்டாக்கியவர் ஜெயகாந்தன்.

- இவரது கதைப்பொருள்
    - சமுதாயத்தின் அடிமட்டத்தில் புறக்கணிக்கப்பட்டு நசுக்கப்படும் ஏழை எளியோரின் துயரை அனுபவத்தோடு வெளிப்படுத்துபவை
    - இவரது கதைகள் மாக்சீயக் கோட்பாடுகளின் தாக்கத்திற்கு உட்பட்டவை.
    - தீவிரமான தனிமனித வாதமும் இவர் கதைகளில் எதிரொலித்தது.
    - வாழ்க்கையில் உள்ள சகலவிதமான பிரச்சினைகளையும் புதிய கோணத்தில் இருந்து தீவிரமாக விமர்சனம் செய்யும் பாங்கு காணப்படுதல்.
    - வாசகரைச் சிந்திக்கத் தூண்டும் தன்மை வாய்க்கப் பெற்றவை.

- இவரது ஆற்றல்கள்
    - தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் ஜெயகாந்தனின் சாதனை அளவிட்டு உரைக்க முடியாத பெருமை உடையது.
    - இவர் 'சிறுகதை மன்னன்' எனப் போற்றப்படுகிறார்.
    - வாழ்க்கைப் பிரச்சினைகளைக் கூட சிந்திக்கத் தூண்டும் வகையில் இரசனைபடக் கூறுவது இவரது தனித்துவம்.
- இவரது கதைகளிற் சில,
    - இனிப்பும் கரிப்பும்
    - ஒருபிடி சோறு
    - அந்தரங்கம் புனிதமானது
    - ஆடும் நாற்காலிகள் ஆடுகின்றன
    - உண்மை சுடும்
    - இருளைத் தேடி

**சிதம்பரசுப்பிரமணியம்**

- மணிக்கொடி எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர் ந.சிதம்பரசுப்பிரமணியம்
- இவர் குறைந்த சிறுகதைகளை எழுதியிருந்தாலும் கூட திறனாய்வாளர்களின் கவனத்திற்குரியவராய் இருக்கிறார்.
- மேலைநாட்டு இலக்கியப் பரிச்சயத்தால் இவருக்குச் சிறுகதை வடிவம் மிக எளிமையாகப் பிடிபட்டிருந்தது.
- இவரது கதைகள்
    - ஊர்வலத்தில்
    - புவனேஸ்வரி
- இவரது கதைகளின் பொருள்கள்
    - விதியின் ஆற்றல்
    - சாவின் அச்சம்
    - கலையின் நிலைபேறு
    - வாழ்வின் நிலையாமை
- நிலையாமையைக் கூட கலையழகோடு வெளிப்படுத்தியுள்ளார்.

6. சிறுகதை என்பதன் பொருளை விளக்கி, சுதந்திரத்துக்கு முற்பட்ட தமிழ் சிறுகதையின் போக்குகளைக் குறிப்பிடுக.

- சிறுகதை என்றால் 'சிறிய கதை'அல்ல. எல்லா சிறிய கதைகளும் சிறுகதைகள் அல்ல. சிறுகதை என்பது ஒரு தனித்த இலக்கிய வடிவம். அதற்கு தனியான வடிவச்சிறப்புகள் உண்டு. சிறிய கதைகள் பலவகை. உதாரணக்கதைகள், நீதிக்கதைகள், உருவகக் கதைகள், நிகழ்ச்சித் துணுக்குகள் எல்லாமே சிறிய கதைகள்தான்.
- தமிழ் மொழியில் கதை என்பது கட்டு, குறிப்பு, கிளவி, புனைவு, கதானகம் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது.
- சிறுகதையின் மூலபிதா என்று கருதப்படும் எட்கார் அலன்போ கூட, 'அரைமணி நேரம் முதல் இரண்டு மணி நேரம் உள்ள காலம்வரையில் படித்து முடித்து மகிழக் கூடியதாகச் சிறுகதை இருக்கவேண்டும்'' - என்று கூறியமை.
- ''வாழ்க்கையின் சாளரம்'' சிறுகதை என்று புதுமைப்பித்தன் கூறியமை
- பேராசிரியர் வெல்ஸ் 'பத்தாயிரம் சொற்களுக்கு மேற்போகாமல் சற்றேறக்குறைய அரைமணி நேரத்தில் வாசித்து முடிக்கக் கூடிய தொன்றாக இருக்கவேண்டும்' - என்று கூறியமை.
- சிறுகதை என்பது சிறய கதை என்னும் பொருள் இல்லாமல் ஒரு புதிய இலக்கிய வடிவத்தின் பெயரைக் குறிக்கும் தனிச்சொல் என பிரண்டர் மத்யூ கூறுவார்.
- சுருக்கமும் செறிவும் சிறுகதையின் முக்கிய பண்புகள் என ஜேம்ஸ் கூப்பர் லோறன்ஸ் கூறுவர்.

7. சுதந்திரத்துக்கு முற்பட்ட தமிழ்ச் சிறுகதையின் போக்குகளை ஆராய்க.
   - 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து, தமிழ் இலக்கியத்தின் பரப்பிலும் வடிவத்திலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. அச்சுப்பொறியின் பயன்பாட்டினாலும், ஆங்கில மொழியின் செல்வாக்கினாலும் தமிழ்ச் சிறுகதை வழக்கில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது. வாய்மொழியாக வழங்கி வந்த கதைகள் பல நூல் வடிவில் அச்சுருவிலே வெளியிடப்பட்டன. இவ்வகையில் முதன்முதலில் அச்சில்வந்தது வீரமாமுனிவரின் 'பரமார்த்த குருவின் கதை' என்பதாகும்.
   - வீராசாமி செட்டியார் (1855) தாம் எழுதிய உரைநடைக் கட்டுரைகளைத் தொகுத்து 'வினோத ரசமஞ்சரி' என்று வெளியிட்டமை..
   - ஆசிரியர் சி.வி. சுவாமிநாதய்யர் 1892இல் 'விவேக சிந்தாமணி' என்ற சஞ்சிகையைத் தொடங்கினார். இதில் மாதவையர், பி.ஆர் ராஜம் ஐயரின் சிறுகதைகள் வெளிவந்தமை 1908 இல் வ.வே.சு. ஐயரின் "குளத்தங்கரை அரசமரம்" கதை முதன்முதலில் வெளிவந்தமை.
   - மாதவைய்யாவின் 'குசிகர் குட்டிக்கதைகள்' எனும் கதைத்தொகுதி ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவந்தமை. இவர் பிராமணச் சமூகத்தில் காணப்பட்ட குழந்தைத் திருமணம், விதவைகள் பட்ட துயர், வரதட்சணைக் கொடுமை முதலிய சீர்கேடுகளைப் பற்றித் தமது கதைகளின்மூலம் மிக வன்மையாகக் கண்டித்தமை. 'பஞ்சாமிர்தம்', 'கண்ணன் பெருந்தூது' போன்ற கதைகள் உருவ வார்ப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்கள் எனலாம்.
   - சுப்பிரமணியபாரதியார் தாகூரின் சிறுகதைகளை மொழிபெயர்த்தமை. பாரதியின் சந்திரிகையின்கதை, வேணு முதலி, பூலோகரம்பை, காக்கை இலக்கணம் கற்ற கதை, ஆவணி அவிட்டம், ஸ்வர்ணகுமாரி, ஆறில் ஒரு பங்கு, வேணு முதலி, விசித்திரம் முக்கியமான கதைகள் என்பதை உரைத்தல்
   - வ. வே. சு. ஐயரைத் தமிழ்ச் சிறுகதையின் தந்தை என்று கூறல் 'கம்ப நிலையம்' என்ற பதிப்பகத்தின் மூலம் பல கதைகளை வெளியிட்டமை, மங்கையர்க்கரசியின் காதல், காங்கேயன் முதலான கதைகளுக்கு இவர் எழுதியுள்ள சூசிகை குறித்துக் குறிப்பிடல், மற்றும் எதிரொலியாள், அனார்கலி, லைலாமஜ்னூன், அழேன்ழக்கே முதலான சிறுகதைகள் எழுதியமை.
   - ராஜாஜி, தி.ஜ. ரங்கநாதன், ந. பிச்சமூர்த்தி, கல்கி போன்றோர் இவற்றை அடிப்படையாகக்கொண்டு சிறுகதைகள் எழுதலாயினர். தி.ஜ.ர-வின் சந்தனக்காவடி, நொண்டிக்கிளி- தொகுப்புகள், ந. பிச்சமூர்த்தியின் மோகினி, பதினெட்டாம் பெருக்கு, முள்ளும் ரோஜாவும், காவல், கல்கியின் கேதாரியின் தாயார், ராஜாஜியின் தேவானை - சிறந்த சிறுகதைகளே ராஜாஜி நீதிக்கதைகளையும், போதனை விளக்கச் சிறுகதைகளையும் எழுதித் தம் பெயரை நிலைநிறுத்தினார்.
   - மணிக்கொடிக் காலக் கதைகளைக் குறிப்பிடல். 1937 இல் பி.எஸ். ராமையாவையும், வ.ராவையும் ஆசிரியராகக் கொண்டு வெளிவரத் தொடங்கிய மணிக்கொடி இதழ் 1939வரை வெளிவந்தது.
   - நவீன இலக்கியச் சிறுகதையின் பரிசோதனைக்களமாக மணிக்கொடி விளங்கியது. புதுமைப்பித்தன், ந. பிச்சமூர்த்தி, கு.ப. ராஜ கோபாலன், பெ.கோ. சுந்தரராஜன் (சிட்டி), பி.எஸ். ராமையா, மௌனி (எஸ். மணி). கி.ரா.ந. சிதம்பர சுப்பிரமணியம், ஆர். சண்முக சுந்தரம், எம்.வி.வெங்கட்ராம், சி.சு.செல்லப்பா, பி.எம்.கண்ணன், லா.ச.ராமாமிர்தம், க.நா. சுப்பிரமணியம் என்போர் மணிக்கொடி எழுத்தாளர்களாகப் பரிணமித்தல்.
   - மணிக்கொடியின் மூலவர்களில் ஒருவரான புதுமைப்பித்தன் வலுவும் வேகமும் கொண்ட், நடையில், புதுப் புதுச் சொல்லாட்சிகளைக் கொண்டு சமுதாய உண்மைகளை வெளிப்படுத்தினார். இவர் ஆழமும், பரப்பும் கொண்ட சிறுகதைகளைப் படைத்தார்.
   - மௌனி 'கனமான விடயங்களை இலகுவான சொற்களில் 'மனப்போக்குகளின் நடப்பியல்புகளைப் பரிபூரணமாகச் சித்திரித்துள்ளார். நிகழ்ச்சிகளைச் சிக்கனப்படுத்தி மனித நிலைமைகளைச் சிக்கனச் சொற்களிலே அகண்டாரமாகக் காட்டிவிடும் ஆற்றல் மிக்கவர்.
   - ந. பிச்சமூர்த்தி ஆழ்ந்த அனுபவங்களை, தரிசனம் நிறைந்த தத்துவச் சரடுகளில், உவகை மிகுந்த சொற்றொடர்கள் நிறைந்த நடைகளில் சிறுகதைகளை வெளியிட்டார்.
   - பி.எஸ். ராமையா காந்திய அடிப்படையில், சமுதாயச் சீர்கேடுகளைச் சித்திரிக்கும் கதைகளையே பெரும்பாலும் இக்காலத்தில், எழுதினார்.
   - இக்கால கட்டத் தமிழ் எழுத்தாளர்கள் பெரும்பாலோர். கல்லூரிகளில் படித்தவர்கள்; தேசிய உணர்ச்சி மிஞ்சியவர்கள்; பழைமையின் எதிரிகள்; வாழ்வின் உண்மைகளை

நேருக்கு நேர் நின்று தரிசித்து, அவற்றை விமர்சன அடிப்படையில் சர்வதேச இலக்கியத்தின் தரத்திற்குக் கலையழகுடன் தமிழில் சிறுகதை எழுதவேண்டுமெனத் துடித்தவர்கள் என்பதனை அவர்களின் படைப்புக்கள் இன்றும் எடுத்துக்காட்டுகின்றன.

- கிராம ஊழியன், கலாமோகினி, பாரததேவி, சூறாவளி போன்ற பத்திரிகைகள் சிறுகதை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புக்களைக் குறிப்பிடல்.

8. 1947 முதல் 1970 வரை தமிழ் வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களைத் தெளிவுபடுத்துக.
   - 1947 முதல் 1970 வரை தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களைத் தெளிவுபடுத்துக.
   - பாரத நாடு சுதந்திரம் பெற்றபின், இலக்கியப் போக்குகள் மாற்றமடையத் தொடங்கின. ஆட்சிப் பொறுப்பு சுதேசிகளின் கையில் வந்ததும், நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக உணர்வுகள் மாற்றம் பெறலாயின.
   - ஒற்றுமையுணர்ச்சி பிரதேச உணர்ச்சி வலுவடையவே, தமிழுணர்ச்சி, தனித்தமிழ் இயக்கம் முதலானவை சிறுகதையின் பொருளானது.

## கவிதை

### தமிழகப் பின்புலத்திலான பார்வை

**தமிழகத்தில் தோன்றிய நவீன கவிதைகள் குறித்து சுருக்கமாக விளக்குக**

❖ Modernus என்னும் லத்தீன் மொழியிலிருந்து தோற்றம் பெற்ற ‘‘நவீனம்’’ என்னும் சொல் புதியது, புதுமை, மறுமலர்ச்சி என்னும் பொருண்மையில் வரும் சொல்லாகும். அதாவது ‘‘புதிய மாற்றங்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்ற முறைகளையும் தன்மைகளையும் கொண்டமைவது’’.

❖ 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலில் தோன்றிய நவீனத்துவம் சமய சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் சார்ந்த இயக்கங்கள் அரசியல் சமூகரீதியான புரட்சிகரமான மாற்றங்களுக்கு அடித்தளமிட்டது. உ -ம் - பிரம்மசமாஜம் (1828), ஆர்யசமாஜம் (1925), இராமகிருஷ்ணமிசன் (1886) இந்து இலக்கியச்சங்கம் (1820), இந்து முற்போக்கு அபிவிருத்திச் சங்கம்

❖ நவீன கவிதைகளுக்கு அடிப்படையாக அமைந்த காரணிகள்

1. நிலப்பிரபுத்துவ முறையிலிருந்து இந்தியச் சமூகம் வேகமாக மாற்றத்துக்கு உள்ளாகிக் கொண்டிருந்த காலகட்டத்திலே, பாரம்பரிய மரபுசார் வாழ்க்கைமுறை மாற்றமடைந்தது.
2. கிராமங்கள் நகரமயமாகும் சூழ்நிலையிலேயே மனித வாழ்வியல்சார் இயங்கியலுக்கேற்ப இலக்கியத்தில் கையாளப்பட்ட மொழியும் தன்னிறுக்கத்தைத் தளர்த்தியது.
3. இதனால் மரபு வழிப்பட்ட செய்யுள்களில் இடம்பெறும் அடைமொழிகளும் அலங்கார மொழிகளும் வழக்கிழக்க, புளக்கத்திலுள்ள பேச்சுமொழியின் அவசியம் உணரப்பட்டது.

❖ இராமலிங்க வள்ளலாரின் பாடல்கள், மாயூரம் வேதநாயகம்பிள்ளையின் சர்வசமயசமரசக் கீர்த்தனைகள்’ போன்றன இவ்வகையில் குறிப்பிட்டுக் கூறத்தக்கவை.

❖ இருபதாம் நூற்றாண்டிலே பாரதியின் எழுச்சி நவீன கவிதையின் வியாபித்த எல்லைகளை நிரப்பிக் கொள்ள உதவிற்று. பாரதி. ‘‘சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற்புதிது, சோதிமிக்க நவகவிதை, எந்நாளும் அழியாத மகா கவிதை’’ என்னும் தன்கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் ‘‘காட்சிகள்’’ என்ற தலைப்பில் வசன கவிதைகளை எழுதினார்.

- ❖ பாரதியின் காட்சிகளும் வால்ட்விட்மனின் வசன கவிதைகளும் ஏற்படுத்திய பாதிப்பால் 1934இல் புதுக்கவிதைகளை எழுதத் தொடங்கிய ந.பிச்சமூர்த்தி வடிவரீதியான சோதனைகளைத் தமிழ்க் கவிதையில் நிகழ்த்தினார்.

- ❖ இவரைத் தொடர்ந்து கு.ப.இராஜகோபாலன், வல்லிக்கண்ணன் முதலானோரும் வசன கவிதைகள் பலவற்றை எழுதினார்கள். இக்காலப் பகுதியில் வெளியான மணிக்கொடி, சூறாவளி, கலாமோகினி, கிராம ஊழியன், சரஸ்வதி, இலக்கிய வட்டம், எழுத்து, நடை, கசடதபற முதலான சஞ்சிகைகள் வசன கவிதைகளை வெளியிட்டுத
- ❖ நவீன கவிதையைச் சக்தி வாய்ந்த இலக்கிய வடிவமாக உருவாக்கிய பெருமை 1959இல் சி.சு.செல்லப்பாவால் தொடங்கப்பட்ட "எழுத்து" என்னும் சஞ்சிகையையே சாரும். தருமு சிவராம், தி.சோ.வேணுகோபாலன், சி.மணி, பசுவய்யா, நகுலன், எஸ்.வைத்தீஸ்வரன் போன்ற சிறந்த நவீன கவிஞர்களை எழுத்தே அறிமுகம் செய்தது.
- ❖ நா.காமராசன், மீரா, சிற்பி, புவியரசு, மேத்தா, தமிழன்பன், அக்னிபுத்திரன் எனப் புதுக்கவிஞர்கள் பலரைத் தமிழுக்கு அளித்த பெருமை "வானம்பாடி" இதழுக்கு உண்டு
- ❖ வானம்பாடிக்கவிதைகள் இடதுசாரிச் சிந்தனையும், தமிழ் மரபறிந்து கவிதை பாடும் புதுமையும், சமுதாயப் பார்வையும் கொண்டவை.ஆயினும் வானம்பாடிக் கவிஞர்களால் சொல்நேர்த்தி மிக்க சொல்லிறுக்கமான கவிதைகளைப் பேரளவில் கூட படைக்க முடியவில்லை.
- ❖ தற்காலத்தில் நவீன வழிப்பட்ட மேனாட்டு மனநிலையால் தமிழ்க்கவிதை, உருவப்புதுமையால் உள்ளடக்க ரீதியான மாற்றங்களுக்குள்ளாகியமை, எடுத்துக்காட்டப்படல்.

  உ-ம் - பிரமராஜன், சுந்தரராமசாமி, குவளைக்கண்ணன்,
  யவனிகாஸ்ரீராம், யுவன் சந்திரசேகர், கரிகாலன் முதலியோர்
- ❖ அடிமட்ட மக்களின் வாழ்வியல் கவிதையாக்கப்படல் (தலித்தியக்கவிதைகளின் எழுச்சி)

  உ- ம் - ராஜ்குமார், பா.விழி.இதயவேந்தன்,
- ❖ உணர்வின் நிலைக்கேற்ப எண்ணத்தைப் பிரதிபலிக்கும் யாப்புடைத்த நவீன பெண்ணியக்கவிதைகள் தோற்றம் பெற்றன. அலங்காரத்தன்மையற்று அர்த்தம் மிகுந்த சொற்களால் தன்னை நிலைப்படுத்திக் கொண்டன.

  உ-ம் - மாலதிமைத்திரேயி, குட்டிரேவதி, கிருஷாங்கினி, லதா,
  சுகிர்தராணி, இந்திரா, உமாமகேஸ்வரி,

## நாவல்

1. .1947 முதல் 1970 வரை தமிழ் நாவல்களின் வளர்சிப் போக்கினை ஆராய்க.
   - இந்திய விடுதலைக்குப்பின்னர் எழுந்த தமிழ் நாவல்கள் தமிழ் மக்களின் வாழ்வியற் புலங்களைச் சுட்டிநின்றன.இந்தியாவின் தேசிய வீழ்ச்சியையும் தமிழ் நாவல்கள் குறிப்பிட்டுக் காட்டின.

2. 1980களுக்குப்பின்னரான கால மாறுதல்களை தமிழ் நாவல்கள் சித்திரிக்குமாற்றினை தெளிவுபடுத்துக
   - வரலாற்று சூழலுக்கு ஏற்ப சமூகமாற்றங்களை உள்வாங்கி நாவல்கள் எழுதப்பட்டன.

     உ- ம்- இந்திரா பார்த்தசாரதியின் ஏசுவின் தோழர்கள்

   - வரலாற்று நாவல்கள் : ஜெயமோகனின் விஷ்ணுபுரம், கொற்றவை

     கிருஷ்ணனின் புலிநகக் கொன்றை
     கருணாநிதியின் தென்பாண்டிச் சிங்கம்
     சுஜாதாவின் இரத்தம் ஒரே நிறம்

   - பெண்ணிய நாவல்கள் தோற்றம் பெற்றன

     1. ஆண் எழுத்தாளரால் எழுதப்பட்ட பெண்ணிய நாவல் - பிரபஞ்சனின் "சந்தியா"

2. பெண் எழுத்தாளரால் எழுதப்பட்ட பெண்ணிய நாவல்கள் - உமாமகேஸ்வரியின் ''யாரும் யாருடனும் இல்லை''தமிழ்நதியின் ''கானல்வரி'', பா.விசாலத்தின் ''மெல்லக்கனவாய் பழங்கதையாய்'', ''உண்மை ஒளிர்க என்றும் பாடுவோர்''

- தொழில்சார்ந்த நாவல்கள் எழுந்தமை :
  1. சினிமாவை அடிப்படையாகக் கொண்டு எழுந்த நாவல்கள் : சுஜாதாவின் கனவுத் தொழிற்சாலை

  2. ராஜம் கிருஷ்ணனின் கரிப்புமணிகள் உப்பளத்தொழிாளிகளின் வாழ்வியலைச் சித்திரிக்கிறது.

  3. மீனவர் வாழ்வியலைச் சித்திரிக்கும் நாவல்கள்: ஜோ.டி.குரூஸீன் ''ஆழி சூழ் உலகு'', ''கொற்கை'' ராஜம்கிருஷ்ணனின் ''அலை வாய் கரையில்''தோப்பில் முகமது முத்து மீரானின் ''ஒரு கடலோரக் கிராமத்தின் கதை''

- வட்டாரநாவல்கள்
  1.நாஞ்சில் வட்டாரநாவல்கள் : நாஞ்சில் நாடனின் ''மிதவை'', மாமிசப்படைப்பு, ஜெயமோகனின் ''ரப்பர்''

  2.நெல்லை மாவட்ட வட்டாரநாவல்கள் : வண்ணநிலவனின் கம்பாநதி, ரெயினிஸ்ஐயர் பூமணியின் ''வெக்கை'', நைவேத்தியம், வண்டல் முதலானவை. இவை கரிசல் காட்டு நாவலாகவே காணப்படுகின்றன.

  3. தஞ்சை மாவட்ட நாவல்கள் : சாஇ கந்தசாமியின் ''சூர்யவம்சமும் தொலைந்து போனவர்களும்'' சி.முத்துவின் ''கறிச்சோறு''

- முகவை வட்டார நாவல்கள் : ஜெகதாவின் சமுத்திரநாவல்கள் தலித் மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் நாவல்கள் : ராஜ்கௌதமனின் '' காலச்சுமை'', சிலுவைராஜ் சரித்திரம், பாமாவின் ''கருக்கு'', வன்மம்'' இமையத்தின் ''கோவேறு கழுதைகள்', ''ஆறுமுகம்'', சிவகாமியின் ''பழையன கழிதலும்''

- கல்விச்சிந்தனையை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல்கள் : க.நா.சு.வின் ''கோதை சிரித்தாள்''
- அறத்தைப் போதிக்கும் நாவல்கள் : சு.சமுத்திரத்தின் ''வேள்வித்தீ'', ''நெருப்புத்தடயங்கள்'', ஊருக்கு ஒரு புரட்சி'', ''ஒரு கொட்டுக்கு வெளியே''
- கலைஞனை மையப்படுத்தி எழுதப்பட்ட நாவல்கள் : சுந்தரராமசாமியின் ஜே,ஜே.சில குறிப்புக்கள்'', விட்டல்ராவ்வின் ''காலவெளி'', அசோகமித்திரனின் '' ஒற்றன்''
- உளவியல் நாவல்கள் : தியாகுவின் ''பித்தப்பூ'','' நகுலனின் '' வாக்குமூலம்''
- கள்ளர்சமூக வாழ்வைப் பிரதிபலிக்கும் நாவல் : எஸ் ராமகிருஸ்ணனின் நெடுங்குருதி
- பின்நவீனத்துவ சிந்தனையை உள்வாங்கி வெளிவந்த நாவல்கள் :யுவன் சந்திரசேகரின்

‘‘குள்ளன் சித்திரன் காவியம்’’, ‘‘கானல்நதி’’ எம்.ஜி.சுரேஷின் ‘‘யுரேகா என்றொரு நகரம்’’

- அமைப்பியல்வாதச்சிந்தனையை உள்வாங்கி வெளிவந்த நாவல்கள் : தமிழவனின் ‘‘சரித்திரத்தில் படிந்த நிழல்கள்’’, சாருநிவேதிகாவின் ‘‘ எக்ஸ்டென்சியலிசமும் ∴ பென்சி பனியனும்ம்’’
- கியூபிஸக் கோட்பாட்டை உள்வாங்கி படைக்கப்பட்ட நாவல் : எம்.ஜி.சுரேஷின் சிலந்தி

## ஈழத்து இலக்கிய வரலாறு.

## ஆரியச்சக்கரவர்த்திகள் காலம்.

1. ஆரியச்சக்கரவர்த்திகள் எனும் யாழ்ப்பாண மன்னர் காலத்துக்கு முன்னராக ஈழத்தில் தமிழ் இலக்கிய முயற்சிகள் நிகழ்ந்தமைக்கான சான்றாதாரங்களை எடுத்துக்காட்டுக.
   - ஈழத்துப் பூதன்தேவனாரின் பங்களிப்பு சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளமை - ஈழத்துப் பூதன்தேவனார் பெயரில் இரண்டு பாடல்களும் மதுரை ஈழத்துப் பூதன்தேவனார் பெயரில் ஐந்து பாடல்களுமாக மொத்தம் 7 பாடல்கள் சங்க இலக்கியங்களில் உள்ளன.
   - யாழ்ப்பாண மன்னர் காலத்திற்கு முற்பட்ட ஈழத்துக் கல்வெட்டுக்கள் மற்றும் சாசனங்களில் உள்ள தமிழ் செய்யுள்கள் (அநுராதபுரம், கோட்டகம, பதவியா, பண்டுவஸ்நுவர கல்வெட்டுச் செய்யுள்கள்)
   - முரஞ்சியூர் முடிநாகராயர், அம்மூவனார், தொல்காப்பியர் முதலானோரை ஈழத்தவராகக் காட்ட நிகழ்ந்த முயற்சிகள்

2. ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஈழத்துப் பூதன்தேவனார் பெறும் இடத்தினைத் தெளிவுபடுத்துக.
   - ஈழத்துப் பூதன்தேவனாரை ஈழத்து முதற் தமிழ்ப்புலவராகக் கொள்வர் - வித்துவசிரோமணி கணேசையரின் இம்முயற்சி தொடர்கிறது.
   - பூதன்தேவனார் பெயரில் குறுந்தொகையில் மூன்று பாடல்களும் (189, 343, 360) நற்றிணையில் ஒன்றும் (366) அகநானூற்றில் மூன்றும் (88, 231, 307) ஆக மொத்தம் ஏழு பாடல்கள் உள்ளன.
   - அகத்திணை சார்ந்த பாடல்களில் காதல் சார்ந்த விபரிப்புகளோடு வேலன் வெறியாட்டு, நாட்டுவளம், மன்னர் பெருமை எனப் பல்வேறு விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

3. ஈழத்திலக்கிய வரலாற்றில் சரசோதி மாலையின் முக்கியத்துவத்தினைத் தெளிவுபடுத்துக.
   - ஈழத்தில் எழுந்த முதல் தமிழ் நூல் - இயற்றியவர் தேனுரைப்பெருமாள் என்று அழைக்கப்படும் போசராசபண்டிதர் - குருநாகல் பகுதியிலுள்ள தம்பதெனியாவில் 4ஆம் பராக்கிரமபாகு அவைக்களத்தில் அரங்கேற்றப்பட்டது.
   - சோடச கருமப்படலம், ஏர்மங்கலப்படலம், நட்சத்திர தொகைப்படலம் முதலிய 12 படலங்கள், 934 விருத்தப்பாக்கள்
   - ‘‘கதிரவன் மரபில் வந்தோன், பாமாலை சூடு மீளிப் பராக்கிரமபாகு பூபன்’’ என மன்னன் புகழ் கூறுதல்.

4. ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றின் தொடர்ச்சியை அறிந்து கொள்வதில் இலக்கியமல்லாச் சான்றுகளின் முக்கியத்துவம் யாது?
   - கி.பி. 13ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட ஈழத்திலக்கிய வரலாறு இருள் சார்ந்ததான உள்ளமை.
   - இலக்கியங்கள் தோன்றியமை பற்றியோ, இலக்கியங்கள் தோன்றியதால் அவற்றுக்கு என்ன நிகழ்ந்தது என்பது பற்றியோ அறிந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் இல்லாமை.
   - இலக்கியமல்லாச் சான்றுகளே இலக்கிய வரலாற்றுத் தொடர்ச்சியை அறிய உதவுதல். சாசனங்கள், தொல்பொருட் சான்றுகள், நாணயங்கள், செப்பேடுகள் முதலான தொல்பொருட் சான்றுகள்
   - பயணிகளின் குறிப்புகள் : இபன்பத்தூதா, மார்க்கோபோலோ

5. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த இலக்கியங்களை வகைப்படுத்திக் காட்டுக.
   1. சோதிட நூல்கள்
      சரசோதிமாலை
      செகராசசேகர மாலை
   2. வைத்திய நூல்கள்
      பரராசசேகரம்
      செகராசசேகரம்
   3. புராணம்
      தட்ஷிணகைலாய புராணம்
      திருக்கரசைப்புராணம்
      வியாக்கிரபாத புராணம்
   4. வரலாற்று நூல்கள்
      வையாபாடல்
      கோணேசர் கல்வெட்டு
      கைலாய மாலை
   5. காப்பியம்
      இரகுவம்சம்
      கண்ணகி வழக்குரை
      கோவலனார் கதை
      சிலம்பு கூறல்
   6. பொதுமக்கள் சார்பு இலக்கியம்
      கதிரைமலைப்பள்ளு

6. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த அறிவியல் இலக்கியங்களைக் குறிப்பிட்டு அவற்றின் பின்னணியைத் தெளிவுபடுத்துக.

   ஆரியச் சக்கரவர்த்திகள் கால அறிவியல் சார்ந்த இலக்கியங்கள்
   மருத்துவம் - பரராசசேகரம், செகராசசேகரம்
   சோதிடம் - செகராசசேகரமாலை

   தோற்றத்திற்கான பின்னணி
   - மக்கள் வாழ்க்கையில் மருத்துவமும் சோதிடமும் மிக முக்கியமானவை.
   - மருத்துவமும் சோதிடமும் பிரிக்க முடியாத தொடர்புடையவை.
   - இக்காலப்பகுதியில் தமிழ்நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் குடியேறியோரில் மருத்துவம், சோதிடம் அறிந்தவர்கள் இருந்தமை.
   - வடமொழிக் கல்வியறிவு
   - மன்னர்களே சிறந்த மருத்துவர்களாக இருந்தமை.
   - நிறுவன ரீதியான ஆதரவு கிடைத்தமை
   - மன்னர்களின் ஆட்சி ஸ்திரமற்றுக் காணப்பட்டமை.
   - கேரளாவில் அதிகளவில் தோற்றம் பெற்ற சோதிட நூல்களின் தாக்கம்.

6. ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த வரலாறு சார்ந்த நூல்களைக் குறிப்பிட்டு இந்த வரலாற்றுப் பதிவுக்கான தேவைகளை இனங்கண்டு விளக்குக.

   வரலாற்றுப் பதிவுக்கான தேவை
   - சிங்கள இலக்கியப் பாரம்பரியத்தில் வரலாற்று நூல்கள் காணப்பட்டமை
   - ஆரியச் சக்கரவர்த்திகள் தமது உரிமையை நிலைநாட்டிக் கொள்வதற்கு
   - தமிழர்தம் அடையாளங்களைப் பேணிக்கொள்வதற்கு.
   - தேடித்தொகுக்கும் மரபு ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் காணப்பட்டமை
   - ஆட்சியமைப்புக்கு அச்சுறுத்தலான சூழல் காணப்பட்டமை

7. ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த காவியங்கள் குறித்துக் கருத்துரைக்க.

**கண்ணகி வழக்குரை, சிலம்பு கூறல், கோவலனார் கதை**

- ஒரே இலக்கியத்தின் வேறுபட்ட பாடல்கள் கிழக்கு மாகாணத்தில் கண்ணகி வழக்குரை என்றும் யாழ்ப்பாணத்தில் கோவலனார் கதை என்றும் முல்லைத்தீவில் சிலம்பு கூறல் என்றும் அழைக்கப்படுகிறது.
- மூலநூல் சகவீரனால் இயற்றப்பட்டதாக நம்பப்படுகின்றது.
- கண்ணகியின் வரலாற்றினை சிலப்பதிகாரக் கதையைத் தழுவிக் கூறிச்செல்கிறது.
- கண்ணகியின் பிறப்பு, கண்ணகியின் திருமணம், வெடியரசன் விளங்குதேவன், வீரநாராயணன் போன்றோரின் கதை, குளிர்ச்சிக்கதை என்பன விரிவாகவும் புதிதாகவும் பாடப்பட்டுள்ளன.
- கண்ணகி வழிபாட்டினை ஈழத்துடன் இணைக்கும் போக்குக் காணப்படுகின்றது.
- ஈழத்தின் வளம் ''ஈழம் சுற்றியோடுதல்'' என்னும் பகுதியில் விபரிக்கப்படுகின்றது.

**இரகுவம்சம்**

- அரசகேசரியால் இயற்றப்பட்டது.
- வடமொழியில் காளிதாசரால் இயற்றப்பட்ட 'ரகுவம்சத்தினைத் தழுவியதாகக் கருதப்படுகின்றது.
- பொதுக்காண்டம், சிறப்புக்காண்டம், பொதுச்சிறப்புக் காண்டம் என்னும் 03 காண்டங்கள் 26 படலங்கள் 2444 விருத்தப்பாக்கள்
- திலீபன், அவன் மகன் இரகு, அவன் மகன் தசரதன், அவன் மகன் இராமன் முதலியோர் கதை கூறுகிறது.
- இலகுவிற் பொருள் விளங்காத வித்துவத் தன்மை கொண்டது.

8. ஈழத்தில் எழுந்த கண்ணகி தொடர்பான இலக்கியங்களைக் குறிப்பிட்டு அவற்றிடையே காணப்படும் தனித்துவங்களை எடுத்துக் கூறுக.

- கண்ணகி வழக்குரை, சிலம்பு கூறல், கோவலனார் கதை
- சிலப்பதிகாரக் கதையைத் தழுவியவை
- பொதுவான மூலநூல் ஒன்றின் வேறுபட்ட பாடங்களாகக் கணிக்கப்படுபவை
- மூல நூலாசிரியர் குறித்து முரண்பட்ட தகவல்கள் உள்ளன.
- யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு பிரதேசங்களில் வழங்கி வரும்போது பாடவேறுபாடுகளுக்கு உட்பட்டுள்ளன.
  யாழ்ப்பாணம் - கோவலனார் கதை
  முல்லைத்தீவு - சிலம்புகூறல்
  மட்டக்களப்பு - கண்ணகி வழக்குரை
- இப்பாடங்களிடையே கண்ணகியின் பிறப்புத் தொடர்பாக வேறுபட்ட கதைகளைக் கூறுகின்றன.
- கோவலனார் கதையில் கண்ணகியின் திருமணம் (மணமாலை) தொடர்பான விரிவான தகவல்கள் உண்டு. கண்ணகியை வாழ்த்தும் பாடல்கள் பல அதிலுள்ளன.
- கண்ணகி வழக்குரையில் கப்பல் கட்டும் தொழில்நுட்பம் பற்றிய செய்திகள் விரிவாக உள்ளன.
- கோவலனார் கதை மற்றும் சிலம்பு கூறலில் தந்தைவழிச் சமூகத்தின் செல்வாக்கும் கண்ணகி வழக்குரையில் தாய்வழிச் சமூகத்தின் செல்வாக்கும் காணப்படுவதை உணர முடியும்.

9. ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த சமயம் சார்பான இலக்கியங்கள் குறித்து கருத்துரைக்க.

- ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த இலக்கியங்களில்,
  - ❖ சில நேரடியாகச் சமயப் பொருண்மையைப் பேசுவன.
    தட்சிணைகைலாசபுராணம், திருக்கரசைப்புராணம், வியாக்கிரபாத புராணம் முதலானவை.
  - ❖ சில சமயப் பொருண்மையை உப விடயமாகப் பேசுவன : கைலாயமாலை, கண்ணகி வழக்குரை, கோணேசர் கல்வெட்டு, கதிரைமலைப்பள்ளு

- தலங்களின் சிறப்பினைப் பாடுவன
  தல புராணங்கள் - தட்சிணைகைலாசபுராணம், திருக்கரசைப் புராணம், கைலாயமாலை, கதிரைமலைப்பள்ளு

- அடியார் பெருமையைப் பாடுவன.
  வியாக்கிரபாத புராணம்
- ஆலய நிர்வாகக் கட்டமைப்புக்கள் ஒழுங்கு முறைகள் குறித்துப் பேசுவன.
  கோணேசர் கல்வெட்டு
- தெய்வ மகிமை மற்றும் தெய்வத்தோடு தொடர்புபட்ட கதைகளைக் காவிய வடிவில் பாடுவன.
  கண்ணகி வழக்குரை

10. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தமிழ்நாட்டு இலக்கியப் பாரம்பரியம் ஈழத்து இலக்கியத்தில் ஏற்படுத்திய செல்வாக்குக் குறித்துக் கருத்துரைக்க.

- தமிழ்நாட்டு இலக்கியப் பாரம்பரியத்தின் செல்வாக்கு ஆரியச்சக்கரவர்த்திகள் கால இலக்கியப் பொருள்நிலையில் செல்வாக்குப் பெற்றுள்ளது.
  உ-ம் : சிலப்பதிகாரத்தைத் தழுவி சில மாற்றங்களுடன் கண்ணகி வழக்குரை தோன்றியமை
- வடமொழி இலக்கியங்களை மையப்படுத்தி புராண, காவிய நூல்கள் எழுந்தமை
  உ-ம் : காளிதாசரின் இரகுவம்சம் அரசகேசரியால் இரகுவம்சமாக வெளிவந்தமை
- இலக்கிய வடிவங்களின் கையாள்கை
- தலபுராணத்தின் தோற்றம் - மச்சேந்திய புராணத்தைத் தழுவி தட்சணகைலாயபுராணம் எழுந்தமை
- பள்ளு இலக்கியம் - கதிரைமலைப் பள்ளில் பாரத நாட்டுப் பாரம்பரியம் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை.

11. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த இலக்கியங்களில் வடமொழி செல்வாக்குப் பெற்றிருந்த இடத்தினை மதிப்பிடுக.

- வடமொழிச் செல்வாக்குடைய யாழ்ப்பாண மன்னர் கால இலக்கியங்கள்
- காளிதாசரின் இரகுவம்சம் தமிழில் அரசகேசரியால் இரகுவம்சம் என்ற பெயரில் வெளிவந்தமை
- மச்சேந்திய புராணத்தைத் தழுவி தட்சணகைலாச புராணம் எழுந்தது.
- பரராசசேகரம், செகராசசேகரம் ஆகிய மருத்துவ நூல்களிலும் வடமொழி வாகடங்களின் செல்வாக்கு உண்டு
- செகராசசேகரமாலை வடமொழி நூலின் தழுவல் என சிறப்புப்பாயிரம் சுட்டுகின்றது.

12. ஈழத்திலக்கிய வரலாற்றில் கோணேசர் கல்வெட்டுப் பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

- திருக்கோணேஸ்வரர் திருத்தலத்தினை மையப்படுத்தி எழுந்த இலக்கியங்களில் ஒன்று இதனை எழுதியவர் கவிராஜ வரோதயர்
- விருத்தப்பா, ஆசிரியப்பா மற்றும் உரைநடையால் அமைந்த பகுதிகள் இந்நூலிலுள்ளன.
- விருத்தப்பாவாலமைந்த பகுதியே கவிராஜவரோதயரால் எழுதப்பட்டதாகக் கருதப்படுகின்றது. ஏனையவை பிற்காலத்தில் எழுதப்பட்டு சேர்க்கப்பட்டிருக்கலாம்.
- கோணேசர் கோவிலைக் குளக்கோட்டன் புனரமைத்தமை, ஆலய நிர்வாகம் மற்றும் பூசை முறைகளை ஒழுங்கமைத்தமை, தமிழ்நாட்டிலிருந்து வன்னியர்களை வரவழைத்துக் குடியேற்றியமை, கந்தளாய்க் குளத்தினைக் கட்டியமை போன்ற செய்திகள் விருத்தப்பாவாலான பகுதியிலுள்ளன.
- அகவல் பாவாலான பகுதி கஜபாகு மன்னனின் வருகை பற்றிப் பேசுகின்றது. உரையாடல் பகுதியில் கோணேசர் கோவில் நிர்வாகம் மற்றும் வழமைகள் தொடர்பாகக் காலந்தோறும் ஏற்பட்ட மாற்றங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.
- திருகோணமலைப் பிரதேச சமய, சமூக வரலாறுகள் மற்றும் வன்னிமைகள் தொடர்பாக அறிவதற்கு உகந்த இலக்கியம் இது.
- ஈழத்தின் தொடக்க கால உரைநடைப் போக்கினையும் இதன் மூலம் அறியலாம்.

13. ஆரியச் சக்கரவர்த்திகள் காலப்பகுதியில் தோற்றம் பெற்ற இலக்கியப் பண்புகளை எடுத்துக் காட்டுக.

- பலதுறை சார்ந்து இலக்கியங்கள் தோற்றம் பெற்றன : சமயம், வரலாறு, மருத்துவம், சோதிடம்
- அளவில் பெரிய இலக்கியங்களாக அமைந்தன. - பரராசசேகரம், இரகுவம்சம், கண்ணகி வழக்குரை
- தமிழ்நாட்டு இலக்கியச் செல்வாக்கு காணப்பட்டது.
- வடமொழிச் செல்வாக்கு - இக்காலப்பகுதியில் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் பல தழுவல் மற்றும் மொழிபெயர்ப்புக்களாக அமைந்தமை.
- நூல்கள் பல அந்தாதித் தொடையில் பாடப்பட்டுள்ளன.
- மன்னரின் ஆதரவினை வெளிப்படுத்தற் பொருட்டு சில நூல்களின் பெயர்கள் மன்னர் பெயர்களிலேயே அமைந்துள்ளன. பரராசசேகரம், செகராசசேகரம், செகராசசேகரமாலை
- பொதுமக்கட் சார்புணர்வு - கதிரைமலைப்பள்ளு
- இலக்கியங்களில் இந்துசமயச் செல்வாக்கு

## போர்த்துக்கேயர் காலம்.

1. போர்த்துக்கேயர் காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களைக் குறிப்பிடுக.

- ஞானப்பள்ளு
  வேதப்பள்ளு என்றும் அழைக்கப்படும். இயேசுநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. கத்தோலிக்க மதப்பற்றை மக்களிடையே பரப்பும் நோக்குடையது.
  போர்த்துக்கல் மன்னனை வாழ்த்தும் பாடல்கள் இதிலுள்ளன. செந்தமிழ் சொற்களும், வடசொற்களும் இப்பள்ளில் அதிகம் பயின்று வருகின்றன.
- அர்ச். யாகப்பர் அம்மானை
  சந்தியோகுமையர் அம்மானை என்ற பெயரும் இதற்குண்டு. இயற்றியவர் பெயர் - பேதுருப்புலவர்.
  ‘கிளாலி’ என்னும் கிராமத்தில் கோவில் கொண்ட யாக்கோபு என்னும் சென். ஜேம்ஸ் (St. James) பெயரில் இந்த அம்மானை பாடப்பட்டுள்ளது. 1647 அளவில் இந்நூல் செய்யப்பட்டதாக அதன் பாயிரச் செய்யுள் குறிப்பிடும். புதிய ஏற்பாட்டுக் கருத்தையும் பாரம்பரியக் கதையினையும் இணைத்து இந்நூல் எழுதப்பட்டது.

2. போர்த்துக்கேயர் காலத்தில் பெருமளவுக்குத் தமிழ் நூல்கள் தோன்றாமைக்குரிய காரணங்களை விளக்குக.

- போர்த்துக்கேயராகிய அந்நியர்களின் ஆட்சிச் சூழல்
- சுதேச சமயங்களும் சுதேச மத வழிபாடுகளும் தடைசெய்யப்பட்டமை.
- போர்த்துக்கேயரின் கொடுமையான வரிச்சுரண்டல் - உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பு குறைவானதாக இருந்தமை.
- தமிழை, தமிழ்ப்புலவர்களை, தமிழ் இலக்கியங்களைப் பேணிப் பாதுகாக்கும் எண்ணம் போர்த்துக்கேயருக்கு இல்லாமை - நிறுவன ரீதியான ஆதரவு தமிழ் புலவர்க்குக் கிடைக்காமை
- போர்த்துக்கேயர் பண்பாடு சுதேச பண்பாட்டுடன் கலக்க முற்பட்டதால் பண்பாட்டுக் குழப்பநிலை

3. 'போர்த்துக்கேயர் காலத்தை ஈழத்திலக்கிய வரலாற்றில் வரண்ட காலப்பகுதியாகக் கருதலாம்'. விளக்குக.

- எண்ணிக்கையில் குறைவாக இலக்கியங்கள் தோற்றம் பெற்றமை
- சமயம் சார்ந்த பாடுபொருளைக் கொண்டவை - இலக்கியச் சுவை குறைந்தவை
- அந்நிய மன்னனையும் (போர்த்துக்கல் மன்னர்) அந்நிய தேசங்களையும் (ஜெருசலேம், உரோமாபுரி) புகழ்ந்து பாடுபவை
- செந்தமிழ்ச் சொற்கள் அதிகம் பயின்று வந்துள்ளன
- வடசொற் பயன்பாடு மிக அதிகம்.

4. கதிரைமலைப்பள்ளு, ஞானப்பள்ளு என்பவற்றை ஒப்பிட்டுக் கருத்துரைக்க.

| **கதிரைமலைப்பள்ளு** | **ஞானப்பள்ளு** |
|---|---|
| இந்துமதம் சார்ந்தது | கத்தேலிக்கமதம் சார்ந்தது |
| ஈழநாட்டு வளம் பேசுவது | உரோமாபுரி, ஜெருசலேம் என்ற பிறதேச வளம் பேசுவது |
| செயற்கைத் தன்மையான பாடல் சேர்க்கைகள் இல்லை | கிறிஸ்தவ மறைஞதனப் பாடல்கள் இடையிடையே சேர்க்கப்பட்டுள்ளன. |
| மொழிநடை வாசகரினைக் கவரும் விதத்தில் அமைந்துள்ளன. | செந்தமிழ் சொற்களும் வடசொற்களும் மிகுதியாகக் காணப்படுகின்றன. |
| இலக்கியச் சுவையை முதன்மையாகக் கொண்டது. | மதப் பிரசாரத்தினை மையப்படுத்தி எழுந்தது. |

5. சந்தியாகுமையோர் அம்மானையின் தோற்றத்திற்கான சமய சமூகப் பின்னணி குறித்துக் கருத்துரைக்க.

- கத்தோலிக்க மதத்தினர் தமது சமயத்தினை ஈழத்தில் பரப்புவதற்கு தமிழ் இலக்கிய மரபினைப் பல்வேறு வகையில் உள்வாங்கினர். (உ -ம்)

- தமிழ் மக்கள் மத்தியில் விளங்கிய கூத்து மரபுகளைக் கத்தோலிக்க மயப்படுத்தி நவீன முறைகளையும் உள்வாங்கி மேடையேற்றினர். இத்தகைய பின்னணியில் நாட்டுப்புற மக்கள் மத்தியில் வழங்கிய அம்மானை என்னும் கதைப்பாடல் மரபினைக் கிறிஸ்தவமதப் பரப்புகைக்குப் பயன்படுத்த முனைந்தமை. ஏககாலத்தில் தமிழ் நாட்டிலும் அம்மானை மரபு கத்தோலிக்கர் மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்தது.

- கத்தோலிக்கத் தேவாலயங்களில் விழாக்காலங்களில் இரவு முழுவதும் பக்தர்கள் முன்னிலையில் படிக்கப்படும் மரபை சந்தியோகுமையர் தொடக்கி வைத்தார் எனலாம். இந்த மரபு ஒல்லாந்தர் காலப்பகுதியில் சைவமக்கள் மத்தியிலும் நிலவி வந்துள்ளது. உதாரணம் : ஏகாதசிப்புராணம், சிவராத்திரி புராணம் போன்றன படிக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம்.

- கத்தோலிக்க மதகுருமார் சுதேச தமிழ்ப் புலவர்களை அணுகி அவர்களை ஊக்கப்படுத்தி இத்தகைய நூல்களை எழுதுவித்தனர்.

## ஒல்லாந்தர் காலம்.

1. ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த இந்துமதம் சார்ந்த இலக்கியங்களின் தனித்துவமான அம்சங்களைத் தெளிவுபடுத்துக.

- அந்தாதி, புராணம், தூது, ஊஞ்சல் முதலான சிற்றிலக்கிய வடிவங்களைக் கையாண்டு பக்தியுணர்வினை வெளிப்படுத்தல்.
- சைவசமயத்தவர் பின்பற்றும் விரதங்கள் தொடர்பான விடயங்களையும் அவற்றால் ஏற்படும் பலன்களையும் கதைகளின் துணைக்கொண்டு எடுத்துக்காட்டுதல்.
  உ-ம் : சிவராத்திரி புராணம், பிள்ளையார் கதை
- தலங்களின் புகழ்பாடுதல், பிரதேச உணர்வை வலுப்படுத்தி ஆலயங்களை ஒருங்கிணைத்துப் பாடுதல்
- பெருந்தெய்வ, சிறுதெய்வ வழிபாடு குறித்த விடயங்களை வெளிப்படுத்தல்.
  உ- ம் : பஞ்சவன்னத்தூதில் - இளந்தாரி வழிபாடு, அண்ணமார் வழிபாடு சிறுதெய்வ வழிபாட்டுக்குச் சான்று
- அற்புதங்கள் தொடர்பான விடயங்களை எடுத்துக் காட்டுதல்
  உ-ம் : இணுவில் சின்னத்தம்பிப் புலவர் பாடல் பாட (மறியல் கொச்சகம்) சிறைக்கதவு திறந்தமை
- வடமொழியில் எழுந்த இலக்கியங்களைத் தழுவி தமிழில் இலக்கியங்கள் எழுந்தமை

2. ஒல்லாந்தர் காலத்தில் இந்துசமயம் சார்ந்த இலக்கியங்கள் பெருமளவில் தோற்றம் பெற்றமைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துக.

- பொருளாதார நலனைப் பேணுவதில் அதிக அக்கறை செலுத்திய ஒல்லாந்தர் சுதேசிய சமயங்கள் தொடர்பில் ஓரளவு நெகிழ்வான போக்கைக் கடைப்பிடித்தமை.
- போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட இந்து ஆலயங்களைப் புனரமைக்கத் தூண்டும் விதத்தில் பாடல்கள் பாடப்பட்டமை.
- மக்களுக்கு சமய நம்பிக்கையை ஊட்டவும் வழிபாட்டு முறைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தும் வகையில் சைவசமய இலக்கியங்களைப் படைப்பதில் புலவர்கள் ஆர்வம் செலுத்தியமை.
- ஈழத்திற்கும், இந்தியாவிற்கும் இடையே நிலவிய புலமைசார் தொடர்பு சமய இலக்கிய வெளிப்பாடுகளுக்கு உந்துதல் அளித்தமை. தமிழகத் திருத்தலங்கள் மீதும் ஈழத்துப் புலவர்கள் பாடல்கள் பாடியமை.
- ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த புலவர்கள் ஆற்றல் மிக்கவர்களாகவும், வடமொழி அறிவுடையவர்களாகவும் திகழ்ந்தமையால் வடமொழி இலக்கியங்களைத் தழுவி சமய இலக்கியங்கள் பல தோற்றம் பெற்றமை.

3. கூழங்கைத் தம்பிரான் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பெறும் இடத்தினைத் தெளிவுபடுத்துக.

- ஒல்லாந்தர் காலப் புலமைப் பாரம்பரியத்தில் வண்ணார்ப்பண்ணையை மையமாகக் கொண்டு செயற்பட்டவர்.
- இந்தியாவிலிருந்து ஈழத்திற்கு வந்த இவர் கூழங்கையர் வண்ணம், அரியாலை சித்திவிநாயகர் திருவிரட்டை மணிமாலை முதலான சைவசமயம் சார் இலக்கியப் படைப்புகளை எழுதியுள்ளார்.
- கிறிஸ்தவ சமயம் சார்ந்த யோசேப்பு புராணத்தை மெல்லோப் பாதிரியாரின் வேண்டுகோளுக்கு இணங்கப் பாடினார்.
- கூழங்கைத் தம்பிரானின் ‘நன்னூல் உரை’ ஈழத்துத் தமிழ் இலக்கண வரலாற்றில் குறிப்பிடத்தக்க வெளிப்பாடாகும்.
- தனிப்பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ள இவர், மாதகல் மயில்வாகனப் புலவர் உள்ளிட்ட பலரது குருவாகத் திகழ்ந்தார்.
- ஈழத்து மரபுவழிக் கல்விப் பாரம்பரியத்துக்குப் புது ஊட்டத்தினை வழங்கியவர் இவர்.

4. ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம் பெற்ற கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து இலக்கியங்களின் பண்புகளை தெளிவுறுத்துக.

- மரபுரீதியான காப்பிய வடிவத்தைக் கையாண்டு பூலோகசிங்க முதலியார் திருச்செல்வர் காவியத்தை எழுதினார்.
- புராண இலக்கிய வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு மெல்லோப் பாதிரியாரின் வேண்டுகோளின்படி கூழங்கைத் தம்பிரான், யோசேப்பு புராணத்தைப் படைத்தார். கொன்சால்வெஸ், தேவ அருள்வேத புராணத்தை உரைநடையில் எழுதினார்.
- நாட்டார் நிலைப்பட்ட இலக்கிய வடிவங்களில் ஒன்றான அம்மானை வடிவத்தைப் பயன்படுத்தி பூலோகசிங்க முதலியார் திருச்செல்வர் அம்மானைப் பாடினார்.
- கிறிஸ்தவ மதம் சார்ந்த நிகழ்வுகளை சம்பவ விபரிப்புகளாக கதை வடிவில் முன்வைக்கும் முயற்சி நிகழ்ந்தது.

  உ-ம் - கொன்சால்வெஸ்லின் அற்புத வரலாறு, தர்ம உத்தியானம்

- புரட்டஸ்தாந்து, கத்தோலிக்க சமயங்களுக்கிடையேயான கருத்து வேறுபாடுகள் இலக்கிய ரீதியாகவும் வெளிப்பட்டன. மெல்லோப் பாதிரியாரின் ‘சத்தியத்தின் செயம்’ எனும் நூலுக்கு மறுப்பாக பச்சேக்கு குருவானவர் ‘சத்திய விரோத சங்காரம் எனும் நூலைப் படைத்தார்.
- உரைநடையில் பேச்சுத்தமிழை அதிகளவு கையாளல், பிரசங்க பாணியைப் பின்பற்றல், உரையாடுவது போன்ற நடையை அடிப்படையாகக் கொள்ளல் என்பன முக்கியமானவை. கொன்சால்வெஸின் வியாகுலப் பிரசங்கம் இதற்கு தக்க சான்றாகும்.
- ‘புதிய ஏற்பாடு’ மெல்லோப் பாதிரியாரால் தமிழில் எழுதப்பட்டது.
- தனிமனித வரலாற்றை மையமாகக் கொண்டு ‘யோசேவாஸ் சரித்திரம்’ பச்சேக்குக் குருவானவரால் வெளிப்படுத்தப்பட்டது.
- ‘வாத்தியாரும் குடியானவரும் தர்க்கித்துக் கொண்ட தர்க்கம்’ எனும் இலக்கியத்தின் மூலம் தர்க்கத்தை இலக்கிய வெளிப்பாட்டிற்கான உத்தியாகக் கைக்கொள்ளும் முயற்சி நிகழ்ந்துள்ளது.

5. ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த நாடக இலக்கியங்கள் குறித்துக் கருத்துரைக்க.

- தோற்றம் பெற்ற நாடகங்களிற் சில
  - வாளபிமன் நாடகம்
  - அனுருத்திரன் நாடகம்
  - அலங்கார ரூபன் நாடகம்
  - ஞான அலங்காரரூபன் நாடகம்
  - நொண்டி நாடகம்
  - மூவிராசாக்கள் நாடகம்
- இதிகாசக் கதைகள் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டும் கூத்துக்கள் எழுதப்பட்டுள்ளன. வாளபிமன், அனுருத்திரன் நாடகங்கள் இவற்றோடு தொடர்புடையன.
- சமயச்சார்பு உடையனவாக உள்ளமை.

  உ-ம் : சைவ, கிறிஸ்தவ சமயங்களைத் தழுவிய கூத்துக்களை இனங்காண முடியும். முருகன் பற்றிய செய்தி அலங்கார ரூபன் நாடகத்திலும் கிருஷ்ணன் பற்றிய குறிப்பு அனுருத்திரன் நாடகத்திலும் உள்ளமை.

  யேசுவின் பிறப்போடு தொடர்புடைய விடயங்கள் மூவிராசாக்கள் நாடகத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.
- வடமோடி, தென்மோடியின் செல்வாக்கு

  உ-ம் : தென்மோடி - அலங்கார ரூபன்
- தமிழரது பண்டைய கிராமிய இசை வடிவங்களின் செல்வாக்கு காணப்படல்.
- சமூக மக்களது நம்பிக்கை மற்றும் பண்பாடுசார் கூறுகளை வெளிப்படுத்தல்.

- கிடைக்கப்பெற்ற நாடக எழுத்துருக்களை இயற்றியோர் தொடர்பாக வேறுபாடான கருத்துக்கள் உள.

6. சோதிட, வைத்திய இலக்கியப் பாரம்பரியம் ஒல்லாந்தர் காலத்திலும் தொடர்ந்தமைக்கான பின்புலத்தைத் தெளிவுபடுத்துக.

   - ஈழத்துப் புலமைப் பாரம்பரிய வரலாற்றின் ஆரம்ப காலத்திலிருந்தே வைத்திய சோதிட அறிவு வளர்ச்சிபெற்று இருந்தமை.
   - புலவர்கள் வடமொழி அறிவு உடையவர்களாக இருந்தமை.
   - உ-ம் : சந்தான தீபிகை வடமொழியிலிருந்து இராமலிங்க முனிவரால் தமிழில் எழுதப்பட்டது.
   - ஒல்லாந்தர் காலப்பகுதியில் விஷஜந்துக்களால் மக்கள் எதிர்கொண்ட ஆபத்தை நீக்கவேண்டிய சூழல்.
   - சோதிடத்தின் மீதான சமூக நம்பிக்கை.
   - ஈழத்திற்கும் இந்தியாவிற்கும் இடையே நிலவிய தொடர்பு.

7. ஈழத்து இலக்கிய வரலாற்றில் மாதகல் மயில்வாகனப்புலவர் பெறும் இடத்தினை மதிப்பீடு செய்க.

   - கூழங்கைத் தம்பிரானிடத்துக் கல்வி கற்றவரான மாதகல் மயில்வாகனப் புலவர் அந்தாதி வடிவத்தைக் கையாண்டு சிதம்பரத்தில் உள்ள சிவனைக் குறித்து ‘புலியூரந்தாதி’ என்ற இலக்கியத்தைப் பாடியுள்ளார்.
   - யாத்திரை அனுபவத்தை மையமாகக் கொண்டு ‘காசியாத்திரை விளக்கம்’ எனும் நூலை எழுதியதாக அறியப்படுகிறது.
   - ‘யாழ்ப்பாண வைபவமாலை’ என்னும் வரலாற்று நூல் உரைநடையில் கர்ண பரம்பரைக் கதைகள், வரலாற்று அம்சங்கள் நிறைந்ததாய் புலவரால் எழுதப்பட்டுள்ளது.
   - மயில்வாகனப் புலவர் ‘ஞான அலங்காரரூபன்’ என்னும் நாடகத்தையும் படைத்துள்ளார் என்ற குறிப்பு உள்ளது.

8. ஈழத்தில் ஒல்லாந்தர் காலம் இலக்கிய வளம் பெற்றமைக்கான காரணிகளை ஆராய்க.

   - பொருளாதார நலனைப் பிரதான நோக்காகக் கொண்ட ஒல்லாந்தர் சுதேசிய சமயச் செயற்பாட்டில் நெகிழ்வுப் போக்கை கடைப்பிடித்தமை.
   - மக்களைச் சமயத்தின்பால் ஒழுங்குபடுத்த வேண்டிய தேவைப்பாடு.
   - புலமைத்துவ மரபின் தொடர்ச்சியான வெளிப்பாடுகள்.
   - புலவர்கள் வடமொழி அறிவு பெற்றவர்களாய் திகழ்ந்தமை.
   - உள்ளூர் பிரபுத்துவத்தை நிலைப்படுத்துவதற்கான முயற்சியும் பிரபுக்கள் பலர் புலவர்களை ஆதரித்தமையும்.
   - தமிழர்களிடையே ஏற்பட்ட வரலாற்றுணர்வு.
   - ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் இடையிலான நெருக்கமான உறவுத்தொடர்பு.
   - நெருக்கடிகளை எதிர்கொண்ட கத்தோலிக்க சமயத்தவரை ஆற்றுப்படுத்துவதற்கு இலக்கியங்கள் பொருத்தப்பாடுடையனவாக உணரப்பட்டமை.

9. உள்ளூர் பிரபுக்கள் மீதெழுந்த ஒல்லாந்தர்கால இலக்கியங்களைக் குறிப்பிட்டு அவை தோற்றம் பெற்றமைக்கான சமூகக் காரணிகளைக் குறிப்பிடுக.

   - கரவைவேலன் கோவை - நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்

- தண்டிகைக் கனகராயன் பள்ளு - மாவை சின்னக்குட்டிப்புலவர்

தோற்றத்திற்கான சமூகக் காரணிகள்

- உள்ளூர் பிரபுக்களிடையே நிலவிய அதிகாரப் போட்டியும், தமது சமூகச் செல்வாக்கை நிலைநிறுத்த வேண்டிய தேவைப்பாடும்.
- ஒல்லாந்த ஆட்சியாளருக்கு தமது ஆற்றலை வெளிப்படுத்த வேண்டிய தேவை இருந்தமை.
- இந்தியாவிலிருந்து குடியேறிய தண்டிகைக் கனகராயனின் பரம்பரையில் வந்தவர்களாகவும், பிரபுக்களைச் சார்ந்து வாழ்ந்தமையாலும் நட்படிப்படையிலும் பிரதியுபகாரத்தின் பொருட்டும் இலக்கியம் படைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டமை.

10. ஒல்லாந்தர்காலத் தமிழ் இலக்கியங்களில் தமிழ்நாட்டு இலக்கியச் செல்வாக்குக் காணப்படுமாற்றினை விளக்குக.

- இந்தியாவிலுள்ள சைவசமயத்தின் பிரதான தலங்கள் குறித்து இலக்கியங்கள் எழுந்துள்ளன.
  1. மறைசை அந்தாதி - திருமறைக்காடு எனக் குறிப்பிடப்படும் வேதாரணியத்தில் உள்ள வேதாரணியேசுவரர் மீது நல்லூர் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்டது.
  2. புலியூர் அந்தாதி - சிதம்பரத்தில் உள்ள சிவனை மையப்படுத்தி மாதகல் மயில்வாகனப் புலவரால் படைக்கப்பட்டது.
  3. சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம் உள்ளிட்ட பல இலக்கியங்களில் இந்தியத் தலங்கள் குறித்த செய்திகள் உள்ளன.
- தண்டிகைக் கனகராயன் பள்ளில் காரைக்காட்டில் வடகாரை, தென்காரை தொடர்பான விபரிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.
- பறாளை விநாயகர் பள்ளில் சோழ மண்டலப் பள்ளியின் ஊடாக சோழமண்டல சிறப்புக் கூறப்பட்டுள்ளது.
- மாதகல் மயில்வாகனப் புலவரின் காசியாத்திரை விளக்கம், யாத்திரை அனுபவங்களை விளக்கியிருக்கக் கூடும் என நம்பப்படுகின்றது. (தற்பொழுது இந்நூல் கிடைக்கப் பெறவில்லை)

11. கதிரைமலைப் பள்ளு, ஞானப்பள்ளு, , தண்டிகைக்கனகராயன் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு முதலிய பள்ளுப் பிரபந்தங்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றில் பெறும் இடத்தினை மதிப்பிடுக.

**கதிரைமலைப்பள்ளு**

- ஈழத்தில் எழுந்த முதற்பள்ளு இலக்கியமாகக் கதிரைமலைப்பள்ளு கொள்ளப்படுகின்றது.
- 130 செய்யுள்களைக் கொண்ட இப்பள்ளுப் பிரபந்தத்தில் முருகன் பாட்டுடைத் தலைவனாகப் போற்றப்பட்டுள்ளார்.
- 'மகாவலிகங்கைவயற்' பள்ளியின் ஊடாக ஈழத்தின் சிறப்புக்கள் விபரிக்கப்பட்டுள்ளன. (திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் முதலானவை) அதேவேளை பகீரதாவயற் பள்ளியின் ஊடாக பாரத தேசத்தின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. (புராணக்கதைகளை அடிப்படையாகக் கொண்ட பாரததேச விபரிப்பு)
- சிருங்கார ரசமற்ற தன்மை

**ஞானப்பள்ளு / வேதப்பள்ளு**

- கத்தோலிக்க சமயத்தைப் போற்றி யேசுநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு எழுந்துள்ளது.
- மூத்தபள்ளி, பள்ளன் ஆகியோர் எருசலேமைச் சார்ந்தவர்களாகவும், இளையபள்ளி, பண்ணைக்காரன் ரோம் நகரைச் சார்ந்தவர்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர்.
- உருவகப்பள்ளு எனச் சிறப்பிக்கப்படும் ஞானப்பள்ளு சிருங்கார ரசமற்றது.
- அதிகார வர்க்கத்தின் புகழ்பாடல், பிரசங்கபாணி முதலான பண்புகளும் ஞானப்பள்ளியில் உள்ளன.

**தண்டிகைக் கனகராயன் பள்ளு**

- ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த கனகநாயக முதலியின் முற்சந்ததியான தண்டிகைக் கனகராயனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு மாவை சின்னக்குட்டிப் புலவர் இப்பள்ளு இலக்கியத்தை எழுதியுள்ளார்.
- பாரதத்தின் காரைக்காட்டிலிருந்து தெல்லிப்பளையில் குடியேறிய பரம்பரையினர் குறித்தான பள்ளாகையால் கதைமாந்தர் காரைக்காட்டிற்கு உரியவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர்.
- வடகாரை, தென்காரை வளவிபரிப்பு முக்கியம் பெறுகின்றது.
- சிங்கார ரசமுள்ள இப்பள்ளியில் உள்ளூர்ப் பிரபுத்துவத்தின் இருப்பை வலுப்படுத்தும் நோக்கம் தெளிவுற வெளிப்படுகிறது.
- பள்ளு மரபிற்கு மாறாக பள்ளனது இயற்பெயர் 'நாகன்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பறாளை விநாயகர் பள்ளு**

- நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவரால் படைக்கப்பெற்ற பறாளை விநாயகர் பள்ளானது பறாளைத் தலத்தின் விநாயகரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது.
- பள்ளியில் வரும் மூத்தபள்ளி ஈழமண்டலப் பள்ளியாகவும் இளையபள்ளி சோழமண்டலப் பள்ளியாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.
- அடிநிலை மக்களின் வாழ்க்கை, பண்பாட்டம்சங்களின் வெளிப்பாடுகள் கவனிப்பிற்குரியன.
- பொதுவாக ஈழத்துப் பள்ளு இலக்கியங்களில் அடிநிலை மக்களின் மொழி கையாள்கைகுறித்த விடயங்கள் அருகியுள்ளன. பாவகையில் சிந்து, விருத்தம், வெண்பா, கலிப்பா, தரு என்பன செல்வாக்குப் பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது.

## ஆங்கிலேயர் காலம்.

1. ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டின் முக்கியத்துவம் யாது?

- நிறுவனமயப்பட்ட கல்வியறிவு ஈழத்தவருக்குக் கிடைக்கத் தொடங்கியது. - பாடசாலை உருவாக்கம்.
- ஆங்கில மொழியறிவும் அதனால் மேலைத்தேய இலக்கியப் பரிச்சயமும் கிடைத்தது.
- நவீன உரைநடை அறிமுகமாகியதைத் தொடர்ந்து உரைநடையாலான இலக்கியங்கள் தோன்றின.
- அச்சியந்திரத்தின் பயன்பாடு அதிகரித்தது. - பதிப்புத் துறையில் முன்னேற்றமும் அனுபவமும் கிடைத்தன. - பழைய நூல்களை அச்சுவாகனம் ஏற்றும் முயற்சிகள் நிகழ்ந்தன.
- பத்திரிகைகள் தோற்றம் பெற்றன. - வாசகர் வட்டம் விரிவடைந்தது.
- நவீன இலக்கிய வடிவங்கள் - நாவல், சிறுகதை - தமிழுக்கு அறிமுகமாகின.
- நவீனத்துவத்தின் செல்வாக்கு தமிழ் இலக்கியங்களில் படிப்படியாக ஏற்படத் தொடங்கிற்று.
- தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கும் முயற்சிகளும் மேலைத்தேய இலக்கியங்களை ஆங்கிலத்துக்குக் கொணரும் முயற்சிகளும் நிகழ்ந்தன.
- இலக்கிய வரலாற்றினை எழுதும் ஆரம்ப முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

2. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஈழத்தில் உரைநடை செழிப்புற்று வளர்ந்தமைக்கான காரணங்களை ஆராய்க.

- ஆங்கிலக்கல்வியும் அதனூடாகக் கிடைக்கப்பெற்ற மேலைத்தேய இலக்கியப் பரிச்சயமும்
- அச்சியத்திரத்தின் பயன்பாடு அதிகரித்தமை
- பத்திரிகைகள் தோற்றம் பெற்றமை
- மதப்பிரசார முயற்சிகளும் அதற்கென வெளியிடப்பட்ட நூல்களும்
- நவீன இலக்கிய வடிவங்கள் குறித்த அறிவும் அனுபவமும் கிடைக்கப் பெற்றமை.

3. பத்தொன்பதாம் நூற்றாண்டில் உரைநடை வளர்ச்சி பெற்றதால் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிடுக.

- உரைநடை சார்ந்த இலக்கியங்கள் பல தோற்றம் பெற்றன.

மதப்பிரசார நூல்கள்
கண்டனப் பிரசுரங்கள்
பாடநூல்கள்
செய்யுள் இலக்கியங்களை உரைநடையில் எழுதும் முயற்சி
உ-ம் : பெரியபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம்

- பத்திரிகைகள் தோற்றம் பெற்றன.
- அகராதிகளைத் தொடுக்கும் முயற்சிகள் தொடங்கின.
- புனைகதை இலக்கியங்கள் எழுதும் முதன் முயற்சிகள் ஆரம்பமாகின.
- மொழிபெயர்ப்பு முயற்சிகள் நிகழ்ந்தன
- இலக்கிய வரலாற்றினை எழுதும் முயற்சிகள் தொடங்கின.

4. ஈழத்திலக்கியப் போக்கிலே ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் எழுந்த பத்திரிகைகள் ஏற்படுத்திய தாக்கங்களை மதிப்பிடுக.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் உதயதாரகை (1841), சத்தியவேதபாதுகாவலன் (1876) இந்து சாதனம் (1880), உதயபானு (1880), இலங்கை நேசன் (1848), பாலியர் நேசன் (1859), சன்மார்க்க போதினி (1885), சுதேசநாட்டியம் (1902), குருசந்திரோதயம் (1908), ஞானப்பிரகாசம் (1910), வீரகேசரி, ஈழகேசரி, தினகரன் முதலான பத்திரிகைகள் பல தோற்றம் பெற்றன.

- அச்சு இயந்திர வருகையால் அறிமுகமான பத்திரிகை பொதுமக்கள் தொடர்பு ஊடகமாக விளங்கியது.
- சமயம் சார்ந்த கருத்துக்கள், சமய விமரிசனம் என சமயம் பிரதான பேசுபொருளாக இருந்தது.
- இலக்கியம் சார்ந்து சின்னக் கதைகள், கவிதைகள், நூல் விபரங்கள், மதிப்புரைகள், மரண சங்கதிகள் முதலான விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.
- தமிழும் ஆங்கிலமும் கலந்து எழுதும் முறை காணப்பட்டது.
- தமிழ்மொழிப் பயன்பாட்டின் நெகிழ்ச்சியான பிரயோகத்தமிழ் நடை பயன் படுத்தப்பட்டது.
- வாசகர் வட்டம் பெருக்கமடைந்தமை.
- கட்டுரை இலக்கியம் எனும் வடிவம் முக்கியத்துவம் பெறத் தொடங்கியமை.
- சிறுவர்களை மையப்படுத்திப் பத்திரிகைகள் வெளிவந்தமை. உ-ம் : பாலியர்நேசன்

5. ஈழத்திலக்கிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு நவீன இலக்கிய வடிவங்களின் தோற்றுவாயாக அமைவதைத் தெளிவுபடுத்துக.

- புனைகதை இலக்கிய வடிவத்தில் ஒன்றான நாவல் இலக்கியம் வெளிவந்தமை
  உ-ம் : அசன்பே சரித்திரம் - சித்திலெப்பை
  மோகனாங்கி - தி. சரவணமுத்துப்பிள்ளை
- கதை வடிவத்தை மையமாகக் கொண்டு ''நன்னெறிக் கதாசங்கிரதம்'' எனும் கதைத்தொகுதி ஆர்னொல்ட் சதாசிவம்பிள்ளையால் எழுதப்பட்டமை
- பத்திரிகைகளின் தோற்றம் - உதயதாரகை, முஸ்லிம்நேசன், உதயபானு முதலானவை.
- வரலாறு, சமூகம், இலக்கியம், படைப்பாளிகளின் பங்களிப்பு முதலானவற்றை வரலாற்று ரீதியாகப் பதிவுசெய்யும் முயற்சி
  உ-ம் : வரலாறு- சாதாரண இதிகாசம் - ஆர்னொல்ட் சதாசிவம்பிள்ளை
  சமூக வரலாறு - யாழ்ப்பாண வைபவகௌமுகி - வேலுப்பிள்ளை
- படைப்பாளிகள் - பாவலர் சரித்திரதீபகம் - ஆர்னொல்ட் சதாசிவம்பிள்ளை
- கண்டனங்கள், பிரசுரங்கள் வெளிவந்தமை.
- அறிவியல் நூல்களின் தோற்றம்
  உ-ம் : டாக்டர் கிறீனினதும் அவரது மாணவரதும் படைப்புகள்
- அகராதி முயற்சிகள்

6. 19ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கினை நிர்ணயித்த காரணிகளைச் சுருக்கமாக விளக்குக.

- ஆங்கிலேயரின் ஆட்சி முறையும் சமூக பொருளாதார மாற்றங்களும்
  பெருந்தெருக்கள், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, தபால், தந்திப் போக்குவரத்து, அரச உத்தியோகம், இலங்கை முழுவதையும் ஒருகுடைக் கீழ்க் கொண்டுவந்தமை முதலியன. (கல்விச்சங்கங்கள் நிறுவியமை)
- கல்வி பரவலாகியமை
- அச்சியந்திரத்தின் வருகையும் பயன்பாடும்
- பத்திரிகைகளின் தோற்றம், வளர்ச்சி
  உதயதாரகை, உதயாதித்தன், இலங்கைநேசன், முஸ்லிம் நேசன், இந்துசாதனம்
- சமயச் செயற்பாடுகள்
  கிறிஸ்தவம்
  சைவம்
  (கண்டன நூல்கள், கண்டனப் பிரசுரங்கள், சமய, தத்துவ நூல்கள்)
- பதிப்பு முயற்சிகள்
- பாடநூல்கள்
- மொழிபெயர்ப்பு

7. 19ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியப் போக்கினைத் தெளிவாக விளக்குக.

- மரபு ரீதியான இலக்கியங்கள் :
  பதிகம், நான்மணிமாலை, மும்மணிக்கோவை, கும்மி முதலான இலக்கிய வடிவங்கள் தொடர்ந்து வந்தமை, சமயம், தத்துவம் முதலானவற்றின் தொடர்ச்சி
- மரபு ரீதியான இலக்கிய வடிவங்களிலே புதிய பாடுபொருளைப் பயன்படுத்தியமை
  கனகிபுராணம்
  தாலபுராணம்
  கோட்டுப்புராணம்
  தத்தைவிடு தூது முதலானவை

- உரைநடை வளர்ச்சி
  உரைநடை செம்மையாக அமைந்தமை.
  உ-ம் : நாவலரின் உரைநடை
  உரைநடை இலக்கியங்கள்.
  உ-ம் : நன்னெறிக்கதாசங்கிரகம்
  கண்டன உரைநடை.
  உ-ம் : சைவம், கிறிஸ்தவ கண்டனங்கள்
  கட்டுரைகள், கடிதங்கள் பத்திரிகைகளில் வெளியானமை
  குறியீடுகள் பயன்படுத்தப்பட்டமை
  பேச்சுமொழிச் சொற்பயன்பாடு.
  உ-ம்: கண்டனங்கள், பத்திரிகைச் செய்திகள், புனை கதைகள்
  ஆங்கிலமும் தமிழும் வடமொழியும் விரவிவரும் உரைநடை
- மொழிபெயர்ப்புக்கள்
  நீதிநூல்கள், சைவசமய நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டமை
  தமிழிலும், ஆங்கிலத்திலும் வடமொழி தமிழ் மொழிபெயர்ப்பு முயற்சிகள் நடைபெற்றமை
- அறிவியல் நூல்கள் எழுந்தமை.
  உ-ம் :வானசாஸ்திரம், வைத்தியம் (ஆங்கிலம்)

- நாடக இலக்கியம், இசைநாடகம், விலாசம், கூத்து

8. அச்சியந்திரத்தின் பயன்பாடு ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் ஏற்படுத்திய மாற்றங்களைக் குறிப்பிடுக.
   - தமிழ் உரைநடை வளர்ச்சியடைந்தமை
   - பழைய நூல்கள் பதிப்பிக்கப்பட்டமை
   - பத்திரிகைகள் வெளிவந்தமை
   - தமிழ்மொழிப் பயன்பாட்டில் நெகிழ்ச்சித் தன்மை ஏற்பட்டமை
   - பரவலான வாசகர்களை உருவாக்கியமை
   - பாடநூல்கள் வெளிவந்தமை
   - அகராதிகள் வெளிவந்தமை

9. ஈழத்து இலக்கிய வரலாற்றிலே 19ஆம் நூற்றாண்டுப் பத்திரிகைகள் ஏற்படுத்திய தாக்கங்கள் யாவை?

   - தமிழ்மொழியில் உரைநடை எழுச்சிபெறத் தொடங்கியமை
   - வாசகர்குழாம் ஒன்று உருவாகியமை (வாசிப்புப் பழக்கம்)
   - இலக்கிய இலக்க விடயங்கள் பொதுமக்களை நோக்கிச் சென்றமை
     (உ-ம் : ஐயவினாக்கள்)
   - உலகவிடயங்களைச் சாதாரணமக்களும் அறியும் வாய்ப்பை ஏற்படுத்தியமை
   - கடிதங்கள் கட்டுரைகள் எழுதும் பயிற்சியை ஏற்படுத்தியமை

10. பழைய இலக்கிய வடிவங்களுள் புதிய பொருள் மரபினைப் பாடும் மரபு 19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட வரலாற்றினை விளக்குக.

    - கல்வி பரவலாகியமை - குறிப்பாக ஆங்கிலக் கல்வியின் பயன்பாடு.
    - சமூக சிந்தனை வளர்ச்சி, சமூகச் சீர்திருத்த நோக்கு, சமூக மாற்றம்
    - புராணம் எனும் புராதன இலக்கிய வடிவத்தினைச் சமூகமயப்படுத்திப் பாடியமை
      உ-ம் : தாலபுராணம் (பனங்காய்ப் பாரதம்)
      கோட்டுப்புராணம் - கோட்டு வழக்குகளினால் வரும் தீமை
      கனகி புராணம் - சமூகச் சீர்கேடுகளைக் கண்டித்தமை
      தத்தைவிடு தூது - தூதுப்பிரபந்த வடிவத்தினுள் பெண்களின் நிலைமையைச் சொல்லியமை
      கும்மிப்பாடல்கள் - ஏசுமதவிகற்பக்கும்மி, அஞ்ஞானக்கும்மி முதலானவை.

11. ஈழத்து இலக்கிய வரலாற்றிலே 19ம் நூற்றாண்டு புதிய இலக்கிய வடிவங்களின் தோற்றக்காலமாக அமைகின்றது. விளக்குக.

    - அரசியல், சமூக, பொருளாதார காரணிகளினால் ஏற்பட்ட மாற்றம்
    - கல்விப்பரம்பல் (ஆங்கிலக்கல்வி முக்கியம் பெறல்)
    - உரைநடை வளர்ச்சி
    - மத்தியதர வர்க்கத்தின் தோற்றம் - வாசிப்புப் பழக்கம் (ஓய்வுநேரம்)
    - உலக, இந்தியத் (தமிழக) தொடர்புகள்
    - பத்திரிகைகளின் தோற்றம்.
      சிறுகதை, நாவல் - புனைகதை, நடகம் - விலாசம், டிறாமா

12. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் எழுந்த நாடக முயற்சிகள் பற்றிக் குறிப்பிடுக.

    - இசை நாடகங்கள், விலாசங்கள் எழுந்தமை
    - உ-ம் : வாளபிமன், விஜயதர்ம விலாசம், இரத்தினவிலாசம், இராம விலாசம், எஸ்தாக்கியார் விலாசம், மாணிக்கவாசக விலாசம், நளச்சக்கரவர்த்தி விலாசம், மதனவல்லி விலாசம், பதிவிரதை விலாசம், பூதத்தம்பி விலாசம் முதலானவை

- சபாநாடகங்களின் தோற்றம் நிகழ்ந்தமை
  விலாசத்தில் காணப்பட்ட அம்சங்களுடன் மேல்நாட்டுத் தாக்கமும்சபா நாடகங்களில் வெளிப்பட்டன.

  உ-ம் : எஸ்தாக்கியர் சபா, ஞானசவுந்தரி நவரஸசபா, சவீனகன்னிசபா
- சபாநாடகங்களில் இருந்து இணைந்தெழுந்த நாடக வடிவமான 'டிறாமா மோடி' நாடகத்தின் வளர்ச்சி, வசனத்தில் அமைந்த உரையாடல்கள் அதிகமாக இருத்தல், திரைகள் மூலமான காட்சி மாற்றம், மெட்டுக்களைக் குறிப்பிட்டுப் பாடல்களை அமைக்கும் முறை முதலானவை இந்நாடகத்தின் இயல்புகளில் சிலவாகும்.

- மரபு சார்ந்த கூத்து வடிவங்களின் தொடர்ச்சி
  உ-ம் : லோறஞ்சுப் புலவரின் பேரன் கீத்தாம்பிள்ளை, ஆறுமுகநாவலரின் தந்தையார் கந்தப்பிள்ளை, மானிப்பாய் சுவாமிநாதர், அராலி முத்துக்குமாருப்புலவர், உடுப்பிட்டிக் குமாரசுவாமிப்புலவர், எருக்கலம்பிட்டி பக்கீர்ப்புலவர், தானீது கொஸ்தீன், அச்சுவேலி தம்பிமுத்துப்பிள்ளை, கொக்குவில் விசுவநாத சாஸ்திரி, நாகேச ஐயர், வை. இராமலிங்கம் புலவர், சுவாமிப்பிள்ளை முதலானவர்கள் கூத்து நாடகவளர்ச்சிக்குப் பங்காற்றியுள்ளனர்.

13. 19ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த அகராதி முயற்சிகள் குறித்துக் கருத்துரைக்க.
- உரைநடை வளர்ச்சி

  பதிப்புத் துறையில் ஏற்பட்ட அநுபவம்
  ஆங்கிலக்கல்வியின் செல்வாக்கு
  மேலைத்தேயப் பரிச்சயம் ஏற்பட்டமை
  பாதிரிமார்கள் மதப்பிரச்சாரத்தின் பொருட்டு மொழித்தேர்ச்சியினைப் பெறவேண்டிய தேவை
  என்பன அகராதிகளின் தோற்றத்திற்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.
- ஈழத்தில் அகராதிகள் பல தோற்றம் பெற்றன. யாழ்ப்பாண அகராதி / மானிப்பாய் அகராதி அமெரிக்க மிஷனைச் சார்ந்த உவென்சிலோ பீற்றர் பேர்சிவெல் ஆகியோரோடு உடுவில் சந்திரசேகர பண்டிதர், கறோல் விஸ்வநாதபிள்ளை, நெவில் சிதம்பரப்பிள்ளை போன்றோரின் கூட்டு முயற்சியால் முதலில் உருவாகியது.
- உவென்சிலோ தமிழ் - ஆங்கில அகராதியையும் ஆங்கில - தமிழ் அகராதியையும் தொகுத்து வெளியிட்டுள்ளார்.
- மரபு வழியில் தமிழையும் வடமொழியையும் கற்றுத் தேர்ந்த குமாரசாமிப்புலவர் 'இலக்கியச் சொல்' அகராதியைத் தயாரித்தார்.
- வைமன் கதிரைவேற்பிள்ளை அகராதித் தொகுப்பு முயற்சியில் ஈடுபட்டார்.
- சைமன் காசிச்செட்டி 'ஆங்கில - தமிழ்', 'சமஸ்கிருத - தமிழ்' அகராதிகளை ஆக்கியதாகக் கூறப்படுகின்றது.
- யாழ்ப்பாணம் ச.சுப்பிரமணிய சாஸ்திரியார் 'சொற்பொருள் விளக்கம்' என்னும் அகராதியைத் தொகுத்துள்ளார்.
- மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை 'அபிதான கோசம்' என்னும் அகராதியைத் தொகுத்ததோடு ஆங்கில - தமிழ் அகராதி ஒன்றினையும் ஆக்கியுள்ளார்.
- நீர்வேலி சங்கரபண்டிதரின் 'தாதுமாலை' என்னும் அகராதி வடசொற்களைக் கிரந்த லிபி வடிவில் அகரவரிசைப்படி ஒழுங்குபடுத்திப் பொருள் கூறுகின்றது.

14. இலக்கிய வரலாற்று எழுதுமுறை ஒன்று 19 ஆம் நூற்றாண்டிலே துளிர்விடத் தொடங்கியது. ஆராய்க.

- உரைநடை வளர்ச்சி, பதிப்பு வாய்ப்புகள், ஆங்கிலக் கல்வியினூடாகக் கிடைக்கப்பெற்ற மேலைத்தேய இலக்கியத் தரிசனம் என்பவை ஈழத்தவர்களின் இலக்கிய வரலாற்று எழுது முயற்சிகளுக்கு பின்புலங்களாக அமைந்தன.
- தமிழ் இலக்கியங்கள் குறித்த அறிவும் ஆர்வமும் கொண்டோர் இதில் ஈடுபடுவராயினர்.
  - சைமன் காசிச்செட்டி - தமிழ் புளூட்டாக்
  - ஆனோல்ட் சதாசிவம்பிள்ளை - பாவலர் சரித்திர தீபகம்
  - சி.வை.தா. - பதிப்பு முன்னுரைகள்
  - சபாபதிநாவலர் - திராவிடப்பிரகாசிகை

  இவர்களது முதன்முயற்சிகளை ஆதர்சமாகக் கொண்டு 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் இலக்கிய வரலாற்று எழுத்து முயற்சிகள் பல நிகழ்ந்தேறின.
  - சுன்னாகம் குமாரசாமிப்புலவர்
  - தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை
  - மல்லாகம் - வி.கனகசபைப்பிள்ளை
  - வித்துவசிரோமணி கணேசையர்

15. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் நிகழ்ந்த மரபிலக்கிய முயற்சிகள் குறித்துத் தெளிவுபடுத்துக.

- ஆரியச்சக்கரவர்த்திகள் - - தொடர்ச்சியாக இலக்கிய வடிவங்கள்
- பிரபந்தங்கள்
  - புராணங்கள்
  - தலபுராணங்கள்
  - விரதபுராணம்
    - மாலை, கோவை, அந்தாதி, பதிகம், ஊஞ்சல்தூது
- மரபுமாறிய இலக்கியங்கள் (பழைய வடிவம், புதியபொருள்)
  - கனகிபுராணம், கோட்டுப்புராணம், தலபுராணம்
- உரைகள்
  - இலக்கண உரைகள்
  - இலக்கிய உரைகள்
- நாடகம் - மேடைநாடகம், கூத்து
- வைத்தியசோதிடம் : சோதிட வினாவிடை, சோதிடமாலை.

## சிறுகதை.

1. தற்கால இலங்கை தமிழ் இலக்கிய வளர்ச்சியில் மலையகத் தமிழிலக்கியம் பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

- 1930 களில் இருந்து மலையக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டது.
- மலையக மக்களது வாழ்வினை மையமாகக் கொண்ட இலக்கிய வளர்ச்சி (நாவல், சிறுகதை, கவிதை)
  - இலக்கிய கர்த்தாக்கள் - நடேசையர், மீனாட்சியம்மாள், சி.வி.வேலுப்பிள்ளை, கோகிலம் சுப்பையா, கே.கணேஸ், நந்தி, பெனடிக் பாலன், என். எஸ்.எம். ராமையா, தெளிவத்தை ஜோசப், மாத்தளை கார்த்திகேசு, மாத்தளை வடிவேலன், சக்தி, அ.பாலையா, குறிஞ்சித் தென்னவன் முதலியோர்
- இலங்கைத்தமிழ் இலக்கியத்தில் ஒரு புதிய வாழ்வியல், புதிய களம் அறிமுகம்
- தொழிலாளர் வர்க்கத்திலிருந்து எழுத்தாளர்கள் உருவாகியமை (தொழிலாளர் படைப்புகள்)

2. இலங்கைத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பினைத் தெளிவுபடுத்துக.

- 1950களிலிருந்து ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிக்கு இலங்கை முஸ்லீம்கள் பங்களிப்புச் செய்தனர். பித்தன், அப்துல் சமது, எச்.எம்.பி.மொகைதீன் முதலியோர் இலக்கிய முன்னோடிகளாகக் குறிப்பிடத்தக்கோர்.
- 1960களில் மருதூர்க்கொத்தன், மருதூர்க்கனி, ஏ.இக்பால், எஸ்.எல்.எம் கனிபா முதலியோர் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கையைச் சித்திரித்தனர்.
- மத்தியபிரதேச மக்களின் வாழ்வினை எம்.எல்.எம்.மன்சூர் ஆப்டின், அல்அஸ்மத் முதலியோர் சித்திரித்தனர்.
- முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் : நயிமா சித்திக், கெக்கிராவ ஸஹானா முதலியோர்
- இலங்கைத் தமிழிலக்கியத்தில் புதிய வாழ்வியல் முஸ்லிம் பேச்சுவழக்கு, முஸ்லிம் பண்பாட்டு அம்சங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

3. இலங்கையில் தமிழ்ச் சிறுகதையின் தோற்றத்திற்குச் சாதகமாக அமைந்த காரணிகளை விளக்குக.

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சியும் அரசியல், பொருளாதார மாற்றங்களும் சமுதாய அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த நிலமானிய அமைப்புச் சிதைந்து புதிய சமுதாய உறவுகள் ஏற்பட்டன. இதனால் தனிமனிதன் முக்கியத்துவம் பெறத் தொடங்கினான். இதன் விளைவு சிறுகதைகளின் தோற்றத்திற்குக் கரணமாகியது.
- பிரித்தானியர் ஆட்சி அதனால் அரசியல், பொருளாதார, சமுதாய, பண்பாட்டு மாற்றங்களும் காரணமாகின.
- ஆக்கிலக்கல்வி அறிவின் பெருக்கம்.
- சுதேச பண்பாடு தொடர்பாக ஏற்பட்ட விழிப்புணர்வு (கிறிஸ்தவ சமயமும் அதன் பண்பாடு கரணமாக)
- பெண்கல்வியும், மேனாட்டுக் கல்வி முறையும் சாதி அமைப்பில் தளர்ச்சியை உண்டுபண்ணியமை.
- மத்தியதர வர்க்கத்தின் தோற்றம்
- பத்திரிகைகளின் தோற்றம்
- தமிழ்நாட்டு எழுத்துக்களின் தாக்கம்

4. ஆரம்பகால ஈழத்துத் தமிழ்ச்சிறுகதை ஆசிரியர்களாகக் கொள்ளப்படுவோர் யாவர்? அவர்களின் சிறுகதைகளில் காணப்படும் முக்கிய பண்புகள் யாவை?

ஈழத்திற் தமிழ்ச் சிறுகதை முயற்சி ஏறத்தாழ 1930ஆம் ஆண்டு காலப்பகுதியிலே தோற்றம் பெற்றது.

ஆரம்பகால சிறுகதை எழுத்தாளர்கள்

- சோ.சிவபாதசுந்தரம்
- இலங்கையர்கோன்
- சி.வைத்தியலிங்கம்
- சம்பந்தன்

முக்கிய பண்புகள்

- தமிழ்நாட்டுச் சிறுகதைகளினதும் ஆங்கிலச் சிறுகதைகளினதும் பாதிப்பு
- காவியப்பாங்கான மொழிநடை
- காவியரசனை நோக்கும் கற்பனை வளமும் இயற்கை வருணனைகளும் கிராமச் சூழ்நிலையும் முக்கிய பண்புகளாகின்றன.
- பழைய வரலாற்றுச் சம்பவங்களையும் புராண இதிகாசங்களில் வரும் சம்பவங்களையும் அவற்றின் கருத்துக்களையும் மனிதனின் மென்மையான, பலவீனமான மன உணர்வுகளையும் அகமன உணர்வுப் போராட்டங்களையும் சித்திரிப்பன.
- ஆண் - பெண் உறவினைச் சித்திரித்தல்
- ஈழத்தைக் களமாகக் கொண்டவையாக இருந்தபோதிலும் ஈழத்து மக்களுக்கே உரிய பிரச்சினைகளைப் பிரதிபலிக்காமல் காலதேச வர்த்தமானங்களைக் கடந்த பொதுவான மன உணர்வுகளையே பிரதிபலித்தமை
- இவர்களின் கதைகளில் சம்பவங்களிலும் பார்க்க சம்பவங்களினடியாகத் தோன்றும் உணர்வு நிலையே முக்கிய இடம்பெறும்.

5. இலங்கைத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் டொமினிக் ஜீவா பெறும் முக்கியத்துவத்தை ஆராய்க.
   - 1950களின் பின் ஏற்பட்ட சமுதாய அரசியல் விழிப்புணர்வின் பின்னணியில் ஈழத்துத் தமிழ்ச்சிறுகதை எழுத்தாளர்களுள் உலகிற்கு அறிமுகமான மிக முக்கியமானவர் டொமினிக் ஜீவா.
   - சமுதாய அரசியல் போராட்டங்களுடன் இலக்கியம் பிரிக்க முடியாத உறவுடையது என்ற கருத்து நிலையோடு தனது சிறுகதைகளை எழுதியவர்.
   - மாக்ஸிஸ சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டும் சமுதாய அரசியல் பிரக்ஞையோடும் கதைகள் எழுதியவர்.
   - சமுதாய ஏற்றத்தாழ்வு, தொழிலாளர் போராட்டம், சாதி அடக்குமுறை, வறுமை, சுரண்டல் முதலியன அவரது கதையின் கருப்பொருளாக அமைந்தன.
   - அடிநிலை மக்களின் பிரச்சினைகளை யாதார்த்தத்துடன் தனது கதைகளில் சித்திரித்தவர்.
   - இவரது கதைகள் சமுதாய சீர்திருத்தத்தை வலியுறுத்துவதை விடச் சமுதாய மாற்றத்தை அவாவியவை.
   - பாதுகை, தண்ணீரும் கண்ணீரும், சாலையின் திருப்பம், டொமினிக் ஜீவா சிறுகதைகள் ஆகியன இவரது சிறுகதைத் தொகுதிகள்.

6. நவீன ஈழத்துச் சிறுகதைகளின் முக்கிய பண்புகளையும் அவற்றின் போக்கினையும் விபரிக்குக.

   - உணர்வுக்கு முக்கியத்துவம் கொடுப்பனவாகவும் சிந்தனையைத் தூண்டுவனவாகவும் வாழ்வையும் மனிதரையும் புரிந்துகொள்ள உதவுவனவாகவும் அமைந்துள்ளன.
   - ஐம்பதுகளுக்குப் பின்னரான சிறுகதைகளில் சமுதாயச் சார்பு உரம்பெற்றுள்ளது.
   - சுவாரஸ்ய காதல் கதைகளும் அதீத கற்பனைக் கதைகளும் கூட எழுதப்பட்டன.
   - சமுதாய மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுத்திய பிரச்சினைகள், சிறுகதைகளில் ஆழமாக நோக்கப்பட்டுள்ளன.
   - சாதிப்பிரச்சினை, இனப்பிரச்சினை, தொழிலாளர் வாழ்க்கைப் பிரச்சினை, சீதனப் பிரச்சினை என்பனவும் சிறுகதைகளின் பொருளாக உள்ளன.
   - போராட்டகால உணர்வுகளையும் சிறுகதைகள் பிரதிபலித்துள்ளன.
   - புலம்பெயர்ந்தோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் சிறுகதைப் பொருளாக உள்ளன.

   - ஈழத்துச் சிறுகதைப் போக்கினை 6 காலகட்டங்களாகப் பகுத்து நோக்கலாம்.

**1ஆவது காலகட்டம்** - இலங்கையர்கோன், சம்பந்தன், வைத்தியலிங்கம் - இவர்கள் ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளாவர். அகமனப் போராட்டம், வரலாற்றுச் சம்பவங்கள், புராண இதிகாசக் கருத்துக்கள், காதல் முதலானவற்றுக்கு இவர்கள் தமது கதைகளில் முதன்மை தந்தனர்.

**2ஆவது காலகட்டம்** - அ.செ.முருகானந்தன், தி.ச.வரதர், அ.ந.கந்தசாமி, கனக செந்திநாதன், தாழையடி சபாரத்தினம், வ.அ.இராசரத்தினம், - இவர்களது கதைகள் சாதிவர்க்க வேறுபாடு, இனப்பாகுபாடு, தேசிய ஒற்றுமை போன்றவற்றைப் பொருளாகக் கொண்டன.

**3ஆவது காலகட்டம்** - செ.கதிர்காமநாதன், செ.யோகநாதன், செங்கை ஆழியான், டானியல், டொமினிக் ஜீவா, செம்பியன் செல்வன், அகஸ்தியன், எஸ். பொன்னுத்துரை, தளையசிங்கம் - இவர்களது கதைகள் சமூக வயப்பட்டவை. ஈழத்துச் சமூக பொருளாதாரப் பிரச்சினைகளை ஆழமாக அலசுபவையாகவும் சமூக மாற்றத்தை அவாவுபவையாகவும் அமைந்தன.

**4ஆவது காலகட்டம்** - சட்டநாதன், சாந்தன், யேசுராசா, நந்தினி சேவியர் முதலியோரின் சிறுகதைகள் பேசுபொருள் அடிப்படையில் மட்டுமன்றி வடிவறிநிலையிலும் கவனத்திற்குரியன.

**5ஆவது காலகட்டம்** - ரஞ்சகுமார், உமாவரதராசன் - அரசியல், இனமுரண்பாடு, இனப்பிரச்சனை, போராட்டம் முதலானவற்றை அலசுவனவாகவும் அவர்களது ஆக்கங்கள் அமைந்தன.

**6ஆவது காலகட்டம்** - இருபத்தோராம் நூற்றாண்டுச் சிறுகதை - புலம்பெயர் சிறுகதைகள்.

7. ஈழத்துத் தமிழ் சிறுகதை வளர்ச்சியில் மறுமலர்ச்சி இயக்கத்தினரின் / குழுவினரின் பங்களிப்பினை மதிப்பிடுக.

- 1940 - 1950 மறுமலர்ச்சி என்ற பெயரில் ஓர் இதழ் வெளிவந்தது. இவ்விதழைத் தொடக்கி நடாத்திய வட்டத்தினரையே மறுமலர்ச்சி எழுத்தாளர் எனச் சிறப்பாகக் கூறுவர்.
- சு.இராஜநாயகம், தாளையடி சபாரத்தினம், அ.செ.முருகானந்தன், தி.ச.வரதராசன், அ.ந.கந்தசாமி, வ.அ.இராசரத்தினம், கனக செந்திநாதன்,சொக்கன், நாவற்குழியூர் நடராசன், நல்லையா முதலியோர் மறுமலர்ச்சிக்கால எழுத்தாளர்களாகக் குறிப்பிடத்தக்கவர்கள்.
- இவர்கள் இலக்கிய வேகம் மிக்கவர்களாகவும் மறுமலர்ச்சி காணவேண்டும் என்ற பிரக்ஞை மிக்கவர்களாகவும் காணப்பட்டனர்.
- இவர்கள் தம்மைச் சுற்றியுள்ள மக்கள் மீதும் அவர்கள் வாழ்வின் மீதும் வரலாற்றின் மீதும் கவனம் செலுத்தினார்கள். அம்மக்களுடைய பழைய நம்பிக்கைகள் சிலவற்றை புனராலோசனைக்கு எடுத்துக்கொண்டார்கள். அம்மக்களது வாழ்விலுள்ள ஏற்றத்தாழ்வு அகன்று அவர்கள் உயர்வு பெற வேண்டும் என்றும் விரும்பினார்கள். மனிதாபிமானமும் மனிதநல வேட்கையும் கொண்ட இவர்கள், புதிய இலக்கிய வடிவப் பரிசோதனைகளையும் மேற்கொண்டனர். இப்புதிய பரம்பரையின் தோற்றத்துடன் ஈழத்துச் சிறுகதை உருவத்திலும் உள்ளடக்கத்திலும் சிறப்படையத் தொடங்கியது.
- தென்னிந்திய மரபை அழுங்குப் பிடியாகப் பின்பற்றும் போக்கினை விடுத்து ஈழத்துக்கெனத் தனித்துவமான இலக்கியப் பாரம்பரியம் வளர இக்காலப்பகுதி எழுத்தாளர் வித்திட்டனர்.
- சமூக, சமய சீர்கேடுகள், ஊழல்கள், சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், பெண்களின் பரிதாபநிலை, ஆண் அடக்குமுறை, ஏழைகளின் கஸ்டங்கள் சிறப்பாக இவர்களின் கதைகளில் சித்திரிக்கப்படுகின்றன.

- 1943 இல் தோற்றம் பெற்ற தமிழ் மறுமலர்ச்சிக் கழகம் காலத்துக்கு ஒவ்வாத பழைய மரபுகளைக் களைந்து புதிய சிந்தனைகளை வரவேற்று பண்டித மனப்பான்மையை எதிர்த்து ஈழத்துச் சிறுகதை உலகை வளப்படுத்தியது.

8. 1960 கள் வரையான ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி பற்றி மதிப்பிடுக.

- இலங்கையில் ஆங்கிலேயர் வருகையுடனே சிறுகதை தோற்றமும் வளர்ச்சியும் பெறுகிறது. 1930ஆம் ஆண்டுகளின் பின்னரே ஈழத்தில் சிறுகதை வளரத் தொடங்குகின்றது. ஈழத்துச் சிறுகதையின் முன்னோடிகளாக சோ.சிவபாதசுந்தரம், சி.வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், க.தி.சம்பந்தன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.
- இவர்களின் சிறுகதைகளில் மேலைநாட்டுச் சிறுகதைகளின் தாக்கத்தையும் மணிக்கொடி எழுத்தாளரின் தாக்கத்தையும் இனம்காண முடியம்.
- புராண இதிகாசக் கதைகள், வரலாற்றுச் சம்பவங்கள், ஆண் - பெண் உறவுகள், அகமனப் போராட்டங்கள் போன்றவற்றிற்கு முதன்மை தந்து, இவர்கள் கதைகளை எழுதியுள்ளனர். இவர்களது கதைகள் தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளிலேயே அதிகம் வெளிவந்ததால் தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் பொதுவான மொழிநடையை இவர்கள் பயன்படுத்தினர். இவர்களது மொழி காவியப் பாங்கானது என விமர்சிக்கப்பட்டு வந்தது.
- 1940களின் பின் வ.அ.இராசரத்தினம், அ.செ.முருகானந்தன், வரதர், கனகசெந்திநாதன், அ.ந.கந்தசாமி, சொக்கன், தாழையடி சபாரத்தினம் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இக்கால எழுத்தாளர்களுக்குப் பெரிதும் களம் அமைத்துத் தந்தவை ஈழகேசரிப் பத்திரிகையும் மறுமலர்ச்சிச் சஞ்சிகையும் ஆகும். இக்கால எழுத்தாளர்கள் எழுத்தார்வத்துடன் செயற்பட்டனர். சமுதாயப் பிரச்சினைகளையும், குறைபாடுகளையும் மனிதநேயக் கண்ணோட்டத்துடன் அணுகினர். இவர்களது கதைகள் ஈழத்தைக் களமாகக் கொண்டன. தேசிய உணர்வு இவர்களது கதைகளில் வெளிப்பட்டது.
- இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான அரசியல் சிந்தனைகளும் இனமுறுகல் நிலைகளும் 50 களிற்குப் பின்னரான சிறுகதைகளிற் பிரதிபலித்தன. இலவசக்கல்வி ஏற்படுத்திய வாய்ப்பினால் புதிய எழுத்தாளர் பலர் சிறுகதை உலகிற்குள் வந்தனர்.
- சமூக ஒடுக்கு முறைகளும் மலையக மக்களின் வாழ்வியல் சித்திரிப்புகளும் இன உணர்வும் சிறுகதைகளில் முக்கிய இடத்தினைப் பிடிக்கத் தொடங்கின.

9. இலங்கையர் கோனின் சிறுகதைகள் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையின் உருவ உள்ளடக்க வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றின. விளக்குக.

- சிவஞானசுந்தரம் என்பது இவரது இயற்பெயராகும்.
- இலங்கைத் தமிழ்ச் சிறுகதைகளின் முன்னோடிகளுள் இலங்கையர் கோன் ஒருவர்.
- 1930களின் பிற்பகுதியில் இருந்து சிறுகதைத் துறையில் ஈடுபட்டு வந்தவர்.
- இவரது சிறுகதைக்குரிய உருவ ஒத்திசைவு நிறைவாக அமையவில்லை.
- ஏறத்தாழ 30 சிறுகதைகளை எழுதியுள்ளார்.
- இவரது உரைநடை தனித்துவமானது. சம்பவங்களை உரையாடல் வாயிலாக விளக்கிச் சொல்லும் திறன் இவருக்கு இயல்பாகவே காணப்பட்டுள்ளது.
- சமூகம் சார்பான பேச்சுவழக்கை இயல்பறிந்து பயன்படுத்தியுள்ளார்.
- கிராமத்துச் சூழலை நன்கு விபரமாக எழுதும் ஆற்றல் படைத்தவர்.

10. ஈழத்தில் தமிழ்ச்சிறுகதை தோற்றம் பெற்ற பின்னணி பற்றிச் சுருக்கமாகத் தெளிவுபடுத்துக.
- ஆங்கிலேய ஆட்சி ஏற்படுத்திய தாக்கம்
- ஆங்கிலம் கற்ற ஒரு புதிய பரம்பரை உருவாகியமை
- அச்சியந்திர வருகை
- மத்தியதர வர்க்கம் தோற்றம் பெற்றமை

- பத்திரிகை, சஞ்சிகை தோற்றம் பெற்றமை
- தமிழ் நாட்டுத் தாக்கம்
- வாசகர் பெருக்கம்

**கவிதை**

1. மேல்வருவோர் ஈழத்துத் தமிழ்க் கவிதையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினைச் சுருக்கமாக விளக்குக.

**நவாலியூர் சோமசுந்தரப்புலவர் (1878 - 1953)**

- பழைமையும் புதுமையும் இழையோடும் பாடல்களைப் பாடியவர்.
- தங்கத்தாத்தா என்று அழைக்கப்பட்டவர். (தங்கம் என்றால் ஈழம்)
- ஈழத்துத் தமிழ்க்கவிதை வளர்ச்சிக்கு 50 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தவர்.
- சிறுவர் முதல் முதியோர் வரை அனைவரும் தாமாகவே படித்துப் பரவசமடையத்தக்க எளிமையும் இனிமையும் வாய்ந்த பாடல்களைப் பாடினார். பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் சோமசுந்தரப் புலவரின் கவிதைகளை ஈழகேசரி, தினகரன் பத்திரிகைகளின் வாயிலாகவும் பிறவற்றாலும் பிரசித்தம் பெறச் செய்தார்.
- சிறுவர்பாடல் முன்னோடி

  கத்தரித் தோட்டத்து வெருளி
  பவளக்கொடி
  ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
- இலங்கைத் திருநாட்டின் வளத்தைப் பாடியவர் - இலங்கைவளம்.
- பனைவளத்தைப் பாடியவர் - தாலவிலாசம்
- கதைப்பாடல்கள் இயற்றியமை - தாடி அறுந்த வேடன், கொழுக்கட்டைப் பொன்னன்
- சமய, சமூகக் கருத்துக்களையும் கவிதையின் பாடுபொருளாகக் கொண்டவர்.
- பக்திப்பாடல்கள் இயற்றியமை

  கதிர்காம வேலவர் பதிகம்
  நல்லை அந்தாதி
  கதிரைச் சிலேடை வெண்பா
- ஏனைய கவிதை நூல்கள்

  தந்தையார் பதிற்றுப்பத்து
  மரதன் அஞ்சல் ஓட்டம்

  சிறுவர் செந்தமிழ்

**பாவலர் துரையப்பாபிள்ளை**

- பிறப்பு : 1872.10.20
- அமெரிக்கன் மிஷன் ஆங்கிலப் பாடசாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்றார். பின்னர் யாழ்ப்பாணக்கல்லூரியில் கல்வி பயின்று அதன்பின்னர் கேம்பிறிச் உயர்நிலைப் பாடசாலையில் இறுதித் தேர்விற் சிறப்புச் சித்தியுடன் வெளியேறினார்.
- ஈழத்து இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்க்கு முன்னோடியானவர். சிறந்த கல்விமான், சீர்திருத்தவாதி, தேசியவாதி, மனித சமூகநல வேட்கை கொண்டவர்.
- சமூகப் பிரச்சினைகளைக் கவிதைப் பொருளாகக் கொண்டவர். மதுவிலக்குக் கொள்கையை உறுதியாக நடைமுறைப்படுத்த முயன்றார்.

  பூதலத்திற் கொடுந்தீமை புரிமதுவாம்
  பானமெனும் பொல்லா நஞ்சைக்
  காதலுடன் வாங்கியுண்டு களிப்படையும்
  மதிகெட்ட கசரே
- பெண் கல்வியைச் சீர்தூக்கிப் பாடியமை. இராமநாதன் கல்லூரியை உவந்தேத்திப் பாடிய பாடல் இதற்குத்தக்க சான்றாகும்.

  பெண்கள் நம் சாதி சமய மிரண்டிலும் மன்னமிலர்

- அந்நிய நாகரிகத்தில் மயங்கி மூழ்குபவர்களைக் கண்டித்துப் பாடல்களைப் புனைந்தார். இவருடைய யாழ்ப்பாணச் சுவதேசக் கும்மி வர்த்தகம், கல்வி, தாய்மொழி, பெண்கல்வி, உத்தியோகம், பழக்கவழக்கங்கள், சாதி, சுரண்டல், சீதனக்கொடுமை முதலானவற்றைப் பேசுகிறது.
- இவருடைய முற்போக்குச் சிந்தனைகளை உள்வாங்கி சிந்தனைச்சோலை என்னும் கவிதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது.
- 1927 ஆம் ஆண்டு சிவமணிமாலை என்ற பிரபந்தம் வெளிவந்தமை.

**நீலாவணன்**

- கிழக்கு மாகாணத்திலுள்ள நீலாவணை என்னும் கிராமத்தில் கேசகப்பிள்ளை தங்கம்மா தம்பதியர்க்கு மகனாகப் பிறந்தார்.
  பிறப்பு - 1931.06.31
  இயற்பெயர் - சின்னத்துரை
  ஆரம்பக்கல்வி - பெரிய நீலாவணை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை
  உயர்கல்வி - மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி

  கவியரங்கு கவிஞராக ஆரம்பத்தில் அறியப்பட்ட இவர் 1961 இல் கல்முனை எழுத்தாளர் சங்கம் என்ற அமைப்பை நிறுவி கிழக்கு மாகாணத்தில் இலக்கிய எழுச்சியை உருவாக்கினார்.

- சஞ்சிகைப்பணி
  பாடும்மீன் சஞ்சிகையின் கௌரவ ஆசிரியர்களுள் ஒருவர்.
- கவிதை நூல்கள்
  வழி - 1976 இல் வெளிவந்து சாகித்திய மண்டல விருதைப் பெற்றது.
  ஒத்திகை 2001 இல் வெளிவந்தது.
- காவியம்
  வேளாண்மை - 1982 இல் வெளிவந்தது.
- கவிதைநாடகம்
  மழைக்கை - இந்நூல் கர்ணனின் கதையைக் கருவாகக் கொண்டு எழுதப்பட்டது. அறுசீர் விருத்தப் பாக்களால் ஆனது.
- இறப்பு - 11.01.1975

**மஹாகவி உருத்திரமூர்த்தி**

ஈழத்து நவீன கவிதை முன்னோடிகளில் ஒருவர். பாரம்பரியமான தமிழ்க்கவிதை மரபில் இருந்து விலகிச் சமகாலத் தரிசனங்களுக்கு முதன்மை கொடுத்தவர்.

1943 - 1969 காலப்பகுதிக்குள் வெளிவந்த சுதந்திரன், ஈழகேசரி, வீரகேசரி, தேன்மொழி, தினகரன், அறிவொளி, கவிஞன் முதலான சஞ்சிகைகளிலே கவிதைகளை எழுதினார்.

- வள்ளி, கல்லழகி, கண்மணியாள் காதை, ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம், தகனம் முதலான காவியங்களைத் தொகுத்து பேராசிரியர் எம்.ஏ.நு.்.மான் மஹாகவியின் ஆறு காவியங்கள் என்னும் தலைப்பின் கீழ் நூலுருவாக்கினார்.

- பேராசிரியர் எம்.ஏ.நு.்.மான் மகாகவியின் கவிதைகளை ''வீடும் வெளியும்'' (1973) மகாகவியின் கவிதைகள் என்னும் பெயரிற் பதிப்பித்தார்.
- புதியதொரு வீடு, கோடை முதலானவை மகாகவியின் பா நாடகங்களாகும்.
- தேன்மொழி என்னும் கவிதை ஏட்டின் ஆசிரியராகவும் விளங்கியவர்.
- தினகரனில் பல்வேறு கவிஞர்கள் பங்கொடுத்துக்கொண்ட கவிதைச் சமர் என்னும் பகுதியிலும் பங்கெடுத்தவர்.

**மகாகவியின் கவிதைப் பண்புகள்**

- மரபையும் புதுமையையும் கவிதைக்குள் இணைத்தவர்.
- யாப்பு வரம்புக்கு உட்பட்டு எழுதியவர்.
- கவிதையில் செந்தமிழ் வழக்கையும் பேச்சோசைப் பண்பையும் இணைத்தவர்.
- இறப்பு 1971 யூன் 20

**முருகையன்**

- முற்போக்குச் சிந்தனையாலும் மரபு தழுவிய கவிதை நடையாலும் நவீன கவிதை முன்னோடியாக அறியப்பட்டவர்.
  பிறப்பு 23.04.1935
  பெற்றோர் - இராமுப்பிள்ளை - செல்லம்மா
- முதற்கவிதை
  வள்ளுவரின் வழுவற்ற கொள்கையில்லை
  வளமுடைய நல்லகிம்சையுடன் ஒழுக்கமில்லை.......... எனும் கவிதையை இந்துசாதனம் வைரவிழா மலரில் எழுதியவர்.
- இன வன்முறைக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரான கவிதைகளை எழுதியவர்.
  தமிழ் எங்கள் ஆயுதம் தொகுப்பில் இடம் பெறும் முருகையன் கவிதை
  நண்டுவிடு தூது
  கதிர்காம தெய்யோ
- நாடகங்களை எழுதியவர்.வெறியாட்டு (நூலக எரிப்புப் பற்றியது)
  வந்து சேர்ந்தன (மாணிக்கவாசகர் கதை)
  மேற்பூச்சு
  சங்கடங்கள்
  அப்பரும் சுப்பரும்
- மொழிபெயர்ப்பு
  வடமொழியிலுள்ள குமார சம்பவத்தைத் தழுவி இளநலத்தை எழுதினார்.
- கவிதைச் சஞ்சிகையின் ஆசிரியர்
  ‘நோக்கு என்னும் கவிதைச் சஞ்சிகையை சு. இரத்தினத்துடன் இணைந்து கொண்டு வந்தவர்.

**முருகையனின் கவிதைத் தொகுப்புக்கள்**

ஒரு புல்லும் பூவும் பிள்ளையும்
மாடும் கயிறு அறுக்கும்
அது அவர்கள்

- நீள் கவிதைகள்
  ஆதிபகவன்
  கோபுரவாசல்
  நெடும்பகல்
- மொழிபெயர்ப்புக் கவிதைகள்
  ஒரு வரம்
- கவிதை தொடர்பாகப் பேராசிரியர் க. கைலாசபதியுடன் இணைந்து எழுதியது
  கவிதைநயம்

- கவிதை தொடர்பான விமரிசன நூல்
  இனி சில விதி செய்வோம்
- மகாகவியுடன் இணைந்து எழுதிய காவியம்
  தகனம்
- இறப்பு - 27.06.2009

2. இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க்கவிதையின் பண்புகளை விளக்குக.
   இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை இரு வகைகளில் வளர்ச்சி கண்டது.

   1. மரபு ரீதியான கடினமான பா அமைப்புக்களுக்கு ஏற்ப கவிதைகளைப் படைத்தல்.

- இறுக்கமான யாப்பைப் பின்பற்றிக் கவிதை பாடல்.
- ஈழத்துக் கவிதைகள் பிரபந்த முறைக்கு அமையப் பாடப்படுதல்
- முருகேச பண்டிதர், சுன்னாகம் குமாரசாமிப்புலவர், அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர், நவநீதகிருஸ்ண பாரதியார், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, விபுலானந்தர், நமசிவாய தேசிகர், ஆ.மு.ஷெரிபுத்தீன், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை.
- பழைமை போற்றும் பண்பு
- சொல்லலங்கார யாப்பியல் வன்மைக்கு அமைய கவி பாடுதல் (உ-ம் : சிவசம்புப் புலவர் - நால்வகைக் கவி பாடுவதில் வல்லவர்.)
- யமக அந்தாதிகள், ஊஞ்சல்கள், பதிகங்கள் பாடப்பட்டன.
- குமாரசுவாமிப்புலவர் பாடிய பிரபந்தங்கள்
- சமயம் தழுவிய வாழ்க்கை ஒழுக்கங்களைப் பாடுதல்
- கணேசையர், புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை, ஆ.மு.ஷெரிபுத்தீன், மயில்வாகனப் புலவர்.

  ஆ.மு. ஷெரிபுத்தீனின் முதுமொழி வெண்பா
- வடமொழியில் உள்ளவற்றை தமிழ்ச் செய்யுள் வடிவில் கொண்டுவருதல்

  மேகதூதம், சாணக்கிய நீதி வெண்பா, இதோபதேசம், இராமோதந்தம்
- திருப்புகழ், கும்மி வடிவங்களைக் கையாண்டு இஸ்லாமியப் புலவர்கள் பாடல்கள் புனைந்தமை.அருள்வாக்கு அப்துல் காதிறுப் புலவர்.
- ஒழுக்க சீலங்களையும் நம்பிக்கைகளையும் தொழில் நாட்டங்களையும் சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும் பாடியமை இவற்றினைப் பாடக் கண்ணி, கும்மி முதலிய வடிவங்கள் கையாளப்படல்

வண்ணை நெ.வை.செல்லையா காந்தி இயன்மொழி வாழ்த்து, மது விலக்குப் பாட்டு, மது மானிடக் கும்மி, ஒழுக்க மஞ்சரி ஆகியவற்றை இயற்றினார். மு. நல்லதம்பி, ப.கு. சரவணபவன்

குழந்தைப்பாடல் முயற்சிகள்

கே.எஸ். அருணந்தி, சோமசுந்தரப்புலவர், மா.பீதாம்பரம், மு.நல்லதம்பி, பா.சத்தியசீலன், கல்வயல் வே. குமாரசுவாமி முதலியோர்.

சி.அகிலேசசர்மா, ஜே.எஸ்.ஆழ்வார்பிள்ளை - இவர்கள் அரைவாய்மொழிப் புலவர்கள். இப்பாடல்கள் கல்வி, கடவுள், ஒழுக்கம், உடற்பயிற்சி, சுகாதாரம் முதலானவற்றில் நாட்டத்தை ஏற்படுத்தின.

2. 1940களிற்குப் பின்னர் மரபுக் கவிதைகள் நவீன கவிதைகளாக வளர்ச்சி கண்டன.

- கவிதைப் போக்குகள்
- மரபுவழி நின்று புதுமையைப் பாடல்

  இன்னவை தாம் கவி எழுத<br>
  ஏற்ற பொருள் என்று பிறர்<br>
  சொன்னவற்றை நீர் திருப்பி<br>
  சொல்லாதீர் சோலை கடல்<br>
  மின்னல், முகில் தென்றலினை<br>
  மறவுங்கள் மீந்திருக்கும்<br>
  இன்னல் உழைப்பு ஏழ்மை உயர்வு<br>
  என்பவற்றைப் பாடுங்கள்

என்னும் மகாகவியின் கூற்று முக்கியமானது.

கவிதையிலே செந்தமிழ் வழக்கையும் பேச்சோசைப் பண்பையும் இணைத்துக் கவிதை பாடினர்.

மஹாகவியின் கல்லழகி, வள்ளி

- புதிய பொருண்மையைப் பாடுதல்

  மொழிப்பற்று, இனவிடுதலை முதலியவற்றை மையப்படுத்தி தமிழ்க்கவிதை ஒலித்தல்.

  1. தமிழ் எங்கள் ஆயுதம்

2. ஊரடங்குச் சட்டத்தைப் பாடுதல்

சில்லையூர் செல்வராசனின் கெலிகப்டர் விடுதூது மற்றும் நாவற்குழியூர் நடராசன், அ.ந. கந்தசாமி நீலாவணன், வேந்தனார் கவிதைகள்

- ஈழகேசரியின் வருகையையடுத்தும் மறுமலர்ச்சியின் வருகையையடுத்தும் தமிழ்க் கவிதைகள் உள்ளடக்க ரீதியாகப் புதிய பண்புகளை கொண்டமைந்தன.
- மண்வாசனையைப் பிரதிபலிக்கக்கூடிய கவிதைகள் வெளிவந்தன.
  மஹாகவியின் வள்ளி, நீலாவணனின் வேளாண்மை, பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் கவிதைகள்
- சகமூகத்திலுள்ள பொய்யான வாழ்க்கை நிலையைக் கண்டித்தல்
- சமூக மாற்றத்தைப் பாடுதல்
  முருகையனின் நெடும்பகல், ஆதிபகவன்
- நோக்கும், வாக்கும், விசாலமும் வளமும் பெற்ற கவிஞர்கள் தோன்றுதல்
  எம்.ஏ.நு.ஃமான், இ.சிவானந்தன், புதுவை இரத்தினதுரை, மௌனகுரு
- மானிடத்தின் சிறப்பினைப் பாடுதல்
  சமவுடமைக் கருத்துக்களைக் கவிதையாகப் பாடுதல்.
- சமூக, விஞ்ஞான, பொருளாதார மாற்றங்களைப் பாடுதல்
  புதிய சிந்தனை ஓட்டங்களை உள்வாங்கிப் புதுக்கவிதைகள் தோன்றுதல், முதற் புதுக்கவிதைத் தொகுப்பாக திக்கு வல்லை கமாலின் எலிக்கூடு
  அன்பு ஜவர்கசாவின் பொறிகள்

3. 1980களுக்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட சமூக அரசியல் பிரச்சினைகள் இலங்கைத் தமிழ்க்கவிதையில் ஏற்படுத்திய தாக்கத்தினைப் பரிசீலிக்குக.

- 1970களுக்குப் பின்னர் தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்புப்பெறல்
  சேரன், ஜெயபாலன், மு. பொன்னம்பலம், சு.வில்வரத்தினம், மு.புஸ்பராஜன், அ. யேசுராசா முதலியோர் தோற்றம் பெறல்.
  1980 களின் பின் பெண்ணியக் கவிதைகள்

- சொல்லாத சேதிகள், ஊர்வசி, சன்மார்க்கா, சங்கரி, ஔவை, ரங்கா
- அரசியல் உணர்வுகள் கவிதையில் தாக்கம் செலுத்துதல் ஜெயபாலனின் ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும், சேரனின் இரண்டாவது சூரிய உதயம்
- மொழிபெயர்ப்புக் கவிதை முயற்சிகள்
  நோக்கு, கவிஞன், அலை, புதுசு முதலான சஞ்சிகைகள் மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டிருத்தல்.
  முருகையனின் ‘ஒரு வரம்’
  எம்.ஏ.நு.ஃமானின் பலஸ்தீனக் கவிதைகள்
  சி.சிவசேகரத்தின் பாலை
  அ.யேசுராசாவின் பனிமழை

4. ஐம்பதுகள் காலம் வரையான ஈழத்து நாவல் வளர்ச்சிப் போக்குகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.
   - 1889 - 1904 வரையான காலகட்டம் :

முதல் நாவலான 'அசன்பே சரித்திரம்' (1889) உசோன் பாலந்தை (1891), மோகனாங்கி (1895) வெளிவருதல், எனினும் இக்காலகட்ட நாவல்கள் பலவும் தழுவலாகவோ, மொழி பெயர்ப்புகளாகவோ அயல்நாடுகளைக் களமாகக் கொண்டனவாகவோ விளங்குதல்

- 1905 - 1939 வரையான காலகட்டம்
  ஈழத்தைக் களமாக்கிக் கொண்ட நாவல் 1905 இல் வெளிவருதல், ஈழத்து மக்களது வாழ்க்கை அளவு யதார்த்த பூர்வமாகவும் சமூகப்பிரச்சினையைப் (மதமாற்றம்) பேசுவதாகவும் பெண்களது அவல வாழ்வைச் சித்திரிப்பதாகவுமான நாவலாலாக 'நொறுங்குண்ட இதயம்' (1914) இக்காலப்பகுதியிலேயே வெளிவருதல்.
- 1930 - 1950 வரையான காலகட்டம் :
  இக்காலப்பகுதியில் துப்பறியும் நாவல்களும் மர்ம நாவல்களும் அதிகளவு வெளிவருதல் (உ-ம் : எச். செல்லையா எழுதியவை), விதிவிலக்காக, உறவுகள், சமூகப் பிரச்சினைகள் முதலியன சார்ந்த நாவல்களும் வெளிவருதல் (உ-ம் : பாசம்,அன்னபூரணி),
  மொழிபெயரப்பு நாவல்களும் வெளிவருதல்
  (உ-ம் :சோவியத் நாவல்கள்)

## நாவல்

1. நாவல் என்பதன் பொருளை விளக்கிச் சுதந்திரத்திற்கு முற்பட்ட தமிழ் நாவல்களின் பொதுப்பண்புகளைக் குறிப்பிடுக.

நாவல் குறித்த அறிமுகம் :

Novela என்னும் இத்தாலிய மொழிச் சொல்லிலிருந்து பிறந்ததே நாவலாகும். கொலம்பியா என்சைக்ளோ பீடியா உரைநடையால் அமைந்த நெடியகதை எனக் கூறும்.
அதாவது மனித உணர்ச்சிகள், எண்ணங்கள் அவர்தம் செயல்கள் ஆகியவற்றை விளக்கி காட்டுகின்ற உரைநடையில் அமைந்த நீண்ட கதையே நாவல் ஆகும்.
இன்பியலான உரைநடைக் காப்பியமே நாவல் என பீல்டிங் கூறுவார்.
குறிப்பிடத்தக்க ஏதேனும் ஒரு செய்தி பற்றியதாகவும், மாந்தர்களையும் ஆழ்ந்த நோக்கினையும் அடிதளமாக உடையதாகவும் அமையும். உரைநடையில் அமைகின்ற புனைகதைதான் நாவல் என்று சேம்பர் கலைக்களஞ்சியம் இயம்பும்.

சுதந்திரத்திற்கு முற்பட்ட தமிழ் நாவல்களின் பொதுப்பண்புகள்

- ஆரம்பகால நாவல்களின் பெரும்பாலான தலைப்புக்கள் 'சரித்திரம்' என்ற பெயர் கொண்டனவாகவே விளங்குகின்றன.
- வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம் (1876), சுகுண சுந்தரி சரித்திரம்
- இராஜமையரின் கமலாம்பாள் சரித்திரம் (1896)
- மாதவையரின் கமலாம்பாள் சரித்திரம்
- காப்பியப் பண்பில் இருந்து விடுபடாத நாவல்களாகவே காணப்பட்டன. மாயூரம் வேதநாயகம் பிள்ளை இதனை உரைநடைக் காவியம் என்றே அழைத்தார்.
- அறக்கருத்துக்களைப் போதிப்பனவாக அமைந்தன.
- கிளைக்கதைகள் பலவற்றைக் கொண்டிருந்தன.
  பிரதாப முதலியார் சரித்திரம், கருணானந்தபிள்ளை, கற்பாலங்காரி, ஒன்பது விக்கிரகங்கள், குணபூசணி எனப் பலகதைகளைக் கொண்டு உள்ளது.
- எண்ணிறந்த துணைமாந்தர்களைக் கொண்டு இருத்தல்.
- தொடக்கம், மையம், முடிவு என்ற அடிப்படையில் அமையும் நேர்கோட்டுப் பாணியில் எழுதப்பட்டவை.
- பெண்களின் பெயர்களைத் தாங்கியே பெரும்பாலான கதைகளின் தலைப்புக்கள் அமைந்திருத்தல்.
  சுகுணசுந்தரி சரித்திரம், எஸ். வைத்தியநாதனின் சின்னம்மணி, பெரியம்மணி சரித்திரம்.

- புராணங்கள், வரலாறுகள் கதையில் இடம்பெறுதல்.
  குசேலன் சரித்திரம் (1891), புரூரவ சக்கரவர்த்தியின் கதை (1887), வீதிவிடங்கன் வாழ்க்கைச் சக்கரம் (1890)
- அற்புதநவிற்சிக் கருவில் எழுதப்பட்ட பிரதாப முதலியார் சரித்திரத்தை அடுத்து நடப்பியல் சார்ந்த புனைவுகள் எழுந்தமை.
  இராஜம்மையாரின் கமலாம்பாள் சரித்திரம், அ. மாதவையரின் பத்மாவதி சரித்திரம், முத்துமீனாகரி, பண்டிதநடேச சாஸ்திரியின் திக்கற்ற இரு குழந்தைகள், கோமளம் குமரியானின், தீனதயாளு
- ஒருசில நாவல்கள் செந்தமிழ் நடையிலும் எழுதப்பட்டன.
  வி.கோ.சூரியநாராயண சாஸ்திரிகளின் மதிவாணன்.
- அந்நியமொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட நாவல்களும் காணப்பட்டன. பண்டிதநடேச சாஸ்திரியால் விண்டரின் கதை, அளவுக்கு அளவு முதலானவை மொழிபெயர்க்கப்பட்டன.
- கிறிஸ்தவ சமய எதிர்ப்பு
  மாதவையரின் விஜயமார்த்தாண்டம் (1903)
- துப்பறியும் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு நாவல்கள் எழுதப்பட்டன. நடேச சாஸ்திரியின் திக்கற்ற இரு குழந்தைகள், வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார், ஜே.ஆர்,ரங்கராஜீ முதலியோர் துப்பறியும் நாவல்களே எழுதினர். ஆரணி குப்புசாமி முதலியாரின் ராஜாமணி, வடுவூர் கே.துரைசாமி ஐயங்காரின் நவநீதம் அல்லது நவநாகரிகப் பரிவயம், சோமசுந்தரம் அல்லது தோலிருக்கசுளை விழுங்கி
- பெரும்பாலான நாவல்கள் இரட்டைத் தலைப்புக்களை உடையதாகக் காணப்பட்டன.

இராஜமையரின் ஆபத்துக்கிடமான அபவாதம் அல்லது கமலாம்பாள் சரித்திரம், வடுவூர் துரைசாமி ஐயங்காரின் டாக்டர் சோணாசலம் அல்லது நவநாகரிகப்பரிவபம்

3. 1947 முதல் 1970 வரை தமிழ்நாவல்களின் வளர்ச்சிப் போக்கினை ஆராய்க.

- இந்திய விடுதலைக்குப் பின்னர் தமிழ் நாவல்கள் சமூகவாழ்வியற் புலங்களை சுட்டி நின்றது. இந்தியாவின் தேசிய வீழ்ச்சியையும் தமிழ்நாவல்கள் எடுத்துக்காட்டின.

  மு.வரதராசனின் கயமை, அகிலனின் பொன்மலர், ஜெகற்சிப்பியனின் சத்தியவெள்ளம் சமுதாயவீதி, நெஞ்சக்கனல்

- இடதுசாரிச் சிந்தனைகளும் தமிழ்நாவல்களில் முதன்மையாகப் பேசப்பட்டன. உயர்வு தாழ்வற்ற ஒப்புமைச் சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் தமிழ்நாவல்கள் எழுந்தன.

  தொ.மு.இ.ரகுநாதனின் பஞ்சும் பசியும், டி.செல்வராஜின் மலரும் கருகும்

- இக்காலப்பகுதியில் மக்களின் வாழ்வில் காந்தியக் கொள்கைகள் செல்வாக்குச் செலுத்தின. அவற்றை உள்வாங்கியும் நாவல்கள் எழுந்தன.

  அகிலனின் புதுவெள்ளம், நா.பார்த்தசாரதியின் நிசப்தசங்கீதம்

- ஒருநாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் கூட்டுறவு முக்கியம் பெறுகின்றது. இக்கூட்டுறவை முதன்மைப்படுத்தியும் நாவல்கள் எழுந்தன.

  டி.என்.சுகி. சுப்பிரமணியத்தின் ‘‘உழைக்கும் கரங்கள்’’

- சுதந்திரத்துக்குப் பின்னர் பொருளாதார நடவடிக்கையின் காரணமாகத் தொழில் முதன்மைப்படுத்தப்பட்டது. இத்தொழில்மயமாதலை முக்கியப்படுத்தி நாவல்கள் எழுந்தன.

ராஜம் கிருஷ்ணனின் ‘‘அமுதமாகி வருக’’, க.ரத்தினத்தின் ‘‘கல்லும் மண்ணும்’’, சுந்தரராமசாமியின் ‘‘புளியமரத்தின் கதை’’

- ஆண், பெண் உறவுகளை முதன்மைப்படுத்தி நாவல்கள் எழுந்தன. ஆண், பெண் பாலுணர்ச்சிகளை மையப்படுத்தி நாவல்கள் எழுந்தன.

தி.ஜானகிராமனின் ‘‘அம்மா வந்தாள்’’, ‘‘மோகமுள்’’, மு. வரதராசனின் ‘‘அல்லி’’, ‘‘கரித்துண்டு’’

வரலாற்று நாவல்கள்

- சரித்திர வரலாற்று நாவல்கள்
- நா.பார்த்தசாரதியின் மணிபல்லவம், கபாடபுரம்
- அகிலனின் வேங்கையின் மைந்தன், கயல்விழி
- ஜெகற்சிற்பியனின் பத்தினிக்கோட்டம், திருச்சிற்றம்பலம்
- கல்கியின் பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு

சாண்டில்யன், கோவி.மணிசேகரன், விக்கிரமன், சோமு முதலானோரும் சரித்திர நாவல்களை எழுதினர்.

- அரசியல் பிரச்சினைகளை முதன்மைக் கருவாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல்களும் உண்டு

  நா.பார்த்தசாரதியின் நெஞ்சக்கனல், சீமனின் சுயநலம்
- குடும்ப உறவுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு லட்சுமி, ராஜம்கிருஸ்ணனின், அறுத்தமா, சூடாமணி, கோதைநாயகி அம்பாள் முதலியோரும் எழுதினர்.
- சோதனை முயற்சிகள்

  சமூகத்தினை புதிய நோக்கில் பார்த்த நாவல்களாக ஜெயக்காந்தனின் ரிஜிமூலம், நகுலனின் நாய்கள், சி.சு.செல்லப்பாவின் வாடிவாசல், ஆர்.சூடாமணியின் சோதனையின் முடி போன்றன விளங்குகின்றன.